# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்


## இளங்கலை இலக்கியம் - மூன்றாமாண்டு

பி.லிட். (தமிழ்)

ஐந்தாம்பருவம்

# தாள் 10751

# இலக்கணம் - தொல்காப்பியம் :

# எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

**Author:**
**Dr. S. SENTHAMIZH PAVAI,** *Professor & Director, Centre for Tamil culture, Alagappa University, Karaikudi. 630003.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. V. THIRUVENI,** *Assistant Professor of Tamil, Directorate of Distance Education, Alagappa University, Karaikudi -630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE12-27/Printing of Course Materials/2020 Dated 12.08.2020 Copies 2000**

# தாள் 10752

## இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்து - இளம்பூரணம்

**நோக்கம்**

தொல்காப்பிய எழுத்து இலக்கணத்தைப் பற்றி விளக்கிக் கூறுதல்

**பிரிவு 1: நூன்மரபு – மொழிமரபு**


| | | | | |
|---|---|---|---|---|
| **கூறு** | 1 | : | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நூன்மரபு | - 11 |
| **கூறு** | 2 | : | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - மொழிமரபு | - 20 |
| **கூறு** | 3 | : | மொழிமரபு-மொழிமுதல் இறுதி எழுத்துகள் | - 32 |


**பிரிவு 2: பிறப்பியல் - புணரியல் - தொகை மரபு - உருபியல்**


| | | | | |
|---|---|---|---|---|
| **கூறு** | 4 | : | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - பிறப்பியல் | - 38 |
| **கூறு** | 5 | : | பிறப்பியலும் மொழியியலும் | - 43 |
| **கூறு** | 6 | : | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - புணரியல் | - 50 |
| **கூறு** | 7 | : | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - தொகைமரபு | - 64 |
| **கூறு** | 8 | : | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - உருபியல் | - 75 |


**பிரிவு 3: உயிர் மயங்கியல்**


| | | | | |
|---|---|---|---|---|
| **கூறு** | 9 | : | உயிர் மயங்கியல் - அகர,ஆகார,இகர,ஈகார,உகர,ஊகார ஈறுகள் | - 82 |
| **கூறு** | 10 | : | உயிர் மயங்கியல் - எகர,ஒகர,ஏகார,ஐகார,ஓகார,ஔகார ஈறுகள் | - 95 |


**பிரிவு 4: புள்ளி மயங்கியல் - குற்றியலுகரப் புணரியல்**


| | | | | |
|---|---|---|---|---|
| **கூறு** | 11 | : | புள்ளிமயங்கியல் - ஞகர, நகர, ணகர, னகர ஈறுகள் | - 100 |
| **கூறு** | 12 | : | புள்ளிமயங்கியல் - னகர, யகர, ரகர, லகர, ழகர, ளகர ஈறுகள் | - 113 |
| **கூறு** | 13 | : | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - குற்றியலுகரப் புணரியல் | - 121 |
| **கூறு** | 14 | : | உரையாசிரியர் - இளம்பூரணர் | - 138 |

# பிரிவு 1: நூன்மரபு – மொழிமரபு

**கூறு 1 :** தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நூன்மரபு

1.1 முன்னுரை

1.2 குறிக்கோள்கள்

1.3 உடனிலை மெய்மயக்கம்

1.4 வேற்றுநிலை மெய்மயக்கம்

1.5 தொகுத்துக் காண்போம்

1.6 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1.7 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 2 :** தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - மொழிமரபு

2.1 முன்னுரை

2.2 குறிக்கோள்கள்

2.3 சார்பெழுத்து

2.4 ஒரு மொழிக் குற்றியலிகரம்

2.5 தொடர் மொழிக் குற்றியலிகரம்

2.6 ஒரு மொழிக் குற்றியலுகரம்

2.7 தொடர்மொழிக் குற்றியலுகரம்

2.8 மொழி முதல் குற்றியலுகரம்

2.9 ஒரு மொழி ஆய்தம்

2.10 தொடர் மொழி ஆய்தம்

2.11 அளபெடை

2.12 மூவகை மொழிகள்

2.13 எழுத்துக்களின் இயக்கம்

2.14 போலி

2.15 மொழி மரபில் தொல்காப்பியரின் மொழித்திறன்

2.16 தொகுத்துக் காண்போம்

2.17 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

2.18 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 3 :** மொழிமரபு-மொழி முதல்-இறுதி எழுத்துக்கள்

3.1 முன்னுரை

3.2 குறிக்கோள்கள்
3.3 மொழிக்கு முதலாக வரும் எழுத்துக்கள்
3.4 மொழிக்கு இறுதியாக வரும் எழுத்துக்கள்
3.5 மொழி இறுதியாக வரும் மெய் எழுத்துக்கள்
3.6 தொகுத்துக் காண்போம்
3.7 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்
3.8 மேலும் அறிந்து கொள்ள

**பிரிவு 2: பிறப்பியல் - புணரியல் - தொகை மரபு - உருபியல்**

**கூறு 4** : தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - பிறப்பியல்
4.1 முன்னுரை
4.2 குறிக்கோள்கள்
4.3 பிறப்பியல் கூறும் பிறப்பு முறை
4.4 தொகுத்துக் காண்போம்
4.5 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்
4.6 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 5** : பிறப்பியலும் மொழியியலும்
5.1 முன்னுரை
5.2 குறிக்கோள்கள்
5.3 உயிர் எழுத்துக்கள் பிறக்குமாறு
5.4 உயிர் எழுத்துக்கள் பிறக்கும் நிலை
5.5 மெய் எழுத்துக்கள் பிறக்குமாறு
5.6 மெய் ஒலியன்களைப் பாகுபடுத்துதல்
5.7 சார்பெழுத்துக்கள் பிறக்குமாறு
5.8 தொல்காப்பியர் காட்டும் உயிரொலிகளின் பிறப்பு
5.9 தொல்காப்பியர் காட்டும் மெய்யொலிகளின் பிறப்பு
5.10 தொகுத்துக் காண்போம்
5.11 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்
5.12 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 6** : தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - புணரியல்

6.1 முன்னுரை
6.2 குறிக்கோள்கள்
6.3 மெய் பிறிதாதல்
6.4 இயல்புப் புணர்ச்சி
6.5 தொகுத்துக் காண்போம்
6.6 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்
6.7 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 7** : தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - தொகைமரபு
7.1 முன்னுரை
7.2 குறிக்கோள்கள்
7.3 மூன்றாம் வேற்றுமைக்கான சிறப்புப் புணர்ச்சி
7.4 இரண்டாம் வேற்றுமைக்கான சிறப்புப் புணர்ச்சி
7.5 சாரியை
7.6 தொகுத்துக் காண்போம்
7.7 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்
7.8 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 8** : தொல்காப்பியம் - உருபியல்
8.1 முன்னுரை
8.2 குறிக்கோள்கள்
8.3 தொகுத்துக் காண்போம்
8.4 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்
8.5 மேலும் அறிந்து கொள்ள

## பிரிவு 3: உயிர் மயங்கியல்

**கூறு 9** : உயிர் மயங்கியல் - அகர, ஆகார, இகர, ஈகார, உகர, ஊகார
9.1 முன்னுரை
9.2 குறிக்கோள்கள்
9.3 அல்வழியில் அகர ஈறு
9.4 அல்வழியில் ஆகார ஈறு

9.5 வேற்றுமையில் ஆகார ஈறு

9.6 அல்வழியில் இகர ஈறு

9.7 வேற்றுமையில் இகர ஈறு

9.8 ஈகார ஈறு

9.9 உகர ஈறு

9.10 ஊகார ஈறு

9.11 தொகுத்துக் காண்போம்

9.12 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

9.13 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 10 :** உயிர் மயங்கியல் - எகர,ஒகர,ஏகார,ஐகார,ஓகார,ஔகார ஈறுகள்

10.1 முன்னுரை

10.2 குறிக்கோள்கள்

10.3 எகர, ஒகர ஈறுகள்

10.4 ஏகார ஈறு

10.5 ஐகார ஈறு

10.6 ஓகார ஈறு

10.7 ஔகார ஈறு

10.8 தொகுத்துக் காண்போம்

10.9 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

10.10 மேலும் அறிந்து கொள்ள

**பிரிவு 4: புள்ளி மயங்கியல் - குற்றியலுகரப் புணரியல் - இளம்பூரணர்**

**கூறு 11 :** புள்ளிமயங்கியல் - ஞகர, நகர, ணகர, மகர, னகர ஈறுகள்

11.1 முன்னுரை

11.2 குறிக்கோள்கள்

11.3 ஞகர ஈறு

11.4 நகர ஈறு

11.5 ணகர ஈறு

11.6 மகர ஈற்று

11.7 னகர ஈறு

11.8 தொகுத்துக் காண்போம்

11.9 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

11.10 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 12 :** புள்ளிமயங்கியல் - யகர, ரகர, லகர, ழகர, ளகர ஈறுகள்

12.1 முன்னுரை

12.2 குறிக்கோள்கள்

12.3 யகர ஈறு

12.4 ரகர ஈறு

12.5 லகர ஈறு

12.6 வகர ஈறு

12.7 ழகர ஈறு

12.8 ளகர ஈறு

12.9 தொகுத்துக் காண்போம்

12.10 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

12.11 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 13 :** எழுத்ததிகாரம் - குற்றியலுகரப் புணரியல்

13.1 முன்னுரை

13.2 குறிக்கோள்கள்

13.3 தொகுத்துக் காண்போம்

13.4 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

13.5 மேலும் அறிந்து கொள்ள

**கூறு 14 :** உரையாசிரியர் - இளம்பூரணர்

14.1 முன்னுரை

14.2 குறிக்கோள்கள்

14.3 உரை முதல்வர்

14.4 பெயர்க் காரணம்

14.5 நாடு

14.6 மரபு

14.7 சமயம்

14.8 இளம்பூரணர் உரை செல்நெறி

14.9 உரையாசிரியர்கள்

14.10 தமிழ் மரபிற்கு முதன்மை நல்கல்
14.11 உவமை கூறி விளக்குதல்
14.12 வினா - விடை நெறி
14.13 சொற்பொருள் தருதல்
14.14 சிறந்த சான்று கூறி விளக்குதல்
14.15 பல துறையறிவு
14.16 நாகரிகமும். பண்பாடும்
14.17 மேற்கொள் காட்டுதல்
14.18 பாட வேறுபாடுகள்
14.19 பொருள் நயங்கள்
14.20 எடுத்துக் காட்டு நயங்கள்
14.21 அரிய நயங்கள்
14.22 தொகுத்துக் காண்போம்
14.23 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்
14.24 மேலும் அறிந்து கொள்ள

# தொல்காப்பியம் : எழுத்ததிகாரம்



## பாயிரம்

ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள இலக்கண அறிவே இன்றியமையாதது. நம் தாய்மொழியாகிய தமிழின் இலக்கணத்தை முழுமையாக அறிந்து கொள்ளத் தொல்காப்பியம் பெரிதும் உதவுகிறது. தொல்காப்பியர் என்பார் செய்ததால் அவர் பெயராலேயே அந்நூல் தொல்காப்பியம் பெயர் பெற்றது.

அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவருள் தொல்காப்பியரும் ஒருவர். அவர் காப்பியக் குடியில் பிறந்தமையால் அப்பெயர் பெற்றார் என்பர். இவரது காலம் பற்றிப் பலர் பலவிதமாக மொழிவர். என்றாலும் கி.மு.என்ற காலவரையறைக்கு முற்பட்டவர் என்ற கருத்தைப் பொதுவாகக் கொள்ளலாம்.

உலக மொழிகளுள் தொல்காப்பியத்தால் தமிழ் மொழி உயர் தனிச் செம்மொழியாகத் திகழ்கிறது. மொழியையும் வாழ்வையும் இலக்கணமாகக் காட்டிய பெருநூல் அது என்பதால் உலக அரங்கில் தமிழர் நாகரிகம் உயர்வுடையதாகக் கருதப்படுகிறது.

தொல்காப்பியம் தமிழ் மொழியின் எழுத்தியல்பு, சொல்லியல்பு, பொருளியல்பு என்ற மூன்றையும் ஒருசேர விரித்துரைக்கின்றது. ஒவ்வொரு இயலும் ஒன்பது ஒன்பது இயல்களாக மொத்தம் இருபத்தேழு இயல்களை உடையதாகத் திகழ்கிறது. இதில் எழுத்தியல்பு பற்றிக் கூறும் பகுதியே எழுத்திகாரம் ஆகும்.

தொல்காப்பியம் என்னும் நூல் உருவாகிய முறை குறித்து உரைப்பது பாயிரமாகும். பொதுவாக எந்நூலாயினும் அந்நூலுக்குப் பாயிரம் என்னும் முகவுரை உரைத்தல் என்பது மரபு. "ஆயிரமுகத்தான் அகன்ற தாயினும் பாயிர மில்லது பனுவ லன்றே" என்பது ஆன்றோர் மொழி. எனவே முன்னுரை அல்லது புறவுரை எனப்படும் பாயிரம் படித்த பின்னரே நூலைக் கற்க வேண்டும் என்பதால் நூலுக்குரிய பாயிரம் இன்றியமையாததாகும்.

இப்பாயிரம், திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயில் மாடம் போல நூலுக்கு இன்றியமையாச் சிறப்பையும் அழகையும் நல்க வல்லதாகும்.

பாயிரம் பொது, சிறப்பு என இருவகைப்படும். பொதுப் பாயிரம் என்பது நூலுள் கூறப்படாத புறச்செய்தி பற்றிக் கூறுவதாகும். அது நூல் பற்றியும் நூல் கற்போர் பற்றியும் நூலைக் கற்பிப்போர் பற்றியும் கற்பிக்கும் முறை பற்றியும் கற்றலின் இயல்பு பற்றியும் கூறும் பொதுவான செய்திகளாகும்.

பொதுப்போல் அல்லாமல் நூலகத்துள்ள பொருளை உணர்த்துவது சிறப்புப் பாயிரமாகும்.

“ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே;
காலம் களனே காரணம் என்றிம்
மூவகை ஏறறி மொழிநரும் உளரே”.

எனப் பதினொரு வகையாகச் சிறப்புரைப் பாயிரத்தின் பொருள் உணரப்படும்.

பாயிரம் கூறுவோர் யாரெனின் நூலாசிரியரே தம் நூலுக்குப் பாயிரம் கூறிக் கொள்ளமாட்டார் என்பதால் நூலைச் செய்தவரின் ஆசிரியர். நூலாசிரியரோடு ஒருங்கு கற்றவர். நூலாசிரியரிடம் பயின்ற சிறந்த மாணாக்கர் என மூவரே பாயிரம் எழுதத் தகுதியுடையவராவர். இவ்வகையிலும் தொல்காப்பியத்திற்குத் தொல்காப்பியருடன் ஒருங்குகற்ற பனம்பாரனார் என்பவர் கீழ்க்கண்ட சிறப்புப் பாயிரத்தைச் செய்தார்.

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுல கத்து
வழக்கும் செய்யுளும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறந்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன் எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

**இதன்பொருள்**

வேங்கடத்தையும் குமரியையும் வடக்கு தெற்கு எல்லைகளாக உடைய தமிழ் நிலத்தில் தமிழ்மொழியினைப் பேசும் தமிழ் மக்களால் போற்றிக் கையாளப்படும் வழக்கும் செய்யுளுமாகிய இரண்டு முதன்மையான மொழி அமைப்புகளையும் எழுத்து, சொல், பொருள் என்ற மூவகை இலக்கணக் கூறுகளாய் ஆராய்ந்து,

அவற்றை வழிவழியாகப் போற்றிவரும் நூல்களோடு பொருந்த ஆராய்ந்ததாகிய தொகுப்புநூலை.

போர்த்திறனும் வள்ளன்மையும் மிக்க நிலந்தரு திருவின் பாண்டியன் அவைக்களத்தில்,

அனைவராலும் புகழப்படுபவரும் மெய்சொல்லும் இயல்புடைய நாவினால் நான்மறைகளையும் கற்றுணர்ந்து உரைப்பவருமாகிய அதங்கோடு என்னும் ஊரின் ஆசானாம் அதங்கோட்டாசான் என்பவருக்கு ஐயந்திரிபற.

மேற்கூரிய எழுத்து, சொல், பொருளாகிய மூன்றிலக்கணங்களுள் எழுத்திலக்கணத்தை முன்னரும் அதன் வழி சொல் விளக்கத்தையும், பொருளிலக்கணத்தையும் மாறாமல் எடுத்துக் கூறியவர் யாரெனில்,

கடல் சூழ்ந்த இவ்வுலகில் இந்திரனால் செய்யப்பட்ட ஐந்திர வியாக்கரணத்தைக் கற்றுணர்ந்தவரும் சிறந்த தவ ஒழுக்கத்தை உடையவரும் காப்பியக்குடி என்னும் பழங்குடி மரபைச் சார்ந்தவரும் தன் பெயரையே தாம் செய்த நூலுக்கு வைத்துணர்த்தியவருமான தொல்காப்பியர் என்பவராவார் என்க.

1. ஆக்கியோன் பெயர் - தொல்காப்பியர்
2. வழி - முந்துநூல்
3. எல்லை - வடவேங்கடம் தென்குமரி ஆயிடை
4. நூற்பெயர் - தொல்காப்பியம்
5. யாப்பு - முறைப்பட எண்ணித் தொகுத்தல்
6. நுதலிய பொருள் - மொழிக் கூறுகளாகிய உலக வழக்கு செய்யுள் வழக்குகளாலான எழுத்து, சொல், பொருள் இலக்கணம்
7. கேட்போர் - அதங் கோட்டாசானும் பிறரும்
8. பயன் - வழக்கும் செய்யுளுமான மொழியறிதல்
9. காலம் - நிலந்தரு திருவிற் பாண்டியன் காலம்
10. களன் - நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களம்.
11. காரணம் - மொழி இலக்கணத்தைக் காத்தல்.

# கூறு – 1

## நூன் மரபு

### 1.1 முன்னுரை

தொல்காப்பியம் என்னும் நூலுக்கு முகவுரை போல் அமைந்துள்ள பகுதி நூன் மரபு ஆகும். ஒரு நூல் எழுதுவதற்கு எழுத்துகள் இன்றியமையாதது. எனவே தமிழ் எழுத்து மரபு பற்றியுரைக்கும் பகுதி நூன் மரபு என வழங்கப்பெறுகிறது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்மொழியின் எழுத்து வடிவம், அவ்எழுத்துகளின் பெயர் ஆகியவை பற்றி அறிய நூன்மரபு உதவுகிறது.

### 1.2 குறிக்கோள்கள்

- தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கை அவற்றின் பெயர் முறை வடிவம் ஆகியவை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவு பற்றி அறிந்து கொள்வீர்கள்
- உடனிலை மெய்மயக்கம், வேற்றுநிலை மெய்மயக்கம் பற்றி அறிந்து கொள்வீர்கள்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் ஒன்பது இயல்களில் முதல் இயல் நூன்மரபாகும்.

எழுத்ததிகாரத்தால் சொல்லப்படும் எழுத்தினது பொது இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுதலால் நூல் மரபு என்னும் பெயர் பெற்றது என்பர் இளம்பூரணர்.

தொல்காப்பியம் என்னும் நூலுக்கு மரபாக வேண்டுவனவற்றைத் தொகுத்துக் கூறுவதற்கு அடிப்படையாக அமையக் கூடிய எழுத்து மரபு பற்றிக் கூறுவதால் நூல் மரபு எனப்பட்டது என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

பொதுவாக நூலின்கண் ஆளுதற் பொருட்டு அதாவது நூலாக்கத்தின் பொருட்டு அடிப்படையாக அமையக் கூடிய எழுத்து பற்றிய மரபான செய்திகளைக் கூறுதலின் நூல்மரபு எனும் பெயர் பெற்றது என்பது சிவஞான முனிவர் கருத்து.

இந்த இயலுள் கூறப்படும் எழுத்துக்களின் இலக்கணம் அனைத்தும் தொல்காப்பியருக்கு முன்னுள்ளோரால்

எடுத்தாளப்பட்டவையே என்பதால் அம்மரபுப்படிக் கூறப்பட்ட இயல் நூல்மரபு எனப் பொதுவாகக் கொள்ளலாம்.



இந்நூல் மரபில் இளம்பூரணர் உரைப்படி 33 நூற்பாக்கள் உள்ளன. அவற்றை எழுத்துக்களின் வகை, அளவு, எண், வடிவம், மயக்கம் (சேர்க்கை) என்று ஐந்தாகப் பிரிக்கலாம். அவற்றுள் கீழ்க்கண்ட முதல் நூற்பா எழுத்தினது பெயரையும் முறையையும் தொகையையும் கூறுகிறது.

**1.எழுத்தெனப் படுப**
**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்ப ∴தென்ப**
**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.**

எழுத்து என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன அகரமாகிய முதலும் னகரமாகிய (ன்) இறுதியும் உடைய முப்பது என்று கூறுவர். சார்ந்து வருதலாகிய இயல்புடைய எழுத்துக்கள் மூன்று. எனவே எவற்றோடும் சார்ந்து வராத முதலெழுத்துக்கள் முப்பது என்றும் சார்பெழுத்துக்கள் மூன்று என்றும் கொள்ளப்படும்.

அ முதல் ன் வரையான முப்பது எழுத்துக்களும் சிறப்புடையன என்பதால், சான்றோரால் சிறப்பித்துரைக்கப்பட்ட பெருமையை "எழுத்தெனப்படுப" என்ற சிறப்புச் சொற்களால் தொல்காப்பியர் உணர்த்தினார். இந்நூற்பாவுள் எழுத்து என்பதைத் தொகையாகக் கூறி முப்பது என்பதை அதன் வகையாகவும் முப்பத்து மூன்று என்பதை விரியாகவும் கூறப்பட்டது.

தானும் இயங்கித் தனிமெய்களையும் இயக்கும் சிறப்பு நோக்கி அகரம் முதலிலும் னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதலால் இறுதியிலும் கூறப்பட்டன என்பது இளம்பூரணரின் விசேடக் கருத்தாகும்.

பொதுவாக எழுத்ததிகாரத்தில், தொல்காப்பியர் எழுத்துக்களை எட்டு வகையாலும் எட்டிறந்த பல வகையாலும் உணர்த்தினார் என்பது இளம்பூரணர் கருத்து. இக் கருத்துக்கேற்ப இம்முதற் நூற்பா எழுத்து இணைத்து என்றலையும் இன்ன முறையின என்றலையும் விளங்குகிறது.
தொகை வகை விரி என்ற முத்தரப்பில் -

(1) எழுத்து இத்தனை என்பது உணர்த்தப்பட்டது. மொத்த எழுத்துக்கள் 33 என்பது தொகை. அவை உயிர் 12, மெய் 18, சார்பு 3 எனப் பிரிப்பது வகை. இம்முப்பத்து மூன்றுடன் உயிர்மெய் எழுத்துக்கள் 12 x18 + 216 நெட்டெழுத்தான அளபெடை எழுத்துக்கள் 7 ஆக எழுத்துக்கள் 256 என்பது விரி.

(2) முறை என்பது குறிலுக்குப்பின் நெடில், வல்லினத்திற்குப்பின் மெல்லினம் என எழுத்துக்கள் ஓசை பற்றியும், பிறப்பு பற்றியும் இனம் பற்றியும் வரிசைப் படுத்தப்பட்ட நிலையாகும்.

(3) எழுத்து இன்ன தன்மையது என்பதை அவரவரும் உணர்ந்து அறியும் இயல்பினது என்பதால் ஏனைய ஏழு வகைகள் விரித்துக் கூறப்பட்டுள்ளதை எழுத்ததிகார முழுமையில் உணரலாம்.

(4) எழுத்தின் பெயர் 2, 3, 4, 8, 9, 19, 20, 21 ஆகிய எட்டு நூற்பாக்கள் பற்றியன

(5) மாத்திரை பற்றி 3, 4, 5, 7, 10, 11, 12 ஆகிய ஏழு நூற்பாக்கள் மாத்திரை பற்றியன

(6) 14, 15, 16, 17 நூற்பாக்கள் வடிவு பற்றியன.

(7) எழுத்தின் பிறப்பு பற்றிப் பிறப்பியலாலும்

(8) புணர்ச்சி பற்றித் தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்ற ஆறு இயல்களாலும் உணரலாம்.

எழுத்தின் வகையை மேற்கூறிய எட்டு வகையானன்றி எட்டிறந்த பலவகையாலும்
உணர்த்துகிறார் தொல்காப்பியர் என இளம்பூரணர் கீழ்க்கண்டவாறு உணர்த்துகிறார்.

நூல் மரபின் முதல் நூற்பாவில் “எழுத்தெனப் படுப” எனத் தொடங்கப்பட்டதில் எழுத்து என்பது வரி வடிவத்தன்மையினும் ஒலி வடிவத் தன்மையையே அதிகம் சுட்டியது எனலாம். எழுதப்படுவது எழுத்து என்பது போலவே எழுப்பப்படுவதும் எழுத்தே என்பது நச்சினார்க்கினியரது கருத்து. வெளிப்படையாகக் கூறப்பட்ட இக்கருத்து இளம்பூரணருக்கு உடன்பாடாயினும் அது குறிப்பினால் உணருமாறு உள்ளது.

சார்பெழுத்துக்களாகிய குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றினையும் வரி வடிவால் பார்க்க இயலாது. ஒலி வகையாலே உணரப்படும் என்பதால் பொதுவாக எழுத்துக்களின் மூலம் ஒலி வடிவே என்பது இளம்பூரணருக்கு உடன்பாடு எனலாம்.

ஆக உயிரொலி 12, மெய்யொலி 18, சார்பொலி 3 எனப் பொதுவாக எழுத்தொலியைக் கொள்ளவேண்டும்.

உயிரொலி பன்னிரண்டிற்கும் உரிய ஒலியளவான மாத்திரை அடுத்தடுத்து கூறப்படுகிறது.

3. அவற்றுள்
அ இ உ
எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளவு இசைக்கும் குற்றெழுத் தென்ப.

அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தெழுத்துக்களும் ஒரு மாத்திரையுடைய குற்றெழுத்துக்கள். இவற்றில் அ இ உ மூன்றும் சுட்டெழுத்துக்கள்.

4. ஆ,ஈ, ஊ, ஏ, ஐ
ஓ, ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரளவு இசைக்கும் நெட்டெழுத் தென்ப.

ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழ் எழுத்துகளும் இரண்டு மாத்திரையுடைய நெட்டெழுத்துக்கள், இவற்றில் ஆ, ஏ, ஓ மூன்றும் வினா எழுத்துக்கள்.

இரண்டு மாத்திரை அளவிற்கு மேல் எழுத்தொலி இல்லையாயினும் நீட்டி ஒலிக்கவேண்டிய நிலை ஏற்படுங்கால அப்போது அது அளபெடை என்ற பெயர் பெறும். மூன்று மாத்திரை முதலாக வேண்டிய மட்டும் அளபெடை ஒலிக்கப்பெறும்.

5. மூவளவு இசைத்தல் ஓரெழுத் தின்றே.

6. நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர்.

இப்படியாக எழுத்துக்களுக்கான ஒலியளவைக் கணக்கிட்டுணரக் கண்ணிமைத்தலையும் கை நொடித்தலையும் இலக்கணமாகக் கொள்வர்.

7. கண்ணிமை நொடிஎன அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே.

உயிரும் உயிர்மெய்யும் ஒரே அளவைப் பெறும் என்பதை

10. மெய்யோடியையினும் உயிரியல் திரியா

எனத் தொல்காப்பியர் கூறினார். அ ஆ போலவே க, கா ஆகும்.



**குறிப்பு**

மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் குற்றியலிகரம், குற்றியலுகரம். ஆய்தம் என்ற சார்பெழுத்துக்கள் மூன்றும் அரை மாத்திரை அளவு ஒலிக்கும்

11. மெய்யின் அளபே அரைஎன மொழிப

12. அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.

ஏனை மூன்று என்றது சார்பெழுத்துக்களை என்க. இந்த அரை மாத்திரையளவிலும் பாதியாக (கால் மாத்திரையாக) ஒலிக்கும் ஓர் எழுத்து மகரக் குறுக்கமாகும்.

13. அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங்காலை

எ.டு. போன்ம். கொண்ம் போல, கொள்க என்பது இதன் பொருள்,ஈண்டு அரை ஒலியான மகரம் ன், ண் என்பதன் ஒலியால் மேலும் குறுகி ஒலிப்பதால் மகரக் குறுக்கம் எனப்பட்டது. இவ்வாறே "வரும் வண்ணக்கன்" என்ற தொடரில் வருமொழி முதலில் உள்ள வகர ஒலியால் நிலைமொழி இறுதி மகரம் அரை மாத்திரையினின்றும் கால் மாத்திரையாக ஒலிப்பதைச் சொல்லி பார்க்குங்கால் உணரலாம்.

இங்ஙனமெல்லாம் மாத்திரை அளவுகளை எழுத்துக்களுக்குக் கூறினாலும் இசையாகப் பாடும்போதும் சேய்மைக் கண் உள்ளாரை நீட்டி விளித்து அழைக்கும்போது எழுத்துக்கான மாத்திரை நீளும் என்பதைத் தொல்காப்பியர் நூல்மரபின் இறுதியில் கூறுகிறார்.

33. அளவு இறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளஎன மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்.

ஈண்டு ஒற்றிசை நீடல் என்றது ஒற்றெழுத்துக்கள் இரட்டித்து நீண்டு ஒலிப்பது ஒற்றளபெடை என்பது தெரிகிறது. உயிர் எழுத்துகளுள் நெடிலே நீண்டு ஒலிப்பது. அது அளவு கடந்து ஒலிப்பதைப்பற்றிக் கூறுவதே அளபிறந்து ஒலித்தலாகும். இங்ஙனம் ஒலித்தல் இசை நூலால் உணரப்படும் என்பதால் இசையொடு சிவணிய நரம்பின் மறைய என்றார் ஆசிரியர்.

ஆக நூல்மரபுள் கூறப்பட்ட எழுத்தின் மாத்திரையானது, 1. மெய் எழுத்து, சார்பெழுத்து அரைமாத்திரை, 2. உயிரும் உயிர்மெய்யுமான குறில் ஒரு மாத்திரை 3. உயிரும் உயிர் மெய்யுமான நெடில் இரண்டு மாத்திரை, 4. மகரக் குறுக்கம் கால் மாத்திரை, 5. அளபெடையில் ஒற்றளபெடை ஒற்றெழுத்தளவிற்கு மேலும், உயிரளபெடை மூன்று மாத்திரையளவும் அதற்கு மேலுமாக இசைவகையாலும் விளிவகையாலும் ஒலிக்கப்பெறும்.

எழுத்தின் பெயராவது,

8. ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிர் என மொழிப

9. னகார இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய் என மொழிப

என இரண்டின் அடிப்படையில் குற்றெழுத்து, நெட்டெழுத்து, வல், மெல், இடை எழுத்துக்கள், சுட்டு எழுத்து, வினா எழுத்து, என்பதாகக் கூறப்பட்டன.

இனி எழுத்தின் வடிவு பற்றி நூல் மரபு கூறும் செய்தியைக் காண்போம்.

ஈண்டு வடிவு என்றது எழுத்தின் வரி வடிவத்தையாகும். உயிர் எழுத்திற்கும் மெய்யெழுத்திற்கும் தொன்றுதொட்டு சுட்டப்பெறும் வடிவமே இயல்பாயினும் தொல்காப்பியர் சுட்டும் சில வடிவங்கள் தற்போது காணப்பெறவில்லை. 15. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் என்றபடி மெய் எழுத்துக்களுக்குப் புள்ளியே சிறந்த அடையாளமாகும். ஆனால் மகரக் குறுக்கம் பற்றிக் கூறும் (13) நூற்பாவிற்குப் பின்னர் உட்பெறு புள்ளி உருவாகும்மே (14) என அம் மகரத்தின் வரிவடிவச் செய்தியாகக் கூறும்போது புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாகப் பெறும் புள்ளி எழுத்துத்தான் மகரம் என்கிறார் தொல்காப்பியர்.

இதை இளம்பூரணர்தான் பகரத்திற்கும் மகரத்திற்கும் உள்ள வரிவடிவ வேற்றுமை பற்றியது என்கிறார். பகரம் “ப்” ஆகும். நூற்பாவின்படி மகரம் “ப்” ஆகும். இந்த உள்ளே உள்ள புள்ளிதான் பிற்காலத்தில் மூடிய நிலையில் “ம்” ஆனது எனலாம். இவ்வெழுத்து பற்றிய ஆய்வு பலரால் எடுத்து மொழியப்பட்டாலும் தொல்காப்பியர் கால வழக்கத்தை ஓரளவு ஊகிக்க முடிகிறது என்பதே உண்மையாகும்.

மெய் எழுத்திற்குப் புள்ளி என்ற ஓர் அடையாளம் சுட்டப்படுதல்போல் உயிர் எழுத்திற்கு ஓர் அடையாளம் இல்லையாயினும் எ, ஒ எழுத்துக்களுக்கு மட்டும் வரி வடிவம் கூறப்பட்ட செய்தி 16. ஏகர ஒகரத் தியற்கையும் அற்றே என்ற நூற்பாவால் விளங்குகிறது.

எ, ஒ எழுத்துக்களின் மேலே புள்ளி பெறின் அவை குறில், புள்ளியின்றியிருப்பின் நெடில் என்ற குறிப்பு தொல்காப்பியரால் உணர்த்தப்படுகிறது.

எ், ஒ் – குறில்
எ, ஒ - நெடில்

இங்ஙனம் குறிலுக்கு அமைந்த மேற்புள்ளியே பின்னாளில் கீழே தரப்பெற்று ஏ, ஓ என்பதாக வரிவடிவம் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல் (15) என்ற நூற்பாவிற்குப் பின் எகர ஒகரத் தியற்கையும் அற்றே (16) எனும் நூற்பா அமைவதால் உயிர் எழுத்தில் சில குறில் நெடில் வரிவடிவை உணர்த்தியிருக்கின்றன என்ற உண்மை வெளிப்படுகிறது.

உயிர்மெய் எழுத்தின் வடிவம் பற்றிக் கூறுங்கால் பதினெட்டு மெய்யும் பன்னிரு உயிருடன் சேரும்போது,

17. புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீர் இயல உயிர்த்தல் ஆறே

என்ற விதிப்படி பல்வேறு வடிவு கொள்ளும் என்பது தொல்காப்பியர் கருத்து. மெய் எழுத்தின் மேலுள்ள புள்ளியை எடுத்துவிட்டால் அது உயிர்மெய் எழுத்தாம். மேலும் அந்தந்த உயிர் எழுத்துடன் சேருங்கால் கீழும் மேலும் பக்கங்களிலும் வளைவும் கொம்பும் காலும் பெற்று வருவதும் உயிர்மெய் எழுத்தாம்.

இங்ஙனம் உயிர்மெய்யாக வருங்கால் அதன் மாத்திரை அளவு கூடாதென்பதைத் தொல்காப்பியர் மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா என்ற விதியால் கூறினார். அதாவது க் + அ = க, க்+ ஆ =கா எனும்போது ஒன்று அல்லது இரண்டு மாத்திரையும் சேர முறையே "க"– ஒன்றரை மாத்திரையாகவோ "கா" - இரண்டரை மாத்திரையாகவோ கூறப்படுவதில்லை. எனவே புள்ளியற்ற நிலையில் நிற்கும் போதும் வளைவு, கொம்பு, கால் முதலிய பெறும் போதும் அந்தந்த உயிர்மெய் வடிவாகக் கருதப்படும் என்க. இவற்றைத்தான் உருவுருவாகி உயிர்த்தல் என்றும் உருவுதிரிந்து உயிர்த்தல் என்றும் 7ஆம் நூற்பா கூறுகிறது.

உருவுருவாகி அகரமொடு உயிர்த்தல்: க் + அ= க (க் - மெய், புள்ளியற்ற க உயிர்மெய்)

ஏனை உயிரொடு உருவு திரிந்து உயிர்த்தல்:

- க் + ஆ: கா (பக்கத்தில் கால் பெற்றது. இந்தக் காலைப் புள்ளி என்பதாகக் கூறுவர்)
- க் + இ =கி (மேலே வளைவு பெற்றது)

- க் + உ =கு (கீழே வளைவு பெற்றது. வளைவு என்பதை விலங்கு என்பதாகக் கூறுவர்)

- க் + எ, ஏ கெ, கே (ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு பெற்றது)

- க் + ஒ, ஓ: கொ, கோ (முன்னும் பின்னும் கொம்பும் காலும் பெறுதல்)

அடுத்து சார்பெழுத்துக்களாகிய குற்றியலிகரம், குற்றியலுகம், ஆய்தம் என்றவற்றிற்கு வரிவடிவம் பற்றிய கருத்தில் பல முரண்பட்ட செய்திகள் இருப்பினும் தொல்காப்பியர் கூறும்போது,

குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன

என்று கூறுகிறார்.

சார்பெழுத்துக்களை ஒலிவகையான் அறிதலின்றி வரிவடிவான் அறிதலுக்கு இந்நூற்பாவுடன் இன்னும் சிலவற்றைப் பொருத்திப் பார்த்தால் தொல்காப்பியரின் கருத்துதெற்றென விளங்கும்..

'ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்' என்றும்
'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' என்றும்
'குறிய தன் முன்னர் ஆய்தப் புள்ளி என்றும்

ஆங்காங்கே தொல்காப்பியர் கூறுவதைத் தொகுத்துணருங்கால் ஆய்தம் புள்ளி வடிவானது என்பதும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் மெய் எழுத்தைப் போலப் புள்ளிபெறும் என்பதும் தெரிவதால் சார்பெழுத்துக்களுக்கு ஓரளவு வரிவடிவம் கூறப்பட்டதாக உணரலாம். அதாவது மூன்று புள்ளியாக உள்ள ஆய்தம் வெளிப்படையான வடிவம் போல் குற்றியலிகர. உகரங்களை வெளிப்படையாக அறிய அவற்றின் மேலே ஒரு புள்ளியை இட்டு உணர்த்தப்படவேண்டும என்க.

எ.டு. கேண்மியா (மி) மிகாமல் ஒரு புள்ளி வைக்க வேண்டும். குரங்கு + யாது = குரங்கியாது (கி) மிகாமல் ஒரு புள்ளி வைக்க வேண்டும் (ஒரு மொழி குற்றியலிகரம் தொடர்மொழி குற்றியலிகரம்)

நாகு. வரகு (குற்றியலுகரம்)

எனவே குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற சார்பெழுத்துக்களாகிய மூன்றும் புள்ளி பெறும் வரிவடிவன என்பது தொல்காப்பியர் கருத்தாக உணரலாம்.

18. மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே.

இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

குறிப்பு

உயிர்மெய்யில் மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னருமாக ஒலிக்கும். க் +அ=க

19. வல்லெழுத் தென்ப க ச ட த ப ற

க் ச் ட் த் ப் ற் ஆறும் வல்லெழுத்து

20. மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன

ங் ஞ் ண் ந் ம் ன் ஆறம் மெல்லெழுத்து

21. இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள

ய் ர் ல் வ் ழ் ள் ஆறம் இடையெழுத்து.

அடுத்து எழுத்துக்களின் மயக்கம் பற்றி நூல் மரபில் 22 முதல் 30 வரையுள்ள நூற்பாக்கள் விளக்குகின்றன. எழுத்துக்கள் ஒன்றொடொன்று சேர்வதையே ஈண்டு மயக்கம் என்ற சொல் உணர்த்துகிறது. அதாவது, எழுத்துக்கள் ஒன்றொடொன்று சேர்ந்து சொல்லாகும்போது எந்தெந்த எழுத்துக்கள் எந்தெந்த எழுத்துக்களோடு சேர்ந்து வரும் என்று காண்பதே மயக்கமாகும்.

சொல்லும் சொல்லும் சேர்வது பற்றிப் புணரியல் போன்ற பல இயல்கள் உணர்த்தும். ஆனால் ஒரே சொல்லுக்குள் எழுத்துக்கள் எப்படி ஒன்று சேர்ந்து இயங்கும் என்பதைப்பற்றி உணர்த்துவது நூல்மரபின் செய்தியாகும். உயிரும் உயிரும் சொல்லாகா என்பதால் மெய் எழுத்துக்களின் இயக்கம் பற்றி உணர்வதே எழுத்துக்களின் மயக்கம் பற்றிய செய்தியாகும்.

22. அம் மூ வாறும் வழக்கியல் மருங்கின்
மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை.

பதினெட்டு மெய் எழுத்துக்களும் தம்மை மொழிப்படுத்தி அதாவது சொல்லாகி வழங்கப்படும்போது தம்முள் தாமும் தம்முள் பிறவும் ஆகிய எழுத்துக்களுடன் நிற்கும் என்பதாம். ஈண்டு மெய் என்றது தனி மெய்யையும் உயிர்மெய்யையும் குறிக்கும்.

தன்னுடன் தன் மெய்யே மயங்குவது உடனிலை மெய் மயக்கம் என்றும் தன் மெய்யுடன் பிற மெய் மயக்கத்தை வேற்று நிலை மெய் மயக்கம் என்றும் கூறுவர்.

## 1.3 உடனிலை மெய்மயக்கம்



30\. மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன் தாம்வரூஉம் ரழஅலங் கடையே

பதினெட்டு மெய் எழுத்துக்களுள் ர, ழ இரண்டு தவிர்த்த ஏனைய பதினாறு எழுத்துக்களும் தம்முள்தாம் மயங்கும் என்ற இந்த ஒரு நூற்பா மட்டுமே உடனிலைமெய் மயக்கத்திற்கான இலக்கணமாகும்.

- காக்கை = க்க்
- எங்ஙனம் = ங்ங்
- பச்சை = ச்ச்
- மஞ்சை = ஞ்ஞ்
- பட்டை = ட்ட்
- பண்ணை = ண்ண்
- தத்தை = த்த்
- வெந்நோய் = ந்ந்
- அப்பா = ப்ப்
- அம்மா = ம்ம்
- வெய்யர் = ய்ய்
- எல்லி = ல்ல்
- எவ்வி = வ்வ்
- கொள்ளி = ள்ள்
- கொற்றி = ற்ற்
- கன்னி = ன்ன்

இவைபோல ர்ர்: ழ்ழ் ஒன்றி நிற்பதற்கு ஆட்சி இல்லை. எனவே ர, ழ என்பன வேறு மெய்களுடன் தான் வரும். இவ்வாறே க, ச, த, ப நான்கும் வேறு மெய்களுடன் வாரா, தம்முன் தாமே மயங்கும் உடனிலை மெய் மயக்கத்திற்கே உரியன ஆகும்.

இங்ஙனமாக மெய் பதினெட்டில் வேற்று நிலை மெய் மயக்கிற்கே உரிய ரழவும் உடனிலை மெய் மயக்கிற்கே உரிய கசதபவும் ஆகிய ஆறு எழுத்துக்கள் தவிர்த்த ஏனைய பன்னிரண்டு எழுத்துக்களும் தம்முன் தாமும் தம்முன் பிறவும் மயங்குவன ஆகும் என்பதாம்.

## 1.4 வேற்றுநிலை மெய்மயக்கம்

உடனிலை மெய் மயக்கத்திற்கு மட்டுமே உரிய க ச த ப நான்கெழுத்துக்களைத் தவிர்த்த பதினான்கு எழுத்துக்கள் (ட ற ல ள ங ஞ ண ந ம ன வ ய ர ழ) வேற்று நிலை மெய் மயக்கிற்கு

உரியன. அவற்றைத் தொல்காப்பியர் கீழ்க்கண்ட நூற்பாக்களால் விள்ககுகிறார்.

23.டறலள என்னும் புள்ளி முன்னர்க்
க ச ப என்னும் மூவெழுத் துரிய.

24. அவற்றுள்
லள.:.கான் முன்னர் யவவும் தோன்றும்.

25. ஙஞணநமன என்னும் புள்ளி முன்னர்த்
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே.

26. அவற்றுள்
ணன.:.கான் முன்னர்க்
கஞபமயவ ஏழும் உரிய.

27. ஞநமவ என்றும் புள்ளி முன்னர்
ய.:.கான் நிற்றல் மெய்பெற் றன்றே.

28. ம.:.கான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்

29. யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்.

இந்நூற்பாக்களுக்கான விளக்கமும் எடுத்துக்காட்டும் வருமாறு:

1. டற என்பன கசப மூன்றுடன் வரும்.

கட்க, கட்சி, தட்ப (ட்க், ட்ச், ட்ப்)
கற்க, கற்சிலை, கற்பகம் (ற்க், ற்ச், ற்ப்)

2. லள என்பன கசபயவ ஐந்துடன் வரும்.

செல்க, வல்சி, செல்ப, கொல்யானை, கோல்வளை
(ல்க், ல்ச், ல்ப், ல்ய், ல்வ்)

கொள்க, கொள்கிறார், கொள்ப, வெள்யானை, வெள்வளை (ள்க், ள்ச், ள்ப், ள்ய், ள்வ்)

3. ங என்பது கவுடன் மட்டும் வரும்
தெங்கு (ங்க்)

4. ஞ என்பது ச ய இரண்டுடன் வரும்.
மஞ்சு, உரிஞ்யாது (ஞ்ச், ஞ்ய்)

5. ண என்பது ட, க, ச, ஞ, ப, ம, வ எட்டுடன் வரும். வண்டு, வெண்கலம், வெண்சாந்து, வெண்ஞான், வெண்பலி, வெண்மாலை, மண்யாது, மண்வலிது (ண்ட், ண்க், ண்ச், ண்ஞ், ண்ப், ண்ம், ண்ய், ண்வ்)

6. ந என்பது த ய இரண்டு வரும்
பந்து, பொருந்யாது (ந்த், ந்ய்)

7. ம என்பது ப ய வ மூன்றுடன் வரும்.
கம்பு, திரும்யாது, நிலம் வலிது (ம்ப், ம்ய், ம்வ்)

8. ன என்பது ற க ச ஞ ப ம ய வ எட்டுடன் வரும்.

கன்று, புன்கண், புன்செய், பொன்ஞாண், பொன்பெரிது, பொன்மாலை, பொன்யாது: பொன் வலிது (ன்ற், ன்க், ன்ச், ன்ஞ், ன்ப், ன்ம், ன்ய், ன்வ்)

9. ய என்பது க ச த ப ஞ ந ம வ எட்டுடனும் வரும்.

வேய்கடிது, வேய்சிறிது, வேய்தீது, வேய் பெரிது, வேய்ஞான்றது, வேய் நீண்டது, வேய் மாண்டது, வேய் வலிது (ய்க், ய்ச், ய்த், ய்ப், ய்ஞ், ய்ந், ய்ம், ய்வ்)

10. வ என்பது யவுடன் மட்டும் வரும்
தேவ்யாது (வ்ய்)

11. ரழ என்பன க ச த ப  ந ம ய வ ங என்னும் பத்துடன் வரும்.

வேர் கடிது., வேர் சிறிது, வேர் தீது, வேர் பெரிது, வேர் ஞான்றது, வேர் நீண்டது, வேர் மாண்டது, வேர் யாது, வேர் வலிது வேர் ஙனம், (ர்க், ர்ச், ர்த், ர்ப், ர்ஞ், ர்ந், ர்ம், ர்ய், ர்வ், ர்ங்)

வீழ்கடிது. வீழ்சிறிது, வீழ்தீது, வீழ்பெரிது, வீழ்ஞான்றது, வீழ் நீண்டது, வீழ்மாண்டது, வீழ்யாது. வீழ் வலிது, வீழ்ஙனம் (ழ்க், ழ்ச், ழத், ழ்ப், ழ்ஞ், ழ்ந், ழ்ம், ழ்ய், ழ்வ், ழ்ங்)

மொழியமைப்பில் இம்மெய் மயக்கக் கருத்துக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும். ஏனெனில் மொழியின் ஆக்கத்திற்கு அதாவது பொருளை உணர்த்தும் சொல்லாம் தன்மைக்கு எழுத்துக்களின் சேர்க்கையே அடிப்படையாகும்.

எழுத்துக்கள் சேர்வதினாலேயே சொல்லாம் தன்மை உருவாவதில்லை. அது பொருளைச் சுடடியுணர்த்தும் அடிப்படையிலேயே ஒன்று சேரும் என்பதாம். இந்தவகையில் மெய் மயக்கக் கருத்து இன்றியமையாததாகும்.

## 1.5 தொகுத்துக் காண்போம்

1. தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கை அவற்றின் பெயர் முறை வடிவம் ஆகியவை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்
2. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு மாத்திரை என்பது பெயர் இயல்பாகக் கண்ணை இமைக்கும் நேரம் கைநொடிக்கும் நேரம் மாத்திரைக்குரிய கால அளவு என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.
3. எழுத்துகள் ஒன்றோடொன்று கூடி வரும் மயக்கம் என்பது குறித்தும் அறிந்து கொண்டீர்கள்.

## 1:6 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன - விளக்குக.
2. மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே - விளக்குக.
3. உட்பெறு புள்ளி உருவாகும்மே - பொருள் தருக.
4. மெய்மயக்கம் பற்றித் தொல்காப்பியர் கூறுவன யாவை?

## 1.7 மேலும் அறிந்துகொள்ள

1. வ.சுப.மாணிக்கம் - தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
நூன்மரபும்மொழிமரபும், மாணிக்கவுரை
தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு
அக்டோபர் 1989.

2. தமிழண்ணல் - தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்
மீனாட்சி புத்தக நிலையம்
48, தானப்ப முதலிதெரு, மதுரை - 625 001.

# கூறு - 2
# மொழிமரபு

## 2.1 முன்னுரை

மொழியிடை நிற்கும் எழுத்துக்களுக்கு இலக்கணம் கூறுவது மொழிமரபாகும். இவ்வியல் மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப்பட்டது. இதனுள் கூறுகின்ற

எழுத்து தனிநின்ற எழுத்திற்கு அன்றி மொழியிடை நின்ற எழுத்திற்குக் கூறப்படும் இலக்கணமாகும்.



## 2.2 குறிக்கோள்கள்

- நூல்மரபின் ஒழிபுச் செய்திகளைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- மொழியாக்கம், மெய்களின் இயக்கம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- போலி எழுத்துகள் என்பது குறித்துத் தெரிந்து கொள்வீர்கள்.

## 2.3 சார்பெழுத்துக்கள்

நூல்மரபில் சார்பெழுத்து பற்றியும் அளபெடை பற்றியும் சுருக்கமாகக் கூறப்பட்டது. மொழிமரபில் விரிவாகக் கூறப்படுகிறது.

## 2.4 ஒருமொழிக் குற்றியலிகரம்:

34. குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
 யாஎன் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
 ஆ வயின் உரூஉம் மகரம் ஊர்ந்தே.

அசைச் சொல்லாகிய "மியா" என்பதில் யா என்பதை உறுப்பாகக் கொண்டு மகரத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு 'நின்ற இகரம் குற்றியலிகரமாகும்.

இம்மியா என்ற அசைச்சொல் ஒன்றைச் செய் எனக் கட்டளையாகவோ ஏவலாகவோ வரும் சொல்லோடு சேர்ந்து வரவேண்டும் என்பது நியதி. இல்லையேல் தனி மியா என்பதை அசைச் சொல்லாக உணரமுடியாது.

எ.டு. கேண்மியா - கேட்பாயாக (கேள்), சென்மியா - செல்வாயாக (செல்), வம்மியா - வருவாயாக (வம்) என ஏவல் போல் உரைக்குங்கால் "மியா" என்பது பொருளற்ற சொல்லாகச் சேர்ந்து நீங்கும். ஆனால் இவை இரு சொற்களாகக் கருதப்படாமல் ஒரு சொற்களாகும் என்பதால் இதை ஒருமொழிக் குற்றியலிகரம் என்பர்.

## 2.5 தொடர் மொழிக் குற்றியலிகரம்:

35. புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
 உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்

என்பது புணர்மொழிக் குற்றியலிகரமாகும். இந்நூற்பாவில் இடம்பெற்றுள்ள முன்னர்த் தோன்றும் என்பதற்கு இதற்குரிய விரிவுச்செய்தி குற்றியலுகரப் புணரியலில் கூறப் பெறும் என்பது பொருளாகும். தொல்காப்பியர்தம் கருத்துப்படி முன்னர் என்பது பின்னாலுள்ளதைக் குறிக்கும்.

**குறிப்பு**

யகரம் வரும்வழி யிகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது

என்ற நூற்பாவுடன் பொருத்தி உணர, புணர்மொழிக் குற்றியலிகரத்தை அறியலாம்.

அதாவது, குற்றியலுகரம் நிலைமொழியாக நிற்க வருமொழி யகரமாக வரும்போது நிலைமொழியின் உகர யீறு இகரமாகத் திரியும்.

எ.டு.நாகு + யாது: நாகியாது, வரகு + யாது: வரகியாது என வருவன. இதில் குற்றியலுகர யீறு பற்றுக்கோடு. வருமொழி யகரம் இடம்.

## 2.6 ஒருமொழிக் குற்றியலுகரம் :

36.நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.

இந் நூற்பாவின்படி குற்றியலுகரம் உணர்த்தப்பட்ட குறிப்பாவது ஆறு வகைக் குற்றியலுகரங்கள் உள்ளன என்பதாகும்.

க் ச் ட் த் ப் ற் என்ற வல்லெழுத்துக்கள் மீது ஏறிவரும் உகரம் கு, சு, டு, து, பு, று என்பதாக வரும். இந்த ஆறு எழுத்துக்களும் நெடிலுக்குப் பக்கத்திலும் உயிர், வலி, மெலி, இடை, ஆய்தம் எழுத்துக்களுக்குப் பக்கத்திலும் வரும்போது ஓசை குறைந்து வரும்.

- ✓ நாகு – நெடில் தொடர்க் குற்றியலுகரம்
- ✓ வரகு – உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
- ✓ சுக்கு – வன் தொடர்க் குற்றியலுகரம்
- ✓ சங்கு – மென் தொடர்க் குற்றியலுகரம்
- ✓ மார்பு - இடைத் தொடர்க் குற்றியலுகரம்
- ✓ எ∴கு – ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

இந்த ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு வல்லெழுத்து ஆறும் பற்றுக்கோடு, நெட்டெழுத்து முதலான ஆறு தொடர்களின் ஈறும் இடமாகும்.

## 2.7 தொடர் மொழிக் குற்றியலுகரம்:

37. இடைப்படிக் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான.

குறிப்பு

நிலைமொழி வருமொழி எனச் சொற்கள் புணருங்கால் நிலை மொழி இறுதி குற்றியலுகரமாக நின்று வருமொழி வல்லின முதலோடு சேருங்கால் தொடர் மொழிக் குற்றியலுகரத்தை உணரலாம் என்பது குற்றியலுகரப் புணரியலில்,

வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை யியற்கை நிலையலும் உரித்தே

எனக் கூறும் நூற்பாவால் தெரிகிறது.

ஈண்டு நிலைமொழியாக நிற்கும் குற்றியலுகரம் வன்தொடர் குற்றியலுகரமாக நிற்க வேண்டும் என்பது கருத்து. அந்த வன்தொடர் குற்றியலுகரந்தான் வருமொழி வல் எழுத்தோடு சேரும்போது அரை மாத்திரையாகவே நிற்கும்.

பொதுவாக அல்வழி. வேற்றுமைப் பொருளில் வரும் புணர்மொழிக் குற்றியலுகரம் முற்றியலுகரமாக உச்சரிக்கப்படும்.

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிறையும்

என்ற குற்றியலுகரப் புணரியல் நூற்பாவின்படி குற்றியலுகரமே முற்றியலுகரமாக உச்சரிக்கப்படும். ஆனால் தொடர் குற்றியலுகரம் மட்டும் வருமொழி வல்லெழுத்தோடு புணரும்போது முற்றுகரமாக ஒலிக்காமல் குற்றுகரமாகவே ஒலிக்கும் என்பதுதான் தொடர் மொழிக் குற்றியலுகரமாகும்.

எ.டு. செக்கு + கணை : செக்குக்கணை
சுக்கு + கோடு : சுக்குக்கோடு

இந்தக் கருத்து நச்சினார்க்கினியரால் வேறு வகையாகக் கூறப்படுகிறது. இந்தப் புணர்மொழியில் குற்றியலுகரமானது தன் இயல்பான அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்தொலிக்கும்.

இந்தத் தொடர்மொழிக் குற்றியலுகரத்திற்கு வன்தொடர் குற்றியலுகரமும் வருமொழி வல்லெழுத்தும் இடம். அந்த வன்தொடர் குற்றியலுகரத்தின் வல்லெழுத்துப் பற்றுக்கோடு ஆகும்.

(சுக்கு + கணை : சுக்குக்கணை, நிலைமொழியீறு கு, வருமொழி க - இடம் நிலைமொழி கு வுக்கு முன் உள்ள ‘க்’ வல்லெழுத்துப் பற்றுக்கோடு)

## 2.8 மொழிமுதல் குற்றியலுகரம்:

*இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்*

**குறிப்பு**

குற்றியலுகரம் மொழிக்கு இறுதியில்தான் வரும் என்பது இயல்பு. ஆனால் மொழிக்கு முதலிலும் வரும் என்பது மொழி மரபில் கூறப்பட்டுள்ள செய்தியாகும்.

67. குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
 ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.

முறைப் பெயராக வரும் குற்றியலுகரம் மொழிக்கு முதலில் வரும். நுந்தை, வல்லாறுமிகை வரும் உகரம் போலாது மெல் எழுத்தோடு வரும் உகரம் முறைப்பெயராக வரும் நிலையில் மொழிமுதல் குற்றியலுகரமாகக் கருதப்படும்.

இதற்கு இடம் நுந்தை என்னும் முறைப்பெயர். நகர மிசை நகரம் என்பது பற்றுக்கோடு.

இந்த மொழி முதல் குற்றியலுகரம் முற்றியலுகரம் போல இதழ் குவித்து ஒலித்தாலும் பொருளில் எந்த மாறுபாடும் இல்லை என்பதை,

68. முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
 அப்பெயர் மருங்கின் நிலையிய லான.

என்ற நூற்பா விளங்குகிறது.

## 2.9 ஒருமொழி ஆய்தம்:

38. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
 உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.

புள்ளி வடிவினதாகிய ஆய்தமானது குறிலுக்குப் பின்னும் குற்றியலுகரத்திற்கு முன்னும் ஆகிய இடைப்பட்ட இடத்தில் வரும். எ.டு, எ∴கு, இதற்குக் குறியதன் முன்னரும் வல்லெழுத்துமிசையும் இடம். ஆய்தம் தானே உச்சரிக்கும் உயிரன்மையின் அது மெய்யாம் தன்மை புணர்மொழியால் பெறலால் பற்றுக்கோடு இல்லை.

## 2.10 தொடர்மொழி ஆய்தம்:

வருமொழி நிலைமொழி சேரும்போது நிலைமொழி யீறு வருமொழியால் ஆய்தமாக உருவெடுத்தல்.

எ.டு. கல் + தீது : க∴றீது
 முள் + தீது : மு∴டீது.

*Self-Instructional Material*

இங்ஙனம் வருவதுபற்றிப் புள்ளி மயங்கியலில் விதி கூறப்பட்டுள்ளது.

லகர ஈறுமுன் தகரம் வந்தால் ஆய்தம் தோன்றும் என்பதை,

தகரம் வரும் வழி ஆய்தம் நிலையலும்
புகரின்று என்மனார் புலமை யோரே

என்ற நூற்பாவும், ளகர ஈறுமுன் தகரம் வருவதை,

ஆய்தம் நிலையலும் வரைநிலை யின்றே
துகரம் வரூஉம் காலை யான

என்ற நூற்பாவும் விளக்குகின்றன.

இங்ஙனம் ல, ள மட்டுமின்றி அவ் என வகர ஈற்றுச் சுட்டுப் பெயர் நிலைமொழியாகவும் வருமொழி வல்லினமாகவும் சேர ஆண்டு "வ்" ஆய்தமாக மாறுவதும் உண்டு.

எ.டு. அவ் + கடிய: அ.்.கடிய.

இதற்கு, 'வேற்றுமை அல்வழி ஆய்தம் ஆகும்' என்பதே விதியாகும்.

ஆய்தம் அரைமாத்திரை அளவில் ஒலிக்கும். ஆனால் நிறத்தின் மிகுதியையும் ஓசையின் மிகுதியையும் குறிக்கும்போது அரைமாத்திரையினும் மிகுதியாக ஒலிக்கும். அப்படி ஒலிக்கும் ஒலி நீட்சியை வரிவடிவில் காட்ட இயலாது. உச்சரித்தே உணர வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

40. உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெல்லா எழுத்தின் இயலா
ஆய்தம் அ.்.காக் காலை யான.

க.்.றென்றது – நிறத்தின் மிகுதி
சு.்.றென்றது – ஓசையின் மிகுதி

ஈண்டு ஆய்த எழுத்தைச் சற்று நீட்டி ஒலித்தலால் ஆய்த அளபெடை போன்ற ஒலி நீட்சியை உணரலாம் என்பது இளம்பூரணர் கருத்து. ஆனால் நச்சினார்க்கினியரோ

க.்.்.று, சு.்.்.று என இரண்டு ஆய்த எழுத்தை எழுதியே ஒலி நீட்டத்தை வெளிப்படையாக உணர்த்தினார்.

## 2.11 அளபெடை :

எழுத்துக்களின் இயல்பான அளவாகிய ஓசை எழுத்து நீண்டு ஒலிப்பதை அளபெடை என்பர். இது ஒற்றளபெடை உயிரளபெடை என இருவகைப்படும். நூல்மரபில் இது பற்றிக் கூறினாலும் மொழி மரபில் அதன் விளக்கத்தைத் தருகிறார். தொல்காப்பியர்.



41. குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நேட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே.

அளபெடைக்கு அடையாளம் யாதெனில் நெட்டெழுத்துக்குப் பக்கத்தில் அந்நெட்டெழுத்தின் குறிலை அடையாளமாக எழுதிக் காட்டுவது.

எ.டு. ஆ அ ஈ இ.,

இவை ஓரெழுத்து, ஒரு மொழியாய் வந்தன. மொழி அமைப்பில் அதாவது சொல்லளவில் "எடுப்பதூஉம் எல்லாம் மழை" என்பது போல வரும். இந்த அளபெடையைக் குறிக்கும் ஓசை பற்றி வந்ததாகக் கொள்ள வேண்டுமேயன்றி ஓர் எழுத்து என்பதாகக் கொள்ளக் கூடாது என்பது கருத்து.

கூட்டொலியாக உள்ள ஐ, ஔ என்னும் நெட்டெழுத்துக்கள் முறையே இ, உ எழுத்துக்களை அடையாளமாகப் பெறும்.

42. ஐ ஔ என்னும் ஆயீ றெழுத்திற்கு
இகர உகரம் இசை நிறை வாகும்.

எ.டு. ஐ இ, ஔ உ,

ஆக, இதுவரை கூறப்பட்டவை அதாவது சார்பெழுத்துக்களான தனிமொழி புணர்மொழி (தொடர் மொழி) களுக்குரிய குற்றியலிகர, உகர, ஆய்தம் பற்றிய செய்திகளும் அளபெடை பற்றிய செய்தியும் நூல்மரபின் ஒழியாகக் கூறப்பட்டவையாகும். நூல்மரபில் இவை பற்றிக் கூறத் தொடங்கி மொழி மரபில் முடிந்தது என்க.

## 2.12 மூவகை மொழிகள் :

எழுத்துக்கள் தொடர்ந்து சொல்லாகும் போது அதாவது மொழியாகும் போது ஓரெழுத்தாலான சொல், இரண்டு எழுத்தாலான சொல், இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆன சொல் என மூவகைப்படும்.

45. ஓரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி
இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

எ.டு. ஆ, மணி, வரகு, கொற்றன்.

இந்நூற்பாவின் மூலம் தமிழ் வழக்கு என்பது ஒன்று. சில, பல என்ற முப்பிரிவை உடையது என்பதை நச்சினார்க்கினியர் கூறினார்.

நெட்டெழுத்துக்கள் பெரும்பாலும் ஓரெழுத்து ஒருமொழியாய் வரும். என்றாலும் உயிர் நெட்டெழுத்துக்கள் மெய்யோடு இயைய அமைவது போலத் தனித்த உயிர் நெட்டெழுத்துக்கள் ஒரு மொழி ஆதல் பற்றியே தொல்காப்பியர் நூற்பா செய்தார். ஏனெனில் உயிர்க் குறிலில் ஓரெழுத்து ஒருமொழி ஆதலுக்கு இடம் இல்லை என்பதை உணர்த்த என்பதாம்.

43. நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி

எ.டு. ஆ, ஈ, ஓ, ஏ, ஐ, ஓ, ஔ (பசு, பறவை, தசை, அம், அழகு. நீர்மதகு).

இவ்வெழுத்துக்கள் தம்மை உணர்த்தும்போது உயிர்நெடில் எனப்பட்டாலும் பொருளை உணர்த்தும்போது மொழியாம் தன்மை உடையதாகும்.

இவற்றுள் ஔ என்னும் உயிர் எழுத்து மெய்யோடு சேர்ந்து ஓரெழுத்தாய் அமையும். க் + ஔ = கௌ.

44. குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இலவே.

அ, இ, உ, எ, ஒ என்ற குறில் ஒரு மொழியாம் தன்மை இல்லை. என்றாலும் அ இ உ சுட்டாகவும் எ வினாப் பொருளைத் தருவதால் ஓரெழுத்து ஒருமொழியாயக் கொள்ளலாமா என்றால் அவை இடைச்சொல் என்பதால் பொருளின் முழுமையை உணர்த்தும் பெயர்போல் இல்லாததால் அங்ஙனம் ஒரு மொழியாகக் கூறுதற்கில்லை. இதைத்தான் "மொழி நிறைபு இல" என்கிறார். ஆனால் எ, ஒ என்ற இரு குறில் மட்டும் மெய்யோடு சேர்ந்து, து, நொ என அமையும்போது ஓரெழுத்தாய் வரும் என இளம்பூரணர் கூறுகிறார்.

எ.டு. து, (உணவு) நொ (துன்பம்)

ஆக, பொருளை உணர்த்தும் அடிப்படையில் ஓர் எழுத்தும் எழுத்துக்கள் சேர்ந்த சொல்லும் தொடர் மொழி ஆகும் எனத் தெரிகிறது.

## 2.13 எழுத்துக்களின் இயக்கம்:

ஒரு மொழியின் இயக்கம் எழுத்துக்களால் ஆகும். எழுத்துக்கள் தாம் உயிர் மெய் என இருவகைப்படும். உயிர் தனித்து இயங்க

வல்லது. மெய் தனித்து இயங்கா என்றாலும் அதை இயக்க அகர எழுத்தோடு சேர்த்து உயிர்மெய் போலக் கூறவேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.



46. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.

இதனால் ட ற ல ள எனக் கூறும்போது இடம்நோக்கி மெய் என்றும் உயிர்மெய் என்றும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது கருத்து.

நூல் மரபில் எழுத்துக்களின் மயக்கம் பற்றிக்கூறும் போது இன்ன எழுத்து இன்ன எழுத்துடன்தான் மயங்கிவரும் என்று வரையறுத்தார். ஆனால் மெய் எழுத்துக்களை அகரத்தோடு சேர்ந்து உயிர்மெய்யாக உச்சரிக்கும் நிலையில் எழுத்துக்களின் மயக்கத்திற்கான விதிமுறை பொருந்தாது என்பதால்,

47. தம்மியல் கிளப்பின எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை

என்று மொழி மரபில் ஒரு விதிவிலக்கு கூறினார். இதற்கு இளம்பூரணர் புள்ளி மயங்கியலின் நூற்பா ஒன்றை எடுத்துக்காட்டாகக் கூறினார்.

“வல்லெழுத்து இயையின் டகார மாகும்”. இதில் இயையின் டகாரம் என்ற சொற்களின் இடையில் ன் ட் மயங்கி நிற்கின்றன. இப்படி நிற்பதற்கு விதி இல்லை.

நூல் மரபில் ன் என்பதற்குப் பக்கத்தில் ற், க், ச், ஞ், ப், ம், ய், வ் என்ற எட்டு எழுத்து வரலாம் எனக் கூறப்பட்டது. அங்கே ‘ன், ட்’ என்பதாக நிற்கும் எனக் கூறவில்லை. ஆனால் ஈண்டு ன் ட் மயங்கி (சேர்ந்து) நிற்பதால் தம்மியல் கிளப்பின என்ற நூற்பாவின்படி மெய் எழுத்துக்கள் தம்மை எடுத்து மொழிந்து காட்டும்போது இன்னதுடன் வரும் என்ற விதிமுறைக்கு விலக்காக வரலாம் என்பது தொல்காப்பியர் கருத்து என்பதாம்.

நூல்மரபில் எழுத்துக்களின் மயக்கம் கூறுங்கால் மெய்யும் உயிர்மெய்யும் சேர்ந்த வகையில் மெய் மயக்கம் கூறப்பட்டது. மொழிமரபில் இரண்டு மெய் தம்முள் ஒத்து நிற்பது பற்றி வெளிப்படையாகக் கூறப்பட்டது.

48. யரழ என்னும் மூன்று முன்ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்றாகும்.

நிலைமொழியிறுதியில் ய் ர் ழ் நிற்க, வருமொழியுடன் சேரும்போது க ச த ப ங ஞ ந ம எழுத்துக்கள் ஈரொற்றாய் வந்து நிற்கும்.



**குறிப்பு**

எ.டு.வேய்க்குறை. வேய்ச்சிறை, வேய்த்தலை, வேய்ப்புறம், வேய்ங்குறை, வேய்ஞ்சிறை, வேய்ந்தலை, வேய்ம்புறம்.

இவற்றுள் ர, ழ இரண்டு ஈறும் நெடிலோடு ஒற்றாய் வருமேயன்றிக் குறில் கீழ் வாரா என்பது விதி.

49. அவற்றுள்,
ரகார ழகாரம் குற்றொற் றாகா.

எ.டு. தார், தாழ்

ர, ழ குறில் கீழ் வரவேண்டுமானால் உகர உச்சரிப்புடன் உயிர்மெய்யாய் வரும்.

எ.டு. தர்மம் என்பது தருமம் என வரும்.

ய ர ழ மூன்றும் வருமொழியோடு சேரும்போது கசதப ஙஞநம என்ற ஒற்றுடன் ஈரொற்றுத் தொடராய் நிற்கும் என 48ஆம் நூற்பா கூறுகிறது. இவற்றிற்குக் காட்டப்பட்ட உதாரணம் நெடிற்கீழ் எழுத்துக்களாகக் காட்டப்பட்டது.

ஆனால் ர ழ இரண்டு மட்டும் நெடிற்கீழ் வருமேயன்றி குறிற்கீழ் வாரா என்பதை 49ஆம் நூற்பா கூறினாலும் ர ழ குறிற்கீழ் வருவது பற்றிக் கூறும்போது குறிலிணைக் கீழ் அகர், புகர், அகழ், புகழ் என வரும். அங்ஙனம் வருவது நெடிலுக்கு இரு மாத்திரைபோல, குறிலிணைக்கு இரு மாத்திரை எனக் கொண்டு நெடிற்கீழ் வந்ததாகவே கருதவேண்டும்.

50. குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத் தியல,

இதனால் புகர், புகழ் எனக் குறிலிணைக்கீழ் மட்டுமின்றி இரண்டு மாத்திரைக்கு மேலாக 'புலவர்' என மூன்று மாத்திரைச் சொல்லாக அமையும்போது 'தன்னினம் முடித்தல்' என்ற உத்தியால் நெடிற்கீழ் வந்ததாகவே கருத வேண்டும்.

இங்ஙனம் ர ழ குறிறிகீழ் வாரா என்பதுபோல 'ய' கரம் குறிற் கீழ் வாராதிருக்குமா எனில் அது நெடிற்கீழ் போலக் குறிற் கீழும் வரும் என இளம்பூரணர் "பொய், நொய்" என உதாரணம் காட்டுகிறார்.

ஈரொற்றுத் தொடர் பற்றிக் கூறி வருகையில் செய்யுள் வழக்காக ஒரு செய்தியைத் தொல்காப்பியர் கூறுகிறார்.



51. செய்யுள் இறுதிப் போலி மொழி வயின்
    னகார மகாரம் ஈரொற் றாகும்.

போலும் என்பது செய்யுளில் “போன்ம்” என வரும். இந்த ஈரொற்றில் மகரம் தன இயல்பான அரைமாத்திரையிலிருந்தும் குறுகி கால் மாத்திரையாக ஒலிக்கும் என்பதும் விதியாகக் கூறப்பட்டது.

52. ன காரை முன்னர் மகாரம் குறுகும்.

போன்ம் என்பதில் உள்ள ன் - மெய்யுன் வரும் ‘ம்’ ஒற்றுத் தன் அரைமாத்திரையிற் குறுகிக் கால்மாத்திரையாகும். இது மகரக் குறுக்கம்.

53. மொழிப் படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும்
    எழுத்தியல் திரியா என்மனார் புலவர்.

பொதுவாக எழுத்துக்களின் இயக்கம் பற்றித் தொல்காப்பியர் கூறுகையில் எழுத்துக்களைத் தனியாகவோ, ஒரு சொல்லிலோ, சொற்றொடரிலோ கூறும்போது தத்தம் மாத்திரையளவில் குறையாமல் இயல்பான எந்தத் திரிபும் இல்லாமல் ஒலிக்கப்பெறும் என்பர்.

அதாவது ஓர் எழுத்தை எடுத்தல் படுத்தல் என ஓசை வேறுபாட்டான் உச்சரித்தாலும் எழுத்தியல் திரியாதென்பது தமிழ்மொழி நடைக்கே உள்ள தனிச்சிறப்பாகும்.

## 2.14 போலி

ஓர் எழுத்திற்குப் பதிலாக இன்னொரு எழுத்து வந்து நிற்றல்’ போலி எனப்படும். மொழி மரபில் கூறும் இப்போலி ‘சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள் போல இசைக்கும்’ என்பதாகக் கூறுகிறது.

54. அகர இகரம் ஐகாரம் ஆகும்.

    எ.டு.ஐயர் - அ இயர் (ஈண்டு அஇ என்பது ஐ ஆனது)

55. அகர உகரம் ஔகார மாகும்.

    எ.டு. ஔவை – அஉவை (அஉ என்பது ஔ ஆனது)

56. அகரத்து இம்பர் யகரப் புள்ளியம்
    ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.

எ.டு. ஐவனம் - அய்வனம் (ஐ – அய்)

ஈண்டு மெய்பெறத் தோன்றும் எனப்பட்டதால் ஔ என்பது அஉ என வருவதுபோல "அவ்" என்பதாக வரும் என்ற குறிப்பைக் கொள்ளவேண்டும்.
ஔவை – அவ்வை (ஔ – அவ்)

கூட்டொலியாகிய ஐ, ஔ எழுத்துக்கள் இரண்டு மாத்திரை அளவின. இவை சிறுபான்மையாகக் குறைந்து ஒலிக்கும் இடமும் உண்டு என விதியாகக் கூறும்போது,

57. ஓரளவு ஆகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான.

எ.டு. இடையன், சடையன், மொழி இடையில் ஐகாரம் குறைந்து ஒரு மாத்திரை ஆனாலும் மொழி முதலில் வரும் ஐகாரம் குறையாது என்று இளம்பூரணர் கூறுகிறார்.

போலி அமைப்பில் யகரமும் இகரமும் போலியாக வருவது பற்றிக் கூறும்போது,

58. இகர யகரம் இறுதி விரவும்
என்கிறார் தொல்காப்பியர்.

எ.டு. நாய் - நாஇ, யகரத்திற்குப் பதிலாக இகரம் வந்தாலும் குற்றமில்லை. இப்படித்தான் வரும் அல்லது வரவேண்டும் என்பது கருத்தன்று.

## 2.15 மொழிமரபில் தொல்காப்பியரின் மொழித்திறன்:

நூல்மரபில் தனி எழுத்திற்கான இலக்கணம் கூறப்பட்டது. மொழிமரபில் மொழியிடை நின்ற எழுத்துக்கு இலக்கணம் கூறப்பட்டது. எழுத்துக்கள் கூடிநின்று சொல்லாகும் போதுதான் அது பொருளைப் புலப்படுத்தும் அடிப்படையில் ஒரு மொழி உருவாக்கத்திற்கு ஆதாரமாகின்றது. இந்த மொழி ஆக்கத்தின் உண்மையைத் தொல்காப்பியர்

"மொழிப் படுத் திசைப்பினும் தெரிந்து வேறு இசைப்பினும்
எழுத்தியல் திரியா என்மனார் புலவர்"

என்ற நூற்பாவில் நுட்பமாகக் கூறுகிறார். தனி எழுத்து மொழியிடையில் நிற்கும் போதும் அதே ஒலி அமைப்பு மாறாமல் நின்று மொழியாகிறது.

இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

**குறிப்பு**

வெறும் எழுத்துக் கூட்டங்களால் ஆன சொல் ஒருமொழிக்கு ஆதாரமாகிவிடாது. அது பொருள் புலப்பாட்டின் அடிப்படையில்தான் மொழியாகும் தன்மைபெறும் என்ற அடிப்படையான உண்மையைத் தொல்காப்பியர் இம்மொழி மரபில் பல வகையில் கூறினாலும்

'அவற்றுள், ரகார ழகாரம் குற்றொற் றாகா' என்ற நூற்பாவில் மிகத் தெளிவாக உணர்த்திவிடுகின்றார்.

ர், ழ் எழுத்துக்கள் நெட்டெழுத்துடன் தான் வரும். குறிலுடன் வாரா என்பது அரிதான மொழித்திறனான செய்தியாகும்.

தார், தாழ் என நெடிலுடன் வருவது போல் தர்மம், கர்ச்சனை எனக் குறிலுடன் வருகிறதே என்றால் அ∴து தமிழ் வழக்கு அன்று என்று விலக்கி விடவேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

இப்படித் தொல்காப்பியர் கூறியதை இளம்பூரணராகிய உரையாசிரியர் இன்னும் சிறப்பித்துக் கூறும் வகையில், ர், ழ் குறில்கீழ் எப்படி வரும் என்றால் குறிலிணையான எழுத்துக்களுக்குப் பின் வரும் என்கிறார். அகர், அகழ், புகர், புகழ் - இங்ஙனம் குறிலிணையாக வரும்போது மாத்திரை அளவில் அக்குறிலிணை நெடிலாகவே கருதப்படுவதால் நெடில்கீழ்தான் ர், ழ் வரும் என உறுதியாகிறது. இக்கருத்தைத் தொல்காப்பியர்,

> குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
> தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத் தியல

என நூற்பாவாகக் கூறினாலும் இளம்பூரணரின் உரை விளக்கம் மிகவும் சிறப்பானதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2.16 தொகுத்துக் காண்போம்

- குற்றியலிகரம் ஒரு மொழிக் குற்றியலிகரம், புணர்மொழிக் குற்றியலிகரம் என இருவகைப்படும் என்று தெரிந்து கொண்டீர்கள்.
- எழுத்துக்கள் தனித்தோ தொடர்ந்தோ பொருள் தருமாயின் அவை மொழியாம் தன்மையைப் பெற்று விடும். அவை ஓரெழுத்து ஒரு மொழி, ஈரெழுத்து ஒரு மொழி, இரண்டிற்கும் மேற்பட்ட தொடர்மொழி என மூவகைப்படும் எனத் தெரிந்து கொண்டீர்கள்.
- ஓர் எழுத்து நிற்கும் இடத்தில் பொருள் மாறுபாட்டிற்கு இடம் இல்லா வகையில் வேறோர் எழுத்து நிற்பது போலி எனத் தெரிந்து கொண்டீர்கள்.

## 2.17 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. நூல்மரபின் ஒழிபுச் செய்திகள் யாவை?
2. குற்றியலிகரத்தை விளக்குக.
3. போலி என்பது யாது? விளக்குக.



குறிப்பு

## 2.18 மேலும் அறிந்துகொள்ள

1.வ.சுப.மாணிக்கம் - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும், மாணிக்கவுரை தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு அக்டோபர் 1989.

2.தமிழண்ணல் - தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம் 48, தானப்ப முதலிதெரு, மதுரை - 625 001.

# கூறு - 3
# மொழி முதல், இறுதி எழுத்துக்கள்

## 3.1 முன்னுரை

மொழிக்கு முதலில் வரும் உயிர்கள், உயிர்மெய்கள் பற்றியும், மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் பற்றியும் இவ்வியல் எடுத்துரைக்கின்றது.

## 3.2 குறிக்கோள்கள்

- தமிழ் மொழி மரபில் மொழிக்கு முதலில் பயிலக்கூடிய எழுத்துக்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- மொழிக்கு இறுதியில் பயிலக்கூடிய எழுத்துக்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 3.3 மொழிக்கு முதலாக வரும் எழுத்துக்கள் :

59. பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்.

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலாக வரும்.

அடை, ஆடை, இடை,ஈசல், உரல், ஊஞ்சல், எழு, ஏணி, ஐவனம், ஒளி, ஓசை, ஔவியம்.



மெய் எழுத்துக்கள் மொழி முதல் ஆகா என்பதால் அவை உயிர் மெய்களாக மொழிக்கு முதலாகும் என்பதை உயிர் மெய் அல்லன மொழி முத லாகா' என்பதாகக் கூறப்பட்டது. அப்படிக் கூறும்போது எந்தெந்த மெய்கள் உயிரெழுத்துக்களோடு எப்படிச் சேர்ந்து வரும் என்பது பற்றிக் கீழ் வருமாறு தொல்காப்பியர் கூறுகிறார். இதனால் எல்லா மெய்களும் எல்லா உயிர்களோடும் சேர்ந்து வாரா என்பது குறிப்பு).

61. கதநபம எனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே.

க் த் ந் ப் ம் என்னும் ஐந்து மெய்யும் 12 உயிரொடும் மொழி முதலாகும்.

எ.டு. கலை, கால், கிளி, கீரி, குளம், கூடம், கெண்டை, கேழல், கைதவம், கொண்டல்,
கோடு, கௌவை.

தமிழ், தாதை, திசை, தீமை, துணை, தூண், தென்றல், தேவர், தையல், தொண்டு,
தோட்டம், தௌவை (மூதேவி).

நடனம், நாட்டியம், நிலம், நீர், நுட்பம், நூல், நெசவு, நேயம், நைதல் (வருந்துதல்), நொடி,
நோக்கம், நௌவி (மான்).

படை, பாக்கம், பிடி, பீடம், புகழ், பூமி, பெடை, பேடி, பைதல் (வருத்தம், பொன், போகம்,
பௌவம் (கடல்)

மடல், மாலை, மிகுதி, மீனம், முகம், மூதூர், மெலிவு, மேனி, மையல், மொழி, மோகம்,
மௌவல் (மல்லிகை).

62. சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔஎனும் மூன்றலங் கடையே.

ச்.என்ற மெய் ஒன்பது உயிருடன் சேர்ந்து மொழி முதலாகும். அ, ஐ, ஔ என்ற மூன்று உயிருடன் ச் மொழி முதலாகாது.

எ.டு. சாலை, சிலை, சீறடி, கரும்பு சூழ்க, செய்கை, சேவடி, சொல், சோறு.

இப்படிக் கூறினாலும் சங்கு, சந்தனம் போன்று சகரம் மொழி முதல் வருவதும் சையம் என வருவதும் காணப்படுவதால், தொல்காப்பியர் அ, ஐ இரண்டை விளக்கிக் கூறியது ஏன் என்பதற்குத் தெளிவான விளக்கம் தெரியவில்லை.

- வ் என்ற மெய் எட்டு உயிருடன் முதலாகும்

63. உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர்
வ என் எழுத்தோடு வருவதில்லை.

உ, ஊ, ஒ, ஓ என்ற நான்கு உயிருடன் வ் மொழி முதலாகாது.

எ.டு. வளை, வாளை, விளரி, வீடு, வெள்ளி, வேர், வையம், வெளவு

- ஞ் என்ற மெய் மூன்று உயிருடன் மொழி முதலாகும்.

64. ஆஎ
ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய

ஆ, எ, ஒ என்ற மூன்று உயிருடன் “ஞ்” மொழி முதல் ஆதல்.

எ.டு. ஞாலம். ஞெகிழம் (சிலம்பு) ஞொள்கிற்று (குறைந்துவிட்டது)

அகரத்தோடு ஞமலி (நாய்) என்றும் இகரத்தோடு ஞிமிறு (வண்டு) என்றும் வரும் வாய்ப்பிருந்தும் தொல்காப்பியர் ஆ, எ, ஒ என்ற மூன்று உயிருடன் வருவதையே கூறினார் என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

- ய் என்ற மெய் ஆ என்ற ஓருயிருடன் மட்டும் மொழி முதலாகும். எ.டு. யான்.

65. ஆவோ டல்லது யகரம் முதலாவது

- க், த், ந், ம், ச், வ், ஞ், ய் என்ற ஒன்பது மெய்யும் உயிருடன் மொழி

முதல் ஆதற்கு விதி கூறப்பட்டன. எஞ்சிய மெய்களாக ட, ற, ங, ண, ன, ல, ழ, ள ஒன்பதும் மொழி முதலாகா, என்றாலும் அவைகளைத் தனியே எடுத்து மொழியும்போது முதலெழுத்தாக உச்சரிக்கப்படும்.

டகரம் றகரம் எனக் கூறும்போது முதலாகும் என்பதை

66. முதலா ஏன தம்பெயர் முதலும்

எனும் நூற்பாவால் தொல்காப்பியர் உணர்த்தினர்.

மொழியிறுதியாக வரும் குற்றியலுகரம் முறைப்பெயராக நகர மெய்யுடன் வரும்போது மட்டும் மொழி முதலாகும் என்பது கருத்து. எ.டு. நுந்தை

மொழி முதல் எழுத்துக்களைக் கீழ்வருமாறு உணரலாம்.

| | | |
|---|---|---|
| 1. உயிர் எழுத்து | - | 12 |
| 2. க் x உயிர் 12 | - | 12 |
| 3. ச் x ஆ, இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஒ,ஓ | - | 9 |
| 4. ஞ் x ஆ, எ, ஒ | - | 3 |
| 5. த் x உயிர் 12 | - | 12 |
| 6. ந் x உயிர் 12 | - | 12 |
| 7. ப் x உயிர் 12 | - | 12 |
| 8. ம் x உயிர் 12 | - | 12 |
| 9. ய்x ஆ | - | 1 |
| 10. வ்x அ,ஆ,இ,ஈ,எ,ஏ,ஐ,ஔ | - | 8 |
| 11. மொழி முதல் குற்றியலுகரம் | - | 1 |
| | | --------- |
| | | 94 |
| | | ---------- |

## 3.4 மொழிக்கு இறுதியாக வரும் எழுத்துக்கள்:

உயிரெழுத்துக்களில் 11 எழுத்துக்கள் இறுதியாக வரும்.

69. உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும்.

'ஔ'– தனி உயிராக மொழியிறுதியில் வாராது. உயிரில் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அளபெடையின் அடையாளமாக வரும்போது குறில் எழுத்து மொழி இறுதியாக அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தும் வருகின்றன.

இயல்பாக நெட்டெழுத்துக்களில் ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ என்ற ஆறும் ஓரெழுத்து ஒரு மொழியாய் மொழியீறாக வருகின்றன.

ஆக 11 எழுத்துக்கள் உயிர் எழுத்தின் வடிவோடு மொழி இறுதியாவதைப் போல உயிர் மெய்யாக நின்றும் சில இறுதியாகும் என்பது இளம்பூரணரின் உரைக் குறிப்பாகும்.

எ.டு. விள, பலா, கிளி, குரீ, குருவி, பனை (அ, ஆ, இ,ஈ, ஐ – ஐந்தும் ஈறு)



"ஔ என்ற எழுத்து தனி உயிராக ஈறாகாமல் க, வ என்ற மெய்யோடு சேர்ந்து மட்டும் ஈறாகும்.

70. கவவோ டியையின் ஔவும் ஆகும்.

எ.டு. கௌ, வௌ.

எ, ஒ – என்ற உயிர்க்குறில் ஈறு பற்றிக் கூறுகையில் எ – எந்த மெய்யுடன் சேர்ந்தும் ஈறாகாது. ஒ – நகர மெய்யுடன் மட்டும் சேர்ந்து ஈறாகும். எ.டு. நொ.

71. எஎன வரும் உயிர் மெய்யீறாகாது.

72. ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே.

ர, ஒ - என்ற உயிரின் நெடில்கள் ஞகர மெய்யுடன் மட்டும் இறுதியாவதில்லை. ஏனைய மெய்யுடன் இறுதியாகும்.

73. ஏ, ஒ எனும் உயிர் ஞகாரத் தில்லை.

(ஞ் + ஏ = ஞே, ஞ் + ஓ = ஞோ என வாரா)

பிற மெய்களுடன் ஏ, ஓ ஈறாகும் போது வழக்கின்வழி சொற்களை அறிந்து கொள்க என இளம்பூரணர் கூறுகிறார்.

உ, ஊ – எனும் உயிர்கள் ந, வ என்ற மெய்யுடன் இறுதியாகா, ஏனைய மெய்யுடன் இறுதியாகும்.

74. உ ஊகாரம் நவவொடு நவிலா.

(ந் + உ = நு, வ் + உ = வு: ந் + ஊ = நூ, வ்+ ஊ = வூ என வாரா)

பிறமெய்யுடன் உ, ஊ ஈறாகும் போது வழக்கின்வழி சொற்களைக் கண்டுணர வேண்டும் என்பது இளம்பூரணர் கருத்து.

உகரம் எல்லா மெய் எழுத்துக்களோடும் சேர்ந்து இறுதியாகவரும் என்றாலும் ச கரத்தோடு சேர்ந்து 'சு'என வரும்போது இரண்டு சொற்களில் வரும் என்று வரையறுத்துக் கூறுகிறார் தொல்காப்பியர்.

75. உச்ச காரம் இருமொழிக் குரித்தே.

எ.டு உசு, முசு (உசு – உளு: முசு – குரங்கு)

இதுபோலவே உகரம் பகரத்தோடு 'பு' என வரும்போது தன்வினை, பிறவினை என்ற இரண்டு பொருளும்படும் படியான ஒரே சொல்லாக வரும்.

76. உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே.

எ.டு. தபு. இதைத் தன் வினையாகப் பொருள் கூறும்போது மெதுவாகக் கூற வேண்டும். 'நீசா' என்பது பொருள். பிறவினைப் பொருளாகக் கூறும்போது வலிந்து கூற வேண்டும். 'நீ பிறிதொன்றைச் சாவுமாறு செய்' என்பது பொருள்.

மேற்கூறியவாறு மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் போக எஞ்சிய உயிர்மெய் எழுத்துக்கள் தத்தம் பெயர்களைக் கூறும்போது மொழிக்கு இறுதியாகும் என்பதை,

77. எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே
என்ற நூற்பாவால் தொல்காப்பியர் கூறினார்.

இந்நூற்பாவில் எஞ்சிய உயிர்கள் யாவை என்பன பற்றி இளம்பூரணர் தம் உரையில் விளக்கும்போது கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

கூறப்பட்ட ஔ, எ, ஏ, ஒ, உ, ஊ உயிர்களுக்கு விதிக்கப்பட்ட மெய்யோடு சேர்ந்து மொழியிறுதியாக வருவதையே கூறுகிறார்.

- ஔகாரம் ககார வகாரங்கள் ஒழிந்த மெய்யோடு உயிர்மெய்யாய் அமையும் போது தம் பெயர்க்கு ஈறாக ஔ வரும்.

சான்று (ங் + ஔ = ஙௌக் களைந்தார்)

- எகரம் எல்லா மெய்யோடும் உயிர்மெய்யாய் இறுதியாம்.

சான்று: க் + எ = கெக்களைந்தார்.

- ஒகரம் நகரம் ஒழிந்த மெய்யோடு இறுதியாகும்.

சான்று: க் + ஒ = கொக்களைந்தார்.

குறிப்பு

- ஏ, ஓ இரண்டும் 'ஞ' எழுத்தோடு உயிர்மெய்யாய் இறுதியாம்.

சான்று ஞ் + ஏ = ஞேக்களைந்தார்
ஞ் + ஓ = ஞோக்களைந்தார்

- ஊ, ஊ இரண்டும் நவ எழுத்துக்களோடு உயிர் மெய்யாய் இறுதியாம்.

சான்று ந் + உ = நுக்களைந்தார்
ந் + ஊ = நூக்களைந்தார்

மொழியீறாக வாரா எனப்பட்டவை எல்லாம் தம் பெயராக எடுத்து மொழியும்போது இறுதியாக வரும் என்பது கருத்தாகும்.

## 3.5 மொழி இறுதியாக வரும் மெய் எழுத்துக்கள் :

78.ஞண நமனயரல வழள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி.

- கூறப்பட்ட பதினோர் எழுத்துக்களும் மொழி இறுதியாகும்.

எ.டு. உரிஞ், மண், பொருந், திரும், பொன், வேய், வேர், தெவ், வீழ் வேள்.

கூறப்பட்ட பதினோர் எழுத்தில் ன கரத்தை மகரத்தோடே சேர்த்துக் கூறப்பட்டதற்கு இளம்பூரணர் ஒரு காரணம் கூறுகிறார். மகரமும் நகரமும் ஒன்றற்கொன்று மாறி இயைபாக நின்று ஒரே பொருளை உணர்த்தும் உண்மையால் அங்ஙனம் ஒருசேர வைக்கப்பட்டதாம் இல்லையெனில் மெய் எழுத்தின் வரிசைப்படி னகரம் இறுதியில் கூறப்பட்டிருக்க வேண்டும்.

எ.டு. நிலம்: கலம் - கலன்:

79. உச்ச காரமொடு நகாரம் சிவணும்

நகர மெய்,'சு' என்ற உச்சகாரம் இரு சொல்லில் (உ.சு, முசு) வந்தது போல இரண்டு சொற்களில் மட்டும் மொழி இறுதியாகும்.

எ.டு. பொருந் (ஒத்த தன்மை): வெரிந் (முதுகுப்புறம்)

80. உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொருள் இரட்டாது இவணை யான.

ஞ கர மெய் 'பு' என்ற உப்பகாரம் போல (தபு) தன் வினை, பிற வினை என்ற இரண்டு விதமாகப் பொருளை உணர்த்தும் சொல்லாக வாராமல் ஒரே பொருளைத் தரும் சொல்லாக வரும்.

எ.டு. உரிஞ் (உரிஞ்சுதல்) இச் சொல் தவிர ஞ் என்பது மொழியிறுதியாக வராது.

- வ் - நான்கு. மொழியில் மட்டும் இறுதியாக வரும்.

81. வகரக் கிளவி நான்மொழி ஈற்றது.

எ.டு. அவ், இவ், உவ், தெவ்.

- ன், ம் - எழுத்துக்கள் மொழியிறுதியாக மயங்கி வருவதும் மயங்காமல் வருவதும் உண்டு என்கிறார் தொல்காப்பியர்.

82. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்ப.்.தென்ப
புகரறக் கிளந்த அ.்.றிணை மேன.

அ.்.றிணைப் பெயர்களில் இங்ஙனம் மயங்கியும் மயங்காமலும் ன்,ம் மொழியிறுதியாக வரும்போது நூற்பாவில் ஒரு வரையறை தரப்படுகிறது. அதாவது,

உகின், செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் என்ற என்பது னகார இறுதிச் சொற்கள் மகர ஈறாக மாறா. ஆனால் சில னகர இறுதி மரகமாகத்திரிந்து ஒரே பொருளில் இயைபாக நிற்கும்.

நிலன் - நிலம், பிலன் - பிலம்.

னகர இறுதி ஒன்பது பற்றிப் பலர் வெவ்வேறு எடுத்துக்காட்டுத் தந்தாலும் தொல்காப்பியர் ஒன்பது என வரையறுத்தது அவர் காலத்திய மொழிப்புலமையின் அருமைப்பாட்டை உணர்த்துகிறது.

## 3.6 தொகுத்து காண்போம்

- தமிழ் மொழி மரபில் மொழிக்கு முதலில் பயிலக்கூடிய எழுத்துக்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- மொழிக்கு இறுதியில் பயிலக்கூடிய எழுத்துக்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

- உயிரெழுத்துப் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும் எனத் தெரிந்து கொண்டீர்கள்.
- மெய் எழுத்துக்களுள் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினோர் எழுத்தும் மொழிக்கு ஈறாக வரும் எனத் தெரிந்து கொண்டீர்கள்.



### 3.7 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. மொழி முதல், இறுதி எழுத்துக்கள் பற்றிக் கட்டுரை வரைக.
2. உப்பகாரம் ஒன்றென மொழி - விளக்குக.
3. உச்சகாரம் இரு மொழிக் குறித்தே – விளக்குக.

### 3.8 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974

2. நச்சினினார்க்கினியர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்புரையுடன், 1967

## கூறு – 4
## பிறப்பியல்

### 4.1 முன்னுரை

எழுத்ததிகாரத்தின் மூன்றாவது இயல் பிறப்பியல். எழுத்துக்களின் பிறப்பு உணர்த்தியமையால் பிறப்பியல் எனப்பட்டது.

### 4.2 குறிக்கோள்கள்

1. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு பற்றி அறிந்து கொள்வீர்கள்.
2. உயிர் எழுத்துக்களின் பிறப்பு பற்றி அறிந்து கொள்வீர்கள்.
3. மெய் எழுத்துக்களின் பிறப்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்
4. சார்பெழுத்துப் பிறப்பு பற்றி அறிந்து கொள்வீர்கள்.

83. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்

உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா் எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியும் காட்சி யான.



பிறப்பியலின் இம் முதல் நூற்பா எழுத்துக்களின் பிறப்பை உணா்த்துகிறது.

தமிழ் மொழிக்கான இலக்கணம் கூறுதலான் தொல்காப்பியா் தமிழ் எழுத்துக்களின் பிறப்பைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறாா்.

தமிழ் எழுத்துக்களின் பிறப்பு பற்றிச் சொல்லும்போது வயிற்றின் கொப்பூழ் அடியாகத் தோன்றிய ஒலிக்காற்று (உதானன்) தலை, மிடறு (கழுத்து) நெஞ்சு ஆகிய மூன்று இடங்களில் தங்கிப் பின்பு பல், இதழ் (உதடு) நாக்கு, மூக்கு, அண்ணம் (வாயின் உள்பகுதி) என்னும் உறுப்புகளோடு இயைய எழுத்துக்கள் பிறக்கின்றன.

இந்நூற்பாவில் எழுத்து பிறப்பதற்கான இடமும் அதற்கு உதவியாக இருக்கும் உடல் உறுப்பும் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

அடுத்து உயிா் எழுத்துக்களின் பிறப்புப் பற்றி நான்கு நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளன.

84. அவ்வழிப்
பன்னீா் உயிரும் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.

உயிரெழுத்துக்கள் பிறப்பதை இந்நூற்பா கூறுகிறது. 12 உயிா் எழுத்துக்களும் தத்தம் நிலையில் திரியாவாய் கழுத்தின் கண் பிறந்த வளியான் பிறக்கும். எனவே உயிரொலிக்கு மிடறு (கழுத்து) இடமாகும். கழுத்தின் இடமாக உயிா் ஒலி தோன்றும்போது கழுத்தில் உள்ள குரல்வளையின் அதிா்வுகள் ஒலிக்கூறாக வெளிப்படுகின்றன.

85. அவற்றுள், அஆ ஆயிரண்டும் அங்காந் தியலும்.

வாயைத் திறந்தமாத்திரத்தில் அ, ஆ பிறக்கும்.

86. இஈஎஏஐ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவை தாம், அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய.

ஆ, ஆவைப்போல வாயை அங்காந்த நிலையில் இ,ஈ, எ, ஏ, ஐ எழுத்துக்கள் பிறக்குமாயின் மேற்பல்லும் அடிநா விளிம்பும் பொருந்தப் பிறக்கும் வேறுபாட்டை உடையன அவை.

87. உ ஊஒஓஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும்.

உதடு குவிதலால் உ ஊ ஒ ஓ ஔ எழுத்துக்கள் பிறக்கும்.

இப்படியாக, உயிர் எழுத்துக்களின் பிறப்பு கூறப்பட்டாலும் மெய் எழுத்துக்களின் பிறப்பைப் பத்துப் பிரிவாகக் கூறுகிறார் தொல்காப்பியர்

89. ககார ஙகாரம் முதல்நா அண்ணம்

கங – முதல் நா முதல் அண்ணமும் பொருந்தப் பிறக்கும்.

90. சகார ஞகாரம் இடைநா அண்ணம்

சஞ - இடைநாவும் இடையண்ணமும் பொருந்தப் பிறக்கும்.

91. அண்ணம் நண்ணிய பல் முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாமினிது பிறக்கும் தகார நகாரம்.

அண்ணத்தை நெருங்கியுள்ள மேற்பல்லின் அடியை நுனிநா பரந்து சென்று பதியுமாறு சேரத் த, ந இரண்டும் பிறக்கும்

94. அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
ற∴கான் ன∴கான் ஆயிரண்டும் பிறக்கும்

நாக்கின் நுனி மேல்நோக்கிச் சென்று அண்ணத்தைத் தீண்ட ற ன இரண்டும் பிறக்கும்.

கங. சஞ, டண, தந என நெடுங் கணக்குப்படி முறையாகக் கூறிவந்த தொல்காப்பியர் அடுத்து பம கூறியிருக்க வேண்டும். அங்ஙனம் கூறாமல் றன, ரழ, லள கூறிய பின்னர்தான் பம கூறுகிறார். இ∴து ஏனெனில் ப ம எழுத்துக்கள் உதடுகளின் தொழிலால் பிறப்பன. ஆனால் கங முதல் லள வரை கூறப்பட்டவை நாவின் தொழிலால் பிறப்பன என்ற ஒரே கொள்கைக்காக வரிசைப் படுத்திக் கூறப்பட்டது என்க. இதைத்தான் இளம்பூரணர் 'இங்கு நின்றும் நெடுங்கணக்கு முறைமை விட்டு நா அதிகாரம் பட்டது' என்று விளக்கினார்.

95. நுனிநா அணரி அண்ணம் வருட



குறிப்பு

ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.



நாவின் நுனிமேல் நோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ ரகரம் ழகரம் பிறக்கும்.

ஈண்டு ற ன ர ழ நான்கும் நாவின் தொழிலால் பிறந்தாலும் அதாவது அவற்றின் பிறப்பிடம் ஒன்றே யானாலும் ற ன இரண்டும் நாவின் நுனி அண்ணத்தை ஒற்ற பிறக்கும் என்ற சிறு வேறுபாடு மட்டுமே உள்ளது என்க.

96. நாவிளிம்பு வீங்கி யண்பல் முத லுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

நாக்கின் இருபக்க ஓரமும் சற்று உயர்ந்தும் தடித்தும் மேல் வாய்ப் பல்லின் அடியிலே இருபக்கமும் பொருந்தி நின்று அண்ணத்தைத் தொட்ட அளவில் ல பிறக்கும். அண்ணத்தைத் தடவிய அளவில் ள பிறக்கும்.

97. இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்.

மேல்கீழ் உதடுகள் தம்மில் பொருந்த பம பிறக்கும்.

98. பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்.

மேற்பல்லும் கீழ் உதடும் தம்மில் பொருந்த பம பிறக்கும்.

99. அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.

அண்ணத்தை நா தொடாத நிலையில் மிடற்றி லிருந்து எழும் காற்று அண்ணத்தை அணைய “ய” பிறக்கும்.

இதுவரை பத்து வகையாக வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களின் பிறப்பைக் கூறினார். அவற்றுள் மெல்லினம் மட்டும் மூக்கிடமாகத் தோன்றும் ஒலியால் பிறக்கும் எனச் சிறப்பு விதியைக் கீழ்க்கண்டவாறு தொல்காப்பியர் வரையறுத்தார்.

100. மெல்லெழுத் தானும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.

இந்நூற்பாவில் யாப்புற என்றமையால் இடையினம் மிடற்று வளியாலும் வல்லினம் தலை வளியாலும் பிறக்கும் என்பர். ஆனால் தலையின் வளியில் எழுத்துக்கள் பிறப்பதிலலை என்பதும் ஒரு கருத்து உண்டு.

இனி சார்பமெழுத்துக்கள் பிறப்பது பற்றிக் கூறுகையில்,

101. சார்ந்துவரின் அல்லது தமக்கியல்பு இலஎனத்
தேர்ந்து வெளிப் படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பில் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியில் தம்மியல்பு இயலும்.

எனத் தொல்காப்பியர் குறிப்பாகத் தெரிவிக்கின்றார்.

சார்ந்து வருவதையே இயல்பாக உடைய குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று சார்பெழுத்துக்களும் தத்தமக்குரிய எழுத்துக்கள் பிறப்பிடத்தே பிறத்தலோடு பொருந்தி வரும்.

அதாவது சார்பெழுத்துக்களுக்குத் தனி இடம் இல்லை என்பதால் அவை தமக்குச் சார்பாக முன்னும் பின்னுமாய் நின்ற முதலெழுத்துக்கள் எங்குப் பிறக்கின்றனவோ அங்குப் பிறக்கும் என்பது கருத்து.

நூற்பாவில் ஒத்த காட்சி என்ற கருத்தால் ஆய்த எழுத்திற்குக் குறில் சார்பு, அதுபோலவே உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துக்களான குற்றியலுகரச் சார்பாகப் (கு, சு, டு, து, பு, று) பிறக்கும் என்பது கருத்து.

அஃது – அ சார்பொடு து என்ற வல்லெழுத்துப் பிறக்கும் இடத்தையே (∴) ஆய்தம் தன் பிறப்பிடாகக் கொண்டது என்பது இளம்பூரணர் குறிப்பு.

மேலும் தம்மியல்பு இயலும் எனத் தொல்காப்பியர் கூறுவதால் அளபெடையும் உயிர் மெய்யும் தத்தம் அடிப்படை எழுத்தின் பிறப்பையே கொள்ளும் என்பதாம்.

இனி கூறப்பட்ட எழுத்துக்களின் பிறப்பு பற்றிய கருத்திற்கு ஒரு புறநடைச் செய்தியைத் தொல்காப்பியர் கூறுவதைக் காண்போம்.

102. எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியில்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே.



**குறிப்பு**

103. அஃது இவண் நுவலாது எழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே.

இந்த இரண்டு நூற்பாக்களையும் ஒரே நூற்பாவாக்கிக் கூறுபவர்களும் உண்டு எப்படியாயினும் இந்த நூற்பாக்கள் கூறும் கருத்தாவது. வடமொழி இலக்கணம் போலத் தமிழிலக்கணம் எழுத்துக்களின் பிறப்பைப் பற்றிக் கூறும்போது ஒருசிறு வேறுபாடு உள்ளது என்பதை அறிந்து கொள்வதே ஆகும்.

கொப்பூழிலிருந்து தோன்றும் ஒலிக்காற்று தலைவரை சென்று நெஞ்சில் நிலைபெற்று வாய்வழியாக ஒலி வெளிவரும்போது எழுத்தாக உச்சரிக்கப்படுகிறது.

இதில் வாயிலிருந்து அவ்வொலி வெளிப்படுவதற்கு முன்பு நெஞ்சளவிலேயே பரவியிருக்கும் ஒலி அலைகளுக்கு வடமொழி இலக்கணம் கூறுகிறது.

இந்த மூன்று நிலைகளும் ஓர் எழுத்து வாய்வழியாக உச்சரிக்கப் படுவதற்கு முன்னுள்ள அதாவது உள்ளுக்குள்ளே எழும் ஒலிகளாகும். இந்த ஒலிகளுக்கு மாத்திரை அளவை வரையறுப்பது வடமொழி இலக்கண முறையாகும். ஆனால் தமிழ் காதால் கேட்கப்படாத ஒலிகளுக்கு மாத்திரை கூறுதல் பொருந்தாது என்பதால் அதை மறுப்பதுபோலத் தொல்காப்பியர் இந்த 102, 103 ஆம் நூற்பாக்களைப் புறநடை நூற்பாக்களாகக் கூறினார்.

எனவே காதால் கேட்கப்படாத உள்ளத்திற்குள்ளே கேட்கப்படும் ஒலிகளுக்கு மாத்திரை வரையறுக்கும் வடமொழி இலக்கணம்போல் அல்லாமல், கொப்பூழில் தோன்றும் காற்று, தலை, மிடறு, நெஞ்சு ஆகிய உடல் உறுப்புக்களின் தங்கிப் பின்னர் வாய் வழியே பொருளுணர்ச்சிக்கேற்ற எழுத்துக்களாக வருவதே தமிழ் எழுத்தொலி என்கிறார் தொல்காப்பியர்.

இப்படிக் கூறுவதால் பிறன்கோட் கூறல் என்றபடி தொல்காப்பியர் அதை எடுத்து மொழிந்து அப்படிப்பட்டதன்று இது என்பதை விளக்குவதற்காக அதை விலக்கி தமிழ் மரபை நிலை நாட்டினார் என்பதை அறிய முடியும்.

இப்பிறப்பியலில் எழுத்துக்கள் பிறந்து ஒலிக்கும் முறைக்கான அமைப்பைத் தொல்காப்பியர் கூறும்பாங்கில் சொல்லப்பட்ட சில சொற்களின். முறையை உணரவேண்டுவது இன்றியமையாததாகும்.

எழுத்துஒலி பிறந்து வெளி வரும்போது அணரி, ஒற்ற, வருட என்ற நிலைகளாக வருகின்றது.

அணர்தல் என்றால் அதிர்வு ‘ற்’ எனும்போது ‘ர’ எனும்போதும் நுனிநாவின் அதிர்வை உணரலாம்.

ஒற்ற என்றால் தொட, தீண்ட என்பது பொருள். ல், ன் உச்சரிப்பு ஒற்றுதலாகும்.

வருட என்றால் தடவ என்பது, ழ், உச்சரிப்பு தடவுதலாகும்.

மேற்கூறியவாறெல்லாம் உயிரெழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் பிறக்குமாறு கூறப்பட்டாலும் கூறப்பட்ட விதிமுறைப்படியே முழுவதும் அமையும் என்பதாக இல்லாமல் ஒரே வழி சிறுசிறு வேறுபாடு உண்டாகும் என்ற விதிவிலக்குக் கருத்து ஏற்புடையதாகும்.

## 4.3 பிறப்பியல் கூறும் பிறப்பு முறை

அ. உயிர் எழுத்துக்கள் மூன்று வகைப் பிறப்பை உடையன.

1. எழுத்துக்கள் வாயைத் திறந்த மாத்திரத்தில் பிறப்பது (அ, ஆ)
2. அண்பல்லும் அடிநாவிளிம்பம் பொருந்தப் பிறப்பது (இ,ஈ, எ, ஏ, ஐ)
3. இதழ் குவிந்து பிறப்பது (உ, ஊ, ஒ, ஓ, ஔ)

ஆ. மெய் எழுத்துக்கள் பத்து வகைப் பிறப்பை உடையன.

1. முதல் நா முதல் அண்ணம் பொருந்தப் பிறப்பது – க் ங்
2. இடை நா இடை அண்ணம் பொருந்தப் பிறப்பது - ச் ஞ்
3. நுனியா நுனி அண்ணம் பொருந்தப் பிறப்பது – ட் ண் இதைத்தான் தொல்காப்பியர்.

92. அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பன
என்றார்.

4. மேற்பல்லின் அடியை நுனிநா பரந்து ஒற்றப் பிறப்பது – த் ந்
5. நுனிநா அண்ணத்தை அணரிப்பிறப்பது – ற் ர்
6. நுனிநா அண்ணத்தை ஒற்றப் பிறப்பது – ன்
   நா விளிம்பு வீங்கி அண்ணத்தை ஒற்றப்பிறப்பது – ல்
7. நுனிநா அண்ணத்தை வருடப்பிறப்பது – ழ்
   நா விளிம்பு வீங்கி அண்ணத்தை வருடப் பிறப்பது – ள்
8. உதடுகள் ஒட்டிப் பிறப்பது – ப், ம்
9. மேற்பல்லும் கீழ் உதடும் பொருந்தப் பிறப்பது – வ்
10. நாக்கு அண்ணத்தை அணையும்போது பிறப்பது – ய்

## 4.4 தொகுத்துக் காண்போம்



**குறிப்பு**

- உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் கழுத்தினிடமாக நிலைபெறும் காற்றால் ஒலிக்கும் எனத் தெரிந்து கொண்டீர்கள்.
- மெல்லின எழுத்துக்கள் மூக்கின் ஒலியால் பெரிதும் பிறக்கும் எனத் தெரிந்து கொண்டீர்கள்.
- சார்ந்து வரும் இயல்புடைய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் தத்தம் முதலெழுத்துக்களாகிய இ, உ எழுத்துக்களின் பிறப்பிடத்தையே பெற்றுவரும் எனத் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்த எழுத்து நெஞ்சின் இடமாக உள்ள காற்றால் பிறக்கும் எனத் தெரிந்து கொண்டீர்கள்.

## 4.5 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு பற்றி விவரிக்க.
2. உயிர் எழுத்துக்களின் பிறப்பைத் தொல்காப்பியர் எங்ஙனம் விவரிக்கிறார்? விளக்குக.
3. மெய்யெழுத்துக்களின் பிறப்பை முறை பற்றி விளக்குக.
4. சார்பெழுத்துக்கள் பிறக்கும் முறையை எழுத்துரைக்க.

## 4.6 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974

2. நச்சினினார்க்கினியர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்புரையுடன், 1967

# கூறு - 5
# பிறப்பியலும் மொழியியலும்

## 5.1 முன்னுரை

பிறப்பியல் என்பது மொழிகளுக்கு அடிப்படையான ஒலியனின் - ஒலி எழுத்தின் தோற்றம் நிலை பற்றி விளக்குவது. பிறப்பியலை மொழியியலார் ஒலி இயல் (Phonetics) என்பர். எல்லா பேச்சொலிகளையும் ஆராயும் அறிவியல் துறையாக ஒலிஇயல் வளர்ந்திருக்கிறது. ஒலிஇயலார் பௌதீக ஒலியியல் கேட்பொலி இயல்,

உச்சரிப்பு ஒலியியல் என்று மூன்று நிலைகளில் ஆய்வு செய்வர். பிறப்பியலை மொழியியல் அடிப்படையில் விளக்குவது இக்கூறாகும்.



## 5.2 குறிக்கோள்கள்

- உயிர் எழுத்துக்கள் பிறக்குமாறு அறிந்து கொள்வீர்கள்.
- பிறப்பியலை மொழியியல் அடிப்படையில் அறிந்து கொள்வீர்கள்.

ஒலி உறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஒலியின் பிறப்பை ஆராயும் இயல் உச்சரிப்பு ஒலியியல் (Articulaltory phonetics) எனப்படும். பன்னூறாண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியர் இம்முறையில், பிறப்பியலில், ஒலி எழுத்துக்களின் பிறப்பைக் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. மேலை நாட்டு மொழியியலார் தொல்காப்பியரின் பிறப்பியல் கோட்பாடுகளை பெரிதும் மதிப்பர்.

எழுத்துக்கள் பொதுவாகப் பிறக்குமாற்றை உந்தி முதலா எனத்தொடங்கும் (83) நூற்பா விளக்கும். தமிழ் எழுத்தொலிகளின் பிறப்பை ஒருவன் முறைப்பட ஆராய்ந்து சொல்லுங்காலத்து, கொப்பூழ் தோன்றி மேலே எழுகின்ற உதானன் என்ற ஒலிக்காற்று, தலையின் கண்ணும், மிடற்றின் கண்ணும், நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்படட, எட்டாகிய முறைமையை உடைய இடங்களில் ஓர் உறுப்புடன் ஓர் உறுப்பு தம்மிற் பொருத்தி நின்று அனுமதி பெற பிறப்பின் ஆக்கத்தால் வேறு வேறு எழுத்தொலிகள் பிறக்கின்றன என்பர். இப்பிறப்பு முறையை மனம் ஒன்றி ஆராயுமிடத்து, ஒலி எழுத்தின் பிறப்பு நுண்மைகள் எல்லாம் நன்கு புலப்படா நிற்கும்.

இவ்வேறுபாடுகளை நச்சினார்க்கினியர், அவை எடுத்தல், படுத்தல் நலிதல், விலங்கள் என்றவாற்றாலும், தலைவளி, நெஞ்சுவளி, மிடற்றுவளி மூக்குவளி என்றவாற்றாலும், பிறவாற்றாலும் வேறுபடுமாறு நுண்ணுணர்வுடையோர் கூறி உணர்க என்பர். மேலும் வல்லினம் தலைவளி உடையது. மெல்லினம் மூக்குவளி உடையது, இடையினம் மிடற்றுவளி உடையது ஏனையவும் கூறக்கண்டு உணர்க என்று விளக்குவர்.

ஒலி தோன்றும் இடங்கள் - தலை, மிடறு, நெஞ்சு ஒலி உறுப்புக்கள். பல், இதழ், நா, மூக்கு, அண்ணம், தொல்காப்பியர் மூக்கினை உறுப்பு என்பர். நன்னூலார் மூக்கினை இடம் என்பர்.

## 5.3 உயிர் எழுத்துக்கள் பிறக்குமாறு

தொல்காப்பியர் உயிர் எழுத்துக்கள் பிறக்குமாற்றை ஐந்து நூற்பாக்களில் (84-88) விளக்குவர். உயிரெழுத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும்போது மூன்று நிலைகளை முக்கியமாகக் கொள்வர்.

1) நாவின் முன்னோக்கிய செலவு (Advancement fo the tongue)

2) நாவின் அண்ணம் நோக்கிய உயரம் (Height of the tongue)

3) இதழின் நிலை (Labiolisation)

## 5.4 உயிர் எழுத்துக்கள் பிறக்கும் நிலை

84) மேற்கூறிய ஒலிபிறப்பின் வழி, பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தத்தம் நிலையில் திரியாவாய், மிடற்றின் கண்பிறந்து வளியான் ஒலிக்கும்.

குற்றியலிகரமும், குற்றியலுகரமும் தம்நிலை திரியும் என்பர் இளம்பூரணர் "மிடற்றின் கண் நிலைபெற்ற காற்றான் ஒலிக்கும்" என்பர் நச்சர்.

### அ ஆ பிறத்தல்

பன்னிரு உயிர் ஒலியன்களுள் அகரம், ஆகாரம் ஆகிய இரண்டும் வாயைத் திறந்து சொல்லப் பிறக்கும். அங்காந்து இயலும் என்ற கருத்திற்கேற்ப ஆங்கிலேயர்களும் இவற்றைத் திறப்புயிர் (Open vowels) என்பர். உச்சரிப்பின்போது நாதாழ்ந்து நிற்கும். அங்காத்தல் என்னும்போது நாதாழும் நிலையை நாமும் உணரமுடியும். எனவே அ, ஆ இரண்டையும் கீழுயிர் (Low vowels) என்றனர்.

### இ முதலியன பிறத்தல்

86) இ,ஈ,எ,ஏ,ஐ என்று சொல்லப்படும் ஐந்து உயிர்களும் அகரம், ஆகாரம் போல அங்காந்து சொல்லப் பிறக்கும், அவ்வாறு பிறக்குமாயினும், அவைதாம் அண்பல்லும் (மேற்பல்) அடிநா விளிம்பும் (நாவின் அடி விளிம்பும்) பொருந்தப் பிறக்கும் வேறுபாடு உடையன.

இ என்பதிலிருந்து இவற்றை முறையே 'ஐ' வரை உச்சரிக்கும் போது நுனிநா, அண்ணத்திலிருந்து படிப்படியே பின்னோக்கி, கீழிறங்கி வரும் என்பர். இதில் நாவின் அண்ணம் நோக்கிய இயக்கத்தை அறிய முடிகிறது.

இ,ஈ,எ,ஏ,ஐ என்பவற்றை இணைத்து நோக்கி முன்னுயிர்கள் (Front vowels) என்பர்.

### உ முதலியன பிறத்தல்

87) உ,ஊ,ஒ,ஓ,ஔ என்று சொல்லப்படும் ஐந்து உயிர்களும், அங்காத்தலோடு இதழ்குவித்துச் சொல்லப் பிறக்கின்றன.

மு இதழ் குவிந்து பிறக்கும் உயிர்களாகிய உ,ஊ,ஒ,ஓ,ஔ என்பன பின்னுயிர்கள எனப்படும். (Black vowels)

88)"தத்தம் திரிபே சிறிய என்ப" எழுத்துக்கள் ஒருதானத்துப் பிறப்பன என்று கூறப்பட்டிருந்தாலும் தத்தம் இடையே சிறிய அளவில் வேறுபாடுகளைக் கொண்டுள என்பர்.

இந்நூற்பா உயிர்க்கும் மெய்க்கும் பொதுவிதி என்பர். ஆனால், உயிர்எழுத்துக்களின் பிறப்பு முடிந்ததும் இந்நூற்பா அமைந்துள்ளதால் உயிர்க்குப் புறனடை நூற்பாவாகவும் கொள்ளலாம்.

ஓவ்வொரு பிறப்பிடங்களிலும், பிறப்பனவற்றைக் கூட்டிக் கூறப்பட்டாலும் நுண்ணுணர்வால் ஆராயுமிடத்து, தத்தம் வேறுபாடுகள் சிறிய என்று உரையாசிரியர்கள் விளக்கமளிப்பர். நுண்ணுணர்வால் காணப்பெறும் வேறுபாடுகளை மொழி நூலாரும் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

**விளக்கம் வருமாறு**

அகரமும், ஆகாரமும் அங்காந்து சொல்லப் பிறப்பன என்று கூறினாரேனும் அகரம் ஒரு மாத்திரை ஒலியன், ஆகாரம் இரு மாத்திரை ஒலியன், இரண்டிற்கும் ஒரு முயற்சி இருத்தல் இயலாது. ஆகாரத்துக்கு ஒரு மாத்திரை அளவு நீட்டிச் சொல்லுதல் வேண்டும். இதுதான் 'தத்தம் திரிபே சிறிய' எனப்பட்டது இ,ஈ,எ,ஏ,ஐ அங்காந்து சொல்லப் பிறக்கும், அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய

இகரம் குறில்,ஈகாரம் நெடில் :

எகரம் குறில், ஏகாரம் நெடில் :

ஐகாரம் நெடில் :

ஓவ்வொன்றிடையே சிறிய வேறுபாடு உண்டு என்பதை உணரலாம்.

உ,ஊ.ஒ,ஓ,ஔ - இதழ் குவியப் பிறப்பன.


உகரம் குறில் : ஊகாரம் நெடில் :

ஒகரம் குறில் : ஓகாரம் நெடில் :

தோன்றும் இடம் ஒன்றாயினும் ஒலிப்பில் சிறிய வேறுபாடு உண்டு.

நுனிநாவின் முயற்சியால் முன்னுயிர் பிறக்கும், கடை நாவின் முயற்சியால் பின்னுயிர் பிறக்கும். இடை நாவின் முயற்சியால் நடுவுயிர் பிறக்கும். 'அவ்வேறுபாடு அறிந்து கொள்' என்பர் இளம்பூரணர். ஆவை

எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல் என்று விளக்கம் தருவா் நச்சினார்க்கினியர்.




இவ்வாறு மொழிநூலார் உயிர்களின் பிறப்பை வகைப் படுத்திக் காட்டுவர்.

## 5.5 மெய் எழுத்துக்கள் பிறக்குமாறு

மெய் எழுத்துக்களின் பிறப்பினைப் பன்னிரண்டு நூற்பாக்களால் (89-100) விளக்குவர் தொல்காப்பியர் பதினெட்டு மெய்களுள் வ,ய என்ற இரண்டு மெய் ஒலியன்களுக்கும் தனித்தனியே பிறப்பிலக்கணம் கூறப்பட்டுள்ளது. ஏனைப்பதினாடு மெய்களுக்கும் பிறப்பிலக்கணம் கூறுங்கால் இரண்டிரண்டு மெய்களுக்குச் சேர்த்தே கூறப்பட்டுள.

## 5.6 மெய்ஒலியன்களைப் பாகுபடுத்தும்போது

1) ஓலிப்பு முனை (Point of Articulation)
2) ஓலிப்பு முறை (Manner of Articulation)

என்ற இருகோணங்களில் வகைப்படுத்துவர். ஓலிப்பு முனை அடிப்படையில் ஒலிகளைப் பகுப்போர், இதழொலி (Labial) பல்லிதழ் ஒலி (Labialo Dentol) பல்லொலி (Dentol) அண்ண ஒலி (Alceolar) கடையண்ண ஒலி (velar) என்ற முறையில் பெயரிட்டு வகைப் படுத்துவர். இவர்கள் நா, இதழ், பல் போன்ற ஒலிப்பானுக்கு முதன்மை அளிப்பர். ஓலிப்புமுறை அடிப்படையில் அடைப்பொலி (Stop) மூக்கொலி (Nasal) மருங்கொலி (lateral) ஆடொலி (Trill) என்றெல்லாம் வகைப்படுத்துவர். தொல்காப்பியர் தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்ற எண்முறை நிலைகளை எடுத்துக் கூறினும் மெய்யெழுத்துக்களை வகைப்படுத்தும்போது அண்ணம், நா, பல், இதழ் என்ற நான்கு உறுப்பின் அடிப்படையில் பாகுபடுத்துவர்.

| | | | |
|---|---|---|---|
| கங | - | முதல் நா அண்ணம் | (Velar) |
| சஞ | - | இடை நா அண்ணம் | (Palatal) |
| டண | - | நுனிநா அண்ணம் | (Apicai) |
| தந | - | பல்முதல் மருங்கு | (Dentol) |
| பம | - | இதழியைதல் | (bilabial) |

| | | |
|---|---|---|
| ய | - | மிடற்றெழ வளி இசை அண்ணம் சேர்ந்த ஒலி (Sonorant) |
| றன | - | நுனிநா அணரி ஒற்றும் - அண்ணத்தில் |
| ரழ | - | நுனிநா அணரி வருடும் - அண்ணத்தில் |
| ல | - | நாவிளிம்பு வீங்கி அண்ணம் ஒற்றும் |
| ன | - | நாவிளிம்பு வீங்க அண்ணம் வருடும் |

நா நுனி பரத்தல், ஒற்றல், அணருதல், வருடல், வீங்குதல் என்று நாவின் முயற்சிகளை விரிவாக விளக்குவர் காப்பியர். ற,ன,ர,ழ,ல,ள என்பன அண்ண ஒலிகள் முயற்சி வேறுபாட்டால் தம்முள் வேறுபடும்.

'தத்தம் திரிபே சிறிய என்ப'

என்ற நூற்பா கருத்து ஈண்டு எண்ணத்தக்கது

உயிர் எழுத்துக்களின் பிறப்பினைக் கூறுங்கால் அங்காந்தியலும், அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய. இதழ் குவிந்தியலும் என்ற வகையில் கூறினர். ஆனால் மெய்யெழுத்துக்களுக்குக் கூறுங்கால் ஒலிப்பானின் செயற்பாடுகள் பலவாகக் கூறப்படுகின்றன.

| | |
|---|---|
| அண்ணம் | - மேல்வாய் |
| அண்பல் | - மேல்வரிசைப்பல் |
| அணரி | - மேல்நோக்கிச் சென்று |
| ஒற்ற | - தீண்ட |
| மெய்யுற ஒற்ற | - அழுத்தித் தீண்ட |
| வருட | - தடவ |
| வீங்கி | - தடித்து |

இச்சொற்களில் ஒற்ற, வருட என்ற சொற்களின் பொருள்கள் உரையாசிரியர்களால் தெளிவாகக் கூறப்படவில்லை.

இளம்பூரணர் ஒற்ற என்பதற்கு ஒற்ற என்றே பொருள் கூறுவர். வருட என்பதற்குத் தடவ என்றும் பொருள் கூறுவர். மெய்யெழுத்துக்களின் பிறப்பினைக் கூறும் நூற்பாக்களைச் சிறித எண்ணிப் பார்க்க வேண்டும்.

பன்னீருயிரும் மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும் என்று கூறினார் காப்பியர். மெய்யெழுத்துக்கு அவ்வாறு கூறவில்லை. யகரத்திற்கு மட்டும் அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை என்று கூறினார். உரையாசிரியர்கள் தாம் "வல்லென்று இசைத்தலாலும், வல்லெனத் தலைவளியாற் பிறத்தலாலும், வல்லினம், மெல்லென்று இசைத்தலாலும் மூக்கின் வளியாற் பிறத்தலாலும் மெல்லினம், இடை நிகர்த்த வாய் ஒலித்தலாலும் மிடற்றுவளியாற் பிறத்தலாலும் இடையினம்" என்று விளக்கம் தருவர். தொல்காப்பியத்தில் இதற்கு

ஏற்றுவாறு நூற்பாக்கள் இல்லை. மெல்லினத்துக்கு மட்டும் இறுதியில் (100) மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும் என்று சிறப்பு விதி கூறப்பட்டுள்ளது. பிறப்பிலக்கணம் கூறும் ஒருசில நூற்பாக்கள் மறைந்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கங – முதல்நா முதல் அண்ணம், இடமும் முயற்சியும் ஒன்று. இருப்பினும் ககரம் வல்லினம். ஙகரம் மெல்லினம், மெல்லினம் மூக்கின் வளியிசை தோன்றும் என்ப. இரண்டும் ஒரு பிறப்பின என்று கூற முடியுமா? ஒலிப்பு முறையில் இரண்டிற்கும் இடையே உறுதியாக வேறுபாடு உண்டு. இதைத்தான் "தத்தம் திரிபே சிறிய என்ப" என்றார்.

## 5.7 சார்பெழுத்துக்கள் பிறக்குமாறு

சார்பெழுத்துக்களுக்குத் தனித்தனியே பிறப்பு தொல்காப்பியத்தில் சுட்டப்பெற வில்லை. இருப்பினும் தத்தம் முதலெழுத்தை ஒட்டியே ஒலிப்பிறப்பைப் பெறும் என்பர்.

101) தமக்கெனத் தனித்தன்மை இல்லாத சார்ந்து வருகின்ற சார்பெழுத்துக்களாகிய குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தல் என்ற மூன்று எழுத்துக்களும், தாம் சார்ந்துள்ள முதல் எழுத்துக்களின் பிறப்பிடமே தம் பிறப்பிடமாகக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் தமக்குரிய இயல்பில் நடக்கும்.

இதனால் சார்பெழுத்துக்களுக்குத் தனி இடம் என்பதும் அவை தமக்குச் சார்பாய் முன்னும் பின்னும் நின்ற முதலெழுத்துக்கள் எங்குப் பிறக்கின்றனவோ அங்குப் பிறக்கும் என்பதும் பெறப்படும்.

"தத்தம் சார்பிற் பிறப்பு" குற்றியலுகரத்தைப் பொறுத்தவரை , வல்லின மெய்கள் மேல் ஏறிய உகரமே குற்றியலுகரமாதலின் வல்லின மெய்களை பிறப்பிடமே குற்றியலுகரங்களுக்கும் பிறப்பிடம் என்பது பெறப்படும் குற்றியலிகரத்துக்கும் அவ்வாறே கொள்வது பொருந்துமா? என்பது சிந்திக்கத்தக்கது.

கேண்மியா – மி குற்றியலிகரம் - மகரத்தின் பிறப்பிடமே இதற்கும் பிறப்பிடம்

நாகியாது –'கி' குற்றியலிகரம் - மகரத்தின் பிறப்பிடமே இதற்கும் பிறப்பிடம்
நாகியாது –'கி' குற்றியலிகரம் - 'யகரம்' வருவழி யிகரங்குறுகும் - ககரத்தின் பிறப்பிடமே இதற்கும் பிறப்பிடமாகும்.

‘ஒத்த காட்சி’ என்றதனான் ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பே யெனினும், தலைவளியாற் பிறத்தலின் உயிரோடு புணர்ந்து வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும் என்பது கொள்க என்பர் இளம்பூரணர்.

எ.ஃ.கு – ஆய்தத்துக்கு முன்னுள்ள குறில் எகரம் சார்பாக இருந்தாலும் வல்லெழுத்து பிறக்கும் இடத்திலேயே பிறக்கும் என்பது இளம்பூரணர் கருத்து.

“தம்மியல்பிலும்” என்றதனான், அளபெடையும் உயிர்மெய்யும் தமக்கு அடியாகிய எழுத்துக்களது பிறப்பிடமே இடமாக வரும் என்பது கொள்க என்பர் இளம்பூரணர்.

தொல்காப்பியர் பிறப்பியலில் இறுதிஇரண்டு நூற்பாக்களைப் புறனடையாகப் படைத்துள்ளார்.

102) எல்லா எழுத்துக்களும், வெளிப்பட விதந்து சொல்லப்பட்ட இடத்தின் கண்ணே, பிறக்கும் ஓசைக் காற்றினால் வெளிப்படக் கேட்குமாறு சொல்லும்போது, உள்ளே உறுப்புகளில் தங்கிச் சுழன்று எழும் ஓசைக் காற்றுக்கு அளபு கூறுதல் அந்தணர் இலக்கணநூல்களில் காணப்படும். அதனை இங்குக் கூறாது வாயிலிருந்து வெளிவரும் ஓசைக்குரிய மாத்திரை மட்டும் இங்குக் கூறப்பட்டுள்ளது என்பது புறநடைச் செய்தி.

“உறழ்ச்சி வாரம் என்றது உந்திமுதலா எழும் வளி தலை காறும் சென்று மீண்டு நெஞ்சின்கண் நிலைபெறுதலை எனக்கொள்க. வளி என்னாது வளியிசை என்றது அவ்வாறு நெஞ்சின்கண் நிலைபெறும் அளபும் வளி எனப்படுவது பின்னை நெஞ்சினின்றும் எழுவழியெல்லாம் வளித்தன்மை திரிந்து எழுத்தாம் தன்மையதாம் என்பது விளக்கி நின்றது” என்று விளக்கம் தருவர் இளம்பூரணர்.

இந்நூற்பா மேலைச்சூத்திரத்திற்குப் (102) புறனடையாக அமைந்தது. அந்தணர் போலன்றி, வேதத்துக் கண்ணதன்றி, உந்தியில் தோன்றிவரும் காற்று தலை, மிடறு, நெஞ்சு ஆகிய இடங்களில் நிலைபெற்றுப் புறத்து வந்து பொருளுணர்ச்சிதரும் ஒலி எழத்துக்து வந்து பொருணர்ச்சிதரும் ஒலி எழுத்துக்களாக வருவனவற்றையே தொல்காப்பியர் ஈண்டுக் கூறினார் என்க. “மெய்தெரி” என்றதனான் முற்கு முதலியன முயற்சியாற் பிறக்கும் எனினும், பொருள் தெரியா நிலைமையாவாகலின், அவற்றிற்கு அளபு கூறவில்லை. ‘நுவன்றிசின்’ என்பது ஈண்டு இறந்தகாலத் தன்மைவினை என்பர் இளம்பூரணர்.

## 5.8 தொல்காப்பியர் காட்டும் உயிரொலிகளின் பிறப்பு

| | | |
|---|---|---|
| அங்காத்தல் அண்பல் | அங்காப்பு | இதழ் |

இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

குறிப்பு

| | முதல்நா விளிம்புறல் | | குவிதல் |
|---|---|---|---|
| மேல் | இ,ஈ | | உ, ஊ |
| இடை | எ, ஏ | | |
| கீழ்மேல் | ஐ | | ஒ, ஓ |
| கீழ் | | அ, ஆ | ஔ |

## 5.9 தொல்காப்பியர் காட்டும் மெய்யொலிகளின் பிறப்பு

| | ஒலிப்புமுனை இதழ் ஈரிதழ் பல்லிதழ் | பல்முதல் மருங்கு | நுனிநா அண்ணம் | இடைநா இடை அண்ணம் | முதல்நா கடை அண்ணம் |
|---|---|---|---|---|---|
| அடைப்பொலி | ப | த | ற ட | ச | க |
| மூக்கொலி | ம | ந | ன ண | ஞ | ங |
| வருடொலி | ஐ | . . . | ரு | . . . | . . . |
| மருங்கொலி | . . . | . . . | ல ள ழ | . . . | . . . |
| அடைஉயிர் | . . வ | . . . | . . . | . . . | . . . |

## 5.10 தொகுத்துக் காண்போம்

- உயிர் எழுத்துக்கள் பிறப்பை மொழியியல் வழி அறிந்து கொண்டீர்கள்.
- மெய்யெழுத்துக்கள் பிறப்பை மொழியியல் அடிப்படையில் அறிந்து கொண்டீர்கள்.

## 5.11 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. பிறப்பியலை மொழியியலார் எவ்வாறு அழைப்பர்?
2. உயிரெழுத்து பிறப்பின் மூன்று முக்கிய நிலைகள் யாவை?
3. பின்னுயிர்கள் என்பது யாது?
4. ஒலி உறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஒலியின் பிறப்பை ஆராயும் இயலின் பெயரைச்சுட்டுக.



## 5.12 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் சவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974

2 டாக்டர் முத்துச்சண்முகன் - இக்கால மொழியியல் பாரி நிலையம் சென்னை.

# கூறு – 6
# புணரியல்

## 6.1 முன்னுரை

எழுத்துக்கள் வருமொழி நிலைமொழியாக நின்று புணரும் தன்மையைக் கூறுவது புணரியலாகும்.

இதுவரை நூல்மரபு, மொழிமரபு, பிறப்பியல் என்ற மூன்று இயல்களிலும் எழுத்துக்களின் தனிமை, மொழியிடை நிற்கும் நிலை, அங்ஙனமான அவைகளின் பிறப்பு பற்றி உணர்த்தப்பட்டன. அவ்வெழுத்துக்கள் சொல்லாகி நிற்கும் பாங்கிலும் ஒரு சொல் இன்னொரு சொல்லோடு தொடரும் பாங்கிலுமான இருவேறு நிலையில் எழுத்துக்களுக்குப் புணரியல் தன்மை இனி உணர்த்தப்படுகிறது.

ஒரே சொல்லுக்குள் பகுதி, விகுதி, சந்தி, சாரியை எனப் புணரும் அமைப்பு பற்றியது ஒருவகை. இது அகச் சந்தி

ஒரு சொல் மற்றொரு சொல்லோடு சேரும்போது இயல்பாகவும், எழுத்துத் திரிந்தும் புதிய எழுத்துத் தோன்றியும் ஆன நிலை மாற்றம் ஏற்படுவது மற்றொருவகை. இது புறச் சந்தி.

புணரியலில் அகச் சந்தி பற்றிய விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

புணரியல் தான் மொழி அமைப்பை விளக்கும் அடிப்படை இயலாகும். இதில் வருமொழி நிலைமொழிகளின் புணர்ச்சி மட்டும் கூறாமல் எழுத்துக்களின் அமைப்பு. சொல்லிலக்கணம், தொடரியல் உறவுகள், சொற்பொருள் ஆகிய எல்லாக் கூறுகளுக்கும் விளக்கப்படுகின்றன.

## 6.2 குறிக்கோள்கள்

- மொழிகளின் முதலும் ஈறும் பற்றிய செய்திகள் பற்றி அறிந்து கொள்வீர்கள்.

- புணர்தலின் இயல்பு, உருபுகள் புணர்தல் பற்றி அறிந்து கொள்வீர்கள்.
- சாரியைப் புணர்ச்சி, எழுத்துச் சாரியைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- உயிரெழுத்தின் புணர்ச்சி இயல்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- புணர்ச்சியில் வேறுபடும் தன்மை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## குறிப்பு

புணரியலில் இனிவரும் உயிர் மயங்கியல். புள்ளி மயங்கியல். குற்றியலுகரப் புணரியல் போன்ற இயல்களுள் மொழிகள் புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறப்பட்டுள்ளது.

இப்புணரியலுக்கு முன் உள்ள மூன்று இயல்களிலும் முறையே நூல்மரபில் தனி எழுத்தின் இலக்கணமும் மொழி மரபில் மொழியிடை நின்ற எழுத்திலக்கணமும் பிறப்பியலில் பொதுவாக எழுத்துக்களின் பிறப்பையும் பற்றிக் கூறியதால் அவ்வெழுத்துக்கள் கூடி மொழியான நிலையில் அவைகள் தம்முள் புணர்தற்குரிய அடிப்படையை இக் கூறு விளக்குகிறது.

மொழி புணர்வுக்கு மொழிகளின் முதலும் ஈறும் இன்றியமையாததாகும். அதுபற்றி முதலில் கூறப்படுகிறது.

104. மூன்று தலையிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலா இருப.்.து
அறு நான்கு ஈறொடு நெறி நின்றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென்று ஆயீ ரியல.

எழுத்துக்கள் முப்பத்து மூன்று என நூல் மரபில் கூறப்பட்டது. (முதல் எழுத்து 30, சார்பெழுத்து 3) மொழி மரபில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் 22 என்றும் (12 உயிர், 9 உயிர் மெய், 1 மொழி முதல் குற்றியலுகரம்) இறுதியில் வரும் எழுத்துக்கள் 24 என்றும் (12 உயிர், 11 மெய், 1 குற்றியலுகரம்) கூறப்பட்டன.

இப்படி மொழி முதலும் இறுதியுமாக வருவன எல்லாம் நூல்மரபில் கூறிய 33 எழுத்துக்களுள் அடங்கும். இவைகள் மெய், உயிர், உயிர்மெய், சார்பெழுத்து என நான்காய்த் தெரிந்தாலும் புணரியல் நிலையில் முதலும் இறுதியும் எனக் காண்பது மெய்யும் உயிருமே ஆகும்.

இக்கருத்தை ஒருமொழி அளவிலும் புணர்மொழியளவிலும் காணலாம்.

முதலில் ஒருமொழி அளவில் அமைவதைப் பற்றித் தொல்காப்பியர் மேற்கண்ட 104-ஆம் நூற்பாவில் கூறுகிறார்.

1. ஒருமொழி அளவில் மெய் முதல் மெய் ஈறு. எ.டு. மரம்.

2. ஒருமொழி அளவில் உயிர் மெய் உயிர் ஈறு. எ.டு. இலை.

3. ஒருமொழி அளவில் உயிர் முதல் மெய் ஈறு. எ.டு. ஆல்

4. ஒருமொழி அளவில் மெய் முதல் உயிர் ஈறு எ.டு. விள.

பொதுவாக மொழிக்கு இறுதியில் வரும் மெய்கள் புள்ளி பெற்று வரும்.

105. அவற்றுள், மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையில் என்பது நூற்பா.

மொழியீறு புள்ளியொடு நிற்கும் என்பதால் மொழிக்கு முதலில் வருவது மெய்யாய் நிற்கும். மொழிக்கு இறுதியில் வரும் குற்றியலுகரம் உயிர் எழுத்தாயினும் மெய் போலப் புள்ளி பெற்று வரும்.

106. குற்றிய லுகரமும் அற்றென மொழிப.

அற்றென என்பது முன் நூற்பாவில் கூறிய புள்ளியோடு நிலையலைக் குறித்தது.

இங்ஙனமாகப் புள்ளிபெற்று இறுதியில் வரும் மெய்யும் குற்றியலுகரமும் வருமொழியில் உயிர் எழுத்து வரின் உயிர் ஏற இடம் கொடுக்கும் என்பதாம்.

மரம் + அது : மரமது
நாகு + அரிது : நாகரிது (க் + உ = கு) க் + அ = க

மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்தை இரண்டாகப் பிரித்து மொழிக்கு முதலில் நிற்பதுமெய் எனக் கொள்ளவேண்டும் மரம் (ம் + அ = ம)

அவ்வாறே மொழிக்கு இறுதியில் வரும் உயிர் மெய் எழுத்தைப் பிரித்து இறுதியில் வருவது உயிர் எனக் கொள்ள வேண்டும் விள (ள் + அ = ள)

107. உயிர்மெய் யீறும் உயிரீற்று இயற்றே

எனவே மொழி முதல், உயிர் மெய்யை மெய்ம் முதலாகவும் மொழி இறுதி உயிர் மெய்யை உயிர் இறுதியாகவும் கொள்ள வேண்டும் என்பது கருத்து.



மேற்கூறிய புணர்ச்சியின் அடிப்படை எழுத்து வகையால் நான்கு என்பதைத் தொல்காப்பியர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். இது இருமொழிப் புணர்ச்சியாகும்.

108. உயிரிறு சொல்முன் உயிர்வருவழியும்
உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியுமென்று
இவ்வென அறியக் கிளக்கும் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவி என்று
ஆயீ ரியல புணர்நிலைச் சுட்டே.

மொழிபுணர் இயல்பில் மெய்முன்மெய். உயிர்முன் உயிர். உயிர்முன் மெய் மெய்முன் உயிர் என ஒருமொழிக்கு வரும் எழுத்து பற்றிக் கூறியதும் (104) இந்த 108ஆம் நூற்பாவில் இருமொழி அதாவது நிலைமொழி புணரும் அடிப்படையை விளக்கினார்.

1. உயிர் முன் உயிர் = ஆ + ஈ= ஆஈ
2. உயிர் முன் மெய் = ஆ + வலிது = ஆ வலிது (வ் + அ = வ)
3. மெய் முன் உயிர் = ஆல் + இலை = ஆலிலை
4. மெய் முன் மெய் = ஆல் + வீழ்ந்தது = ஆல் வீழ்ந்தது (வ் + ஈ= வீ)

இங்ஙனம் எழுத்து வகையான் புணரும்போது அந்த எழுத்துக்களே பெயராக வினையாகச் (பெயர்ச்சொல், வினைச் சொல்) சொல்லாம் தன்மையாகிப் புணர்வது பற்றி இனி விளக்கப்பெறுகிறது.

109. அவற்றுள்,
நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தோடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரோடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரோடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலோடு பெயரைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே.



சொல்வகையால் புணர்ச்சி நான்கு வகைப்படும்.

குறிப்பு

1. பெயரோடு பெயர் = சாத்தன் + கை = சாத்தன்கை.

2. பெயரொடு தொழில் = சாத்தன் + உண்டான் = சாத்தன் உண்டான்

3. தொழிலோடு பெயர் = வந்தான் + சாத்தான் = வந்தான் சாத்தான்.

4. தொழிலொடு தொழில் = வந்தான் + போயினான் = வந்தான் போயினான்.

சொல், பெயர் வினை, இடைஉரி நான்காயினும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தனித்து பெயர் வினைபோல நில்லா என்பதால் அவையில்லா பெயர் வினைச் சொற்களுக்கே புணர்ச்சி கூறப்பட்டது என்கிறார் இளம்பூரணர்.

மேற்கூறியவாறு எழுத்துவகையால் நான்காகவும் சொல்வகையால் நான்காகவும் நிலைமொழி வருமொழி எனப் புணரும்போது இயல்பாகவும் புணரும் மூவகையான திரிபும் அடையும் என்பதை,

110. அவைதாம்
மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று
இவ்வென மொழிப திரியு மாறே

என்கிறார் தொல்காப்பியர்.

இயல்புப் புணர்ச்சி என்பது வருமொழியும் நிலைமொழியும் எவ்வித மாறுதலும் இன்றிப்புணர்வது.

எ.டு. குவளை + மலர் = குவளைமலர்.

திரிபு அல்லது விகாரப் புணர்ச்சி என்பது கீழ்க்கண்ட மூன்று வகையில் வரும்.

1. மெய் பிறிதாதல் = பொன் + குடம் = பொற்குடம்.
2. மிகுதல் = வாழை + பழம் = வாழைப்பழம்.
3. குன்றல் = மரம் + வேர் = மரவேர்.

இவற்றைத் தோன்றல், திரிதல், கெடுதல் என்றும் கூறுவர். இப்புணர்ச்சி மூன்றும் ஒரே சொல்லில் அமைவதும் உண்டு. இரண்டும் அமைவது உண்டு. இவ்வாறெல்லாம் நிலைமொழி வருமொழிகள் புணரும்போது அவை அடைமொழியுடனும் புணரலாம்.

111. நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய:

எ.டு. 1. பதினாயிரம் + ஒன்று = பதினாயிரத்தொன்று, இதில் நிலைமொழி அடையுடன் வந்துள்ளது.

2. ஆயிரம் + ஒரு ப.்.து = ஆயிரத்து ஒருப.்.து இதில் வருமொழி அடையுடன் வந்துள்ளது.

3. பதினாயிரம் + ஒருப.்.து = பதினாயிரத்து ஒருப.்.து இதில் இருமொழியும் அடையெடுத்து நிற்கின்றன

இந்த அடைமொழிகள் உம்மைத் தொகையாவும் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாகவும் இருக்கும்.

பனைமரம் கிளை பனைமரக்கிளை. இது இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகை. பனை என்றாலும் மரம். மரம் என்றாலும் மரந்தான். இதனைப் பனையாகிய மரம் எனக் கூறுவதற்கு இருபெயர் ஒட்டு என்பர். பனை, மரம் என இருபெயர் ஒட்டியதால் அப்பெயர் பெற்றது.

எனவே அடைமொழிகள் இந்த இருவகையில் அதாவது உம்மைத்தொகை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்ற வகையில்தான் அமையும்.

இவை தவிர, வினைத் தொகை (கொல்களிறு) பண்புத்தொகை (செந்தாமரை) வேற்றுமைத் தொகை (மரக்கிளை) உவமைத் தொகை (முத்துப்பல்) ஆன சொற்கள் எல்லாம் அடைமொழிகள் அல்ல. அவை ஒரு சொல் தன்மையன.

1. உண்ட சாத்தன் + வந்தான்: 2. உண்டு வந்தவன் + சாத்தன். இவை முறையே உண்ட சாத்தனாய் என்றும் உண்டு வந்தவனாகிய என்றும் வருமொழி நிற்பதால் இச்சொற்கள் அடைமொழியல்ல. ஒரே சொல் அமைப்பை உடையன என உணரவேண்டும். இளம்பூரணரின் கருத்தைப் பாவாணர் இப்படியெல்லாம் விளக்கினார்.

இங்ஙனம் வருமொழி நிலைமொழிகளின் இயல்பு சற்று மாறித் தலைதடுமாற்றமாகப் புணர்ந்து நிற்கும் நிலையும் உண்டு.

112. மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே.

எ.டு. மீ + கண் = மீகண் என்றும் கண்மீ என்றும் நிலைமொழி வருமொழி மாறி மாறி அமையினும் பொருள் வேறுபாடாது.

முன் + இல் = முன்றில் : இல் + முன் =இல்முன்

ஆக சொற்கள் புணரும்போது அடிப்படையான நிலையில் வேற்றுமைப் பொருளில் புணரும் அல்லது வேற்றுமை அல்லாத வகையில் புணரும்.

எனவே புணர்ச்சியைப் பொதுவாக வேற்றுமைப் புணர்ச்சி என்றும் அல்வழிப்புணர்ச்சி என்றும் கூறுவர். இவ்வாறான புணர்ச்சிகளில் எழுத்து மிகுதலும், சாரியை சேர்தலும் உண்டு.

113. வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை.

எ.டு. விளங்கோடு : விள + கோடு. எழுத்து மிகுதி.

மகவின்கை : மக + இன் + கை : சாரியை மிகுதி. இவை வேற்றுமைப் புணர்ச்சி
எ.டு. விளக்குறிது = விள + குறிது – எழுத்து மிகுதி.

பனையின் குறை = பனை + இன் + குறை – சாரியை மிகுதி. இவை அல்வழி.

காட்டப்பட்ட எடுத்துக்காட்டில் எழுத்தும் சாரியையும் தனித்தனியே வந்தன. ஆனால் இரண்டும் ஒன்றாய் வேற்றுமைப் புணர்ச்சியிலும் அல்வழிப் புணர்ச்சியிலும் வருதல் உண்டு என்கிறார் இளம்பூரணர்.

எ.டு. அவற்றுக்கோடு =அவ் + கோடு : அவ் + வற்று + கோடு : அவ் + வற்று + க் + கோடு. இது வேற்றுமைப் புணர்ச்சி.

கலத்துக்குறை : கலம் + அத்து + குறை, கலம் +அத்து + க் + குறை. இது அல்வழிப்புணர்ச்சி இவ்விரண்டு எடுத்துக்காட்டிலும் எழுத்தும் சாரியையும் வந்தன காண்க. வேற்றுமைப் புணர்ச்சியை உருபுப் புணர்ச்சி என்பர்.

114. ஐஒடுகு இன் அது கண் என்னும்
அவ்வா றென்ப வேற்றுமை யுருபே.

ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் ஆறு சொற்கள் வேற்றுமை உருபுகளாகும். இவை இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈறாக ஆறு உருபுகள்.



வேற்றுமைகள் எட்டு, முதல் வேற்றுமை என்பது எந்த மாற்றமும் அடையாதது.

முருகன் பார்த்தான் - முதல் வேற்றுமை, பார்த்ததற்கு எழுவாய் முருகன்

ஆனால் இந்த முருகன் என்ற சொல்லுடன் ஐ, ஒடு, கு முதலிய சொற்களைச் சேர்த்து எழுவாய்ப் பொருளில் மாற்றம் உண்டாக்க, முருகனை, முருகனொடு, முருகனுக்கு, முருகனின், முருகனது, முருகன்கண் என வரும்.

உருபுகள் விரிந்து வருவதும் மறைந்து வருவதும் உண்டு. மரத்தை வெட்டினான் உருபு விரிந்த சொல்.

மரம் வெட்டினான் - உருபு தொக்கு நின்றது.

இவ்வாறு உருபுத் தொடர்புடன் விரிந்தும் மறைந்தும் வருவது வேற்றுமைப் புணர்ச்சி.

இங்ஙனம் இன்றி வருவன அல்வழிப்புணர்ச்சி. அவை : எழுவாய், விளி, உவமத் தொகை, உம்மைத் தொகை, பண்புத் தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, முற்று பெயரெச்சம், வினை எச்சம், இடைச் சொல், உரிச்சொல் என்பன ஆகும்.

உருபுகள் சொற்களுடன் புணரும்போது வல் எழுத்து உருபுச் சொற்களான கு, கண், இரண்டும் வல்லொற்றாயும் மெல்லொற்றாயும் மிகும்.

115. வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்கு
ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்.

எ.டு. ஊர் + கு = ஊர்க்கு : ஊர் + கண் = ஊர்க்கண்
தம் + கண் = தங்கண்

இப்படி ஒற்று இடையில் மிகாமல் வருதலும் உண்டு.

எ.டு. அரசர் + கண் = அரசர்கண்.



இந்நூற்பாவில் கூறப்பட்டவாறு மெல்லொற்று வல்லொற்று மிகுகின்ற நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் தவிர்த்த

ஏனைய, ஐ, ஒடு, இன், அது என்ற உருபுகள் எந்த எழுத்து மிகுதியும் இன்றி இயல்பாகப் புணரும் என்பதாம்.



இப்புணரியலின் தொடக்கத்தில் 1. மெய் பிறிதாதல், 2. மிகுதல் 2. குறைதல், 4. இயல்பு எனப் புணர்ச்சியை நான்கு வகையில் கூறினார் தொல்காப்பியர்.

இவை நான்கும் உருபுப் புணர்ச்சியாக வரும். ஆனால் 115-ஆம் நூற்பாவில் மிகுதல் பற்றி மட்டும் கூறப்பட்டது. மெய் பிறிதாதலையோ, இயல்புப் புணர்ச்சியையோ கூறவில்லையானாலும் கூறியதாகக் கொள்க என்கிறார் இளம்பூரணர்.

## 6.3 கீழ்வருவன மெய் பிறிதாதலுக்கு

**எ.டு.**

1. அஃறிணைப் பெயரில் மெய் பிறிதாதல்:

பொன் + கு = பொற்கு, பொன் + கண் = பொற்கண்

ஆண் + கண்: ஆங்கண்,ஈன் + கண் =ஈங்கண்.

ஊன் + கண் = ஊங்கண்.

2. உயர்திணைப் பெயரில் மெய் பிறிதாதல்:

அவன் + கு = அவற்கு.

## 6.4 கீழ்வருவன இயல்புப் புணர்ச்சிக்கு

**எ.டு.**

1. அவன் + கண் = அவன்கண் (அவற்கண் என வராது) இது உயர்திணைப் பெயர்

2. சாத்தன் + கண் = சாத்தன் கண் (சாத்தற்கண் என வராது) இது விரவுப் பெயர்.

மெய் பிறிதாகுவது கு, கண் என்ற இரு உருபுகளால் ஆகும் எனக் கூறியதுபோல அது என்ற ஆறாம் வேற்றுமைக்கு ஒரு சிறப்பு விதி கூறுகிறார் தொல்காப்பியர்.

116. ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்.

'அது' என்ற உருபில் உள்ள அகரம் அகர ஈற்றுச் சொல் முன் கெடும்.

எ.டு. நமது. நாம் + அது : நம் + அது, (நெடுமுதல் குறுகியது) நம் + அ + அது (இடையில் 'அ' எழுத்துப் பேறாய்ச் சேர்ந்தது) நம + அது (நம என்பது அகர ஈறு. இந்த அகர இறுதிமுன் அது என்பதன் அகரம் கெட்டு நிற்கும்) நம + து = நமது.

வேற்றுமையுருபுகள் பெயருக்குப் பின்னால் இணையும்.

117. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.

சாத்தன் + ஐ = சாத்தனை
சாத்தன் + ஒடு = சாத்தனொடு.
ஈண்டுப் பெயர் என்றது, உயர்திணை அஃறிணை ஆகும்.

118. உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்று
ஆயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே

ஆடூஉ, மகடூஉ – உயர்திணை.

ஒன்று, பல – அஃறிணை.
இனி சாரியை பற்றிய புணர்ச்சி கூறப்படும்.

மொழி அமைப்பில் சாரியைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சொல்லின் பொருளை முழுமைப்படுத்த சாரியைகள் இன்றியமையாதன. குறிப்பாக மொழி இனிமைக்குச் சாரியைகளும் ஒரு காரணமாகும். சொற்களின் ஊடே சார்ந்து வரும் சொற்கள் பல. அவைகள் சொற்களின் பின்னாக வரும் என்பதும் அவை இன்னவை என்பதும் பற்றித் தொல்காப்பியம் கூறும்போது,

119. அவற்றுவழி மருங்கில் சாரியை வருமே.

120. அவைதாம்,
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன் னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே.



என்னும் நூற்பாக்கள் கூறுகின்றன.

நூற்பாவில் கூறப்பட்ட இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்ற ஒன்பது சாரியைகளுக்கு மேலாக இளம்பூரணர் தம், நம், நும், எம், கெழு, ஏ, ஐ ஞான்று என்ற எட்டைக் குறிப்பிடுகிறார். பிறவும் என்றதனால் தம் காலத்து வழங்கிய எட்டு சாரியைகளைச் சுட்டுகிறார்.

நூற்பாவில் கூறப்பட்ட ஒன்பதும் வழக்குப் பயிற்சியின் மிகுதிபற்றி வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

இனி ஒவ்வொரு சாரியை பற்றிய இலக்கணம் காண்போம்:

**1. இன் சாரியை :**

121. அவற்றுள்,
இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்துமாகும்.

ஓரெழுத்து ஒருமொழியான ‘ஆ’ முன்னர் வேற்றுமை உருபு வரும்போது இடையே இன் சாரியை வரும். இச் சாரியையின் முதலில் உள்ள இகரம் கெடுதலும் உண்டு. கெடாதிருத்தலும் உண்டு.

1. ஆன் கோடு ஆ + இன் + கோடு, இ - கெட்டது.
2. ஆவின் கோடு ஆ + இன் + கோடு, இ - அப்படியே உள்ளது.

இன்சாரியையின் இகரம் கெடுதல் போல இகரம் இருக்க னகரம் கெடும் இடமும் உண்டு. அது அளவுப் பெயர்கள் வருமொழியாக வரும்போது.

122. அளபாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே.

எ.டு. பதிற்றகல், பதிற்றுழக்கு.

பத்து + அகல் = பதிற்றகல்.
1. பத்து + இன் = அகல்
2. பது + இன் + அகல் - நிலைமொழியில் த் கெட்டது.
3. பது + இற் + அகல் - சாரியை ன் - ற் ஆனது.
4. பது + இற் + ற் + அகல் - சாரியை ஒற்று இரட்டித்தது.
5. பத் + இற் + ற் + அகல் = நிலைமொழி உகரம் நீங்க, பதிற்றகல் ஆனது.

பத்து + உழக்கு = பதிற்றுழக்கு.

1. பத்து + இன் = உழக்கு
2. பது + இன் = உழக்கு
3. பது + இற் + உழக்கு
4. பது +இற் + ற் + உழக்கு
5. பத் + இற் + ற் + உழக்கு + பதிற்றுழக்கு



குறிப்பு

அகல், உழக்கு என்ற அளபுப் பெயர் போல சில எண்ணுப் பெயரிலும் இன் சாரியை ற் ஆக மாறும்.

பத்து + ஒன்று = பதிற்றொன்று.
1. பத்து + இன் + ஒன்று
2. பது + இன் + ஒன்று
3. பது + இற் + ஒன்று
4. பது + இற்+ ற் + ஒன்று
5. பத் + இற் + ற் + ஒன்று = பதிற்றொன்று.

மேலும் நான்காம் வேற்றுமை உருபான 'கு' வுக்கு முன் இன் சாரியையின் னகரம் றகரமாகும்.

124. ன.்.கான் ற.்.கான் நான்கன் உருபிற்கு.

எ.டு. விளவிற்கு. (விள + கு: விள + இற் + கு)

எடுத்துக்காட்டில் இன் சாரியைக்கு மட்டும் கூறப்பட்டாலும் பொதுவாக ன் - ற் ஆகும் என்று நூற்பா கூறுவதால் இன் போல னகர ஈற்றை உடைய ஒன், ஆன், அன் என்ற மற்றைய சாரியைகளின் னகரம் றரமாகத் திரியும் என்பதால் இளம்பூரணர் 1) கோ, ஒற்கு 2) ஒரு பாற்கு 3) அதற்கு என உதாரணங்கள் தந்தார்.

(கோ + ஒன் கு, ஒருபத்து + ஆன் + கு: ; அது + அன் + கு)

இந்த னகர ஈறாகிய இன்சாரியை 5ஆம் வேற்றுமை உருபு வரும்போது முழுவதுமாகக் கெட்டுவிடும். அதாவது இன் சாரியை வராது என்பது கருத்தாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

132. இன்னென வரும்உம் வேற்றுமை உருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும்.

எ.டு. விளவின் (விள + இன், ஆனால் விள + இன் + இன் என்பதாக வாராது).

ஒரே வழி சிறுபான்மையாக இன் என்ற ஐந்தாம் வேற்றுமையுடன் இன் சாரியை இயைந்து நிற்பதும் உண்டு என்பதை இளம்பூரணர் ‘பாம்பினிற் கடிது தேள்’ என்பதாக உதாரணம் தந்தார்.

1. பாம்பு + இன் + இன் + கடிது + தேள்
2. பாம்பின் + இன் + கடிது + தேள்
3. பாம்பின்றி + கடிது + தேள்

னகரம் றகரமாகத் திரியும் தொடர்ச்சியான செய்தியில் ஆன் சாரியையின் னகரம் நாட் பெயர் முன் வரும் வல் எழுத்தை முதலாக உடைய வினைச் சொல்லின் கண் றகரமாகத் திரியும் எனக் கீழ்க்கண்டவாறு தொல்காப்பியம் கூறுகிறது.

125. ஆனி னரகமும் அதனோ ரற்றே
நாள்முன் வரூஉம் வல்முதற் றொழிற்கே.

எ.டு. பரணியாற் கொண்டான் (பரணி + ஆன் + கொண்டான்)

ஈண்டு பரணி என நாட்பெயர் போல நாட்பெயர் அல்லாத பெயர்முன் வினைச் சொல் வரும்போது இன் சாரியையின் னகரம் ற் ஆகத் திரியும் என இளம்பூரணர் நூற்பாவில் கூறிய உம்மையால் “பனியிற் கொண்டான்” என உதாரணம் தந்தார். இதைப் பனி + இன் + கொண்டான் எனப் பிரித்து உணரவேண்டும் என்க.

இப்படி கொண்டான் என வினைச்சொல் முன்னர் னகரம் றகரமாகத் திரிதல்போலப் பெயர்ச்சொல் முன்பும் திரியும் என்பதற்கு,“பறம்பிற்பாரி” என உதாரணம் தந்தார் இளம்பூரணர். பறம்பு + இன் + பாரி.

ஆனால் றகரமாகத் திரியாமல் இயல்பாக வருதலும் உண்டு எனக் கூறி ‘வண்டின்கால்’ என்ற சொல்லை உதாரணம் காட்டினார் இளம்பூரணர். (வண்டு + இன் + கால் இன் சாரியைப் புணர்ச்சியானது, 1. இகரம் கெட்டு னகரம் மட்டும் நிற்பதும் 2. னகரம் கெட்டு இகர உயிர் மட்டும் நிற்பதும் 3. னகரம் றகரமாகத் திரிதலும் ஆகிய மூன்று நிலைக்கு உட்பட்டது என்பதே இந்நூற்பாவின் செய்தியாகும்.

**2. வற்றுச் சாரியை :**

123. வ.ஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அ.ஃகான் நிற்றல் ஆகிய பண்பே.



**குறிப்பு**

குறிப்பு

சுட்டெழுத்தை முதலாக உடைய ஐகார ஈற்றுச் சொல்முன் வேற்றுமை உருபு வரும்போது வற்றுச் சாரியையின் வகரமாய் கெட்டு அற்று என நிற்கும்.

எ.டு. அவையற்றை (அவை + ஐ:; அவை + வற்று + ஐ: அவை + அற்று + ஐ)

**3. அத்துச் சாரியை :**

126. அத்தின் அகரம் அகர முனை இல்லை.

நிலைமொழியாக நிற்கும் அகர ஈற்றுச் சொல்முன் அத்துச் சாரியையின் அகரம் கெடும்.

எ.டு. மகத்துக்கை (மகம் + அத்து + கை: மக + அத்து + கை: மக + த்து + கை) மகம் என்ற நிலை மொழி ஈறும் கெட நின்ற மக என்ற சொல் அகர ஈறாகும். எனவே இச்சொல்லிற்கே நூற்பாவின் இலக்கணம் பொருந்திற்று.

பொதுவாக மகர ஈறு அத்துச் சாரியை பெறும்போது நிலைமொழி இறுதியான மகர ஈறு அத்துச் சாரியைமுன் கெட்டுப் புணரும் என்பதை ஒரு விதியாகக் கூறுகிறார் தொல்காப்பியர்.

134. அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே.

எ.டு. கலத்துக்குறை, அவற்றுக்கோடு.

கலம் + குறை: கலம் + அத்து + குறை : கல + அத்து + குறை = கல + த்து குறை - கலத்துக்குறை. இவற்றுள் அத்து முன் ஒற்று கெட்டதும், உயிர் ஈறுமுன் உயிர் கெட்டதும் காண்க.

அத்துச் சாரியை முன் ஒற்று கெடாது வரவும் பெறும் என்று இளம்பூரணர் கருத்தைக்கூறி உதாரணம் தருகிறார்.

எ.டு. விண்ணத்துக் கொட்கும் (விண் + அத்து + கொட்கும்)

வெயிலத்துச் சென்றான் (வெயில் + அத்து + சென்றான்)

அகர ஈற்றின் முன் அத்து பிற சாரியையின் அகரம் கெடும் என்ற 126 ஆம் நூற்பாவில் கூறினாலும் அகர ஈறுமட்டுமின்றி பிற உயிர் ஈறு

முன்பும் கெடும் என்ற கருத்தை அத்தே வற்றே என்ற 134ஆம் நூற்பாவின் உரையால் இளம்பூரணர் கூறினார்.

எ.டு. அண்ணாத்தேரி (அண்ணா + அத்து + ஏரி)

மேலும் அகர ஈற்றின் முன் அத்தின் அகரம் கெடாமல் வருதலும் உண்டு என்பதையும் 134ஆம் நூற்பாவின் உரையால் விளக்குகிறார்.

எ.டு. விள வத்துக் கண் (விள + அத்து + கண்: விள உயிர் ஈறு. உயிர்முன் உயிர்வரும்போது உடம்படு மெய் பெறும் என்பதால் 'வ்' என்ற எழுத்தைப் பெற்று விள + வ் + அத்து + கண் = விளவத்துக்கண் ஆனது)

134ஆம் நூற்பாவில் அத்துச்சாரியையோடு வற்றுச் சாரியையும் கூறினார் தொல்காப்பியர்.

இதற்கு உதாரணம் கூறிய இளம்பூரணர் "அவற்றுக்கோடு" என்றார். இதன் பகுதி அவ் என்பது. அவ் + வற்று + கோடு: வற்று முன் ஒற்று கெடும் என 134ஆவது நூற்பாவின் படி வ் கெட்டு அ + வற்று+ கோடு அவற்றுக்கோடு ஆனது என்க.

**4. அம் சாரியை :**

130. அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ங ஞ ந ஆகும்.

வருமொழி முதலில் க ச த எழுத்துக்கள் வரும்போது அம் சாரியையின் மகரம் ங ஞ ந எழுத்துக்களாகத் திரியும்.

எ.டு. புளியங்கோடு = புளி + அம் + கோடு
புளியஞ்செதிள் = புளி + அம் + செதிள்
புளியந்தோல் = புளி + அம் + தோல்.

வருமொழியில் மெல்லினமும் இடையினமும் வந்தால் அம் சாரியையின் மகரம் கெடும்.

131. மென்மையும் இடைமையும் வரூஉம் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர்.

எ.டு. 1. புளியஞெரி (புளி + அம் + ஞெரி: புளி + அ + ஞெரி)
2. புளியவட்டு (புளி + அம் + வட்டு: புளி + அ + ஞெரி)



குறிப்பு

இப்படியாக வலி, மெலி, இடையினங்களின்போது அம் சாரியை பெறும் இலக்கணத்தைப் போலவே வருமொழியில் உயிர்க்கணம் வரும்போது மகரம் கெடும் என்பதும் கூறப்பட்டது அறிக.

எ.டு. புளிய இலை (புளி + அம் + இலை: புளி + அ + இலை)

5. ஒன் சாரியை, 6.அன் சாரியை, 9. அன் சாரியை இந்த மூன்றும் இன் சாரியை பற்றிக் கூறும்போதே னகர ஈறு என்றதன் தொடர்பால் கருத்துக்கள் விளக்கப்பட்டன. அதாவது 'ன்' ற் ஆகும் என்பதுதான் இம் மூன்றிற்குமான இலக்கணம் கு என்ற நான்காம் வேற்றுமை உருபுடன் சேரும்போது என்பது கருத்து.

எ.டு. 1. கோஒற்கு (கோ + ஒன் + கு) 124ஆம் நூற்பா
2. ஒருபாற்கு (ஒருபத்து + ஆன் + கு) 125ஆம் நூற்பா
3. அதற்கு (அது + அன் + கு) 124ஆம் நூற்பா

**7. இக்குச் சாரியை :**

இகர ஈற்றுச் சொல்முன் இக்குச் சாரியை வந்தால் சாரியையின் இகரம் கெடும்.

127. இக்கின் இகரம் இகர முனை இல்லை.

எ.டு. ஆடிக்குக் கொண்டான் (ஆடி + கொண்டான்: ஆடி + இக்கு + கொண்டான்:
ஆடி + க்கு + கொண்டான்)

மேலும் ஐகார ஈற்றுச் சொல்முன் இக்கு வந்தாலும் இகரம் கெடும்.

எ.டு. சித்திரைக்குக் கொண்டான் (சித்திரை + கொண்டான்: சித்திரை+இக்கு + கொண்டான்: சித்திரை + க்கு + கொண்டான்).

**அக்குச் சாரியை :**

129. எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது.

எவ்வகைப்பட்ட பெயர்ச் சொல்லாக இருந்தாலும் அவற்றின்முன் வல்லெழுத்தாலான வருமொழி வந்தால் இடையில் சேரும் அக்குச் சாரியையின் இறுதியில் உள்ள குற்றியலுகரமும் ககர ஒற்றும் கெட்டு அ என்ற எழுத்தாக மட்டும் நின்று புணரும் என்க.



எ.டு. குன்றக்கூகை (குன்று + அக்கு + கூகை: குன்று + அ + கூகை)

இந்நூற்பாவில் இளம்பூரணர் 'முற்ற' எனக் கூறியதால் வருமொழி வன்கணமேயன்றி பிற கணங்கட்கும் இவ்வாறு அக்குச் சாரியையின் 'க்கு' கெடும் எனக் கூறினார். இதற்குத் தமிழ்நூல், தமிழயாப்பு, தமிழவரையர் என உதாரணம் தந்தார். பொதுவாக அக்குச் சாரியையில் அ மட்டும் பயன்படுவதால் இதை அகரச் சாரியை என்றே கூறலாம் என்கிறார் ஆ.சிவலிங்கனார், எனினும் கூறப்பட்டதன் நோக்கம் பற்றி அவர் விளக்குகையில் தொல்காப்பியம் முந்து நூல் கண்டு எழுதப்பட்ட காரணத்தால் அக்குச் சாரியை கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டும் என்கிறார். ஆதலால் தொல்காப்பியர் காலத்திற்கு முன் "தாழக்குக் கோல்" என்றிருந்த வழக்கு தொல்காப்பியர் நாளில் தாழக்கோல் என ஆகியிருக்க வேண்டும் என்பதால் கூறப்பட்டது என்ற ஆ.சிவலிங்கனாரின் கருத்து ஏற்புடையதாகக் கொள்ளலாம்.

இனி, சாரியைகட்கெல்லாம் பொதுவானதோர் இலக்கணத்தை தொல்காப்பியர் கீழ்வருமாறு கூறுகிறார்.

133. பெயரும் தொழிலும் பிரிந்தொருங்கு இசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின வழிவந்து விளங்காது
இடைநின் றியலும் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்.

பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் பெயரும் வினையுமாயும் பெயரும் பெயருமாயும் நிலைமொழி வழிமொழிகளாக நின்று புணரும்போது, சாரியை வருவது பற்றி இந்நூற்பா ஐந்து கருத்தைக் கூறுகிறது.

1. வேற்றுமை உருபு தொகாது விரிந்து நின்றபோது சாரியை வரும்.
2. வேற்றுமை உருபு தொக்கு வரும்போதும் வரும்.
3. பொருளடிப்படையில் இரு சொற்கள் இயையாதபோது அதாவது ஒரு சொல் நடையாய்
இருக்கும் நிலையில் சாரியை வாராது.
4. சொற்களின் ஈற்றில் வாராமல் சாரியை இடையில் வரும்.
5. ஒடு வேற்றுமை சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

எ.டு.
(1) விளவினைக் குறைத்தான் (2) விளவினைக்குறைத்தவன்

1. விள + இன் + ஐ + குறைத்தவன் (விள – பெயர், இன் - சாரியை, ஐ – உருபு,

குறைத்தான் - வினைச்சொல்)

*இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்*

**குறிப்பு**

2. விள + இன் + ஐ + குறைத்தவன் (இதில் குறைத்தவன் என்பது பெயர்ச்சொல்) இவற்றுள்

உருபு தொகாமல் நின்று சாரியை வந்தது காண்க.

O1.நிலாத்துக் கொண்டவன் (நிலா + அத்து + கொண்டான் பெயர் - சாரியை– வினை)

உருபு இல்லை

O2.நிலாத்துக் கொண்டவன் (நிலா + அத்து + கொண்டவன் பெயர் - சாரியை– பெயர்)

உருபு இல்லை: உருபு தொக்கு வந்தது.

O1.நிலாக்கதிர் 2. நிலாமுற்றம் என்பன இருவேறு சொற்களாக நின்று புணராதவை

அதாவது நிலா + கதிர்: நிலா + முற்றம் எனப்பிரிந்து நின்று சேர்ந்தவை அல்ல

நிலாக்கதிர், நிலா முற்றம் என்பன ஒரே சொல்நடை. பிரித்தால் பொருள் புரியாது

என்பதால் பொருள் அடிப்படையில் இரண்டு சொற்களாக இயையாமல் ஒரு சொல்

நடையாய் உள்ளவை சாரியை பெறா என்பது கருத்து.

O சாரியைகள் சொற்களின் இடையில் வருதலே பெரும்பான்மையாகும்

எ.டு. புளியங்கோடு.

O ஒடு என்ற வேற்றுமை உருபுச்சொல் சாரியைப் பெற்றும் பெறாதும் வரலாம்.

எ.டு. 1.பூவினொடு விரிந்த கூந்தல் (இன் சாரியை ஒடு வொடு வந்தது)

2. பூவொடு விரிந்த கூந்தல் (சாரியை இல்லாமல் ஒடு வந்தது)

ஆனால் சாரியை பெற்று வருவதே சிறப்பு என உரையாசிரியர்கள் கருதுகின்றனர்.

இதுவரை மொழியிடை நிற்கும் சாரியைகளைக் கூறிய தொல்காப்பியர் இனி தனி எழுத்திற்கான சாரியை கூறுவதைக் காண்போம்.

*Self-Instructional Material*

135. காரமும் கரமும் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை,

நிலைமொழியும் வருமொழியும் இயைதற்குதவும் மொழிபோலன்றி கரம், காரம், கான் என்ற மூன்றும் தனி எழுத்தை உச்சரிக்குங்கால் சாரியையாக வரும்.

136. அவற்றுள்,
கரனும் கானும் நெட்டெழுத் திலவே.

137. வரன் முறை மூன்றும் குற்றெழுத் துடைய.

138. ஐகார ஔகாரம் கானொடும் தோன்றும்.

குறில் எழுத்து கரம் காரம் கான் மூன்றையும் பெறும்.

எ.டு. அகரம், மகாரம், அ்ஃகான்

நெடில் எழுத்து காரம் என்பதை மட்டும் பெறும்

எ.டு. ஆகாரம்,ஈகாரம்

இந்த நெடில் எழுத்துள் ஐ, ஔ இரண்டு மட்டும் கான் சாரியை பெறும்.

எ.டு. ஐகான், ஔகான்

இனி வருமொழி நிலைமொழி புணர்ப்பில் புள்ளியீறு முன் உயிர் வருவது, உயிரீறு முன் உயிர் வருவது பற்றிய இலக்கணம் கூறப்படுவதைக் காண்போம்.

139. புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே

மெய்யீறு முன் உயிர் தனித்து நிற்காது. மெய்யொடு சேர்ந்துவிடும்.

எ.டு. ஆல் + அடை = ஆலடை

குற்றியலுகர ஈறு புள்ளி போன்றது என்பதால் இவ்விதி அதற்கும் பொருந்தும் என்க.

எ.டு. நாகு + அரிது = நாகரிது (இதில் உகரம் கெட்டுநின்ற மெய்யுடன் உயிர் ஏறிற்று)



குறிப்பு

இவ்வாறு இயல்பாகவும் குற்றியலுகரமாகவும் நின்ற புள்ளிமுன் உயிர் சேர்வைப்போல சாரியை பெற்றுப்புள்ளி யீறாக வரும் சொல் உயிரோடு புணரும்போது இதே விதியாம்.

140. மெய்யுயிர் நீங்கின் தன்னுரு வாகும்.

மெய்யுடன் கூடிய உயிர் எழுத்து, வருமொழியில் உயிர் எழுத்து வரும்போது நீங்கிப் பின் சாரியையால் ஏற்புடைய புள்ளியீறாய் நின்று உயிரொடு புணரும்.

எ.டு. அதனை (அது + அன் + ஐ: அதன் + ஐ)

இனி உயிர் யீறு முன் உயிர் வரும்போது சில நேரங்களின் உடம்படு மெய் என்ற எழுத்து தோன்றும் என்பதைத் தொல்காப்பியர் கூறுகிறார்.

141. எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்.

உயிரோடு உயிர் சேராது என்பதால் இரண்டு உயிரையும் உடம்படுத்துவதற்கு வருவதே
உடம்படுமெய் எனப்படும்.

எ.டு. 1. புளியங்கோடு (புளி + அம் + கோடு)
2. எருவங்குழி (எரு + அம் + குழி)

இப்படியாக யகரமும் வகரமும் உடம்படு மெய்யாக வரும்.

தொல்காப்பியர் பொதுவாகக் கூறினாலும் இளம்பூரணர் நாட்டில் வழங்கும் வழக்காற்றால் இ,ஈ, ஐ என்ற மூன்று ஈற்றுச் சொற்கள் முன் உயிர் வருமொழியில் வந்தால் யகர உடம்படு மெய்யும். ஏனைய ஈறுகள் முன் உயிர் வந்தால் வகர உடம்படு மெய்யும் வரும் என்று ஒரு வரையறையைத் தந்தார்.

இவற்றுடன் விகாரப்பட்டு உயிர் ஈறாகா நிற்கும் சொற்புணர்ச்சியிலும் இதே விதி பொருந்தும் என்றும் இளம்பூரணர் கூறுகிறார்.
எ.டு. மரம் + அடி = மரவடி (ம் கெட்டதும் மர என்பது அகர ஈறாக நின்றது. எனவே வகர உடம்படு மெய் பெற்றது)

இங்ஙனம் பொதுவாக உடம்படுமெய் பெற்றுத்தான் வரும் என்பது நியதி இல்லை. ஏற்புடைய இடங்களில் பெறும். சில இடங்களில் பெறாமல் வருதலும் உண்டு என்கிறார் இளம்பூரணர்.

எ.டு. கிளி அரிது (கிளி + அரிது) கிளி என்ற இகர உயிா் ஈறு அகர வருமொழியால் யகர உடம்படுமெய் பெறாமல் இயல்பாகவே வந்துள்ளது.



பொருள் விளக்கத்திற்காகவே சொற்கள் புணா்கின்றன. அவற்றுள் உருபு, சாரியை போன்ற உறுப்புக்களும் சோ்ந்து பொருளை விளக்கப்படுத்துகின்றன." ஆனால் சில நேரத்தில் இருபொருள் படுமாறு சொற்கள் புணா்ந்து உள்ள நிலையும் உண்டு என்பதை இப்புணரியலின் இறுதி கூறுகிறது.

142. எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணா்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே.

ஓலிவேற்றுமையால் சொற்புணா்ச்சியில் பொருள் வேறுபாடும் தோன்றும்.

எ.டு. 1. செம்பொன் பதின்தொடி. இதை, செம்பு ஒன்பதின் தொடி என்றும் பிரிக்கலாம்.

செம்பொன் பதின்தொடி என்றால் பொன்னானது. பத்து தொடி எடையுள்ளதாக இருக்கிறது என்றும் செம்பு ஒன்பதின் தொடி என்றால் செம்பு என்ற உலோகம் ஒன்பது தொடி எடை உள்ளதாக இருக்கிறது என்றும் பொருள்படும். எனவே கூறுவோனுக்கும் கேட்போனுக்கும் உள்ள சூழலில் பொருள் உணரப்படும்.

2. குன்றேறாமா இதை, குன்று + ஏறாமா என்றும், குன்றேறு + ஆமா என்றும் கூறலாம்.

மலைமீது ஏற முடியாத விலங்கு, மலை மீது ஏறும் காட்டுப்பசு என்பது சொல்லும் பாங்கில் பொருளை உணருமாறு உள்ளது.

இவ்வாறெல்லாம் சொற்கள் புணரும் என்பது இப்புணரியல் கூறும் இலக்கணமாகும்.

## 6.5 தொகுத்துக் காண்போம்

- மொழிகளின் முதலும் ஈறும் பற்றிய செய்திகள் பற்றி அறிந்து கொண்டீா்கள்.
- புணா்தலின் இயல்பு, உருபுகள் புணா்தல் பற்றி அறிந்து கொண்டீா்கள்.
- சாரியைப் புணா்ச்சி, எழுத்துச் சாரியைகள் பற்றித் தெரிந்து கொண்டீா்கள்.
- உயிரெழுத்தின் புணா்ச்சி இயல்பு பற்றித் தெரிந்து கொண்டீா்கள்.

- புணர்ச்சியில் வேறுபடும் தன்மை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 6.6 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

குற்றியலுகரமும் அற்றென மொழிப – விளக்குக.

1.புணர்ச்சியின் மூவகைத் திரிபுகளை எடுத்துக்காட்டுடன் விவரி.
2.எழுத்துச் சாரியைகள் யாவை?
3.ஆடிக்குக் கொண்டாண், பரணியாற் கொண்டான், புளியங்கோடு - இச்சொற்களை விளக்குக.
4.சாரியைகட்கெல்லாம் பொதுவாகக் கூறிய இலக்கணம் யாது?

## 6.7 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம்
எழுத்ததிகாரம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை, 1974

2. பேரா.ஆ.சிவலிங்கனார் - தொல்காப்பியம். எழுத்ததிகாரம்
உரை வளம்(குறிப்புரை)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
வெளியீடு சென்னை.

# கூறு – 7
# தொகை மரபு

## 7.1 முன்னுரை

புணரியலில் நிலைமொழி வருமொழிகள் எவ்வாறு புணரும் என இலக்கணம் கூறினார். அப்புணர்ச்சிக்கான விதிகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்த இயல் தொகைமரபு எனப்பட்டது. 12 உயரீறுகளும் 11 மெய்யீறுகளும் 1 குற்றியலுகர ஈறும் ஒரே விதமான புணர்ச்சி விதிகள் பெறுவதைத் தொகுத்து இவற்றைத் தொன்று தொட்டு வரும் மரபிற் பிழையாது கூறுதலின் இது தொகை மரபு எனப்பட்டது.

இவ்வியலில் 24 ஈறுகளுக்கும் ஒரே விதி கூறினாலும் அவற்றின் தனித்தனி விதிகள் பின்வரும் உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியலில் கூறப்படுகின்றன.

உயிர், மெய் இறுதியுடைய அளவுப்பெயர், நிறைப்பெயர், எண்ணுப் பெயர், இவை தத்தமக்குக் குறைவான அளவு நிறை எண் உடைய பெயர்களோடு புணருங்கால் பெறும் சாரியை பற்றி இக்கூறு விளக்குகிறது.

## 7.2 குறிக்கோள்கள்

- பொதுப்புணர்ச்சி, சிறப்புப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- சாரியை பெறும் மொழிகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- மரூஉ முடிவு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

உயிரீறு, மெய்யீறுகளின் புணர்ச்சி இலக்கணங்களை எல்லாம் தொகுத்துக் கூறுதலால் இவ்வியல் தொகை மரபு எனப்பட்டது.

144. கசதப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத்து இயற்கை சொல்லிய முறையான்
ஙஞநம என்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான.

அல்வழி வேற்றுமை எனும் இரு நிலையில் உயிரீறு மெய்யீறுகளின் முன் க, ச, த, ப எழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் வருமொழியாக வந்தால் அவற்றிற்கு இனமாக ங, ஞ, ந, ம என்னும் எழுத்துக்கள் மிகும்.

எ.டு. 1. விள + கோடு = விளங்கோடு (உயிரீறு)
2. மரம் + குறிது = மரங்குறிது (மெய்யீறு)
மகர ஈறு முன் பகரம் வந்தால் இயல்பாக வரும்.

எ.டு. மரம் + பெரிது = மரம்பெரிது.

உயிரீறு 12, மெய்யீறு 11, குற்றியலுகர ஈறு 1 ஆக 24 ஈறுகள் நிலைமொழியாய் நிற்க வருமொழியில் ஞ, ந, ம, ய, வ என்ற ஐந்து மெய்யும் உயிர் 12ம் வந்தால் எவ்வித மாற்றம் இன்றி அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகப் புணரும்.

145. ஞநமயவ என்னும் முதலாகு மொழியும்
உயிர்முதலாகிய மொழியும் உளப்பட
அன்றி அனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொன்முன் இயல்பா கும்மே.

எ.டு. 1. விள + ஞான்றது = விளஞான்றது (அல்வழி)
2. தாழ் + நீண்டது = தாழ்நீண்டது (அல்வழி)

1. விள + ஞாற்சி = விளஞாற்சி (வேற்றுமை)
2. தாழ் + நீட்சி = தாழ்நீட்சி (வேற்றுமை)
1. வரகு + ஞான்றது = வரகுஞான்றது (அல்வழி)
2. வரகு + ஞாற்சி = வரகு ஞாற்சி (வேற்றுமை)

இவ்வாறு 24 நிலைமொழியீறுகள் வேற்றுமை அல்வழி எனும் இருவகையில் புணருவதை ஒரே நூற்பாவில் தொகுத்துக் கூறியதால் தொகை மரபு எனப்பட்டது. (48 நூற்பாவில் கூறவேண்டியது ஒரே நூற்பாவில் கூறப்பட்டது)

இப்படியாகக் கூறப்பட்ட 24 ஈறுகள்முன் மெல் எழுத்து வருமொழியில் வந்தால் இயல்பாகவும் வரும். எழுத்து மிக்கும் வரும். இயல்பாகவும் மிக்கும் வருவதை உறழ்ச்சி என்பர். இவ்வாறு இருநிலையில் வந்தாலும் பொருள் மாறா என்பது கருத்தாகும்.

146. அவற்றுள்
மெல்லெழுத்து இயற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதி யான.

எ.டு. கதிர் + ஞெரி = கதிர்ஞெரி, கதிர்ஞ்ஞெரி

தொல்காப்பியர் நிலைமொழியைத் தொடர்மொழி என்றார். அதாவது தொடர்மொழி என்பது மூன்றெழுத்துச் சொல்லைக் குறிக்கும். ஓரெழுத்து ஒரு மொழி ஈரெழுத்து ஒருமொழி, இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி எனத் தொல்காப்பியர் இரண்டிற்கு மேற்பட்டுவரும் எழுத்துச் சொற்களைத் தொடர்மொழி என்றார். எனவே கதிர் என்றது தொடர்மொழி.

ஆனால் இளம்பூரணர், ஓரெழுத்து,ஈரெழுத்துள்ளும் அவ்வாறே வரும் என்றார்.

பூ + ஞெரி = பூஞெரி பூஞ்ஞெரி. (உயிரீறு, ஓரெழுத்து)
காய் + ஞெரி = காய்ஞெரி, காய்ஞ்ஞெரி (மெய்யீறு,ஈரெழுத்து)

இவ்வாறு இயல்பாயும் மிக்கும் வந்தாலும் சிலவற்றில் மிக்கு முடிவதே இலக்கணமாகக் கொள்வதும் உண்டு என்கிறார் இளம்பூரணர்.

கை + ஞெரித்தார் = கைஞ்ஞெரித்தார்
காய் + ஞெரி = காய்ஞெரி, காய்ஞ்ஞெரி (மெய்யீறு,ஈரெழுத்து)

இங்ஙனம் புணரும்போது ண, ன புள்ளியீற்று முன் வருமொழியில் யா வந்தால் அது யா வாகவும் நிற்கும். அதுவே ஞா என்பதாக மாறியும்

நிற்கலாம் என வருமொழிக்கு ஏற்படும் திரிபு பற்றிக் கீழ்வரும் நூற்பா கூறுகிறது.



147. ண ன வென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர்.

எ.டு. மன் + யாத்த = மண்யாத்த, மண்ஞாத்த.

நூற்பாவில் 'யா' முன்னர் கூறப்பட்டதால் வருமொழியில் வரும் யா தான் ஞாவாக மாறுமேயன்றி ஞா வந்தால் அது யாவாக மாறாது என்பது உரையாசிரியர் கருத்து.

இந்த ண, ன முன்னர் மொழிக்கு முதலாகவரும் 22 எழுத்துக்களும் வரும்போது அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாக வரும்.

148. மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்
வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிடன் இலவே.

எ.டு. மண் + கடிது = மண்கடிது.
பொன் + பெரிது = பொன் பெரிது.

ணகரம் சிறுபான்மை திரிந்தும் வரலாம். சாண் + கோல் = சாட்கோல். ண் - ட் ஆக மாறியது.

மேலும் மேற்கூறியவாறு வேற்றுமையல்லாத அல்வழியில் இயல்பாக வந்தாலும் வேற்றுமைப் புணர்ச்சியில் வல் எழுத்து அல்லாத பிற எழுத்துக்கள் வருமொழியில் வந்தால் இயல்பாம்.

149. வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து அல்வழி
மேற்கூறு இயற்கை ஆவயி னான.

எ.டு. மண் + ஞாற்சி = மண்ஞாற்சி
பொன் + நீட்சி = பொன்நீட்சி

மண் வன்மை, பொன் வன்மை, மண்நுந்தை, பொன்நுந்தை, என மெல்லின, இடையின, குற்றியலுகரத்தின் முன் ண, ன, இயல்பாயின.

அடுத்து லன முன் தந எழுத்துக்கள் வந்தால் புணர்வது பற்றிக் கூறுகிறார் தொல்காப்பியர்.

குறிப்பு

150. லன என வரூஉம் புள்ளி முன்னர்
தந என வரின் றன வாகும்மே.

அதாவது, ல, ன முன் த வந்தால் ற வாகும்: ந வந்தால் ன வாகும் என்பது கருத்து.

எ.டு. கல் + தரை = கற்றரை முன் + நிலை = முன்னிலை
பொன் + தாலி = பொற்றாலி, தன் + நலம் = தன்னலம்

151. ணள என் புள்ளி முன் டண எனத் தோன்றும்.

எ.டு. மண் + தீது = மண்டீது
மண் + நன்று = மண்ணன்று
முள் + தீது = மு.'.டீது
முள் + நன்று = முண்ணன்று

152. உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியம்
இயல்பா குநவும் உறழ்பா குநவும் என்று
ஆயிரீயல வல்லெழுத்து வரினே.

இனி உயிரீறு, மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சியாக உயரீறு மெய்யீறாகிய முன்னிலை வினைச்சொற்கள் முன் வல்லினம் வந்தால் இயல்பாகவும் ஒற்றுமிகுந்து உறழச்சியாகவும் வரும்.

எ.டு. எறி + கொற்றா = எறிகொற்றா
உண் + கொற்றா = உண்கொற்றா — இயல்பு.
நட + கொற்றா = நடகொற்றா நடக்கொற்றா
ஈர் + கொற்றா =ஈர்கொற்றா: ஈர்க்கொற்றா — இவை உறழ்ச்சி.

153. ஒள என வரூஉம் உயிரிறு சொல்லும்
ஞநமவ என்னும் புள்ளி யிறுதியும்
குற்றியலுகரத் திறுதியும் உளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே.

உயிரீற்றில் ஒள என முடியும் சொல் முன்னும் மெய்யீற்றில் ஞ, ந, ம, வ என முடியும் சொற்கள் முன்னும், வல்லினம் வரும்போது முன்பு கூறியபடி நிலைமொழிகளாகிய முன்னிலைச் சொற்கள் முழுமையாக நிற்காமல் இடையில் உகர எழுத்தைப் பெற்று வருதல் உண்டு: மேலும் குற்றியலுகரம் மட்டும் உகரம் பெறாமல் வரும்.

எ.டு. கௌ + கொற்றா = கௌகொற்றா என ஆகும்போது இடையில் உகரம் சேர்ந்து

கௌ + உ + கொற்றா = கௌவு கொற்றா எனவும் கௌவுக் கொற்றா எனவும்

இருநிலையில் வரும்.

உரிஞ் + கொற்றா: உரிஞ் + உ + கொற்றா = உரிஞு கொற்றா: உரிஞுக் கொற்றா.

நூற்பாவில் 'முற்ற' எனக் கூறப்பட்டதால் ஔ, ஞ் என்ற உயிரீறும் மெய்யீறும் உகரம் பெற்று கௌவு, உரி என வந்ததுபோல குற்றியலுகரம் உகரம் பெறாது என்பது குறிப்பு. ஏனெனில் அதன் ஈறே உகரமாக இருப்பதால்.

கூடு + கொற்றா=கூடு கொற்றா,கூடுக் கொற்றா, என வரும். ஆக ஒற்றுமிகுந்தும் இயல்பாயும் வரும் என்பது கருத்து.

இனிப் பெயர்ச் சொற்களுக்காக சிறப்புப் புணர்ச்சி கூறப்படுகிறது.

154. உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளியிறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப.

உயிரீறு, புள்ளியீற்று உயர்திணைச் சொற்கள் முன், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரினம் என்ற நாற்கணச் சொற்களும் வந்தால் அல்வழி, வேற்றுமை புணர்ச்சியில் இயல்பாக வரும்.

1. நம்பி + குறியன், நீண்டான், வலியன், அடைந்தான் என்பன அல்வழியில்

நம்பிகுறியன், நம்பிநீண்டான், நம்பிவலியன், நம்பி அடைந்தான் என இயல்பாய்

வந்தன. (இவை உயிர் ஈறு)

2. அவன் என்பதோடும் இச்சொற்கள் இயல்பாக வரும். அவன் குறியன்…

(புள்ளியீறு) - இவைகள் அல்வழிப் புணர்ச்சி

இனி வேற்றுமைப் புணர்ச்சிக்கான எ.டு.

1. நம்பி + கை, மாட்சி, வன்மை, அழகு என்பன வேற்றுமையில்
நம்பிகை நம்பிமாட்சி, நம்பி அழகு என இயல்பாக வந்தன. (உயிரீறு)



குறிப்பு

2. அவன் என்ற மெய்யீறோடும் இச்சொற்கள் இயல்பாகும். அவன் கை, அவன் மாட்சி என

மேற்கூறப்பட்ட உயிரீற்றில் இகர ஈற்று உயர்திணைப் பெயர் வேற்றுமை அல்வழிப் புணர்ப்பில் ஒற்றுமிகுந்து வருதலும் உண்டு.

155. அவற்றுள்,

இகர ஈற்றுப் பெயர் திரிபிடன் உடைத்தே.

எ.டு. எட்டி + பூ = எட்டிப்பூ (வேற்றுமை)

எட்டி + புரவு = எட்டிப்புரவு (அல்வழி)

நூற்பாவில் இடன் உடைத்தே எனக் கூறியதால் இகர ஈறு அல்லாத சில ஈறு திரியாது வல்லெழுத்து மிக்கு வருதலும் உண்டு என்பது இளம்பூரணர் கருத்து.

தினை + பூ = தினைப்பூ (வேற்றுமை)

தினை + புரவு = தினைப்புரவு (அல்வழி)

156. அஃறிணை விரவுப் பெயர் இயல்புமா ருளவே.

அஃறிணைக்கும் உயர்திணைக்கும் பொதுவாகக் குறிக்கும் பெயர்கள் விரவுப் பெயர்கள் எனப்படும். இந்த விரவுப் பெயர்கள் மேற்கூறியபடி நாற்கணத்தோடு புணரும்போது இயல்பாகும்.

1. சாத்தன் + குறியன் என்பது சாத்தன் குறியன் என்பதாக வரும் - (அல்வழி)

2. சாத்தன் + கை என்பன சாத்தன் கை. என வரும் (இவை வேற்றுமை)

## 7.3 மூன்றாம் வேற்றுமைக்கான சிறப்புப் புணர்ச்சி

157. புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
தம்மின் ஆகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம் முறை யிரண்டும் உரியவை உளவே

வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.



மெய்யையும் உயிரையும் இறுதியாக உடைய நிலைமொழி முன்னா் வல்லினம் வந்தால் வல்லெழுத்து மிகும் என்பது பொது விதி. ஆனால் இவைகள் மூன்றாம் வேற்றுமைக்குரிய வினை முதற் பொருளில் வருகின்ற வினைச்சொற்களுடன் புணரும்போது இயல்பாகவும் உறழ்ந்தும் நிற்கும் என்பது நூற்பாவின் கருத்து.

நாய் + கோட்பட்டான் = நாய்கோட்பட்டான் }
புலி + கோட்பட்டான் = புலிகோட்பட்டான் } இயல்பு
வளி + கோட்பட்டான் = வளிகோட்பட்டான், வளிக்கோட்பட்டான் } உறழ்ச்சி
சூர் + கோட்பட்டான் = சூர்க்கோட்பட்டான்

ஈண்டு கூறப்பட்ட நாய், புலி, சூர், வளி என்ற உயிரீறு, மெய்யீறுகளின் முன்னா் வல்லினம் வந்தால் வல்லினம் மிக வேண்டும் என்பது பொது விதி. அந்தப் பொதுவிதியின்படி நிலையாக நிற்பவை சாதாரணப் பெயர்ச் சொற்கள். ஆனால் 157ஆம் நூற்பாவின்படி நிலைமொழி சாதாரணப் பெயரன்று. மூன்றாம் வேற்றுமைக்குரிய வினைமுதற் பெயராய் நிற்க, வருமொழியும் அதற்கேற்ப அதனாலாகிய தொழிற் சொல்லாக நிற்பதால் வல்லினம் மிகாத சிறப்புவிதி கூறப்பட்டது என்க. நாய்கோட்பட்டான், புலிகோட்பட்டான் என்றால் நாயால் கோட்பட்டான், புலியால் கோட்பட்டான், வளியால் கோட்பட்டான் என்பது பொருள்.

## 7.4 இரண்டாம் வேற்றமைக்கான சிறப்புப் புணர்ச்சி

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியில் பத்து வகையான திரிபுகள் உள்ளன.

158. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்போடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலும்
சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்
சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலும்
சாரியை யியற்கை யுறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர் அவ்வியல் நிலையலும்
மெய்பிறி தாகிடத்து இயற்கை யாதலும்
அன்னபிறவும் தன்னியல் மருங்கின்

மெய்பெறக் கிளந்து பொருள் வரைந்திசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப.

1. மெல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் வல்லெழுத்து மிகுதல்

விள + குறைத்தான் = விளக்குறைத்தான் (விளங்குறைத்தான் என வரவேண்டியது வலி
மிகுந்து வந்தது)

2. வல் எழுத்து மிகவேண்டிய இடத்தில் மெல் எழுத்து மிகுதல்.

மரம் + குறைத்தான் = மரங்குறைத்தான் (மரக்குறைத்தான் என வரவேண்டியது மெல்லினம் மிகுந்து வந்தது)

3. ஒற்று ஏதும் மிகாமல் இயல்பாக வரவேண்டிய இடத்தில் மிக்கு வருதல்.

தாய் + கொலை = தாய்க்கொலை (தாய்கொலை என வருவது இயல்பு)

4. உயிர் எழுத்துடன் தோன்றி வல்லினத்துடன் மிக்கு வரவேண்டிய உயிரீற்றுச் சொற்கள் அவ் உயிர் எழுத்தைப் பெறாமலே உயிரீறாய் நின்று வல்லினத்தோடு மிகுந்து வரும்.

பலா + குறைத்தான் = பலாக்குறைத்தான்
ஏ + கட்டினான் = ஏக்கட்டினான்

பலா, ஏ என்ற உயிரீற்றுச் சொற்கள் பலாஅ, ஏஎனத் தம் இனக் குறிலுடன் சேர்ந்து நின்று

பலாஅ + குறைத்தான் = பலாஅக்குறைத்தான்
ஏஎ + கட்டினான் = ஏஎக்கட்டினான்

என வரவேண்டும் என்பது விதி. ஆனால் தொகை மரபின் 158ஆம் நூற்பாவின் சிறப்புப் விதிப்படி, அங்ஙனம் குறில் எழுத்தைப் பெறாமல் இரண்டாம் வேற்றுமைத் தொகை வரலாம் என்பது இலக்கணமாகும்.

5. சாரியைப் பெறவேண்டிய இடத்தில் சாரியை கெட்டு வரும்.

வண்டு + கொணர்ந்தான்= வண்டுகொணர்ந்தான். (வண்டினைக் கொணர்ந்தான் என்றுதான் வரவேண்டும். வண்டு + ஐ + கொணர்ந்தான் = வண்டைக் கொணர்ந்தான் என்று கூறினாலும் 'இன்' சாரியை

சேர்த்துக் கூறுவதுதான் முறை. ஐ உருபு தொகையாக வரும்போது சாரியையும் கெட்டு வரும் என்பதால் வண்டு கொணர்ந்தான் எனப்பட்டது)

6. சாரியை வெளிப்படையாக நிற்கும் இடத்தில்
ஐகார உருபும் வெளிப்பட்டு வரும்.

வண்டு + இன் + ஐ + கொணர்ந்தான் = வண்டினைக் கொணர்ந்தான். இதில் சாரியை வெளிப்படையாக நிற்க, ஐ உருபும் வெளிப்படையாக நிற்கிறது.

(ஆனால் வண்டு, பெண்டு என்னும் சொற்கள் சாரியை பெறும்போது ஐகார உருபு வெளிப்படாமல் நிற்பதும் உண்டு என்ற ஒரு விதி உண்டு. அதன்படி வண்டு + இன் + fhy;
கால்வண்டின் கால் என வரலாமாயினும் 158ஆம் நூற்பாவின் சிறப்பு விதிப்படி ஐ உருபு வெளிப்பட்டே தோன்றும் என்பது ஈண்டுள்ள இலக்கணமாகும்).

7. சாரியை பெறவேண்டிய இடத்தில் சாரியை பெறாமல் மிகுந்தும் திரிந்தும் வரலாம்.

புளி + குறைத்தான் = புளிகுறைத்தான், புளிக்குறைத்தான்.

பனை + தடிந்தான் = பனைதடிந்தான், பனைத்தடிந்தான். (ஈண்டு புளி, பனை என்பன அம் சாரியைப் பெறவேண்டும் என்பது விதி. புளியங்குறைத்தான், பனையந்தடிந்தான் என்றுதான் வரவேண்டும். அப்படி இல்லாமல் ஐகார வேற்றுமைத் தொகையில் சாரியை பெறாமல் வருவது சிறப்பு விதியாகும்.

8. உயர்திணையில் 2ஆம் வேற்றுமையுருபு மறையாமல் வெளிப்பட்டு நிற்கும்.

நம்பி + கொணர்ந்தான்= நம்பியைக் கொணர்ந்தான். (உயிரை இறுதியாக உடைய உயர்திணைப்பெயர்வலி, மெலி, இடையோடும் - உயிரெழுத்தோடும் சேரும்போது நம்பிகொணர்ந்தான் என இயல்பாகத்தான் வரவேண்டும் என்பது விதி. ஆனால் ஐ வெளிப்படையாக வருவது சிறப்பு விதியாகும்)

9. விரவுப் பெயரிலும் (அஃறிணை உயர்திணைக்குப் பொதுவான பெயர்) ஐகாரம் விரிந்து நிற்கும்.

கொற்றன் + கொணர்ந்தான் = கொற்றனைக் கொணர்ந்தான். (ஈண்டு கொற்றன் கொணர்ந்தான் என வருவது இயல்பு. ஐ வெளிப்படையாக வருவது சிறப்பு)

10. மெய் எழுத்துத் திரியவேண்டிய இடத்தில் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் திரியாமல் வரும்.

மண் + கொணர்ந்தான் = மண்கொணர்ந்தான்
பொன் + கொணர்ந்தான் = பொன் கொணர்ந்தான்

குறிப்பு

(ண, ன ஈறுகள் வல்லெழுத்து வரின் வேறு மெய்யாகத் திரியும் என்பது பொதுவிதி. மட், பொற்கொணர்ந்தான் என வரவேண்டும். அப்படி இல்லாமல் 158ஆம் நூற்பாவின்படி இயல்பாகும் என்பதாம்).

ஆக இந்த 158ஆம் நூற்பாவானது ஐகார உருபாகிய 2ஆம் வேற்றுமை பெறும் பொதுவிதியை மாற்றிச் சிறப்பு விதிபெறும் 10 இடங்களைச் சுட்டியது என்பதால் இங்ஙனம் வருவது 2ஆம் வேற்றுமைத் தொகையாக வரும் போது என்பது கருத்தாகும்.

157ஆம் நூற்பாவில் இகர ஈற்று எழுத்திற்கும் 158ஆம் நூற்பாவில் ஐகார ஈற்று எழுத்திற்கும் வேற்றுமையில் இலக்கணம் கூறிய ஆசிரியர் அல்வழியில் இலக்கணம் கூறும்போது

159. வேற்றுமை யல்வழி இஐ என்னும்
ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலை இய
அவைதாம்,
இயல்பாகுநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழாகுநவும் என்மனார் புலவர்

என்றார்.

இ, ஐ ஈற்றுச் சொற்கள் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகவும் வல்லெழுத்து மிக்கும். மிக்கும் மிகாமலும் ஆகிய உறழ்ச்சி வகையாகவும் ஆக மூவகையில் வரும்.

1. பருத்தி + குறிது = பருத்தி குறிது
   அரை + குறிது = அரை குறிது - இயல்பு

2. அலி + கொற்றன் = அலிக்கொற்றன்
   புலை + கொற்றன் = புலைக்கொற்றன் - மிகுதல்

3. கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது
   தினை + குறிது = தினைகுறிது, தினைக்குறிது - உறழ்ச்சி

மேற்கூறிய இ, ஐ ஈறுகள் ஏழாம் வேற்றுமைப் பொருள்பட நிற்கும்போது உள்ள புணர்ச்சியின் சிறப்புவிதி பின்வருமாறு எனவே

கீழ்வரும் நூற்பா 7ஆம் வேற்றுமைக்கான சிறப்புப் புணர்ச்சி விதியாகக் கருதவேண்டும்.

குறிப்பு

160. சுட்டு முதலாகிய இகர இறுதியும்
எகரமுதல் வினாவின் இகரஇறுதியும்
சுட்டுச்சினை நீடிய ஐ என் இறுதியும்
யா என் வினாவின் ஐ என் இறுதியும்
வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்
சொல்லிய மருங்கின் உளஎன மொழிப.

1. சுட்டெழுத்தை முதலாக உடைய இகர ஈற்று இடைச்சொல்லும்

2. வினா எழுத்தாகிய எகரத்தை முதலாக உடைய இகர ஈற்றுச் சொல்லும்.

3. சுட்டு நீண்ட ஐகார ஈற்றுச் சொல்லும்.

4. யா என்னும் வினை எழுத்தை முதலாகக் கொண்ட ஐகார ஈற்றுச் சொல்லும் வருமொழி
வல்லெழுத்துடன் சேருங்கால் மிக்கும் உறழ்ச்சியாகவும் (மிக்கும் மிகாமலும்) ஏழாம்
வேற்றுமையில் வரும் என்பது நூற்பாவின் கருத்து.

எ.டு.1.அதோளி + கொண்டான் = அதோளிக் கொண்டான் (அந்த இடத்தில் கொண்டான் என்பது
பொருள்) இவ்வாறே இதோளி, உதோளி மிகும்.

2.எதோளி + கொண்டான் = எதோளிக் கொண்டான் எதோளி (எந்த இடம் என்பது பொருள்)

3.ஆண்டை + கொண்டான் = ஆண்டைக் கொண்டான் (அந்த இடம் என்பது ஆண்டை
என ஐ ஈறு பெற்றது)

4.யாண்டை + கொண்டான் = யாண்டைக் கொண்டான்.

1. அவ்வழி + கொண்டான் = அவ்வழி கொண்டான், அவ்வழிக்கொண்டான் - உறழ்ச்சி

2. எவ்வழி கொண்டான், எவ்வழிக் கொண்டான்

3. ஆங்கவை கொண்டான், ஆங்கவைக்கொண்டான்

4. யாங்கவை கொண்டான், யாங்கவைக்கொண்டான்.



இனி நான்காம் வேற்றுமைக்கும் ஆறாம் வேற்றுமைக்குமான புணர்ச்சியின் சிறப்பு விதியைக் காண்போம்

162. ஆறன் உருபினும் நான்கன் உருபினும்
கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகு மொழிமுன் னான.

இந்நூற்பா நான்கு, ஆறு ஆகிய இருவேற்றுமை உருபிற்கான இலக்கணம் கூறினாலும் ஐந்தாம் வேற்றமைக்குரிய இலக்கணத்தையும் குறிப்பாகக் காட்டிக் கருத்தை விளக்குகிறது.

மேலும், இதில் நெடுமுதல் குறுகும் மொழி என்றதால் அடுத்ததாகிய (163-நும் என் இறுதியும் அந்நிலை திரியாது என்ற நூற்பாவையும் ஒரு சேரக் கண்டு பொருள் காண வேண்டும்.

நெடுமுதல் குறுகும் எழுத்துக்களாவன: தாம் - தம், நாம் -நம், யாம் -எம், தான் - தன், யான் - என், நீ – நின், நீர் -நும். இங்ஙனம் குறுகும் சொற்கள் முன் நான்காம் வேற்றுமை உருபும் ஆறாம் வேற்றுமை உருபும் (கு, அது) சேருங்கால் குறிற்கீழ் வரும் மெய் இரட்டிக்கும் என்ற பொதுவிதியைப் பெறாமல் அவற்றுடன் ஓர் அகரம் சேரும். பிறகு வேற்றுமையுருபுடன் வரும்.

இந்த நெடுமுதல் குறுகிய குறிற்கீழ் மெய் எழுத்தானது ஐ என்ற 2ஆம் வேற்றுமை உருபோடும் இன் என்ற 5ஆம் வேற்றுமை உருபோடும் சேரும்போது மட்டும் ஒற்று இரட்டிக்கும்.

எ.டு. தம் + ஐ = தம்மை (தம்+ ம் + ஐ)
தம் + இன் = தம்மின் (தம் + ம் + இன்)

ஆனால் இதேபோல 4, 6 வேற்றுமையில் இரட்டிப்பதில்லை, புதிதாக அகரம் சேரும்.

தம் + கு = தமக்கு (தம் + அ + கு)
தம் + அது = தமது (தம் + அ + து)
நும் + கு = நுமக்கு (நும்+ அ + கு)
நும் + அது = நுமது (நும்+ அ + து)

இங்ஙனம் நெடுமுதல் குறுகிய குறிற்கீழ ஒற்று பற்றிய கருத்து 161ஆம் நூற்பாவில் பொதுவாகக் கூறப்பட்டது.

161. நெடியதன் முன்னர் ஒற்று மெய் கெடுதலும்
குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப.

நெடில் கீழ் நிற்கும் மெய் எழுத்து சிலபோது கெடுதல் உண்டு, குறில் கீழ் நிற்கும் மெய் இரட்டித்தல் உண்டு என்பது நூற்பாவின் கருத்து.

எ.டு. கோன் + தீது = கோறீது
கோன் + நன்று = கோனன்று
மண் +அகல் = மண்ணகல்
பொன் + அகல் = பொன்னகல்.

161ஆம் நூற்பாவில் நெடில் பற்றி முதலில் கூறிப் பின் குறில் பற்றிக் கூறியதால் நெடில் குறுகி நிற்கும் சில சொற்கள் உள என்பதற்காக என்பதாம். அதாவது இயல்பாக குறில் கீழ் ஒற்று இரட்டித்தல் போல நெடில் குறுகியதால் ஆன, குறில்கீழும் மெய் இரட்டிக்கும் என்பது கருத்து.

அடுத்து உகர ஈறுபெறும் சில மெய்யீறுகள் தம் முன் யகரமும் உகரமும் பெற்று வந்தால் அவ்வுகரம் பெறாமல் இயல்பாக வருவது உண்டு என்கிறார் தொல்காப்பியர்.

164. உகரமொடு புணரும் புள்ளி இறுதி
யகரமும் உயிரும் வரும்வழி இயற்கை.

உரிஞ் + யானா = உரிஞ்யானா
உரிஞ் + அனந்தா = உரிஞ்அனந்தா
பொருந் + யானா = பொருந யானா
பொருந் + அனந்தா = பொருந் அனந்தா.

(உரிஞ், பொருநு என உகரம் பெற்று வருவது பற்றி 153ஆம் நூற்பாவில் கூறப்பட்டது)

இனி அளவு, நிறை, எண்ணுப் பெயர்கள் தம்முன் புணரும் தன்மையை கீழ் உள்ள நூற்பா விளக்கும்.

165. உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணும் சுட்டி
உளஎனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தம் கிளவி தம்மகப் பட்ட

முத்தை வரூஉங் காலந் தோன்றின்
ஒத்த தென்ப ஏஎன் சாரியை.

இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

குறிப்பு

அளவு, நிறை, எண் ஆகிய மூன்று பெயர்கள் நிலைமொழியாக நிற்க வருமொழியில் அவற்றைவிடக் குறைந்த அளவு, நிறை, எண்ணுப் பெயர்கள் புணர்ந்தால் இடையில் 'ஏ' என்னும் சாரியை தோன்றும்.

எ.டு உழக்கு + ஆழாக்கு = உழக்கே ஆழாக்கு (அளவு)
தொடி + க.ஃ.சு = தொடியே க.ஃ.சு (நிறை)
காணி + முந்திரிகை = காணியே முந்திரிகை (எண்)
கலன் + பதக்கு = கலனே பதக்கு (அளவு)
கொள் + ஐயவி = கொள்ளே ஐயவி (நிறை)
கால் + காணி= காலே காணி (எண்)

166. அரை என வரூஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்றாற் சாரியை இயற்கை

மேற்குறித்த மூன்று பெயருடன் அரை என்ற பகுப்புப் பெயர் வந்தால் ஏ என்ற சாரியை பெறாது.

உழக்கு + அரை = உழக்கரை (உழக்கே அரை என வராது)
தொடியரை, ஒன்றரை.

மேற் சொன்ன மூன்றுடன் குறை என்ற சொல் வருமாயின் வேற்றுமை புணர்ச்சிபோல வல்லினம் மிகும்.

167. குறை என் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை.

எ.டு. உரி + குறை = உரிக்குறை (உரியே குறை என வராது)
கலம் + குறை = கலக்குறை (அளவு)
தொடி + குறை = தொடிக்குறை (நிறை)
காணி + குறை = காணிக்குறை (எண்)

இம்மூன்று பெயர்களும் குற்றியலுகர ஈறாக இருந்தால் வருமொழியில் குறை என்ற சொல் வர 'இன்' சாரியை தோன்றும்.

## 7.5 சாரியை

168. குற்றிய லுகரக்கு இன்னே சாரியை

எ.டு. உழக்கு + குறை = உழக்கின் குறை (அளவு)
கழஞ்சு + குறை = கழஞ்சின் குறை (நிறை)
ஒன்று + குறை = ஒன்றின் குறை (எண்)

Self-Instructional Material

குறிப்பு

169. அத்து இடைவரூஉம் கலம்என் அளவே,

கலம் என்னும் அளவுப் பெயருடன் குறை என்ற சொல் புணர அத்துச் சாரியை வரும். கலம் + குறை = கலத்துக்குறை

170. பனைஎன் அளவும் காஎன் நிறையும்
நினையுங் காலை இன்னொடு சிவணும்.

குறை என்ற வருமொழி, பனை, கா என்ற அளவும் நிறையும் ஆகிய நிலைமொழியுடன் புணர இன்சாரியை பெறும்.

பனை + குறை = பனையின் குறை
கா + குறை = காவின் குறை

தொல்காப்பியர் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் இன்ன எழுத்துக்களில்தான் தொடங்கும் எனக் கூறுகிறார்.

171. அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி
உளஎனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே
அவைதாம்,
கசதப என்றா, ந ம வ என்றா
அகர உகரமொடு அவை என மொழிப.

எ.டு. கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு என்பன அளவுப்பெயர்.

கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, இம்மி என்பன நிறைப்பெயர்

மேற்கூறியவாறெல்லாம் கூறிய சொற்கள் வெளிப்படையானவை. ஆனால் குறிப்பாக அறியவரும் சில மரூஉ நடையான சொற்களுக்கான புணர்ச்சி இனி கூறப்படுகிறது.

173. பலரறி சொல்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை
ஒன்றறி சொல்முன் யா தென் வினாவிடை
ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்
மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே

பலரறி சொல் என்றது பலர்பால் சொல் - அவர் என்பது, அச்சொல் முன் யாவர் என்ற சொல் வந்தால் இடையில் உள்ள வ கெட்டு யார் என நின்று புணரும்.

அவர் + யாவர் = அவர்யார்?



ஒன்றறி சொல் என்றது ஒன்றன்பால் சொல் - அது என்பது. அச்சொல் முன் யாது என்ற சொல் வந்தால் இடையில் ‘வ’ சேர்ந்து யாவது என நின்று புணரும்.

அது + யாது = அதுயாவது?

இவ்வாறு உயிரீறு மெய்யீறுகள் இன்னவாறு புணரும் எனப்பட்டதற்கு மேலும் சில விதிமுறைகள் வழக்கில் அமையுமாயின் அவற்றைப் பொருத்தமுற அறிந்து ஏற்றுக்கொள்ளலாம் என இத்தொகை மரபின் முடிவாகக் கூறப்பட்டுள்ளது.

172. ஈறியல் மருங்கின் இவையிவற்று இயல்பென
கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே

எ.டு. அளவுப்பெயர் நிறைப் பெயர்கள் நிலைமொழியில் நிற்க வருமொழியில் அவற்றின் குறைந்த

அளவு, நிறைப் பெயர்ச்சொற்கள் வந்தால் இடையே ‘ஏ’ காரம் வரும் என்பது விதி.

ஆனால் பதக்கு, நானாழி, சீரகம், அரை என்ற சொற்கள் ஏகாரமின்றி பதக்கு நானாழி, சீரகஅரை என வருவதற்கு விதி கூறவில்லையானாலும் உயிரும் புள்ளியும் என்ற 166ஆம் நூற்பாவின் ஒழிபுக் கருத்தாகப் புறனடையில் ஏற்கலாம் என்பதை இந்த 172ஆம் நூற்பா கூறுகிறது. இதுபோல் பலவற்றிற்கு இளம்பூரணர் எடுத்துக் காட்டுக்கள் தந்துள்ளார்.

## 7.6 தொகுத்துக் காண்போம்

- பொதுப்புணர்ச்சி, சிறப்புப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- சாரியை பெறும் மொழிகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- மரூஉ முடிவு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 7.7 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. ணகர னகர ஈறுகள் வருமொழியுடன் சேர்வதை விவரி.
2. ஐகார வேற்றுமைக்கான சிறப்புப் புணர்ச்சியைக் கூறுக.
3. தொகைமரபில் கூறுப்பட்ட சாரியைப் புணர்ச்சியை விளக்குக.

4. நெடுமுதல் குறுகும் எழுத்துப் புணர்ச்சியை விவரி.

5. உயர்திணை அ∴றிணைச் சொற்கள் நாற்கணத்துடன் புணருமாற்றை விளக்குக.



குறிப்பு

### 7.8 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974

2. நச்சினினார்க்கினியர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்புரையுடன், 1967

## கூறு - 8
## உருபியல்

### 8.1 முன்னுரை

பெயர்கள் உருபோடு சேருங்கால் ஏற்படும் இயல்புகளை விரித்துரைப்பதால் இவ்வியல் உருபியல் எனப் பெயர் பெற்றது. பெயர்கள் உருபோடு சேரும்போது ஏற்படும் திரிபுகளை விரிவாக இவ்வியல் கூறுகிறது. சொற்கள் சாரியை பெற்றும் பெறாதும், உறழ்ந்தும், திரிந்தும் வரும் நிலைகள் கூறப்படுகின்றன. உயிரீற்றுச் சொற்கள் சாரியை பெற்று உருபுடன் சேர்வது, மெய்யீறுகள் சாரியை பெற்று உருபுடன் சேர்வது, குற்றுகர ஈறுகள் சாரியை பெற்று உருபுடன் சேர்வது, என மூன்று வகையில் உருபியல் கருத்தைப் பிரித்தறியலாம்.

பொதுவாக, புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மருங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்ற ஆறு இயல்களும் நிலைமொழி வருமொழிகள் சேர்வதைப் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் உருபியல் மட்டும் வேற்றுமை உருபுகளை வருமொழியாகக் கொண்டு இலக்கணம் கூறுவதாகும்.

## 8.2 குறிக்கோள்கள்

இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

குறிப்பு

1. அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ என்னும் ஆறு ஈற்றுப் பெயர்கள் உருபு ஏற்கும்போது இன் சாரியை பெறும். பன்மைப் பொருள் உணர்த்தும் பல, சில என்னும் பெயர்களும் யா என்னும் பெயரும் வற்றுச் சாரியை பெறும். சுட்டுப் பெயராகிய அது இது உது என்னும் பெயர்கள் உகரம் கெட்டு அன் சாரியை பெறும் என்பது பற்றி அறிந்து கொள்வீர்கள்.

2. ஓகாரச் சொற்கள் ஒன் சாரியை பெறுவது பற்றி அறிந்து கொள்வீர்கள்.

3. அழன், புழன் என்ற அரிதான சொற்கள் உருபு ஏற்கும்போது அத்து, இன் சாரியை பெறுவது பற்றி அறிந்து கொள்வீர்கள்.

4. குற்றியலுகர ஈற்றுத் திசைப்பெயர் முன் ஏழன் உருபு வந்தால் இன் சாரியை பெற்றும் பெறாதும் முடியும் என்பது குறித்து அறிந்து கொள்வீர்கள்.

நிலைமொழியின் உயிர் ஈறுகள் உருபோடு சேர்வது பற்றிக் கீழ்க்கண்ட நூற்பா விளக்குகிறது.

174. அ ஆ உ ஊ ஏ ஔ என்னும்
அப்பா லாறன் நிலைமொழி முன்னர்
வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை

அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ என்ற ஆறு உயிரீற்று நிலைமொழிகளின் முன்னர் வேற்றுமை உருபு வந்தால் இடையில் இன் சாரியை வரும்.

எ.டு. (அ) விள + ஐ = விள வினை (விள + இன் + ஐ)
(ஆ) பலா + ஒடு = பலாவினொடு (பலா + இன் +ஒடு)
(உ) தழூஉ + அது = தழூஉவினது (தழூஉ + இன் + அது)
(ஏ) சே + கண் = சேவின்கண் (சே + இன் + கண்)
(ஔ) வௌ + ஐ = வௌவினை (வௌ + இன் + ஐ)

இவற்றுள் ‘இன்’ என்ற ஐந்தாம் வேற்றுமை இன் சாரியை பெறாது என்பதால் ஐந்தாம் வேற்றுமைக்கு எடுத்துக்காட்டு தரவில்லை.

மேற்படியான ஆறு உயிரீறுகளுள் “அ” மட்டும் பிற சாரியை பெறுவதுண்டு.

175. பல்லவை நுதலிய அகர இறு பெயர்
வற்றொடு சி வணல் எச்ச மின்றே

பன்மைப் பொருளை உணர்த்தும் அகர ஈற்றுப் பெயர் உருபு ஏற்கும்போது இன் சாரியையோடு வற்றுச் சாரியையும் பெறும்.

பல + ஐ = பல + இன் + ஐ = பலவினை என்பதுபோல பல + ஐ = பல + வற்று + ஐ = பலவற்றை என வரும். இப்படி ஐ என்ற இரண்டாம் வேற்றுமையோடு சேரும்போது இன், வற்று என்ற இரு சாரியையுடன் சேர்வதைப் போல ஓடு என்ற மூன்றாம் வேற்றுமையுடன் சேரும்போது இன்சாரியையோடு சேராமல் வற்றுச் சாரியையோடு மட்டுந்தான் வரும்.

பல + ஒடு = பல + இன் + ஒடு = பலவினொடு என்பது தவறு

பல + ஒடு = பல + வற்று + ஒடு = பலவற்றொடு என்பதே சரி

பன்மை உணர்த்தும் அகர ஈறுகளாவன, பல, பல்ல, சில, சில்ல, உள, உள்ள, இல, இல்ல என்பன ஆகும். இவை மூன்றாம் வேற்றுமையான ‘ஒடு’ வுடன் வற்றுச் சாரியை பெற்று வருவதே சிறப்பு என்கிறார் இளம்பூரணர்.

அகர ஈறுபோல ஆ ஈறும் வற்று பெறும்.

176. யா என் வினாவும் ஆயியல் திரியாது.

யா + ஐ = யாவற்றை (யா + வற்று + ஐ)

யா + ஒடு = யாவற்றொடு (யா + வற்று + ஒடு)

சுட்டெழுத்தான உகர ஈற்றுச் சொல் அன்சாரியை பெறும். அப்போது சுட்டெழுத்தின்
உகர ஈறு கெடும்.

177. சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய் யொழித்து உகரம் கெடுமே

**குறிப்பு**

அது + ஐ = அதனை (அது + அன் + ஐ - அத் + அன் + ஒடு)
அது + ஒடு = அதனொடு (அது + அன் + ஒடு - அத் + அன் + ஒடு)

இவ்வாறே இது, உது என்ற சொற்களைப் பொருத்திக்கொள்க.

சுட்டெழுத்தை முதலாக உடைய ஐகார ஈற்றுச் சொல் வற்றுச் சாரியை பெறும்
அப்போது ஐகாரம் நிலைத்தலும் உண்டு நில்லாமையும் உண்டு.

178. சுட்டுமுத லாகிய ஐஎன் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே

அவை + ஐ = அவையற்றை. (அவை + வற்று + ஐ) ஈண்டு சாரியையான் வற்று என்பது "சுட்டுமுதல் ஐம் முன் வ.்.கான் மெய்கெட அ.்.கான் நிற்றல்" என்ற புணரியல் நூற்பாவின்படி (123) அற்று என்பதாக நிற்கும். எனவே அவை என்பதன் முன் வற்று – அற்று என்பதாக நின்று வேற்றுமை உருபுடன் சேரும் என்பது கருத்து. ஆக அவை + வற்று + ஐ என் நின்று அவையற்றை யாயிற்று என்க.

இவ்வாறே, அவை + ஒடு அவையற்றொடு என வரும். (அவை + வற்று + ஓடு அவை + அற்று + ஓடு)

இனி நிலைமொழியான 'அவை' என்பதில் ஐகாரம் நில்லாமைக்கு எ.டு. பின்வருமாறு

அவை + ஐ = அவற்றை அவை ஐ கெட அவ் + வற்று + ஐ என நிற்கும். ஈண்டுள்ள அவ் வில் 'வ்' கெட 'அ' என நிற்கும். எனவே அவை+ வற்று + ஐ – அவ் + வற்று + ஐ + அவற்றை ஆகும் என்க. (அவ் என்பதன் முன் வற்று வரும்போது வற்றின் மிசை ஒற்றென்று 'வ்' எழுத்தைக் கெடுத்துவிட வேண்டும் என்பது விதி)

இவ்வாறே இவற்றை, உவற்றை என வரும்.

யா எழுத்தை முதலில் கொண்ட ஐகார ஈற்றச் சொல் வற்றுச் சாரியை பெறும்.
அப்போது ஐகாரம் ஏறிய வகரமும் கெட்டு ஒரெழுத்தாக நிற்கும்.

179. யாஎன் வினாவின் ஐஎன் இறுதியும்
ஆஇயல் திரியாது என்மனார் புலவர்
ஆவயின் வகரம் ஐயொடும் கெடுமே.

யாவை + ஐ = யாவற்றை (யாவை + வற்று + ஐ – யா + வற்று + ஐ

யாவை + ஒடு = யாவற்றொடு (யாவை + வற்று + ஒடு – யா + வற்று + ஒடு)

ஈண்டு நூற்பாவில் 'யாவை' என்ற சொல்லுக்கு இலக்கணம் கூறினாலும் பொதுவாகப் பிற ஐகார ஈற்றுச் சொல் வற்றுச் சாரியை பெறும்போதும் வகர ஐகாரம் கெடும் என இளம்பூரணர் கூறி அவற்றிற்கு, கரியவற்றை, செய்யவற்றை என உதாரணம் தந்துள்ளார். இச்சொற்கள்.

கரியவை + வற்று = ஐ - என நிற்கும் இதில் நிலைமொழி ஐ கெடும் செய்யவை + வற்று + ஐ – என நிற்கும். இதில் நிலைமொழி ஐ கெடும்.

நீ என்னும் ஈகார ஈற்றுப் பெயர் நெடுமுதல் குறுகி ன கர ஒற்றுடன் சேர்ந்து உருபு ஏற்கும்.

180. நீ என் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றா கும்மே.

நீ + ஐ = நின்னை. (நீ – நி எனக்குறுகி னகரம் சேர நின் என நின்று ஐ உருபுடன் சேரும்போது இடையில் ன் என்ற ஓர் எழுத்தைப் பெற்று வரும். நின் + ன் + ஐ இந்த இடையில் சேரும் 'ன்' எழுத்தை எழுத்துப் பேறு என்பர். நீ + ஒடு = நின்னொடு (நின் + ன் + ஒடு)

ஓகார ஈற்றுப் பெயர் ஒன் சாரியை பெறும்.

181. ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை

கோ + ஐ = கோஒனை. (கோ + ஒன் + ஐ)
கோ + ஒடு = கோஒனொடு (கோ + ஒன் + ஒடு)

(கோனை என்பதைத்தான் கோ ஒனை என்பதாகப் பழங்காலத்தில் வழங்கினர்)

அ, ஆ உயிரீற்று மரப் பெயர்கள் 7ஆம் வேற்றுமை ஏற்று வரும் போது அத்துச்சாரியை
பெறும்.

குறிப்பு

182. அ, ஆ என்னும் மரப் பெயர் கிளவிக்கு
அத்தொடும் சிவனும் ஏழன் உருபே,

அ, ஆ - இன் சாரியை பெறுவதை ஆசிரியர் 174ஆம் நூற்பாவில் கூறினார். ஈண்டு அத்துச் சாரியையும் பெறும் என்கிறார்.

விள + கண் = விளவத்துக்கண் (விள + அத்து + கண்)
பலா + கண் = பலாவத்துக்கண் (பலா + அத்து + கண்)

மெய்யீறுகள் மொத்தம் பதினொன்று அவற்றுள் ஞ, ந, ம, வ, ன என்ற ஐந்து ஈறுகளும் சாரியை பெற்று வரும். ய, ர,ல, ழ, ள ண என்ற ஆறு ஈறுகளும் சாரியை பெற்றும் பெறாமலும் வரும்.

183. ஞந என் புள்ளிக்கு இன்னே சாரியை

ஞ, ந ஈறுகள் இன்சாரியை பெறும்

எ.டு. உரிஞ் + ஐ = உரிஞினை (உரிஞ் + இன் = ஐ)
பொருந் + ஐ = பொருநினை (பொருந் + இன்+ ஐ)

184. சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட இறுதி இயல்திரி பின்றே.

வகர ஈற்று சுட்டுப் பெயர் வற்றுச் சாரியை பெறும்
சுட்டல்லாத வகர ஈறு இன் சாரியை பெறும்.

எ.டு அவ் + ஐ = அவற்றை (அவ் + வற்று + ஐ)

185. ஏனை வகரம் இன்னொடு சிவணும்.

எ.டு தெவ் + ஐ = தெவ்வினை (தெவ் + இன் + ஐ)
தெவ் + ஒடு = தெவ்வினொடு (தெவ் + இன் + ஒடு)

186. ம∴கான் புள்ளிமுன் அத்தே சாரியை
மகர ஈறு அத்துச் சாரியை பெறும்
எ.டு. மரம் + ஐ = மரத்தை (மரம் + அத்து + ஐ)

(மர + அத்து + ஐ = ஒற்று மெய் கெடுதல் என்ற 134ஆம் நூற்பாவின்படி மரம் என்பதில் உள்ள ஈற்று மகரம் கெட, அத்தின்

அகரம் அகரமுனை இல்லை என்ற 126ஆம் நூற்பாபடி அத்தின் அகரம் கெட மர + த்து + ஐ = மரத்தை ஆனது.



**சாரியை பெறாத மகர ஈறுகள் (நும், தாம், நாம்)**

188. தாம் நாம் என்னும் மகர இறுதியும்
யாமென் இறுதியும் அதனோ ரன்ன
ஆஎ ஆகும் யாமென் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும்.

தாம், நாம் என்பன தம், நம் எனக் குறுகியும் யாம் என்பது என் என்று குறுகியும் வரும். (யாம் - ய் + ஆம் = ஆ எ ஆகும் என்பதால் எம் ஆகும்போது முன்னர் உள்ள 'ய்' என்பது நூற்பாவின்படி கெடும்)

எ.டு. தாம் + ஐ = தம் + ஐ = தம்மை (தம் + ம் + ஐ)
தாம் + ஒடு = தம்+ ஒடு = தம்மொடு (தம் + ம் + ஒடு)
நாம் + ஐ = நம் + நம்மை = (நம்+ ம் + ஐ)

எல்லாம் என்னும் மகர ஈறு வற்றுச் சாரியையும் உம் சாரியையும் பெறும் (வற்று இடையிலும் உம் இறுதியும்)

190. எல்லாம் என்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதியான

எ.டு. எல்லாம் + ஐ - எல்லாவற்றையும், (எல்லாம் + வற்று + ஐ + உம்)

இந்நூற்பாவில் முற்ற எனக் கூறியதால் மூன்று, நான்கு, ஆறு ஆகிய வேற்றுமை உருபுகளுடன் சேரும்போது ஈற்றில் சேரும் உம்மின் உகரம் கெட்டுவிடும்.

எ.டு. எல்லாம் + ஒடு = எல்லாவற்றொடும்
(எல்லாம் + வற்று + ஒடு + உம் - எல்லா + வற்று + ஒடு + ம்)
எல்லாம் + கு = எல்லாவற்றுக்கும்
எல்லாம் + வற்று + கு + உம் - எல்லா + வற்று + கு + ம்)
எல்லாம் + அது = எல்லாவற்றதும்
எல்லாம் + வற்று + அது + உம் - எல்லா + வற்று + து + ம்)

எல்லாம் என்ற சொல் உயர்திணையைக் குறிப்பதானால் நம் சாரியை பெறும்.

உயர்திணை உணர்த்தும் நிலையில் எல்லாம் என்பதுடன் ர், உம் சேர்ந்த எல்லாரும் என்ற மகர ஈற்றுப் படர்க்கைச் சொல்லும் ஈர், உம் சேர்ந்த எல்லீரும் என்ற முன்னிலை மகர ஈறும் உருபு ஏற்கும்போது இறுதியில் உள்ள உம் கெட்டு எல்லார் எல்லீர் என் நிற்கும். இவற்றுள் எல்லார் என்பது தம் சாரியையும் எல்லீர் என்பது நும் சாரியையும் பெறும்.

192. எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்
எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்
ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும் மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே.

எ.டு. எல்லாரும் + ஐ = எல்லார் தம்மையும் (எல்லார் + தம் + ஐ + உம்) நிலைமொழி
உம் கெட்டது.

எல்லீரும் + ஐ = எல்லீர் நும்மையும் (எல்லீர் + நும் + ஐ + உம்) நிலைமொழி
உம் கெட்டது.

193. தான் யான் என்னும் ஆயீரிறுதியும்
மேன்முப் பெயரொடும் வேறு பாடிலவே.

தான், யான் என்ற னகர ஈற்றுச் சொற்களில் தான் தன எனக் குறுகி நிற்கும்.
யான் என் என நிற்கும். இவை சாரியை பெறாது. உருபை மட்டும் ஏற்கும்.

எ.டு. தான் + ஐ = தன்னை (தன் + ன் + ஐ) 'ன்' எழுத்துப் பேறாய் இரட்டித்தது
யான் + ஐ = என்னை (என் + ன் + ஐ)

சில னகர ஈற்றுச் சொற்கள் அத்து, இன் சாரியை பெறும்.

194. அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப உணரு மோரே.

எ.டு. அழன் + ஐ = அழத்தை (அழன் + அத்து + ஐ)
அழன் + ஐ = அழனினை (அழன் + இன் + ஐ)
புழத்தை, புழனினை என வரும் (அழன் - பிணம்; புழன் – ஒரு வகைச் செடி)

(195) ழகர ஈறாகிய எண்ணுப் பெயர் அன்சாரியை பெறும்.

எ.டு. ஏழ் + ஐ = ஏழனை (ஏழ் + அன் + ஐ)
ஏழ் + கு = ஏழற்கு (ஏழ் + ன் + கு)

இனி குற்றியலுகர ஈறுகள் உருபு ஏற்குங்கால் சாரியை பெறும் செய்தி விளக்கப்பெறுகிறது.

196. குற்றிய லுகரத்து இறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை

குற்றியலுகரச் சொற்கள் இன் சாரியை பெறும்.

எ.டு. வரகு + ஐ = வரகினை (வரகு + இன் + ஐ)
வரகினொடு, நாகினை. நாகினொடு என வரும்.

197. நெட்டெழுத்து இம்பர் ஒற்றுமிகத் தோன்றும்
அப்பான் மொழிகள் அல்வழி யான.

நெட்டெழுத்தாகிய குற்றியலுகரச் சொற்கள் உருபு ஏற்கும்போது ஒற்று இரட்டிக்கும். ஆனால் சாரியை பெறா, கு, சு, டு, து, பு, று என்ற ஆறு குற்றியலுகர ஈற்றுள் டு, று இரண்டு மட்டும் ஒற்று இரட்டிக்கும். ஏனைய நான்கிலும் ஒற்று இரட்டிக்காது.

எ.டு. யாடு + ஐ = யாட்டை (யாட் + ட் + ஐ)
முயிறு + ஐ = முயிற்றை (முயிற் + ற் + ஐ)

198. அவைதாம்
இயற்கைய ஆகும் செயற்கைய என்ப.

ஒற்று மிக்கு சாரியை பெறாது எனப்பட்டதற்குச் சிறுபான்மையாகச் சாரியை பெறலாம்.

ஒற்று இரட்டிக்கும் இயற்கையான நிலையில் புணர்ச்சியின் சிலபோது சாரியை பெறும்.



குறிப்பு

எ.டு. யாடு + ஐ = யாட்டினை (யாடு + இன் + ஐ – யாட் + ட் + இன் + ஐ)

முயிறு + ஐ = முயிற்றை (முயிற் + ற் + ஐ)

198. அவைதாம்
இயற்கைய ஆகும் செயற்கைய என்ப.

ஒற்று இரட்டிக்கும் இயற்கையான நிலையில் புணர்ச்சியின் சிலபோது சாரியை பெறும்.

எ.டு. யாடு + ஐ = யாட்டினை (யாடு + இன்+ ஐ–யாட்+ ட்+ இன்+ ஐ)

199. எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்.

குற்றுகர எண்ணுப் பெயர் அன்சாரியை பெறும்.

எ.டு. ஒன்று + ஐ = ஒன்றனை (ஒன்று + அன் + ஐ)

200. ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா எண்ணும் சொல்லுங் காலை
ஆனிடை வரினும் மான மில்லை
அ∴தென் கிளவி ஆவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் ப∴கான் மெய்யே.

ஒன்று முதலிய எண்களுடன் வருமொழி பத்து சேருங்கால் ஆன் சாரியை பெறும். (அன் சாரியை பெறுதலன்றி ஆனும் பெறும்) ஆன் சாரியை பெறும்போது பத்து என்ற சொல் ப∴து என்பதாகக் கொள்ளவேண்டும். அதன் அ∴து கெட 'ப்' மட்டும் நின்று புணரும் உருபு ஏற்கும்போது.

எ.டு. ஒன்று + ப∴து + ஐ = ஒருபானை

ஒரு + ப் + ஆன் + ஐ ஒன்று ஒரு ஆனது, ப∴து என்பதில் அ∴து நீங்க 'ப்' மட்டும் நின்றது.

201. யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தம் கெடுதல் ஆவயி னான.

யாது, அ∴து என்னும் சொற்கள் அன் சாரியை பெறும். அ∴து என்பதில் ஆய்தம் கெட அது என நிற்கும்.

எ.டு. யாது + ஐ = யாதனை (யாது + அன் + ஐ)
அ·்.து + ஐ = அதனை (அது + அன் + ஐ)

குற்றியலுகரமாகிய திசைப் பெயர்கள் ஏழாம் வேற்றுமை உருபோடு சேரும்போது இன் சாரியை பெறுதலின்றி இயல்பாகவும் முடியும். அப்போது இறுதியில் உள்ள 'கு' கெடும்.

202. ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி இயற்கையு மாகும்
ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே.

எ.டு. வடக்கின்கண் சாரியை பெற்றது
(வடக்கு + இன் + கண் = வடக்கின்கண்)
(வடக்கு + கண்= வடக்கண் - சாரியை பெறாதது.

இதுவரை சில உயிரீறுகளும் யெய்யீறுகளும் சாரியை பெற்று உருபு ஏற்பது பற்றிக் கூறிய தொல்காப்பியர் நூற்பாவில் கூறப்படாத சில உயிர், மெய் ஈற்றுப் பெயர்கள் உருபு ஏற்கும்போது சாரியை பெற்றும் பெறாதும் வருவதுபற்றி உருபியலின் புறநடை இலக்கணமாகக் கூறினார்.

203. புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்
சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்
தேருங்காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையும் கடப்பா டிலவே.

இந்தப் புறநடை நூற்பாவில் உணரப்படும் மெய் ஈறுகள் ண், ய், ர், ல், ள்

எ.டு. மண் + ஐ = மண்ணை மண்ணினை (சாரியை பெறாமலும் பெற்றும் வந்தன)
வேய் + ஐ = வேயை, வேயினை
நார் + ஐ = நாரை, நாரினை
கல் + ஐ = கல்லை, கல்லினை
முள் + ஐ = முள்ளை, முள்ளினை.

புறநடை நூற்பாவால் உணரப்படும் உயிர் ஈறு 'இ'

எ.டு. கிளி + ஐ = கிளியை, கிளியினை.

## 8.3 தொகுத்துக் காண்போம்

1. அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ என்னும் ஆறு ஈற்றுப் பெயர்கள் உருபு ஏற்கும்போது இன் சாரியை பெறும். பன்மைப் பொருள் உணர்த்தும் என்பது பற்றி அறிந்து கொண்டீர்கள்.

2. ஓகாரச் சொற்கள் ஒன் சாரியை பெறுவது பற்றி அறிந்து கொண்டீர்கள்.

3. அழன், புழன் என்ற அரிதான சொற்கள் உருபு ஏற்கும்போது அத்து, இன் சாரியை பெறுவது பற்றி அறிந்து கொண்டீர்கள்

## 8.4 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. யா என் வினாவும் ஆயியல் திரியாது – விளக்குக.
2. இன் சாரியை பெறும் உயிரீறுகளை எடுத்துரைக்க.
3. மகர ஈற்றுக்கான இலக்கணங்களைத் தொகுத்துக் கூறுக.

## 8.5 மேலும் அறிந்துகொள்ள

1. நச்சினார்க்கினியர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்புரையுடன், 1967

2. பேராசிரியர் ஆ.சிவலிங்கனார் - தொல் - எழுத்து – உரை வளம் (குறிப்புரை) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியீடு சென்னை

# கூறு - 9

# உயிர் மயங்கியல்

## 9.1 முன்னுரை

உயிர் ஈறுகளின் புணர்ச்சி இலக்கணம் கூறுவது உயிர் மயங்கியல் என்னும் இயலாகும். மயங்குதல் என்பது நிலைமொழியும்

வரும் மொழியும் சேர்தல் என்பதாகும். சொற்கள் ஒன்று சேர்தல்தான் புணர்ச்சி எனப்பட்டது. இது எழுத்துப் புணர்ச்சி, பொருட்புணர்ச்சி என இருவகைப்படும். எழுத்துக்கள் சேரும்போது சாரியை, உருபுகளாகிய ஒட்டுக்கள் பொருள் நோக்கிச் சேர்வதால் பொருள் நோக்கிய அளவில் உயிரீறுகள் முன் சொற்கள் சேர்வதால் உயிர் மயங்கியல் என்று பெயர் பெற்றது.



குறிப்பு

### 9.2 குறிக்கோள்கள்

- உயிரீறு நாற்கணத்துச் சொற்களோடும் புணரும் இயல்பு குறித்துத் தெரிந்து கொள்வீர்கள்.
- அல்வழி, வேற்றுமை என இருவகையில் புணர்ச்சி அமையும் முறை குறித்துத் தெரிந்து கொள்வீர்கள்.
- உயிரீறுகள் செய்யுளில் பயிலும் முறை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

உயிர் மயங்கியலில் தொல்காப்பியர் அகர ஈறு முதலாக ஔகார ஈறுவரை உள்ள சொற்கள் அல்வழியிலும் வேற்றுமையிலும் புணர்வது பற்றிக் கூறுகிறார். அகர ஈறுபற்றி 18 நூற்பாக்கள் கூறுகின்றன. அவற்றுள் முதல் 13 நூற்பா அல்வழிப் புணர்ச்சி பற்றியும் 14 முதல் 18 வரையான 5 நூற்பா வேற்றுமைப் புணர்ச்சி பற்றியும் கூறுகின்றன.

## 9.3 அல்வழியில் அகஈறு

அகரத்தை இறுதியாக உடைய பெயர்ச் சொற்களுக்கு முன் வல்லினம் வரின் மிகும்

204. அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை அல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே.

எ.டு. விள + குறிது  விளக்குறிது, விளச்சிறிது, விளத்தீது, விளப்பெரிது.

பெயர்ச்சொல் முன் மட்டுமின்றிஅகர ஈறான உரிச்சொல் முன் வல்லினம் வரின் வல்லெழுத்து மிகுதலோடு மெல் எழுத்து மிகுந்தாலும் மிகலாம்.

எ.டு. தட + கை = தடக்கை. தட + செவி = தடஞ்செவி
தவ +கொண்டான் = தவக்கொண்டான்.

இடைச்சொல் முன் இயல்பாக வரும்.

குறிப்பு

எ.டு. “மடவ மன்ற தடவு நிலைக் கொன்றை” - இத்தொடரில் மன்ற என்ற அகர ஈற்று இடைச்சொல் முன் வல்லினம் இயல்பானது. ஆனால் மன்றத்தடவு என்றுமிக்கு வரவேண்டுவதே இந்த நூற்பாவின்படி சரியாம் என்றாலும் இளம்பூரணர் அங்ஙனம் மிக்குவருவதற்கு உதாரணம் காட்டவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அகரம் தனியாக நின்று வல்லெழுத்தோடு சேரும்போது மிகும். எ.டு. அ + குறிது = அக்குறிது. வல்லின மிகுதிபோல அ + யாது = அவ்யாது என இடைச்சொல் மிகுதியும் பெறும். மேலும் உயிர்கண வருமொழியுடன்சேரும்போது இடைச்சொல் மிகும்.
எ.டு. அ+அழகிது = அவ்வழகிய.

205. வினைஎஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
எனஎன் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.

அகர ஈற்று வினைச்சொல், இடைச்சொல் முன்னர் வல்லினம் மிகும்.

எ.டு. 1. உண + கொண்டான் = உணக்கொண்டான் (வினை எச்சம்)
2. போல + பாய்ந்தான் = போலப் பாய்ந்தான் (உவம உருபு)
3. என + கொண்டான் = எனக்கொண்டான் (என என் எச்சம்)
4. அ + கொற்றன் = அக்கொற்றன் (சுட்டுச்சொல்)
5. ஆங்க + கொண்டான் = ஆங்கக்கொண்டான் (ஆங்க என்னும் உரையசைக்கிளவி)

206. சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஓட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்.

சுட்டெழுத்தான அகர ஈற்றின் முன் ஞ, ந, ம வரின் மெய் எழுத்து மிகும்

எ.டு. அ + ஞாலம் = அஞ்ஞாலம்
அ + நூல் = அந்நூல்
அ + மணி = அம்மணி.

207. யவ முன் வரினே வகரம் ஒற்றும்.

அகரச் சுட்டின் முன் ய, வ வரின் வகரம் மிகும்.

எ.டு. அ + யாழ் = அவ்யாழ் அ + வளை = அவ்வளை

குறிப்பு

அகரச்சுட்டின் முன் உயிர்வரின் வகரம் மிகும்

எ.டு. அ + ஆடை = அவ்வாடை

206. நீட வருதல் செய்யுளுள் உரித்தே.

அகரச்சுட்டு செய்யுளில் வன்கணம் தவிர்த்த பிற கண எழுத்துடன் சேரும்போது சுட்டு நீளும்.

எ.டு. அ + இருதிணை = ஆயிருதிணை.

கூறப்பட்ட சில அகர ஈற்று வினைச்சொல், உரையசைச்சொல்,ஈரெழுத்துச் சொல் முன்னர் வல்லினம் வரின் உருவாகும் திரிபுகள் பற்றித் தொல்காப்பியர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

210. சாவ என்னும் செயஎன் எச்சத்து
இறுதி வகரம் கெடுதலும் உரித்தே.

எ.டு. சாவ குத்தினான், சாக்குத்தினான். நூற்பாவில் கெடுதலும் என்பதால் சாவக்குத்தினான் என வருவதே இயல்பு. அதாவது வகரம் கெடாமல் முழுமையாக நிற்கும் என்பதாம்.

சாவ என்பது செய என் எச்சம்.

வாழிய என்னும் அகர ஈற்று வியங்கோள் வினைச்சொல் முன் வல்லினம் வந்தால் யகரம் கெட்டு புணரும்.

212. வாழிய என்னும் சேய்என் கிளவி
இறுதி யகரம் கெடுதலும் உரித்தே.

எ.டு. வாழிய + கொற்றா = வாழிகொற்றா. (வாழிய என இயல்பாய் வருவதே முறையானாலும் கெடுதலும் என்றதால் வாழி என நிற்கும் என்க. ஈண்டு சேய் என்றது நீண்டகாலம் என்பதைக் குறித்தது.

வல்லினமின்றிப் பிற கணம் வந்தாலும் யகரம் கெட்டு வரும்.

வாழிய + ஞெள்ளா = வாழிஞெள்ளா.

213. உரைப் பொருள் கிளவி நீட்டமும் வரையார்.

உரையசைக்கிளவியான் அகர ஈற்றுச் சொல் புணர்ச்சியில் நீளும் என்பது நூற்பாவின் கருத்துதாகும்.

எ.டு. அம்ம கொற்றா; அம்மா கொற்றா; நீட்டமும் என்பதால் நீள வருவதே இயல்பு என்க.

இனி அகர ஈற்று ஈரெழுத்துச் சொல் முன் ஏற்படும் புணர்ச்சி கூறப் பெறுகிறது.

215. தொடரல் இறுதி தம்முன் தாம் வரின்
லகரம் றகரவொற்றாதலும் உரித்தே.

பல சில எனும் சொற்கள் தம்முன் தாம் வரின் லகரம் றகரமாகத் திரியும்.

எ.டு. பல + பல = பற்பல: சில + சில = சிற்சில

இங்ஙனம் தம்முன் தாம் வாராத சொற்கள் முன் அகர ஈறு கெட்டு நிற்கும்.
பல + படை = பல்படை, பல் + யானை = பல்யானை, பல + வேள்வி = பல்வேள்வி

216. வல்லெழுத்து இயற்கை உறழத் தோன்றும்.

இங்ஙனம் தம்முன் தாம் வரும்போது ஒற்று மிகுதலும் உண்டு.

எ.டு. பல + பல = பலப்பல, சில + சில = சிலச்சில

உறழத்தோன்றும் என்பதால் பல்பல, சில்சில என்றும் வரும். மேலும் பல + தாழிசை = பஃறாழிசை, சில + தாழிசை = சிஃறாழிசை எனத்திரிந்தும் வரலாம். இன்னும் சில + நூல் = சின்னூல், பல+மரம்= பன்மரம் என மெல்லெழுத்தாய் திரிந்தும் வரலாம் என உரையாசிரியர் கூறியுள்ளார்.

214. பலவற் றிறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான.

இப் பல, சில என்பன செய்யுளில் அகரம் நீண்டு வரும். அங்ஙனம் நீளும்போது நிலைமொழி பல என்பதும் வருமொழி சில

என்பதும் ஆகும். இவை பல + சில எனப்புணரும் போது பலாஅஞ் சிலாஅம் என ஆகும் செய்யுளில் என்பது கருத்து. இதன் பொருள் யாதெனில் பலவும் சிலவும் என்பதாம்.

எ.டு. பல + சில = பலாஅஞ் சிலாஅம்.

இவற்றுள் நிலைமொழியும் வருமொழியும் நீளுகின்றன என்பது செய்யுளுக்கான தனி இலக்கணமாகத் தெரிகிறது. நிலைமொழியில் அகரமும் ஞகரமும், வருமொழியில் அகரமும் மகரமும் எழுத்துப் பேறுகளாய்ச் சேர்கின்றன.

இதுவரை கூறிவந்த அகர ஈற்று அல்வழிப் புணர்ச்சிக்கான இலக்கணத்தில் எய்தாதது எய்துவிக்கும் பொருட்டு சில விதிகள் வரையறுக்கப்படுகின்றன. அவை வருமாறு.

211. அன்ன என்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
செய்யும்மன என்னும் தொழிலுறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்
செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்
அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்
பலவற் றிறுதிப் பெயர்க்கொடை உளப்பட
அன்றி அனைத்தும் இயல்பென மொழிப.

எ.டு. பொன்னன்ன + குதிரை = பொன்னன்ன குதிரை. (உவம உருபு)
ஊர + கேள் = ஊரகேள். (அண்மைவிளி)
உண்மன + குதிரை = உண்மனகுதிரை. (செய்ம்மன வினை)
செல்க + குதிரை = செல்குதிரை. (வியங்கோள் சொல்)
உண்ட + குதிரை = உண்டகுதிரை (பெயரெச்சம்)
உண்ணிய + கொண்டான் = உண்ணியகொண்டான் (செய்யிய வினை)
அம்ம + கொற்றா = அம்மகொற்றா (உரையசைச் சொல்)
பல + குதிரை = பலகுதிரை (பன்மைச் சொல்)

மேற்கூறிய எட்டுவகையான அகர ஈற்றுச் சொற்கள் வல்லினம் வர மிகாமல் இயல்பாக வந்தன.

## வேற்றுமையில் அகர ஈறு

217. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

வேற்றுமைப் புணர்ச்சியில் அகர ஈற்றுச சொற்கள் வல்லினம் வர ஒற்றுமிகும்.

எ.டு. இருவிள + கொற்றன் இருவிளக்கொற்றன். (இருவிள என்பது ஓலை என்று பொருள். மேலும் ஒரூர், ஒருசேரி என்றும் பொருள்படும்) அதனோரற்றே என்பது அல்வழியில் மிகுவதுபோல வேற்றுமையிலும் மிகும் என்பது கருத்து.

218. மரப் பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

அகர ஈற்று மரப்பெயர்ச் சொல்முன் வல்லினம் மெல்லெழுத்துப் பெறும்.

எ.டு. விள + கோடு = விளங்கோடு

219. மகப் பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை

அகர ஈற்றுப் பெயர்கள் சாரியை பெறுதலும் உண்டு.

220. அத்தவண் வரினும் வரைநிலை இன்றே.

மக என்னும் அகர ஈற்றுப் பெயர்ச்சொல் இன், அத்து சாரியைகள் பெறும் மக + கை மகவின்கை. மக + கை = மகத்துக்கை.

221. பலவற் றிறுதி உருபியல் நிலையும்.

பல என்னும் பன்மைச் சொல் வற்றுச் சாரியை பெறும்.

எ.டு. பல + கோடு = பலவற்றுக்கோடு

## 9.4 அல்வழியில் ஆகார ஈறு

ஆகார ஈறுபற்றி 14 நூற்பாக்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் அல்வழிப்புணர்ச்சி பற்றியன 4. வேற்றுமை பற்றியன 10 ஆகும்.

222. ஆகார இறுதி அகர இயற்றே

எ.டு. தாரா + கடிது - தாராக்கடிது.

பொதுவாக ஆகார இறுதி அகர ஈறுபோல மிகும்

223. செய்யா என்னும் வினைஎஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்.

செய்யா என்னும் ஆகர ஈற்றுச் செய்யா என்னும் வினை எச்சச் சொல்லும் மிகும்.

உண்ணா + கொண்டான் = உண்ணாக்கொண்டான். (ஈண்டு வினை எச்சத்தைப் போலவே உண்ணா + கொற்றன் = உண்ணாக் கொற்றன் எனப் பெயரெச்சத்திற்கும் வல் எழுத்து மிகும் என்பதாம்).

224. உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக அகரம் மிகுமே.

ஆகார ஈற்று உம்மைத் தொகைச் சொல் புணர்ச்சியில் இடையில் அகரம் தோன்றும்.

எ.டு உவா + பதினான்கு உவாஅப் பதினான்கு. (உவாவும் பதினான்கும் என்பது பொருள். உவா பிறை முழுநிலவு என்பது பொருள்)

ஈண்டு இந்நூற்பாவில் உம்மை எஞ்சிய என்றதால் இந்த இலக்கண விதி இருபெயரொட்டுப் பண்புத்தொகைச் சொற்கும் ஆகும் என்ற இளம்பூரணர் கூறுகிறார்.

எ.டு. அரா + பாம்பு = அரா அப்பாம்பு. (அராவாகிய பாம்பு)

மேலும் ஆகார ஈற்றுப் பெயரெச்சச் சொற்கும் இவ்விதி பொருந்தும்.

எ.டு. இரா + காக்கை = இரா அக்காக்கை. (இல்லாத காக்கை)

இப்படி வருமொழி வல்லினம் வரும்போது இயல்பாக மிகுவதுடன் அகர எழுத்துப் பேறு பெறுவதைப்போல வல்லினம் அல்லாத வருமொழி வரினும் அகரப்பேறு பெறும் என உரையாசிரியர் இளம்பூரணர் கூறுகிறார்.

எ.டு. இறா + வழுதுணங்காய் = இறாஅவழுதுணங்காய் (இறால் மீனும் கத்திரிக்காயும் என்பது பொருள்) இறாலும் வழுதுணங்காயும்.

இப்படி மிக்கும் அகரப் பேறு பெற்றும் வந்த ஆகார ஈறு மிகாமல் இயல்பாக வரும் இடங்கள் வருமாறு:

225. ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாஎன் வினாவும் பலவற் றிறுதியும்
ஏவல் குறித்த உரையசை மியாவும்
தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியோடு
அன்றி அனைத்தும் இயல்பென மொழிப.

1. ஆ + குறிது = ஆகுறிது (ஆ என்னும் பெயர்ச் சொல் முன் மிகவில்லை)
2. மா + குறிது = மாகுறிது (மா – பெயர்முன் மிகவில்லை)
3. ஊரா + கொள் = ஊராகொள் (விளிப்பெயர் முன் மிகவில்லை)
4. யா + குறிய = யாகுறிய (வினாப்பெயர் முன்)
5. உண்ணா + குதிரை = உண்ணாகுதிரை (பலவின்பால் உணர்த்தும் அஃறிணைச் சொல்)
6. கேண்மியர் + கொற்றா = கேண்மியா கொற்றா (உரையசையாக வரும் ஏவற் சொல்
7. உண்கா + கொற்றா = உண்காகொற்றா (உண் என்னும் தொழிலை உணர்ததும் வினைச்சொல்)

## 9.5 வேற்றுமையில் ஆகார ஈறு

பொதுவாக ஆகார ஈறு வேற்றமையிலும் அல்வழியைப் போலவே மிகும்.

226. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

எ.டு. தாரா + கால் = தாராக்கால்.

227. குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி.

ஆகார எழுத்து ஓரெழுத்து ஒரு மொழியாயும் குறில்கீழ் மொழியாயும் வரும். அப்படி வரும்போது அகர எழுத்து வரும் அகரப் பேறின்றி வரும் சாரியை பெற்றும் வரும்

எ.டு. பலா + கோடு = பலா அக்கோடு (குறில்கீழ் ஆகாரநெடில்)
கா + குறை = கா அக்குறை (ஓரெழுத்து ஆகாரம்)

228. இராஎன் கிளவிக்கு அகரம் இல்லை.

குறில்கீழ் ஆகார ஈற்றுச் சொல் அகரப் பேறு பெறாமல் வரும்.

எ.டு. இரா + கொண்டான் = இராக்கொண்டான் (இரவில் கொண்டான் என்பது பொருள்).

குறில் கீழ் ஆகாரம் அத்துச் சாரியை பெறும்



229. நிலாஎன் கிளவி அத்தொடு சிவணும்

குறிப்பு

எ.டு. நிலா + கொண்டான் = நிலாத்துக் கொண்டான்

230. யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே.

குறில் கீழ் ஆகார ஈற்று மரப்பெயரும் ஓரெழுத்துப் மரப் பெயரும் வல்லெழுத்து மிகாமல்
அகரப் பேற்றுடன் மெல் எழுத்து மிக்கு வரும்.

எ.டு. யா + கோடு = யா அங்கோடு (யா – ஒருவகை மரம்)
பிடா + கோடு = பிடா அங்கோடு (பிடா – மரம்)
தளா + கோடு = தளா அங்கோடு (தளா - மரம்)

மேற்கூறிய மூன்றும் வல்லெழுத்து மிக்கும் வரும்

231. வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை
வல் எழுத்து மிகுந்தாலும் குற்றம் இல்லை.

எ.டு. யா + கோடு = யா அக்கோடு, பிடா அக்கோடு, தளாக்கோடு.

மேலும், சிலபோது அத்துச் சாரியையும் பெறும். யா + கோடு = யா அத்துக்கோடு

232. மாமரக் கிளவியும் ஆவம் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரமும் வல்லெழுத்தும் அவை அவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும்.

ஆகார ஈறாகிய மா எனனும் மரப்பெயரும் ஆ, மா என்ற விலங்குப் பெயர்களும் அகரப்
பேறும் வல்லினம் மிகாமலும் வரும். ஆவும் மாவும் னகரம் பெறும். மரப்பெயரல்லாத ஆ, மா என்பன அகரப் பேறும் வல்லினமும் பெறாமல் னகர ஒற்றைப் பெறும்.

எ.டு. ஆ + கோடு = ஆன்கோடு, மா + கோடு = மான்கோடு

233. ஆனொற்று அகரமொடு நிலையிடன் உடைத்தே.

ஆ னகர ஒற்றாகிய சாரியையுடன் ஓர் அகரம் சேர்ந்து நிற்கும் இடமும் உண்டு.

குறிப்பு

இங்ஙனம் னகரம் பெறுதல் பெரும்பான்மை, சிறுபான்மையாக அகரம் பெறும்.

எ.டு. ஆ + நெய் = ஆன்நெய் என்பது அகரம் சேர ஆன நெய் என வரும்.

எ.டு. ஆ + பீ = ஆன்பீ என்பது இயல்பாயினும் இந்த நூற்பாவின்படி ஆப்பீ என வரும்.

235. குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யளுள் உரித்தே.

குறில் கீழ் வரும் ஆகாரம் அகரமாகக் குறுகுதலோடு உகரமும் பெறும் என்பது செய்யுள் வழக்கமாகும்.

எ.டு. இறா + புறத்தன்ன = இறவுப்புறத்தன்ன

## 9.6 அல்வழியில் இகர ஈறு

இகர ஈறு பற்றிய நூற்பாக்கள் 14 உள்ளன. இவை அனைத்தும் வேற்றுமைப் புணர்ச்சிக்குரியன. அல்வழியின் இலக்கணம் (இகர ஈற்றுக்கு) தொகைமரபில்

வேற்றுமை அல்வழி இ, ஐ என்னும்
ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலைஇய,
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர்,

எனக் கூறிவிட்டதால் ஈண்டு உயிரீற்றுப் புணரியலில் மீண்டும் கூறாமல் விடப்பட்டது.

பருத்தி + குறிது = பருத்தி குறிது - இயல்பு
அலி + கொற்றன் = அலிக்கொற்றன், வல்லெழுத்து மிகுதி
கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது என்பன உறழ்ச்சி.

## 9.7 வேற்றுமையில் இகர ஈறு

இகர ஈறு முன் பெயர்ச் சொல்வரின் ஒற்று மிகும்.

236. இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

எ.டு. கிளி + கால் = கிளிக்கால், கிளி + சிறகு = கிளிச்சிறகு.

237. இனி அணி என்னும் காலையும் இடனும்
வினை யெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன.

இகர ஈறாகிய இனி, அணி என்ற சொற்கள் முன்பும் இகர ஈற்று வினை எச்ச முன்பும்
இகரச் சுட்டு முன்பும் வல்லினம் மிகும்.

எ.டு. இனி + கொண்டான் = இனிக் கொண்டான்
அணி + கொண்டான் = அணிக் கொண்டான்
தேடி + கொண்டான் = தேடிக் கொண்டான்
இ + கொற்றன் = இக்கொற்றன்

இகரச் சுட்டு முன் வல்லினம் அல்லாமல் பிற கணம் வந்தால் மெல்லினத்திற்கு மெல்லினமும் இடையின, உயிரனங்களுக்கு வகரமும் மிகும்.

239. சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே.

முற்கிளந்தது என்பது. உயிர் மயங்கியலில் 206, 207, 208 கூறிய நூற்பாவின்படி என்பதாம்.

இ +ஞாலம் = இஞ்ஞாலம், இந்நூல், இம்மணி (மெல்லினம்)
இ + யாழ் = இவ் யாழ், இவ்வளை (இடையினம்)
இ + அடை = இவ்வடை (உயிரினம்)

238. இன்றி என்னும் வினை எச்ச இறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே.

இன்றி அன்றி என்னும் வினை எச்சங்கள் செய்யுளில் உகரமாகத் திரியும்.

எ.டு. உப்பின்றி + புற்கை = உப்பின்று புற்கை
நாளன்றி + போகி = நாளன்று போகி.

இகர ஈற்று அளவுப் பெயர் புணர்தல் பற்றிக் கூறும்போது தூணி என்ற பெயர் முன் பதக்கு என்னும் சொல் வந்தால் வலி மிகும்.

240. பதக்கு முன் வரினே தூணிக் கிளவி

முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே.



எ.டு. தூணி + பதக்கு = தூணிப்பதக்கு



அளவுப் பெயரான நாழி முன்னா் உரி என்னும் சொல் வரின் ழகரம் கெட்டு டகரம் வரும்.

241. உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகர மெய்யொடுங் கெடுமே
டகாரம் ஒற்றும் ஆவயி னான.

எ.டு. நாழி + உரி = நாடுரி

இந்நூற்பாவில் பொதுவாக இறுதி இகரம் என்றதால் வருமொழி இகர முன்பும் நிலைமொழி இகர முன்பும் பிற சொல்வரின் வலி மிகும்.

எ.டு. நாழி + காயம் = நாழிக்காயம்
உரி + காயம் = உரிக்காயம்

காலத்தைக் குறிக்கும் இகர ஈற்றுச் சொல் வலிமிகலோடு சாரியை பெறும்.

242. பனிஎன வரூஉம் கால வேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை ஆகும்.

எ.டு. பனி + கொண்டான் = பனியத்துக் கொண்டான்

இவ்வாறே ஐம்பூதத்துள் ஒன்றாகிய வளி (காற்று) என்ற இகர ஈறும் மேற்படிபோல வல்லினம்
மிகுதலோடு சாரியையும் பெறும்.

243. வளிஎன உரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

எ.டு. வளி + கொண்டான் = வளியத்துக் கொண்டான்.

மரத்தை உணா்த்தும் புளி என்னும் இகரச் சொல் முன் அம் சாரியை வரும்.

245. புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை



எ.டு. புளி + கோடு = புளியங்கோடு

குறிப்பு

புளி என்பது மரத்தைக் குறிக்காமல் சுவையைக் குறித்தால் மெல் எழுத்துமிகும்

246. ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே.

எ.டு. புளி + கூழ் = புளிங்கூழ்
புளி + சோறு = புளிஞ்சோறு

247. வல் எழுத்து மிகினும் மானம் இல்லை
ஒல்வழி அறிதல் வழக்கத் தான.

சுவைப் பெயரில் வல்லெழுத்தும் மிகலாம்.

எ.டு. புளி + கூழ் = புளிக்கூழ்

244. உதிமரக் கிளவி மெல்எழுத்து மிகுமே.

உதி என்ற இகர ஈற்று மரப்பெயர் மெல் எழுத்து மிகும்

எ.டு. உதி + கோடு = உதிங்கோடு.

248. நாள் முன் தோன்றும் தொழில் நிலைக் கிளவிக்கு
ஆன் இடை வருதல் ஐயம் இன்றே.

இகர ஈற்று நாட்பெயர் முன் வலிவரின் ஆன் சாரியை பெறும்

எ.டு. பரணி + கொண்டான் = பரணியாற்கொண்டான்

249. திங்கள் முன்வரின் இக்கே சாரியை

மாதப் பெயர் முன் இக்குச் சாரியை பெறும்
எ.டு. ஆடி + கொண்டான் = ஆடிக்குக் கொண்டான்.

## 9.8 ஈகார ஈறு

ஈகார ஈற்றுப் புணர்ச்சியாக 5 நூற்பாக்கள் உள்ளன. அவற்றுள் அல்வழிப் புணர்ச்சி 3. வேற்றுமைப் புணர்ச்சி 2.

### அல்வழிப்புணர்ச்சி

250. ஈகார இறுதி ஆகார இயற்றே.

ஈகார இறுதி அல்வழியில் மிகும்.

எ.டு. தீ + கடிது = தீக்கடிது

252. இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியும் உள என மொழிப.

இடப்பொருளை உயர்த்தும் மீ என்ற சொல் முன் வலி மிகும்.

எ.டு. மீ + கோன் = மீக்கோன்
மீ + பல் = மீப்பல்

வல்லினம் மிகுதலோடு மெல்லினமும் மிகலாம்.

மீ + தோல் = மீந்தோல்.

251. நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும்.

வலி, மெலியோ மிகாமல் இயல்பாக வருதல் உண்டு.

எ.டு. நீ + குறியை = நீ குறியை (நீ என் பெயர்)
பீ + குறிது = பீகுறிது (இடக்கரடக்கலான ஈகார ஈறு)
மீ + கண் = மீகண் (மீ எனற் இடப்பெயர்)

மீகண் என்பது வேற்றுமையாயினும் மிகாமல் வரும் தொடர்ச்சி நோக்கிக் கூறப்பட்டது.

**வேற்றுமைப்புணர்ச்சி**

253. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே!

ஆகார ஈறு வேற்றுமையில் மிகும் என்பது போல் ஈகாரமும் மிகும் என்பது கருத்து.

எ.டு. ஈ+ கால் =ஈக்கால்

ஈகார ஈற்று நீ என்னும் பெயர் நெடுமுதல் குறுகி னகரம் பெறும்.



254. நீஎன் ஒருபெயர் உருபியல் நிலையும்

ஆவயின் வல் எழுத்து இயற்கை யாகும்.

எ.டு. நீ + கை = நி + கை = நின்கை

ஈண்டு வல் எழுத்து இயற்கையாகும் என்றது வல் எழுத்து மிகாது என்ற பொருள்.



## 9.9 உகர ஈறு

உகர ஈற்றில் 10 நூற்பாக்கள் உள்ளன. அவற்றுள் அல்வழிப்புணர்ச்சிக்கு 5. வேற்றுமைப் புணர்ச்சிக்கு 5.

**அல்வழிப்புணர்ச்சி**

255. உகர இறுதி அகர இயற்றே.

உகர ஈற்றுப்பெயர்கள் அல்வழியில் ஈற்று அல்வழிக்கு கூறியபடி புணரும் (203) கசதபக்கள் வரின் மிக்கு முடியும்.

எ.டு. கடு + குறிது = கடுக்குறிது

256. சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும்.

நெட்டெழுத்தான உகரத்தின் முன் வலி மிகும்.

எ.டு. உ + கொற்றன் = உக்கொற்றன்

257. ஏனவை வரினே மேல்நிலை யியல்பே

சுட்டின் முன் வல்லினம் இல்லாதவை வந்தால் வந்த மெய்யும், வகரமும் வரும்.

எ.டு உ + ஞாண்= உஞ்ஞாண், உந்நூல், உம்மணி, உ + யாழ் = உவ்யாழ் - உ + வட்டு = உவ்வட்டு, உ + அடை = உவ்வடை

உகரச் சுட்டு மிகாது வருதல் உண்டு.

258. சுட்டு முதல் இறுதி இயல்பா கும்மே.

சுட்டுமுதல் என்பது அது, இது உது என்ற சொற்கள்
எ.டு அது + குறிது = அதுகுறிது

259. அன்று வரு காலை ஆ வா குதலும்

ஐவரு காலை மெய் வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப.

அது என்பதன் முன் அன்று என்னும் சொல் வந்தால் (செய்யுளில்) நிலைமொழி உகரம் ஆகாரமாகும்.

எ.டு. அது + அன்று = அதா அன்று.
வருமொழியில் ஐ என்ற சாரியை புணரின் உகரம் கெடும்.

எ.டு. அது + ஐ = அதை

**வேற்றுமைப்புணர்ச்சி**

260. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

அகர ஈறுபோல உகர ஈறும் வேற்றுமையில் மிகும் என்பதாம்.

எ.டு. கடு + காய் = கடுக்காய்

261. எருவும் செருவும் அம்மொடு சிவணித்
திரிபிடன் உடைய தெரியுங் காலை
அம்மின் மகரம் செருவயின் கெடுமே
தம் ஒற்று மிகூஉம் வல் எழுத்து இயற்கை.

எரு செரு - அம் சாரியை பொருந்தி, வேறுபடும் இடங்களும் உள.

எரு + குழி = எருவங்குழி. செரு + களம் = செருவக்களம் (அம்மின் மகரம் வலியானதும்.

இந்த இரு சொற்களும் அம் சாரியை பெறாதபோது வலி மிகும். மெல் எழுத்தும் மிகும்.

எருக்குழி, செருக்களம்

262. ழகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான.

ழகரத்தோடு கூடிய உகர இறுதி நீளும்

எ.டு. பழு + பல் = பழூஉப்பல் (இங்ஙனம் வருதல் செய்யுளில் இருக்கலாம் என்பது கருத்து)

263. ஒடு மரக் கிளவி யுதிமர இயற்றே.

ஒடு என்னும் உகர ஈற்று மரப்பெயர் முன் மெல் எழுத்து மிகும்

எ.டு. ஒடு + கோடு = ஒடுங்கோடு (உதிங்கோடு என மெலி மிகுதல் பற்றியது 244ஆம் நூற்பாவாகும்)

264. சுட்டு முதல் இறுதி உருபியல் நிலையும்
ஒற்றிடை மிகா அ வல்லெழுத்து இயற்கை.

உகர ஈற்று சுட்டுப் பெயர் வலி முன் உகரம் கெட்டு அன் சாரியை பெறும் வலி மிகாது.

எ.டு. அது + கோடு = அதன்கோடு (அத் இன் கோடு)

## 9.10 ஊகார ஈறு

ஊகார ஈறு பற்றிய நூற்பாக்கள் 8. அவற்றுள் அல்வழிப் புணர்ச்சிக்கு 2 வேற்றுமைப் புணர்ச்சிக்கு 6.

**அல்வழிப்புணர்ச்சி**

265. ஊகார இறுதி ஆகார இயற்றே

எ.டு. கொண்மூ + கடிது = கொண்மூக்கடிது.

266. வினை எஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையும் காலை அவ்வகை வரையார்.

ஊகார ஈற்றுப் பெயர். ஆகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும். ஊகார ஈற்று வினை எச்சம், முன்னிலைச் சொற்கள் முன் வலி மிகும்.

எ.டு. உண்ணூ + கொண்டான் = உண்ணூக் கொண்டான்

கைதூ + கொற்றா = கைதூக் கொற்றா (கைதூ – செயலைநீக்குவாயாக)

**வேற்றுமைப்புணர்ச்சி**

267. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

ஊகாரம் வேற்றுமையில் மிகும்.

எ.டு. கொண்மூ + குழாம் = கொண்மூக்குழாம்.

268. குற்றெழுத்து இம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி

குறில் கீழ் ஊகாரமும், ஓரெழுத்து ஒரு மொழியான ஊகாரமும் உகரம் பெறும். வலி மிகும்.

எ.டு. உடூ + குறை = உடூஉக் குறை (உடூ - நட்சத்திரம்)
தூ + குறை = தூஉக்குறை (தூ – ஊன்)

இந்நூற்பாவில் நிற்றல் வேண்டும் எனக் கூறியதால் உயர்திணைப் பெயர் முன் வலி மிகும் என்பது கருத்து.

உடூ + கை = உடுஉக்கை. மகடூ + கை = மகடூஉக்கை.

269. பூ என் ஒருபெயர் ஆஇயல் பின்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே

பூ என்னும் பெயர் முன் வல்லினம் வரின்மிகுதலோடு மெல்லினமும் மிகும்.

எ.டு. பூ + கொடி பூங்கொடி, பூக்கொடி

270. ஊ என ஒருபெயர் ஆவொடு சிவணும்

ஊ என்னும் ஒருபெயர் ஆ என்னும் பெயரோடு ஒத்து னகரம் பெறும்.

ஊ + குறை = ஊன்குறை

271. அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே
தக்கவழி அறிதல் வழக்கத் தான.

ஊ என்பது னகரம் பெறும்போது அக்குச் சாரியை பெறும்.

ஊ + குறை = ஊன்குறை – ஊனக்குறை (ஊன் + அக்கு + குறை)

272. ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
இன் இடை வரினும் மானம் இல்லை



ஆடூ, மகடூ சொற்கள் இன் சாரியை பெறும்.

எ.டு. ஆடூஉ + கை = ஆடூஉவின் கை, மகடூஉவின் கை.



## 9.11 தொகுத்துக் காண்போம்

- உயிரீறு நாற்கணத்துச் சொற்களோடும் புணரும் இயல்பு குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.
- அல்வழி, வேற்றுமை என இருவகையில் புணர்ச்சி அமையயும் முறை குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்.

## 9.12 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. உயிர் மயங்கியலில் செய்யுள் இலக்கணமாகக் கூறப்பட்ட இரண்டு செய்தியைக் கூறுக.
2. அகர ஈற்றின் அல்வழிப் புணர்ச்சிகளை விவரிக்க.
3. புளி என்னும் இகர ஈற்றுச் சொல் பெறும் விதிகளை எடுத்துக்காட்டு தந்து விளக்குக்

## 9.13 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974

2. நச்சினார்க்கினியர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்புரையுடன், 1967

# கூறு – 10

# உயிர் மயங்கியல் - எகர,ஒகர,ஏகார,ஐகார,ஓகார,ஔகார ஈறுகள்

## 10.1 முன்னுரை

எகர, ஒகர, ஏகார, ஐகார, ஓகார, ஔகார ஈறுகள் அல்வழி,வேற்றுமைப் புணர்ச்சியில் பயிலும் விதம் குறித்து இக்கூறு விளக்குகிறது.

## 10.2 குறிக்கோள்கள்

- எகரமும் ஒகரமும் அரிதாகவே மொழிக்கு இறுதியில் வரும் என்பனத் தெரிந்து கொள்வீர்கள்.
- ஏகார, ஐகார, ஓகார, ஔகார ஈறுகள் அல்வழி,வேற்றுமை என்னும் இருநிலையிலும் புணரும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 10.3 எகர, ஒகர ஈறுகள்

எகரமும் ஒகரமும் அரிதாகவே மொழிக்கு இறுதியில் வரும். குறிப்பாகக் கூறினால் எகரம் மெய்யுடன் சேர்ந்து மொழி இறுதியாக வாராது. எகரம் தானே ஈறாகும். அளபெடையாக வரும்போதும் வரும்.

அவ்வாறே ஒகரம் நகரத்தோடு மட்டும் ஈறாகும். எனவே எகர ஒகரங்கள் பெரும்பாலும் வாராததால் அவை பற்றிய விதிகளை அல்வழிப் புணர்ச்சியில் இரண்டு நூற்பாக்களில் ஒரு சேரத் தொல்காப்பியர் கூறினார்.

278. எகர ஒகரம் பெயர்க்கு ஈறாகா
முன்னிலை மொழிப என்மனார் புலவர்
தேற்றமும் சிறப்பும் அல்வழி யான

எகரமும் ஒகரமும் பெயருக்கு ஈறாகவாரா. ஆனால் ஏஎ, ஓஒ என முன்னிலை வினையாக ஈறாகும். மேலும் அவை (ஏஎ, ஓஒ) இடைச்சொல் என்பதால் எகரம் தேற்றப் பொருளிலும் ஒகரம் சிறப்புப் பொருளிலும் வரும்போது வல்லினம் மிகாமல் வரும்.

யானே + கொண்டேன் = யானே கொண்டேன்
ஓ + கொண்டான் = ஒ கொண்டான்

இவற்றுள் யான் தான் என்ற பொருள் உறுதிப்படுவதால் எகரம் தேற்றப்பொருள் தந்தது. அவன் பெற்றுக் கொண்டான்! என வியப்பில் கூறுவதால் ஒகரம் சிறப்புப் பொருள் தந்தது.

இங்ஙனம் இடைச் சொற்களாக நின்று பொருள் தந்த எ, ஒ எழுத்துக்கள் முன்னிலை வினையாகா வழி மிகா.

274. தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூறு இயற்கை வல்லெழுத்து மிகா.

ஆனால் முன்னிலை வினையாக (அளபெடையளவில்) வரும்போது. ஏள+கொற்றா ஏளக்கொற்றா; ஓஒக்கொற்றா என வலி மிகுந்து வரும் என இளம்பூரணர் உரையில் கூறுகிறார்.



## 10.4 ஏகார ஈறு

ஏகார ஈறுபற்றி 6 நூற்பாக்கள் உள்ளன. அவற்றுள் அல்வழிக்கு 2. வேற்றுமைக்கு 4 ஆகும்.

### அல்வழிப்புணர்ச்சி

275. ஏகார இறுதி ஊகார இயற்றே.

ஏகார ஈற்றுப்பெயர் ஊகார இறுதிப்பெயரின் இயல்புடையது வலி மிகும்.

எ.டு. சே – கடிது – சேக்கடிது, சேச்சிறிது, சேப்பெரிது.

மாறு கோடல் பொருளிலும் வினாப் பொருளிலும் எண்ணுப் பொருளிலும் வரும் ஏகார
ஈற்று இடைச்சொல் வலி மிகாமல் வரும்.

276. மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்.

எ.டு. யானே + கொண்டேன் = யானே கொண்டேன். (நான் கொள்ளவில்லை என்ற தொனியில் கூறப்பட்டதால் மாறுகொள் பொருள்)

நீயே கொண்டாய் (நீயா கொண்டாய் என்ற வினா)

கொற்றனே + சாத்தனே = கொற்றனே சாத்தனே (கொற்றனும் சாத்தனும் என எண்ணும் மைப் பொருளில் வந்தது)

இந்நூற்பாவில் கூறிய என்ற சிறப்பால் அவனே + கொண்டான் = அவனே கொண்டான் எனப் பிறரை நீக்கிய பிரிநிலைப் பொருளிலும். கடலே + பாடெழுந்தொலிக்கும் = கடலேபாடெழுந் தொலிக்கும் என ஈற்றசைப் பொருளிலும் வல் எழுத்து மிகாமல் இயற்கையாக வரும் என்று இளம்பூரணர் உரை கூறுகிறார்.

### வேற்றுமைப்புணர்ச்சி

277. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

ஏகார ஈற்றுப் பெயர் வேற்றுமையில் வலி மிகும்

எ.டு. வே + குடம் = வேக்குடம் (வே-வேதல்)

ஏ என்ற பெயர் வலி மிகுதலோடு எகர எழுத்தையும் பெறும்.

278. ஏஎன் இறுதிக்கு எகரம் வருமே.

ஏ – கொட்டில் = ஏஎக்கொட்டில்.

279. சே என் மரப்பெயர் ஒடுமர இயற்றே.

ஒடு மர விதியைப் பெற்று மெல்லெழுத்து மிக்கு முடியும்.

எ.டு. சே + கோடு = சேங்கோடு: சேந்தோல்.

சே என்பது மரத்தைக் குறிக்காமல் பெற்றம் (மாடு) என்பதைக் குறித்தால் இன்
சாரியை பெறும்

280. பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும்.

எ.டு. சே + கோடு = சேவின் கோடு.

## 10.5 ஐகார ஈறு

ஐகார ஈறு பற்றி 9 நூற்பாக்கள் உள்ளன. அவை யாவும் வேற்றுமைப் புணர்ச்சி பற்றியன. அல்வழிப் புணர்ச்சிபற்றித் தொகை மரபில் (159). வேற்றுமை அல்வழி இ, ஐ தொடங்கும் நூற்பாவில் கூறப்பட்டுவிட்டதால் ஈண்டு கூறவில்லை.

ஆண்டு உரைத்தபோது வலி மிகாமல் இயல்பும் (அரை குறிது) புலைக் கொற்றன் என மிகுந்தும் தினை குறிது, தினைக் குறிது என உறழ்ந்தும் வரும் என்பதாக மூன்று நிலைகள் விளக்கப்பட்டன.

**வேற்றுமைப் புணர்ச்சி**

281. ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை ஆயின் வல் எழுத்து மிகுமே.

வலி மிகும்.

எ.டு. யானை + கோடு = யானைக்கோடு

ஐகார ஈற்று மரப் பெயர்கள் மெல் எழுத்து மிக்கு வரும்.

282. விசை மரக் கிளவியும் ஞெமையும் நமையும்
ஆ முப் பெயரும் சேமர இயல.

எ.டு. விசை + கோடு = விசைங்கோடு, ஞெமைங்கோடு, நமைங்கோடு.

ஏகார ஈற்று மரப் பெயராகிய சே என்பது சேங்கோடு என்று வருவதைப் போல ஐகார ஈற்று மரப்பெயரும் வரும் என்பதாம்.

பனை என்ற சொல்லில் ஏற்படும் புணர்ச்சி மாற்றங்கள் வருமாறு.

285. பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் றாகும் ஐஎன் உயிரே
ஆகாரம் வருதல் ஆவயி னான.

பனை முன் அட்டு என்ற சொல் வர நிலைமொழியில் ஐ கெடும். ஆகாரம் வரும்.

பனை + அட்டு = பன் + ஆ + அட்டு: பனா அட்டு (பனை வெல்லம்)

ஈண்டு ஆவயின் எனக் கூறப்பட்டதால் ஐகாரம் கெட்டு ஆகாரம் வரும் என்ற விதிப்படி சில ஐகார ஈற்றுப் பெயர் வரலாம் என இளம்பூரணர் கூறி, விச்சை + வாதி - விச்சாவாதி என உதாரணம் காட்டியுள்ளார்.

286. கொடிமுன் வரினே ஐஅவண் நிற்பக்
குடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி

பனை என்ற சொல்லை ஐ கெடாமல் வல்லினம் மிக்குவரும்.

எ.டு. பனை + கொடி - பனைக் கொடி

ஐகார ஈறு சில சாரியை பெற்று வருவது பற்றிக் கூறும்போது வற்றுச் சாரியை பெறுவதை
282. ஆம் நூற்பா கூறுகிறது.

282. சுட்டு முதல் இறுதி உருபியல் நிலையும்.

ஐகாரத்தை ஈறாக உடைய சுட்டு அவை என்பது. இதன் புணர்ச்சி இலக்கணம் உருபியலில் கூறும்போது வற்று எனும் சாரியை புணரும்போது ஐகாரம் நிற்றலும் நில்லாமையும் உண்டு எனப்பட்டது.

எ.டு. அவை + கோடு = அவையற்றுக்கோடு (ஐ கெடாமல்)
(அவை+ வற்று + கோடு. வற்று என்பது சுட்டுமுதல் ஐ முன் அ.்.கானாகி நிற்றல் என்ற விதி புணரியலில் கூறப்பட்ட வழி வற்று – அற்று என நிற்கும்)
அவை + கோடு = அவற்றுக்கோடு (ஐ-கெட்டு) (அவ் + வற்று) (அற்று + கோடு)

சில பெயர்கள் அம் சாரியை பெறும். அப்போது சில நிலைமொழியின் ஐ கெட்டும் வரும்.

284. பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐ என் இறுதி அரை வரைந்து கெடுமே
மெய் அவண் ஒழிய என்மனார் புலவர்.

எ.டு. பனை + காய் = பனங்காய் (ஐ கெட்டு அம் பெற்றது) (பன் + அம் + காய்)
ஆவிரை + கோடு = ஆவிரங்கோடு (ஐ கெட்டு அம்) (ஆவிர் + அம் + கோடு)
அரை + கோடு = அரையங்கோடு (ஐ கொடாது அம்)

287. திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன.

ஐகார ஈற்றுத் திங்கட் பெயர் நாட்பெயர் சாரியை பெறும்.

ஈண்டு முந்து கிளந்தது என்பதானது இகர ஈற்றுத் திங்கள் பெயர் இக்குச் சாரியை பெறும் என்பது போல ஈண்டு ஐ யீறும் பெறும் என்பதாகும். நாட்பெயர் ஆன் சாரியை பெறும்.

எ.டு. சித்திரை + கொண்டான் = சித்திரைக்குக் கொண்டான்.
கேட்டை + கொண்டான் = கேட்டையாற்கொண்டான்.

288. மழை என் கிளவி வளியியல் நிலையும்

இகர ஈறாகிய வளி என்ற சொல் அத்தும், இன்னும் பெறுவதைப் போல் மழை என்ற சொல் பெறும்

எ.டு. மழை + கொண்டான் = மழையத்துக் கொண்டான், மழையிற்கொண்டான்.

ஐ கார இறுதி செய்யுளில் வருவது பற்றி

289. செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐஎன் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும்.

வேட்கை என்ற சொல் முன் அவா என்னும் சொல் வந்தால் 'கை' என்ற ஐகாரம் ஏறிய ககரமும் சேர்ந்து நீங்க நிலைமொழி டகரம் ணகரமாகும்.

எ.டு. வேட்கை + அவா = வேணவா. (வேட் + அவா = வேண் + வா)

## 10.6 ஓகார ஈறு

ஓகார ஈற்றில் 6 நூற்பாக்கள் உள்ளன. அவற்றுள் அல்வழி 3. வேற்றுமை 3 ஆகும்.

**அல்வழிப் புணர்ச்சி**

290. ஓகார இறுதி ஏகார இயற்றே.

ஓகார இறுதி ஏகார இறுதி போல வலி மிகும்.

எ.டு. ஓ + கடிது = ஓக்கடிது (ஓ மதகுநீர் தாங்கும் பலகை)

மாறு கோடல், வினா, ஐயம் போன்ற பொருள்களில் வரும் ஓகார ஈற்று இடைச்சொற்கள் வல்லினமுன் மிகாமல் இயல்பாய் வரும்.

291. மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்.

எ.டு. யானோ + கொண்டேன் = யானோ கொண்டேன் (யான் கொள்ளவில்லை என்ற மாறுபட்ட பொருளைத் தருகிறது)

நீயோ + கொண்டாய் = நீயோ கொண்டாய், (வினா)
பத்தோ + பதினைந்தோ = பத்தோ பதினைந்தோ (ஐயம்)

இந்நூற்பாவில் கூறிய என்ற மிகையால் பிரிநிலை, தெரிநிலை, சிறப்பு, எண்,ஈற்றசை போன்ற பொருள்களில் வலி மிகாமல் இயல்பாய் முடியும்.

அவனோ கொண்டான் - பிரிநிலை (மற்றவர் இல்லை என்பது கருத்து)
நன்றோ தீதோ அன்று – தெரிநிலை (தெளிவாகத் தெரிவது)
ஒஓகொண்டான் - சிறப்பு (வியப்புப் போல)
களிறென்கோ கொய்யுளைமா என்கோ – எண் (களிறும் மாவும்)
யானோ தேறேன் - ஈற்றசை (தேறமாட்டேன்)

292. ஒழிந்ததன் நிலையும் ஒழிற்தவற் றியற்றே

ஒழியிசைப் பொருளில் ஓகார ஈறு வரும். வந்தாலும் வலி மிகாது.

எ.டு. கொளலோ + கொண்டான் = கொளலோ கொண்டான் (கொள்வதற்காகவா கொண்டான்: இல்லை, ஒப்புக்காகக் கொண்டான் என்பது இங்குள்ள ஓகாரம் தரும் பொருளாகும்.

வேற்றுமைப் புணர்ச்சி

293. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
ஓகரம் வருதல் ஆவயி னான.

வலி மிகும் போது இடையே ஒகர எழுத்துப் பேறு பெறும்.

எ.டு. ஓ + கடுமை = ஓஒக்கடுமை, ஓஒப் பெருமை.

294. இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்.

ஒகர எழுத்துப்பேறு இல்லாமல் வருதலும் உண்டு.

எ.டு. கோ + இல் = கோயில் (கோஒயில் என வரவில்லை)

295. உருபியல் நிலையும் மொழியுமா ருளவே
ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும்.

ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை என உருபியலில் கூறியபடி கோ + கை = கோ ஒன் கை என வரும்

## 10.7 ஔகார ஈறு

ஔகார ஈறு பற்றி ஒரு நூற்பா கூறப்பட்டுள்ளது. அதில் அல்வழி, வேற்றுமை ஆகிய இரண்டு புணர்ச்சியிலும் வலி மிகும் இடையில் உகரப் பேறு பெறும் எனப்பட்டது.

296. ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்
செவ்விது என்ப சிறந்திசி னோரே.

எ.டு. கௌ + கடிது = கௌவுக்கடிது
கௌ + கடுமை = கௌவுக்கடுமை.

இந்நூற்பாவில் செவ்விது எனக் கூறிய மிகையால் கௌவு ஞான்றது. கௌவு ஞாற்சி. கௌவு வலிது. கௌவு வலிமை என மெல்லின இடையினத்தோடு வரும்போது வுகரப் பேறு வரும் என்பதாம்.

## 10.8 தொகுத்துக் காண்போம்

- எகரமும் ஒகரமும் அரிதாகவே மொழிக்கு இறுதியில் வரும் என்பனத் தெரிந்து கொண்டீர்கள்.
- ஏகார, ஐகார, ஓகார, ஔகார ஈறுகள் அல்வழி,வேற்றுமை என்னும் இருநிலையிலும் புணரும் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.
- ஐகார ஈற்றுத் திங்கட் பெயர்,நாட்பெயர் சாரியை பெறுவது குறித்து அறிந்து கொண்டீர்கள்.

## 10.9 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. ஏகார இறுதி ஊகார இயற்றே – விளக்குக.

2. புணர்ச்சி விதி கூறுக 1.நாடுரி, 2. வேணவா, 3. பனா அட்டு

## 10.10 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம்
எழுத்ததிகாரம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை, 1974

2. நச்சினினார்க்கினியர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்புரையுடன், 1967

## கூறு – 11

### புள்ளிமயங்கியல் - ஞகர, நகர, ணகர, மகர னகர ஈறுகள்

### 11.1 முன்னுரை

ஞ,ந,ண,ம,ன என்னும் ஐந்து மெய்யீறுகள் நிலைமொழி ஈறுகளாக இருந்து வருமொழியோடு புணரும் முறை குறித்து இக்கூறில் விளக்கப்பெறுகிறது.

### 11.2 குறிக்கோள்கள்

- ஐந்து ஈறுகளில் சில உகரம் பெறுதல், சில ஈறுகள் கெட்டு முடிவன உண்டு என்பதை அறிந்து கொள்வீர்கள்.
- வேற்றுமைப் பொருட்புணர்ச்சி அடிப்படையில் சில ஈறுகள் உருபும் சாரியையும் பெறுதல் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஈறு திரிந்து முடிவன உண்டு என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

மொழிக்கு ஈறாக வரும் எழுத்துக்கள் 11. அவைகளுள் ஞ, ண, ந, ம, ன என்ற

மெல்லின ஈறு 5. ய, ர, ல, வ, ழ, ள என்ற இடையின ஈறுகள் 6 ஆகும்.

### 11.3 ஞகர ஈறு

ஞகர ஈறு 2 நூற்பாக்கள். அல்வழி, வேற்றுமையில் ஒரே விதியைப் பெறும்.

297. ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
உகரம் வருதல் ஆவயி னான.

ஞகர ஈறு அல்வழியிலும் வேற்றுமையிலும் தொழிற் பெயர் அடிப்படையில் உகரம் பெற்றுப் புணரும். வலி மிகும். ஞ் ஈறு உடையது உரிஞ் என்ற ஒரு சொல்தான்.



எ.டு உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது (அல்வழிப் புணர்ச்சி)

உரிஞ் + கடுமை = உரிஞுக்கடுமை (வேற்றுமைப் புணர்ச்சி)

ஞ முன் வலி வருதல் போல ஞ, ந, ம, வ என்ற எழுத்துக்களை முதலாக உடைய
வருமொழிகள் வந்தால் உகரம் பெறும் எழுத்துக்கள் மிகா.

298. ஞ, ந, ம, வ இயையினும் உகர நிலையும்.

ஞ கரம் பற்றி முன்னர் கூறியதால் அதன் முன் ஞ, ந, ம, வ என்பவை இயையின் என்பது பொருள்.

எ.டு. உரிஞ் + உ + ஞான்றது : உரிஞு ஞான்றது (அல்வழி)
உரிஞ் + உ + ஞாற்சி : உரிஞு ஞாற்சி (வேற்றுமை)

இடையினத்தில் யகரமும் உயிரினமும் வருமொழியில் வந்தால் உகரம் வராது.

உரிஞ் + யாது : உரிஞ்யாது
உரிஞ் + அழகு : உரிஞ் அழகு

## 11.4 நகர ஈறு

நுகர ஈறுபற்றி 4 நூற்பாக்கள் உள்ளன. அல்வழியில் 1, வேற்றுமையில் 3.

**அல்வழிப்புணர்ச்சி**

நகர ஈறு அல்வழியில் வல்லினத்தோடு புணரும் போது முன்னர் கூறிய உகரப் பேறு பெற்று மிகுந்து வரும்.

299. நகர இறுதியும் அதனோ ரற்றே

எ.டு. : பொருந் + கடிது = பொருநுக்கடிது (பொருந் + உ + கடிது)

மேலும் வருமொழியில் மெல்லினம், இடையினம் வந்தாலும் உகரம் வரும்.

பொருந் + ஞான்றது = பொருதுஞான்றது
பொருந் + வலிது = பொருநுவலிது.

இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

குறிப்பு

**வேற்றுமைப்புணர்ச்சி**



நகர ஈறு வேற்றுமையில் உகரம் பெறாது. அகரம் பெறும்; வலிமிகும்

300 வேற்றுமைக்கு உக்கெட அகர நிலையும்.

எ.டு : பொருந் + அ + கடுமை = பொருநக்கடுமை.
வெரிந் + அ + கடுமை = வெரிநக்கடுமை

வெரிந் என்னும் நகர ஈற்றுச் சொல் வல்லினத்தோடு புணரும் போது நகரம் கெட
முன் நூற்பாவின் படி பெற்ற அகரமும் கெட இன மெல் எழுத்து மிகும்.

301. வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி
வருமிடன் உடைத்தே மெல் எழுத்தியற்கை

எ.டு. : வெரிந் + குறை = வெரிங்குறை
(வெரிந் + அ + குறை – வெரி + குறை)

302. ஆவயின் வல்எழுத்து மிகுதலும் உரித்தே

வெரிந் சொல் புணர்ச்சியில் வல்லினமும் மிகலாம்.

எ.டு: வெரிந் + குறை = வெரிக்குறை
(வெரிந் + அ + குறை – வெரி+ குறை)

## 11.5 ணகர ஈறு

ணகர ஈற்று நூற்பாக்கள் 8. அவற்றுள் அல்வழிக்கு 1. வேற்றுமைக்கு 5. இருவழியும் 2.

**அல்வழிப்புணர்ச்சி**

எண் என்னும் ணகர ஈற்று உணவுப்பெயர் அல்வழியில் வல்லினம் வர டகரமாகத் திரியும்.

309. வேற்றுமை அல்வழி எண்என் உணவுப் பெயர்
வேற்றுமை இயற்கை நிலையிலும் உரித்தே.

எ.டு. : எண் + கடிது = எட்கடிது. நிலையலும் என்றதால் எண் கடிது என இயல்பாகவும் நிற்கும்

**வேற்றுமைப்புணர்ச்சி**

ணகர ஈறு வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வர டகரமாகத் திரியும்.

303. ணகர இறுதி வல்லெழுத்து இயையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

எ.டு. : மண் + குடம் = மட்குடம்

ஆண், பெண், உகர ஈற்றுப் பெயர் இயல்பாக வரும்.

304. ஆணும் பெண்ணும் அ∴றிணை இயற்கை.

ஆண், பெண் என்பன அ∴றிணைக்கும் உயர்திணைக்கும் (விரவுப் பெயர்) பொதுவான சொற்கள். இவை அ∴றிணை போல் வேற்றுமையில் இயல்பாய் வரும்மென்பது தொகை மரபில் கூறப்பட்டது என்க.

எ.டு : ஆண் + கை = ஆண்கை: பெண்கை,

வேற்றுமையில் இயல்பாதல் போலத் தொகை மரபின்படி ஆண் கடிது, பெண் கடிது என அல்வழியில் இயல்பாகும் என்க என்று இளம்பூரணர் கூறுகிறார்.

ஆண் என்பது மரப் பெயராகப் புணரும் போது அம்சாரியை பெறும். (அரை என்ற
மரப்பெயர் போல)

305. ஆண்மரக் கிளவி அரைமா இயற்றே

எ.டு. : ஆண் + கோடு = ஆணங்கோடு

ணகர ஈறு சாரியை பெறுதல்

306. விண்என வரூஉம் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை.

ஆகாயம் என்ற பொருளை உணர்த்தும் விண் என்னும் ணகர ஈறு செய்யுளில் அத்துச் சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

எ.டு: விண் + கொட்கும் = விண்ணத்துக் கொட்கும்

விண் + குத்தும் = விண்குத்தும்.



308. கிளைப் பெயர் எல்லாம் கொளத்திரி பிலவே.

ணகர ஈற்றுக் கிளைப் பெயர் வலிவர இயல்பாகும்.

எ.டு. உமண் + குடி : உமண்குடி, உமண்சேரி

**அல்வழி. வேற்றுமை - இருவழிப்புணர்ச்சி**

ணகர ஈறு தொழிற் பெயராய் ஞகர ஈறு உகரம் பெற்று வருவது போல வரும்: வலி மிகும்.

307. தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல.

எ.டு. மண் + கடிது = மண்ணுக்கடிது (அல்வழி)
மண் + கடுமை = மண்ணுக்கடுமை (வேற்றுமை)

வருமொழி வல்லினமின்றிப் பிறகணம் வந்தாலும் உகரம் வரும்.

மண்ணு ஞான்றது, மண்ணு வலிது – (அல்வழி)
மண்ணு ஞாற்சி, மண்ணுவன்மை – (வேற்றுமை)

இந்நூற்பாவில் எல்லாம் என்ற மிகையால் தொழிற் பெயர் அல்லாத சொற்களும் உகரம் பெறும் என இளம்பூரணர் கூறினார். வெண்ணுக்கரை (வெண்ணாற்றங்கரை) எண்ணுப்பாறு (எண் ஏற்றிய தோணி: எண் - எள்: பாறு – தோணி)

முரண் என்ற தொழிற் பெயர் அல்வழியில் இயல்பும், வேற்றுமையில் திரிபும் பெறும்.

310. முரண்என் தொழிற்பெயர் முதலியல் நிலையும்.

முதலியல் என்றது முன் கூறியபடி என்பதாகும். முன் எவ்வாறு கூறப்பட்டது எனில் உகரம் பெறாத ணகர ஈறு இயல்பும் திரிபும் பெறும் நிலை, என்க (309, 303 - இயல்பும் - திரிபுமான நூற்பாக்கள்)

எ.டு. : முரண் + கடிது = முரண்கடிது (அல்வழி)
முரண் + கடுமை = முரட்கடுமை (வேற்றுமை)

## 11.6 மகர ஈற்று

மகர ஈற்று நூற்பாக்கள் 22. அவற்றுள் அல்வழி 10, வேற்றுமை 9. இருவழியும் 3 ஆகும்.

**அல்வழிப்புணர்ச்சி**

மகர ஈறு வலிவர அல்வழியில் மெல்லினமாகத் திரியும்

315. அல்வழி எல்லாம் மெல்லெழுத் தாகும்.

எ.டு. : மரம் + குறிது = மரங்குறிது

அகம் என்னும் மகர ஈறுமுன் கை என்ற சொல் வரின் அகம் என்ற சொல்லின் இறுதி இரு எழுத்துக்களும் நீங்க அ மட்டும் வரும்: அல்லது மகரம் மட்டும் நீங்க அக என நிற்கும்.

314. அகம் என் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை ஒழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே ஆசிரியர்க்க
மெல் எழுத்து மிகுதல் ஆவயினான.

எ.டு. : அகம் + கை = அங்கை
அகம் + கை – அக +கை = அகங்கை

மகர ஈற்று எண்ணுப் பெயர் மகரம் கெட்டு அத்துச் சாரியை பெறும்: வருமொழி
எண்ணுப் பெயர் வரும்.

318. அத்தொடு சிவணும் ஆயிரத்து இறுதி
ஒத்த எண்ணு முன்வரு காலை.

எ.டு. : ஆயிரம் + ஒன்று = ஆயிரத்தொன்று
(ஆயிரம் + அத்து + ஒன்று)

அடைமொழியோடு எண்ணுப் பெயர் வந்தாலும் முன் கூறியபடி மகரம் கெட, சாரியை பெறும்.
வருமொழி எண்ணுப் பெயராய் வரும்

319. அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே.

எ.டு. : பத்தாயிரத் தொன்று (பத்தாயிரம் + ஒன்று)
பத்து + ஆயிரம் = பத்தாயிரம் + அத்து + ஒன்று)

அடைமொழியோடோ, அடைமொழி இன்றியோ நிற்கும் மகர ஈற்று எண்ணுப் பெயர் முன் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் வந்தால் மகரம் கெட வலிமிகும்.

320. அளவும் நிறையும் வேற்றுமையியல்

எ.டு. பதினாயிரக்கலம் (பதினாயிரம் + கலம்) அளவுப் பெயர்
ஆயிரக்கலம் (ஆயிரம் + கலம்) அளவுப்˙பெயர்
புதினாயிரக் கழஞ்சு (பதினாயிரம் + கழஞ்சு) நிறைப் பெயர்
ஆயிரக் கழஞ்சு (ஆயிரம் + கழஞ்சு) நிறைப் பெயர்

இவ்வாறு வல்லின வருமொழியில்லாமல் பிற கணங்கள் வந்தால் மகரம் கெடும் என்று உரையாசிரியர் கூறுகிறார்.

எ.டு. : ஆயிர நாழி, ஆயிர வட்டி, ஆயிர அகல்.

மகர ஈற்றுச் சில இடப் பெயர்கள் அல்வழி வருவது பற்றிக் கீழ்வருமாறு அறியலாம்.

322. அல்லது கிளப்பின் இயற்கையாகும்.

இந்நூற்பா 321ல் வேற்றுமைப் புணர்ச்சிக் கூறிய இடப் பெயர்களான எல்லாரும் (படர்க்கை) எல்லீரும் (முன்னிலை) தாம், நாம், யாம் என்னும் நெடுமுதல் குறுகும் (தன்மை) சொற்களும் அல்வழிப் புணர்ச்சியின் போது எல்லாரும், எல்லீரும் என்னும் படர்க்கைச் சொல்லும் முன்னிலைச்˙சொல்லும் சாரியை பெறாமல் இயல்பாய் வரும் தாம், நாம், யாம் என்னும் தன்மைச் சொற்கள் நெடு முதல் குறுகாமல் வரும்.

எ.டு. : எல்லாருங் குறியர், எல்லீருங் குறியீர்:
தாம்குறிய, நாம்குறிய, யாம்குறிய,

எல்லாம் என்னும் சொல் அல்வழியில் உம் சாரியையும் மெல் எழுத்து மிகுதலையும்
உடையதாகும்.

324. மெல் எழுத்து மிகினும் மானமில்லை.

எ.டு. எல்லாங்குறியவும் (எல்லாம் + குறிய: எல்லாங் + குறிய + உம்)

எல்லாம் என்னும் சொல் உயர்திணையில் வரும் போது இடையில் நம் சாரியையும் இறுதியில் உம் சாரியையும் வரும்.

325. உயர்திணை யாயின் உருபியல் நிலையும்.

எ.டு. எல்லா நங்கையும் (எல்லாம் + கை: எல்லா + நம் + கை + உம்)

ஈண்டு எல்லாம் என்றதன் மகர ஈறு கெடும் என்பதை உருபியலின் (190) நூற்பாவின்படி கொள்ள வேண்டும்.

324-ஆம் நூற்பாவில் எல்லாம் என்பதன் மகரம் ஙகரமாகும் என்றாலும் மானமில்லை என்று கூறியதால் வல் எழுத்து மிக்கு உம் சாரியை பெறுதல் உண்டு என்கிறார் உரையாசிரியர்.

எ.டு. : எல்லாக் கொல்லரும் (எல்லாம் + கொல்லர்: எல்லாக் + கொல்லர் + உம்)

நும் என்னும் மகரச் சொல் திரிவது பற்றிக் கூறும் போது நும் என்பதில் உகரம் கெடும். ஈகாரம் சேரும். இடையில் இகரம் சேர மகரம் கெடும். இ முன் யகர ஒற்று வரும். இந்நிலையில் நும் என்பது நீயிர் ஆகும். இதன் முன் வலி வந்தால் மிகாது இயல்பாம்.

327. அல்லதன் மருங்கில் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வரின் ஈவர
இ இடை நிலை இ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பான் மொழிவயின் இயற்கை யாகும்.

எ.டு: நும் - உகரம் கெட நம் ஆக. ஈசேர நீம ஆகும். இ சேர நீ இம் ஆகும். இறுதி மகரம் கெட நீஇர் - இதன் இடையில் யகர ஒற்றுசேர நீ + இ + ர் = நீயிர் ஆனது. நீயிர் குறியீர்.

மகர ஈறு வருமொழி முதலில் கரம் வந்தால் தன் அரைமாத்திரையளவிலும் குறைந்து
ஒலிக்கும். அதற்கு மகரக்குறுக்கம் என்றும் பெயர்.

331. வகார மிசையும் மகாரம் குறுகும்.

எ.டு. நிலம் வலிது (நிலம் + வலிது)

இது நிலைமொழி வருமொழி என இரு மொழிகளாகப் புணர்ந்தது. ஆனால் ஒரே மொழியில் இம்மகரக் குறுக்கம் வருவது பற்றி மொழி மரபில் கூறப்பட்டது போலன்றி இங்கு இருமொழியில் கூறப்பட்டது என்பதாம்.



குறிப்பு

**வேற்றுமைப்புணர்ச்சி**



இனி மகர ஈறு வேற்றுமைப் புணர்ச்சியில் வருவதை 9 நூற்பாக்களால் உணரலாம்.

மகர ஈறு வேற்றுமையில் மகர ஈறு கெட்டு வலி மிகுந்து வரும்.

311. மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே.

எ.டு. மரம் + கோடு மரக்கோடு, மரப்பட்டை

நூற்பாவில் துவர எனப்பட்டதால் மெல்லினம், இடையினம், உயிர்க் கண என்ற இயல்பு கணங்களுடனும் உயர்திணைப் பெயர். விரவுப் பெயர்களுடனும் புணரும் போது மகரக்கேடு உண்டு என அறிதல் வேண்டும் என்பர் இளம்பூரணர்.

எ.டு. மரஞாண் : மரம் + ஞாண் - மெலி
மரவட்டு : மரம் + வட்டு - இடை
மரவடை : மரம் + அடை – உயிர்
நம் + கை : நங்கை - உயர்திணை
நும் + கை : நுங்கை - விரவுப் பெயர்

மகர முன் அ, ஆ வரின் மகரம் கெட நிற்கும் அகர ஈறு நீளும்: நீளாமலும் இருக்கும்.

312. ஈற்றுமிகை அகரம் நீடலும் உரித்தே.

எ.டு. மரா அடி (மரம் +அடி: மர + அடி: மரா + அடி)
குளா ஆம்பல் (குளம் + ஆம்பல்: குள, குளா)
மரவடி (மரம் + அடி) குள ஆம்பல் (குளம் + ஆம்பல்)

மகர ஈற்றில் சில வல்லெழுத்துடன் மெல் எழுத்தும் உறழ்ந்து வரும்.

313. மெல்லெழுத்து உறழும் மொழியுமா ருளவே
செல்வழி அறிதல் வழக்கத் தான.

எ.டு. : குளக்கரை, குளங்கரை (குளம் + கரை)

இல்லம் என்னும் மரப்பெயர் விசை என்னும் மரப்பெயர் போல மெல்லினம் மிக்கு முடியும்.



314. இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே.

எ.டு. : இல்லங்கோடு (இல்லம் + கோடு, மகரம் கெட இல்ல என நின்று மெலி மிகுந்தது)

இலம் என்னும் சொல் முன் படு எனும் சொல் வந்தால் மகரம் கெடாது. இது செய்யுள்
வழக்கு.

317. இலம்என் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலும் உரித்தே செய்யு ளான.

எ.டு. : 'இலம்படு புலவர் ஏற்றகை நிறைய'

இலம் - வறுமை வறுமையாற் பற்றப்படும் புலவர் என வேற்றுமைப் பொருள் தருதலால் இலம் படு : இலம்படு என மகரம் கெடாது வந்தது.

எல்லாரும் (படர்க்கை) எல்லீரும் (முன்னிலை) தம், நம், எம் என நெடுமுதல் குறுகிய பெயர்ச் சொற்கள் முறையே: எல்லாரும் எல்லீரும் என்பனவற்றின் இறுதி உம் கெட்டுப்போக படர்க்கையில் (எல்லார், தம், உம் சாரியையும் முன்னிலையில் (எல்லீர்) நும், உம் சாரியையும் சேரும். நெடு முதல் குறுகியவை மெல் லெழுத்து மிக்கு முடியும்.

321. படர்க்கைப் பெயரும் முன்னிலைப்பெயரும்
தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்
மெல்எழுத்து மிகுதல் ஆவயி னான.

எ.டு. : எல்லார் தங்கையும் (எல்லாரும் + கை: எல்லார் + தம் + கை + உம்)
எல்லீர் நுங்கையும் (எல்லீரும் + கை) எல்லீர் + நும் + கை
தங்கை (தம் + கை): நங்கை, எங்கை.

நும் என்பது விரவுப் பெயராய் மகரம் கெட்டு மெல் எழுத்து மிக்கு முடியும்

326. நும்மென் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே.

எ.டு: நுங்கை (நும் + கை)

ஈம், கம் என்னும் சொற்கள் அக்குச்சாரியை பெறும்.

330. வேற்றுமை யாயின் ஏனை இரண்டும்



குறிப்பு

தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை



ஏனைய இரண்டு என்பன 329ல் கூறப்பட்ட ஈம், கம் ஆகும்

எ.டு: ஈமக்குடம் (ஈம் + குடம்: ஈம் + அக்கு + குடம்)

மகர ஈற்று நாள் பெயர் இகர ஈற்று நாள் பெயர் போல மகரம் கெட்டு அத்து, ஆன் சாரியை பெறும்.

332. நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன
அத்தம் ஆன்மிசை வரைநிலை யின்றே
ஒற்று மெய்கெடுதல் என்மனார் புலவர்.

எ.டு. : மகத்தாற் கொண்டான் (மகம் + அத்து + ஆன் + கொண்டான்)

இனி அல்வழி, வேற்றுமை ஆகிய இரு புணர்ச்சிகளும் பெற்று வரும் மகர ஈறு பற்றிய கருத்தைக் காண்போம். இவை இரண்டிற்கும் 3 நூற்பாக்கள் கூறப்பட்டுள்ளன.

எல்லாம் என்னும் விரவுப் பெயர் வேற்றுமைப் புணர்ச்சியில் இடையில் வற்றும் இறுதியில் உம்மும் அல்வழியில் வற்று பெறாமல் உம் சாரியை பெறும்.

323. அல்லது கிளப்பின் வேற்றுமைக் கண்ணும்
எல்லாம் எனும் பெயர் உருபியல் நிலையும்
வேற்றுமை அல்வழிச் சாரியை நிலையாது.

எ.டு. எல்லாக்குறியவும் (எல்லாம் + குறிய + உம்) – அல்வழி

எல்லாவற்றுக்கோடும் (எல்லாம் + வற்று + கோடு + உம் - வேற்றுமை

மகர ஈற்றுத் தொழிற் பெயர்கள் வல்லினம் வர உகரமும் வல்லெழுத்தும் பெறும்.
மெல்லினம், இடையினம் வர உகரம் பெறும்.

328. தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெய ரியல.

தொழிற் பெயர் என்பது உகரம் பெற்று வரும் என்பது 297ஆம் நூற்பாவில் கூறப்பட்டபடி சில மகர ஈறு உகரம் பெற்று வரும் என்பது கருத்து.



எ.டு. செம் + கடிது = செம்முக்கடிது – அல்வழி
செம் + கடுமை = செம்முக்கடுமை – வேற்றுமை

வல்லினம் அன்றிப் பிற எழுத்துக்கணம் வந்தாலும் உகரம் வரும். இயல்பாகப் புணரும்.

செம் + ஞான்றது = செம்முஞான்றது (அல்வழி – மெலி
செம் + நீட்சி = செம்முநீட்சி (வேற்றுமை – மெலி
செம் + வலிது = செம்முவலிது (அல்வழி - இடை)
செம் + வலிமை = செம்முவலிமை (வேற்றுமை - இடை)

ஈம், கம், உரும் என்னும் மகர ஈற்றுச் சொற்களும் மேலதைப் போல வரும்.

329. ஈமும் கம்மும் உருமென் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன.

எ.டு. : ஈம் + கடிது =ஈமுக்கடிது (அல்வழி)
ஈம் + கடுமை =ஈமுக்கடுமை (வேற்றுமை)

இவ்வாறே கம்மு, உருமு ஆகும்.

ஈம் + ஞான்றது =ஈமுஞான்றது (அல்வழி – மெலி)
ஈம்+ ஞாற்சி =ஈமுஞாற்சி (வேற்றுமை – மெலி)
ஈம் + வலிது =ஈமுவலிது (அல்வழி - இடை)
ஈம் + வலிமை = ஈமுவலிமை (வேற்றுமை - இடை)

## 11.7 னகர ஈறு

னகர ஈற்று நூற்பாக்கள் 25 உள்ளன. அவற்றுள் வேற்றுமைப் புணர்ச்சி பற்றியன 23, அல்வழிப் புணர்ச்சி பற்றியது 1. இருவழிப் புணர்ச்சியும் ஒருசேர உடையது.

**னகர ஈற்று வேற்றுமைப்புணர்ச்சி**

333. னகர இறுதி வல்லெழுத்து இயையின்
றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கே.

ன் முன் வலி வரின் ற் ஆகும்.

எ.டு. : பொன் + குடம் = பொற்குடம்: பொற்சாடி.

சில னகர ஈற்றுச் சொற்களும் வினை எச்சமும் வலிவரின் ற் ஆகும்

334. மன்னும் சின்னும் ஆனது ஈனும்

குறிப்பு

பின்னும் முன்னும் வினை எஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்.

எ.டு.: அது மற்கொண்கன் தேரே (அதுமன் கொண்கன்)
காப்பும் பூண்டிசிற் கடையும் (பூண்டிசின்…..)

ஆற்கொண்டான (ஆன்); ஈற்கொண்டான் (ஈன்); பிற்கொண்டான்(பின்);
முற்கொண்டான் (முன்); வரிற்கொள்ளும் (வரின் - வினை எச்சம்)

(ஆன்,ஈன் என்பன அங்கு, இங்கு என்ற பொருள்படும்)

சுட்டெழுத்தையும் எகரத்தையும் முதலாக உடையவயின் என்னும் சொல் வலிவரின் னகரம் நகரமாகும்.

335. சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்
அப்பண்பு நிலையும் இயற்கை என்ப.

எ.டு. : அவ்வயிற் கொண்டான் (அவ்வயின்) எவ்வயிற் கொண்டான் (எவ்வயின்)

குயின் என்னும் சொல் வலிவரின் இயல்பாகும். (னகரம் றகரம் ஆகாது)

336. குயினென் கிளவி இயற்கை யாகும்.

எ.டு. : குயின் குழாய் (குயின் + குழாய்) குயின் பறை.

எகின் என்னும் மரப் பெயர் ஆண் என்னும் மரப் பெயர் போல் அம்சாரியை பெறும்.

337. எகின்மர மாயின் ஆண்மர இயற்றே.

எ.டு : எகினங்கோடு (எகின் + அம் + கோடு)

பறவையைக் குறிக்கும் எகின் என்னும் சொல் முன் வலி வர அகரம் பெற்று வலி மிகும்.

338. ஏனை எகினே அகரம் வருமே
வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும்.

எ.டு. எகினக்கால் (எகின் + கால் எகின் + அ + கால்

ன - ஈற்றுக் கிளைப் பெயர் ண ஈற்றுக் கிளைப் பெயர் போல இயல்பாகும்.



339. கிளைப் பெயர் எல்லாம் கிளைப் பெயர் இயல.

எ.டு. எயின் குடி

மீன் முன் வலி வரின் இயல்பும் நகரத்திரிபும் ஆகும்.

340. மீன்என் கிளவி வல்லெழுத் துறழ்வே.

எ.டு. மீன்கண், மீற்கண் (மீன் + கண்)

தேன் - முன் வலிவரின் இயல்பும் றகரத்திரியும் ஆகும். சில போது உகரம் கெட்டு
வலி மிகும்.

341. தேன் என் கிளவி வல்லெழுத்து இயையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி யில்லை.

எ.டு. தேன் குடம், தேற்குடம் (தேன் + குடம்)
தேக்குடம் (தேன் குடம்: தே + குடம்)

தேன் - வலிவரின் மெல்லினம் மிகுதலும் உண்டு.

342. மெல்லெழுத்து மிகினும் மானமில்லை.

எ.டு. தேங்குடம் (தேன் + குடம்)

தேன் முன் வலியின்றி மெல்லெழுத்து வரின் னகரம் கெட்டும் கெடாமலும் வரும்.

343. மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும்.

எ.டு. தேன்ஞெரி, தேஞெரி
தேனுனி, தேநுனி
தேன்மொழி, தேமொழி

தேன் முன் இறால் என்னும் சொல் வர னகரம் கெடாது.

344. இறாஅல் தோற்றம் இயற்கை யாகும்.

எ.டு. தேனிறால் (தேன் + இறால்)

னகரம் கெட தகர ஒற்று இரட்டித்து வருதலும் உண்டு

345. ஒற்றமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே

எ.டு. தேத்திறால் (தேன் + இறால்: தே + இறால்: (தே + த் + த் + இறால்)கன் என்னும் சொல் முன் வலி வரின் எகின் என்ற பறவைப் பெயர் போல அகரமும் வல்லெழுத்து மிகுதியும் உண்டு.

347. வேற்றுமை யாயின் ஏனை எகினொடு
தோற்றம் ஒக்கும் கன் என் கிளவி

எ.டு. கன் + குடம் = கன்னக்குடம் (கன் - கன்னாரத் தொழில்)
(கோயில் நேர்த்திக் கடனுக்காகக் கொடுக்கும் குடம்)

னகர ஈற்று இயற் பெயர் முன் தந்தை என்னும் முறைப் பெயர் வந்தால் தந்தை எனும் சொல்லின் முதலில் உள்ள தகரம் கெட்டு அ நிற்க: நிலை மொழியில் அ கெட்டுப் புணரும்.

348. இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மெய்யொழித்து அன்கெடும் அவ்வியற் பெயரே.

எ.டு. சாத்தந்தை (சாத்தன் + தந்தை: சாத்தன் + அந்தை, சாத்த் + அந்தை)

மேலது போலவே ஆதன், பூதன் முன் தந்தை சேரும் போது தந்தை என்றதன் முதல் எழுத்து த கெட்டு முடியும். நிலை மொழியில் முதல் எழுத்து தவிர பிற கெடும்.

349. ஆதனும் புதனும் கூறிய இயல்பொடு
பெயரொற்று அகரம் துவரக் கெடுமே.

எ.டு. : ஆந்தை (ஆதன் + தந்தை: ஆதன் + அந்தை: ஆதன் + ந்தை: அத் + ந்தை:
ஆ + ந்தை)
பூந்தை (பூதன் + தந்தை: பூதன் + அந்தை: பூதன் + ந்தை: பூத் + ந்தை: பூ + ந்தை)

அடை எடுத்து வரும் னகர இயற் பெயர் முன் தந்தை என்னும் முறைப் பெயர் வந்தால்
இயல்பாக எந்த மாற்றமும் இன்றி வரும்.

350. சிறப்பொடு வருவழி இயற்கையாகும்.

எ.டு. பெருஞ்சாத்தான் + தந்தை = பெருஞ்சாத்தன் தந்தை.

இயற்பெயர் முன் மக்கள் என்னும் முறைமைக்கு உரிய சொல் வந்தால் நிலை மொழி
இறுதியின் அன் கெட்டு அம் சாரியை வரும்.

351. அப்பெயர் மெய் ஒழித்து அன்கெடு வழியே
நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை
மக்கள் முறை தொகூஉம் மருங்கினான.

எ.டு. : சாத்தங் கொற்றன் (சாத்தன் + கொற்றன்: சாத்த + அம் + கொற்றன்)
கொற்றங்கொற்றன் (கொற்றன் + கொற்றன்: கொற்ற+ அம் + கொற்றன்)

தான், பேன், கோன் என்னும் இயற் பெயர் முன் தந்தையும் மக்களைக் குறிக்கும்
சொல்லும் வரின் இயல்பாகும்.

352. தானும் பேனும் கோனும் என்னும்
ஆமுறை இயற்பெயர் திரிபிடன் இலவே

எ.டு. : தான்றந்தை (தான் + தந்தை) பேன்றந்தை, கோன்றந்தை
தான்கொறறன், பேன்கொற்றன், கோன்கொற்றன்.

தான், யான் நெடுமுதல் குறுகி தன், என் என வரும்போது அவை முன் வலி வரின்
இயல்பாகும்.

353. தான்யான் எனும்பெயர் உருபியல் நிலையும்

எ.டு. : தன்கை (தான் + கை: தன் + கை)
என்னை (யான் + கை: என் + கை)

355. அழன்என் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே.

அழன் என்னும் சொல் னகரம் கெட வலி மிகும்.

**குறிப்பு**

எ.டு : அழக்குடம் (அழன் + குடம்: அழ + குடம்)

நகர ஈற்றில் மரூஉச் சொல் இலக்கண முடிபாக ஒன்றைக் கூறும் போது, முன் என்னும் நிலைமொழி முன்பு இல் என்ற சொல் வரும்போது இடையில் றகரம் வரும்.

356. முன் என் கிளவி முன்னர்த் தோன்றும்
இல் என் கிளவிமிசை றகரம் ஒற்றல்
தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே.

எ.டு. : முன்றில் (முன் + இல்: முன் + ற் + இல்)

பொன் என்னும் சொல் செய்யுளில் பொலம் ஆகும்

357. பொன் என் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கின் தொடரியலான.

எ.டு. "பொலம்படைப் பொலிந்த......"
(பொன் + படை: பொ + ல + ம் + படை)

இனி னகர ஈறு வேற்றுமைக்கும் அல்வழிக்கும் பொதுவாக வருவது பற்றி.

மின், பின், பன், கன் என்ற னகர ஈற்றுமுன் வலிவர வேற்றுமை, அல்வழி இரு புணர்ப்பிலும் தொழிற் பெயராய் உகரம் பெற்ற வலி மிகும். பிற கணத்தின் முன் உகரம் கெடும்.

346. மின்னும் பின்னம் பன்னும் கன்னும்
அந்நாற் சொல்லும் தொழிற்பெயர் ரியல.

எ.டு. மின்னுக்கடிது (மின் + உ + க் + கடிது) அல்வழி (வலி)
மின்னு ஞான்றது (மின் உ ஞான்றது) அல்வழி (மெலி)
மின்னு வலிது (மின் + உ + வலிது) அல்வழி (இடை)
மின்னுக்கடுமை (மின் + உ + கடுமை) வேற்றுமை
மின்னு ஞாற்சி (மின் + உ + ஞாற்சி) வேற்றுமை
மின்னு வலிமை (மின் + உ + வலிமை) வேற்றுமை

**னகர ஈற்று அல்வழிப்புணர்ச்சி**

தான், யான் அல்வழியில் நெடு முதல் குறுகாமல் வரும்.

குறிப்பு

354. வேற்றுமை அல்வழிக் குறுகலும் திரிதலும்
தோற்றம் இல்லை என்மனார் புலவர்.

எ.டு.தான்குறியன், யான்குறியன்.

இதுவரை 5 மெல்லின ஈறுகளைப் பற்றிக் கூறிய தொல்காப்பியர் இனி இடையின ஈறுகள் பற்றிக் கூறத் தொடங்குகிறார். இடை எழுத்துக்கள் ஆறும் ஈறாகும்.

## 11.8 தொகுத்துக் காண்போம்

- ஐந்து ஈறுகளில் சில உகரம் பெறுதல், சில ஈறுகள் கெட்டு முடிவன உண்டு என்பதை அறிந்து கொண்டீர்கள்.
- வேற்றுமைப் பொருட்புணர்ச்சி அடிப்படையில் சில ஈறுகள் உருபும் சாரியையும் பெறுதல் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஈறு திரிந்து முடிவன உண்டு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 11.9 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. நகர இறுதியும் அதனோரற்றே - விளக்குக.
2. ணகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுத்துரைக்க.
3. தேன் என்ற சொல்லின் புணர்ச்சி விதிகள் குறித்து விளக்குக.

## 11.10 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம்
எழுத்ததிகாரம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம்,
சென்னை, 1974

2. நச்சினினார்க்கினியர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம்
பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி
குறிப்புரையுடன், 1967

## கூறு - 12

## புள்ளிமயங்கியல் - யகர, ரகர, லகர, வகர, ழகர, ளகர ஈறுகள்

குறிப்பு

### 12.1 முன்னுரை

ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறு மெய்யீறுகள் நிலைமொழி ஈறுகளாக இருந்து வருமொழியோடு புணரும் முறை இக்கூறில் விளக்கப்பெறுகிறது.

### 12.2 குறிக்கோள்கள்

- ய,ர,ல,வ,ழ,ள என்னும் ஈறுகள் உகரம் பெறுவது பற்றி அறிந்து கொள்வீர்கள்.
- வேற்றுமைப்புணர்ச்சியில் பயிலும் முறை பற்றி அறிந்து கொள்வீர்கள்.
- சில ஈறுகள் திரிந்து முடிவது குறித்தும், சில புதிய விதிகள் குறித்தும் அறிந்து கொள்வீர்கள்.

### 12.3 யகர ஈறு

யகர ஈற்றுக்கு 5 நூற்பாக்கள் உள்ளன. வேற்றுமைக்கு 4, அல்வழிக்கு 1,

**யகர ஈற்று வேற்றுமைப்புணர்ச்சி**

வலி வர மிகும்.

358. யகர இறுதி வேற்றுமைப் பொருள் வயின்
வல்எழுத்து இயையின் அவ் எழுத்துமிகுமே.

எ.டு. : நாய்க்கால் (நாய் + கால்), நாய்த் தலை……
தாய் முன் வலி வரின் வலி மிகாது இயல்பாகும்.

359. தாய்என் கிளவி இயற்கை யாகும்

எ.டு : தாய் + கை = தாய்கை

தாய் என்னும் சொல் அடையடுத்து வரும்போது வலி வரின் மிகும்

360. மகன்வினை கிளப்பின் முதலிலை யியற்றே

மகன்வினை என்றது தாயோடு மகனுக்குள்ள (வினை) செயல்பாடு என்பது பொருள்.

எ.டு. : மகன் தாய்க்கலாம் (மகன்தாய் + கலாம்)

மகனால் தாயோடு பகைத்த நிலை (சண்டை)

வலியொடு மெல் எழுத்தும் வரல்.

361. மெல்லெழுத்து உறழும் மொழியு மாருளவே

எ.டு. : வேய்க்குறை : வேய்ங்குறை (வேய் + குறை)

**யகர ஈற்று அல்வழிப்புணர்ச்சி**

அல்வழியில் யகர ஈறு இயல்பாகும்.

362. அல்வழி எல்லாம் இயல்பென மொழிப.

எ.டு. : நாய் + கடிது = நாய்கடிது

## 12.4 இனி ரகர ஈறு

ரகர ஈற்றுக்கு 4 நூற்பாக்கள் உள்ளன. அவையாவும் வேற்றுமைப் புணர்ச்சிக்குரியன ஆகும்.

ரகர ஈறு வேற்றுமையில் யகர ஈறுபோல் வலிமிகும்.

363. ரகார இறுதி யகார இயற்றே.

எ.டு. தேர்க்கால் (தேர் + கால்), தேர்த்தட்டு…… (தேர் + தட்டு)

ஆர், வெதிர், சார், பீர் என்னும் ரகர ஈற்றுச் சொற்கள் முன் வலி வர மெலி மிகும்.

364. ஆரும் வெதிரும் சாரும் பீரும்
மெல் எழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்

எ.டு. : ஆர்ங்கோடு (ஆர் + கோடு) வெதிர்ங்கோடு…..

குறிப்பிட்ட சொற்களன்றிப் பிற ரகர ஈறு ஏற்புழி மெலி மிகுந்து வரும்.

குதிர்ங்கோடு (குதிர் + கோடு), துவர்ங்கோடு (துவர் + கோடு)

சார் முன் காழ் சேரில் வலி மிகும்

365. சார் என்கிளவி காழ்வயின் வலிக்கும்

எ.டு. சார்க்காழ் (சார் + காழ்) சாரினது விதை.

பீர் முன் வலி மெலியாதலுடன் அம்சாரியை பெறும்.

366. பீர்என் கிளவி அம்மொடு சிவணும்

எ.டு. பீரங்கொடி (பீர் + அம் + கொடி)

ஆனால் வலிமிகுந்து அம் சாரியையுடன் பீர்க்கங்கொடி எனக் கூறுவதும் இக்கால வழக்கு. பீர் - அத்துச் சாரியை பெறுவதைச் சங்க இலக்கியத்தில் பீர்த்து அலர் எனக் காணலாம். ஆர் -அம் சாரியையுடன் ஆரம்கண்ணி என வந்துள்ளது.

## 12.5 லகர ஈறு

லகர ஈற்று நூற்பாக்கள் 12. அவற்றுள் வேற்றுமைக்கு 3, அல்வழிக்கு 7,
இருவகைக்கும் 2,

**லகர ஈற்று வேற்றுமைப்புணர்ச்சி**

லகர ஈறு உகர ஈறுபோல வலி வரின் றகர மாகத் தெரியும்.

367. லகார இறுதி னகார இயற்றே

எ.டு. கற்குறை (கல்+ குறை) கற்சிலை (கல் + சிலை)

லகர ஈறு முன் வலிவராமல் மெல்லினம் வந்தால் லகரம் னகரமாகத் திரியும்

368. மெல் எழுத்து இயையின் னகார மாகும்

எ.டு. கன்ஞெரி (கல் + ஞெரி): கன்முரி,…..

வெயில் என்னும் லகர ஈறு மழை என்னும் ஐகார ஈறுபோல் இன், அத்து சாரியை பெறும்.

378. வெயில் என் கிளவி மழையியல் நிலையும்

குறிப்பு

எ.டு. வெயிலத்துக் கொண்டான் (வெயில் + அத்து)
வெயிலிற் கொண்டான் (வெயில் + இன்)

**லகர ஈற்று அல்வழிப்புணர்ச்சி**

லகர ஈறு அல்வழியில் வலிவரின் உறழ்ந்து வரும்

369. அல்வழி எல்லாம் உறழ்என மொழிப.

எ.டு. கல்குறிது, கற்குறிது (இயல்பாயும், ல் - ற் ஆக உறழ்ந்தும் வந்தன)

இங்ஙனம் வரலாம் என்பதை உரையாசிரியர் கூறுகிறார்.

2. ல முன் த வரின் ல றகரமாகும். ஆய்தமாகவும் திரியும்.

370. தகரம் வரும்வழி ஆயுதம் நிலையலும்
புகரின்று என்மனார் புலமை யோரே.

எ.டு. கல் + தீது = கற்றீது
கல் + தீது = கஃறீது

நெடில் கீழ் வரும் லகரமும் மேலது போல அன்றி இயல்பாய் வரும்.

371. நெடியதன் இறுதி இயல்புமா ருளவே.

எ.டு. பால்தீது (பால் + தீது)

நெல், செல், கொல், சொல், என்னும் லகர ஈறு முன் வலி வரின் றகரமாகத் திரியும்.

372. நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல.

எ.டு. நெல் + கடிது: நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது

இல்லை என்னும் பொருளை உணர்த்தும் இல் என்னும் லகர ஈறு முன் வலி வரின் ஐ சேர வலி மிகும்: இயல்பாயும் வரும்: ஆகாரமும் பெறும் வலிமிகும்.

373. இல்என் கிளவி இன்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்
இயற்கை யாதலும் ஆகாரம் வருதலுமும்
கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே.

குறிப்பு

எ.டு. இல் + ஐ + க் கல் = இல்லைக்கல்

இல் + கல் = இல்கல். இதனுடன் ஐசேர்ந்து இல்லைகல் என இயல்பாயும் வரும்.

இல் + ஆ + கல் = இல்லாக்கல்

வல் என்னும் சொல் முன் நாய், பலகை வருமொழியாக வந்தால் உகரம்
பெறும் என்ற விதிக்குப்பதிலாக அகரம் வரும்.

375. நாயும் பலகையும் வரூஉங் காலை
ஆவயின் இகரம் கெடுதலும் உரித்தே
உகரம் கெடுவழி அகரம் நிலையும்.

(வல் - சூதாடும் கருவி, நாய் என்பதும் சூதாடும் கருவி)
வல் + நாய் = வல்லநாய், வல்லப்பலகை

(வல் என்பது உகரம் பெற்று வல்லு என வருவது பற்றி 374ல் கூறப்பட்டது. அல்வழி வேற்றுமை இரண்டுக்கும் பொது. ஆனால் 375-ல் அல்வழிக்கு மட்டும் திரிபு கூறப்பட்டது.

பூல், வேல், ஆல் என்னும் லகர ஈற்று மரப்பெயர் முன் வலிவரின் அம் சாரியை பெறும்.

376. பூல் வேல் என்றா ஆல் என் கிளவியொடு
ஆமுப் பெயர்க்கும் அம்இடை வருமே.

எ.டு. பூல் + கோடு = பூலங்கோடு, ஆலங்காடு, வேலங்காடு

**லகர ஈற்று இருவழிப்புணர்ச்சிக்கும் உரியது**

வல் என்னும் சொல் அல்வழி வேற்றுமை ஆகிய இரு புணர்ச்சியிலும் ஞகர ஈறு போல வலி வரின் உகரம் பெற்று மிகுந்து வரும். வலியின்றிப் பிறவரின் உகரம் மட்டும் வரும்.

374. வல் என் கிளவி தொழிற்பெயர் இயற்றே.

எ.டு. வல் + கடிது = வல்லுக்கடிது – அல்வழி (வலி)
வல் + ஞான்றது = வல்லுஞான்றது – அல்வழி (மெலி)
வல் + வலிது = வல்லுவலிது - அல்வழி (இடை)

குறிப்பு

வல் என்பது போல பிற லகர ஈறு ஏற்புழி மேலது போலவே வரும்.

377. தொழிற்பெய ரெல்லாம் தொழிற்பெய ரியல.

எ.டு. கல் + கடிது = கல்லுக்கடிது – அல்வழி (வலி)
கல் + ஞான்றது = கல்லுஞான்றது – அல்வழி (மெலி)
கல் + வலிது = கல்லுவலிது - அல்வழி (இடை)

எ.டு. கல் + கடுமை = கல்லுக்கடுமை – வேற்றுமை (வலி)
கல் + நீட்சி = கல்லுநீட்சி – வேற்றுமை (மெலி)
கல் + வலிமை = கல்லுவலிமை - வேற்றுமை (இடை)

இந்நூற்பாவில் எல்லாம் என்றதால் உகரம் பெறுதல் என்பதாக இல்லாமல் வரும் லகர ஈறுகளும் உண்டு. பின்னல் கடிது, பின்னற் கடுமை என இயல்பும் லகரத்திரிபும் கொண்டு வரும் என்பர் இளம்பூரணர்.

## 12.6 வகர ஈறு

சுட்டு முதலாகிய வகர ஈறு வலி முன் வற்றுச் சாரியை பெற்று வலி மிகும்.

379. சுட்டுமுத லாகிய வகர இறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும்

எ.டு. அவற்றுக்கோடு (அவ் + கோடு, அவ் + வற்று + க் + கோடு)

நூற்பாவின் முற்படக் கிளந்த என்றதால் வேற்றுச் சாரியையுடன் இன்சாரியையும் பெறும். அவற்றின்கோடு (அவ் + வற்று + இன் + கோடு)

**வகர ஈற்று அல்வழிப்புணர்ச்சி**
மேற்குறித்த சுட்டு வகரம் அல்வழியில் ஆயுதமாகத் திரியும்

380. வேற்றுமை அல்வழி ஆயுதம் ஆகும்.

எ.டு. அ∴கடிய (அவ் + கடிய), இ∴கடிய

அவ் முன் மெல்லினம் வர மெல்லினமாகத் திரியும்.

381. மெல்லெழுத்து இயையின் அவ்வெழுத்தாகும்.

எ.டு. அஞ்ஞாண் (அவ் + ஞாண்: அஞ்ஞாண்)

அந்நூல் (அவ் + நூல்: அந்நூல்)



அவ் முன், இடையினமும் உயிரினமும் வந்தால் இயல்பாம்.

382. ஏனவை புணரின் இயல்பென மொழிப.

எ.டு. அவ்யாழ் (அவ் + யாழ்) அவ்வட்டு (அவ் வட்டு)
அவ்வாடை (அவ் + ஆடை)

**வகர ஈற்று அல்வழி வேற்றுமைப் பொது**

சில வகர ஈறு தொழிற் பெயராய் உகரம் பெறும்.

383. ஏனை வகரம் தொழிற்பெய ரியற்றே.

எ.டு. தெவ்வுக்கடிது (தெவ் + கடிது: தெவ் + வு + கடிது) – அல்வழி (வலி)

| | |
|---|---|
| தெவ்வு நீண்டது | - அல்வழி (மெலி) |
| தெவ்வு வலிது | - அல்வழி (இடை) |
| தெவ்வுக் கடுமை | - வேற்றுமை (வலி) |
| தெவ்வு நீட்சி | - வேற்றுமை (மெலி) |
| தெவ்வு வலிமை | - வேற்றுமை (இடை) |

## 12.7 ழகர ஈறு

ழகர ஈறு வலி வரின் மிகும்.

384. ழகார இறுதி ரகார இயற்றே.

எ.டு. பூழ் + கால் = பூழ்க்கால் (பூழ் - ஒருவகை பறவை)

தாழ் என்னும் ழகர ஈறு கோல் என்னும் சொல்லுடன் சேரும் போது வலி மிகும்
அக்குச் சாரியை வரும்.

385. தாழ்என் கிளவி கோலொடு புணரின்
அக்கு இடை வருதல் உரித்தும் ஆகும்.

எ.டு. : தாழக்கோல் (தாழ் + அக்கு + கோல்)

தமிழ் என்னும் சொல் வலி வரின் அக்குச் சாரியை பெறும்



386. தமிழ்என் கிளவியும் அதனோரற்றே.

எ.டு. தமிழக்கூத்து (தமிழ் + கூத்து: தமிழ் + அக்கு + கூத்து)

387. குமிழ்என் கிளவி மரப்பெய ராயின்
பீரஎன் கிளவியொடு ஓரியற்றதாகும்.

எ.டு. : குமிழங்கோடு. குமிழம்பூ (குமிழ் + அம்) குழிழங்கிளை

பாழ் என்னும் சொல் வலிவரின் வலியும் மெலியும் தோன்றும்

388. பாழ்என் கிளவி மெல் எழுத்து உறழ்வே.

எ.டு. பாழ் + கிணறு = பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு

ஏழ் என்னும் எண்ணுப் பெயர் அன் சாரியை பெறும்

389. ஏழென் கிளவி உருபியல் நிலையும்

எ.டு. ஏழன்காயம் (ஏழ் + அன் + காயம்) ஏழன் பயறு, உருபியலில்
கூறுவது போல்
ஈண்டும் கூறப்பட்டது

ஏழ்முன் எண்ணுப் பெயர், அளவு, நிறைப்பெயர் சேர நெடுமுதல் குறுகி உகரம் பெறும்.

390. அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலையின்றே ஆசிரியர்க்கு

எ.டு. : ஏழுகலம் (ஏழ் + கலம்: ஏழ் + உ + கலம்) அளபு
எழுகழஞ்சு (ஏழ் +கழஞ்சு: எழ் + உ) நிறை
எழுநான்கு (ஏழ்+ நான்கு: எழ் + உ) எண்.

ஏழ் முன் பத்து எனும் சொல் வரின் பத்தின் நடு எழுத்து நீங்க அங்கே ஆய்தம் வரலாம்.

391. பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டும் ஆய்தப் பள்ளி

எ.டு. எழுபத்து (ஏழ் + பத்து: எழ் + உ+ ப.்.து)



குறிப்பு

ஏழ் முன் ஆயிரம் என்ற எண் வர நெடுமுதல் குறுகாமல் உகரம் பெறாமல் இயல்பாகப் புணரும்



392. ஆயிரம்வருவழி உகரங் கெடுமே

மேலது போலவே நூறாயிரம் வரின் அதுபோல வரும்.

ஏழாயிரம் (ஏழ் + E}whapuk;)

393. நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே.

எ.டு. : ஏழ்நூறாயிரம் (ஏழ் + நூறாயிரம்)

அவ்வாறே தாமரை, ஆம்பல், வெள்ளம் என்னும் எண்ணுப் பெயர்கள் சேரும் போது இயல்பாக முடியும்

394. ஐ, அம், பல் என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணு மரபியல் நிலையும்

ஐ, அம், பல் என்ற ஈறுகளை உடைய தாமரை, ஆம்பல், வெள்ளம் என்ற பெயர்கள் பொருளை உணர்த்தும் அவ்வாறன்றிஅவை கணக்கற்ற என்ற பொருளைத்தரும் எண்ணுப் பெயராகவும் உள்ளன. அந்நிலையில் பொருட் பெயரின்றி எண்ணுப் பெயராக இச்சொற்கள் ஏழ் என்றதன் முன் வந்தால் இயல்பாய் முடியும். (நெடுமுதல் குறுகாமலும் உகரம் பெறாமலும்)

எ.டு. : ஏழ்தாமரை, ஏழ்வெள்ளம், ஏழாம்பல்.

ஏழ் முன் உயிர் எழுத்து வந்தால் இயல்பாகும்.

395. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.

எ.டு. : ஏழகல் (ஏழ் + அகல்) ஏழுழக்கு, ஏழொன்று.

கீழ் ழகர ஈறு முன் வலிவரின் இயல்பும் மிகுந்தும் வரும்.

396. கீழ்என் கிளவி உறழத் தோன்றும்.

எ.டு. : கீழ்குளம், கீழ்க்குளம் (கீழ் + குளம்)

## 12.8 ளகர ஈறு

ளகர ஈற்றுப் புணர்ச்சி 9 நூற்பாக்களில் கூறுப்படுகிறது. அவற்றுள் வேற்றுமையில்
4.அல்வழியில் 3, இருவழியும் 2,

397. ளகார இறுதி ணகார இயற்றே.

எ.டு. : முள் + குறை = முட்குறை (மண்குடம் - மட்குடம் ஆனது போல)

மெல்லினம் வந்தால் ஒகரம் இயையின் ணகார மாகும்

398. மெல் எழுத்து இயையின் ணகார மாகும்.

எ.டு. : முள் + நுனி = முண்ணுனி : முண்மரம்

இருள் என்னும் ளகர ஈறு வெயில் என்னும் சொல் போல் அத்து, இன் சாரியை பெறும்.

403. இருள் என் கிளவி வெயிலியல் நிலையும்

எ.டு. : இருளத்துக் கொண்டான் (இருள் + கொண்டான்)
இருள் + அத்து + கொண்டான்)
இருளிற் கொண்டான் (இருள் + இன் + கொண்டான்)

மக்கள் என்னும் ளகர ஈறு மகரமாகத் திரிதல் உண்டு.

405. மக்கள் என்னும் பெயர் நிலைக் கிளவியும்
தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்தே

எ.டு. : மக்கள் + கை: மக்கட்கை

**ளகர ஈற்று அல்வழிப்புணர்ச்சி**

ளகர ஈறு அல்வழியில் வலிவரின் திரியாதும், டகரமாகத் திரிந்தும் வரும்.

399. அல்வழி எல்லாம் உறழென முடிப

எ.டு. : முள் + கடிது : முள்கடிது, முட்கடிது
முள் + தீது : முள்தீது, முட்டீது

ள முன் த வரின் ளகரம் டகரமாவதோடு ஆயுதமும் ஆகும்.



400. ஆய்தம் நிலையலும் வரைநிலை யின்றே
துகரம் வரூஉம் காலை யான.

எ.டு. : முள் + தீது: முட்டீது: மு.ஃடீது

குறிப்பு

ளகர ஈற்றுப் பெயர் தனி நெடிலின் பின் வரின் திரியாது. வேற்றுமைபோல டகராமாகத் திரிந்தும் வரும்.

401. நெடியதன் இறுதி இயல்பா குநவும்
வேற்றுமை அல்வழி வேற்றுமை நிலையலும்
போற்றல் வேண்டும் மொழியுமா ருளவே.

எ.டு. : கோள் + கடிது = கோள்கடிது
தேள் + கடிது = தேள்கடிது
நாள் + கடிது = நாட்கடிது

**ளகர ஈற்று இருவழிப் புணர்ச்சி**

ளகர ஈற்றுத் தொழிற் பெயர்கள் அல்வழியிலும் வேற்றுமையிலும் வலிவர உகரமும் வல் எழுத்தும் பெறும் மெலி, இடை வந்தால் உகரம் பெறும்

402. தொழிற்பெய ரெல்லாம் தொழிற்பெயரியல.

எ.டு. துள் + கடிது = துள்ளுக்கடிது – அல்வழி (வலி)
துள் + நீண்டது = துள்ளநீண்டது – அல்வழி (மெலி)
துள் + வலிது = துள்ளுவலிது – அல்வழி (இடை)
துள் + கடுமை = துள்ளுக்கடுமை – வேற்றுமை (வலி)
துள் + நீட்சி = துள்ளுநீட்சி – வேற்றுமை (மெலி)
துள் + வலிமை = துள்ளுவலிமை – வேற்றுமை (இடை)

புள், வள் சொற்களும் மேலது போலப் பயின்று வரும்.

404. புள்ளும் துள்ளும் தொழிற்பெய ரியல.

புள்ளுக்கடிது, புள்ளுஞான்றது, புள்ளுவலிது – அல்வழி
வள்ளுக்கடுமை, வள்ளுஞாற்சி, வள்ளுவலிமை – வேற்றுமை

இதுவரை 11 புள்ளியீறுகள் பற்றிக் கூறிய தொல்காப்பியர் கூறப்பட்ட இலக்கண வரையறையோடு வருவனவற்றையும் புறனடை

வகையால் ஏற்றுக் கொள்க எனக் கூறி புள்ளியியலை நிறைவு செய்கிறார்.



406. உணரக் கூறிய புணரியல் மருங்கின்
கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே.

எடுத்துக்காட்டாக:

னகர ஈறு வேற்றுமையில் திரியும் என்பது 333ஆம் நூற்பா கருத்து. ஆனால் விழன்குளம் என னகரம் திரியாது வேற்றுமையில் வந்துள்ளது. இதை 406ஆம் நூற்பாவின்படி ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுபோல் வருவன கொள்ளலாம் என்பது கருத்து. (விழன் - விழல் என்ற புல்)

பொன் + கட்டி = பொற்கட்டி என வரவேண்டும். ஆனால் அம் சாரியையுடன்
பொன்னங்கட்டி என வந்தது

இவ்வாறு பற்பலவாம் என்பது இளம்பூரணர் கருத்தாகும்.

## 12.9 தொகுத்துக் காண்போம்

- ய,ர,ல,வ,ழ,ள என்னும் ஈறுகள் உகரம் பெறுவது பற்றி அறிந்து கொண்டீர்கள்.
- இவ் ஈறுகள் வேற்றுமைப்புணர்ச்சியில் அடையும் மாற்றங்கள் பற்றி அறிந்து கொண்டீர்கள்.
- அளவு, நிறை எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி விதிகள் பற்றி அறிந்து கொண்டீர்கள்.

## 12.10 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. யகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுத்துரைக்க.
2. அளவு, நிறை எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி விதிகளை விவரிக்க.
3. தொழிற்பெயர்க் கிளவி தொழிற்பெயரியல - இந்நூற்பவின் பொருளை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குக.

## 12.11 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம்
எழுத்ததிகாரம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை, 1974

2. நச்சினினார்க்கினியர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்புரையுடன், 1967

## கூறு – 13

# குற்றியலுகரப் புணரியல்

## 13.1 முன்னுரை

குற்றியலுகர ஈறுகள் வருமொழியோடு புணரும் இயல்பு உணர்த்துதலால் இவ்வியல் குற்றியலுகரப் புணரியல் எனப்பட்டது. சொல்லுக்கு ஈறாக உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் வருவது போலவே குற்றியலுகர ஈறும் பெரும்பாலும் வருவதால் அதற்கெனத் தனி இயல் கூறப்பட்டது. சார்பெழுத்தில் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆயுதம் என்ற மூன்றிருப்பினும் ஆய்தம் மொழியிறுதி வாராதென்பதால் அதற்குப் புணரியல் கூற இயலாது. குற்றியலுகரம் சில நேரத்தில் குற்றியலிகரமாக வருவதாலும் குற்றியலிகரமும் மொழியிறுதி வாராததாலும் குற்றியலிகரத்திற்குப் புணரியல் கூற இயலாதாயிற்று. எனவே குற்றியலுகரத்திற்கு மட்டும் புணரியல் கூறப்படுவதாயிற்று.

## 13.2 குறிக்கோள்கள்

- குற்றியலுகரம் ஆறு வகைப்படும் என அறிந்து கொள்வீர்கள்.
- வன்தொடர்க் குற்றியலுகரம் அல்வழி வேற்றுமை ஆகிய இரண்டில் வலிமிகும்
  என்பது பற்றி அறிந்து கொள்வீர்கள்.
- குற்றியலுகர திசைப் பெயர்ப் புணர்ச்சி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

407. ஈரெழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்.

குற்றியலுகரம் ஆறு வகைப்படும் என்கிறது முதல் நூற்பா. ஈண்டு உகரம் குறுகிடன் என்றது தான் குற்றியலுகரத் தோற்றத்தைப் பற்றிக் கூறுவதாகும். உகரம் குறுகுதற்கான சூழல் பிற எழுத்துக்களின் தொடர்ச்சி என்பது கருத்து.குசுடுதுபுறு என்ற ஆறும் குற்றியலுகரங்கள் அல்ல. இவை நெட்டிற்கீழும் ஓரெழுத்துக்கு மேற்பட்டதான மாத்திரையில் உயிர், வலி, மெலி, இடை, ஆய்தம் என்ற எழுத்துக்களின் கீழும் வரும்போது ஓசை குறைவதால் குற்றியலுகரம் எனப்பட்டன.

குறிப்பு

நெட்டெழுத்தையே ஈரெழுத்து ஒரு மொழி என்றார் தொல்காப்பியா். குறில் கீழ் குற்றியலுகரம் வாரா என்பதால் ஒரு மாத்திரைக்கு மேற்பட்ட எழுத்துக்களோடுதான் குற்றியலுகரம் உணரப்படும்

எ.டு. நாகு - நெடில் தொடா்க் குற்றியலுகரம் (ஈரெழுத்து)
வரகு - உயிர்த்தொடா் (ர் = அ = அகரஉயிர்)
மார்பு - இடைத்தொடா் (ர் - இடையினம்)
கொக்கு - வன்தொடா் (க் - வல்லினம்
குரங்கு - மென்தொடா் (ங் - மெல்லினம்)
எ∴கு - ஆய்தத்தொடா் (∴ - ஆய்தம்)

இந்த ஆறனுள் குற்றியலுகரத்தை அதன் அயல் எழுத்தால் உணரப்பட்டது போல இரண்டு ஒற்று அமையும் ஒரு சொல்லில் குற்றியலுகரத்தை எங்ஙனம் உணர்வது எனில் பெரும்பாலும் இரண்டு ஒற்று இடையின எழுத்துக்களால் வரும். வந்தால் குற்றியலுகர எழுத்துக்கு அயல் எழுத்தைக் கொண்டே இன்ன உகரம் எனக் கூறல் வேண்டும்.

408. அவற்றுள்
ஈரொற்றுத் தொடா்மொழி யிடைத்தொடராகா.

எ.டு. ஈர்க்கு, மொய்ம்பு – வன்தொடா், மென்தொடா்க் குற்றியலுகரம்,
ர், ய் வந்ததால் இடைத்தொடா் எனக் கூறக் கூடாது.

இக்குற்றியலுகரம் அல்வழிப் புணர்ச்சியிலும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் வரும்போது தன் அரை மாத்திரை அளவைப் பெற்று நிற்கும்.

409. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிலையும்.

எ.டு. : நாகு கடிது, வரகு கடிது என்பது அல்லது
நாகு கடுமை, வரகு கடுமை என்பது வேற்றுமை

இந்த இரு புணர்ச்சியிலும் நாகு என்றதன் இறுதி உகரம் அரை மாத்திரையின்றி ஒரு மாத்திரையாக உச்சிரிக்கவில்லை. இங்ஙனம் புணர் நிலையிலும் அரை மாத்திரையே நிற்கும் என்பது அடுத்து வரும் நூற்பாவால் உணர்த்தப்படுகிறது.

410. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே.

வன்தொடா் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் வந்தால் முன்பு கூறியது போலவே அரை மாத்திரை அளவே உச்சரிக்கப்படும். ஈண்டு நிலையலும் உரித்து என்ற உம்மையால் அரைமாத்திரையளவில் குறைந்து ஒலிக்கும் நிலை உண்டு எனத் தெரிகிறது. இதற்கு ஆதாரமாகவே மொழி மரபில் இடைப்படிற் குறுகும்.... எனக் கூறப்பட்டதால் இக்கருத்து உறுதியாகிறது என்பது நச்சினார்க்கினியரின் கருத்தாகும்.

எ.டு. : கொக்கு + கடிது = கொக்குக்கடிது, கொக்குக்கடுமை என்ற அல்வழி

வேற்றுமைச் சொற்களை உச்சரித்துப் பார்த்தும் காதால் கேட்டும் ஒலியை

உணர்ந்தால் ஓசை குறைவு தெரியும்.

நிலைமொழி வருமொழி வல்லினமாயிருக்க இடையில் வலிமிகும் போது கொக்கு என்றதன் உகர ஈறு தன் அரை மாத்திரையில் குறையும் என்பதே உண்மை என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

ஆனால் இளம்பூரணர் உரையே பாடம் ஆதலின் வல்லினப் புணர்ச்சியிடத்திலும் அந்த அரை மாத்திரையளவே ஒலிக்கும் என்பதையே கொள்ள வேண்டும் என்க.

புணரியல் நிலையில் குற்றியலுகரம் குற்றியலிகரமாக மாறும். யகரம் வருமொழியாக வரும்போது இவ்வாறாகும்.

411. யகரம் வருவழி இகரங்குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது.

வருமொழி யகரம் வர நிலைமொழி உகரம் முற்றிலும் தோன்றாமல் போகும் போது இகரம் வரும்.

நாகு + யாது = நாகியாது (நாக் + இ = நாகி)

நெடில் தொடர்க் குற்றியலுகரமும் உயிர்த் தொடர்க் குற்றியலுகரமும் வேற்றுமைப் புணர்ச்சியில் ஒற்று இரட்டித்து வலி மிகும்.

412. ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமையாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.

எ.டு. : ஆடு + கால் = ஆட்டுக்கால்
முயிறு + கால் = முயிற்றுக்கால்

ஈண்டு நிலைமொழியில் உகரம் ஏறிய வல்லினம் இரட்டித்தது. நூற்பாவின் தோற்றம் என்றதால் வருமொழி வல்லினமின்றிப் பிற எழுத்துக்கணம் வந்தாலும் இரட்டிக்கும் என்பதாம்.

எ.டு. : ஆட்டு ஞாற்சி, முயற்று ஞாற்சி, ஆட்டுயாப்பு, ஆட்டடைவு.

இங்ஙனம் ஒற்று இரட்டிப்பது ட, ற எழுத்துக்களே ஆகும். க, ச, த, ப எழுத்துக் குற்றுகரங்கள் இரட்டிக்காது.

413. ஒற்றிடை இனமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே.

எ.டு. : நாகு + கால் = நாகுகால் (நாக்கு என ஒற்று இரட்டிக்காது)

நெடில் தொடர்க் குற்றியலுகரமும் உயிர்த் தொடர்க் குற்றியலுகரமுமே ஒற்று இரட்டிக்கும் என்பதால் ஏனைய தொடர் பற்றிக் கூறும்போது இடைத் தொடரும் ஆய்தத் தொடரும் ஒற்றிரட்டித்து வாராது என்றும் வன், மென் தொடர்க் குற்றியலுகரங்கள் வேறு வகையான இலக்கணம் பெறுவதையும் தொல்காப்பியர் கூறுகிறார்.

414. இடைஒற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடைஆ இயல என்மனார் புலவர்

இடைத்தொடரும் ஆய்தத் தொடரும் ஒற்று இரட்டிக்காததோடு வருமொழி வல்லினத்தோடு சேர வலியும் மிகாது.

எ.டு. தெள்கு + கால் = தெள்குகால் (இடைத்தொடர்)
எ∴கு + கால் = எ∴குகால் (ஆய்தத்தொடர்)

வன்தொடர், மென்தொடர்கள் வலிமிகுத்து வரும். மேலும் மென் தொடர்க் குற்றியலுகரத்தின் மெல்லினம் வல்லினமாகவும் மாறும். சில இடங்களில் மெல்லினத்திற்கேற்ற இன வல்லினமாகத் திரியும்.

415. வன்தொடர் மொழியும் மென்தொடர் மொழியும்
வந்த வல்எழுத்து ஒற்றிடை மிகுமே.
மெல் ஒற்றுத் தொடர்மொழி மெல் ஒற்றெல்லாம்
வல்ஒற் றிறுதி கிளை ஒற்றாகும்.

எ.டு. : கொக்கு + கால் =கொக்குக்கால்
குரங்கு + கால் = குரங்குக்கால் } ஒற்று மிகுந்தது
குரங்கு + கால் = குரங்குக்கால் - மெல்லினம் வல்லினமானது.
எண்கு + குட்டி =எட்குக்குட்டி (ண் என்ற எழுத்திற்கு இனம் ட்)

ஈண்டுக்கிளை ஒற்று எனப் பொதுவாகக் கூறப்பட்டதால் வருமொழி வல்லினம் இன்றிப் பிற கணம் வந்தாலும் ஒற்று திரியும் என்பது உரையாசிரியர் கருத்து.

குரங்கு ஞாயிற்சி குரக்குஞாற்சி, ங் - க் எனத் திரிந்தது.

416. மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை

குற்றியலுகர மரப்பெயர் அம்சாரியை பெறும்.

தேக்கு + கோடு = தேக்கங்கோடு
வேம்பு + கோடு = வேப்பங்கோடு

சில மெல் ஒற்று வல்லொற்றாகத் திரியும் மென்தொடர்க் குற்றியலுகரம் போல இல்லாமல் (எண்கு – எட்கு) இயல்பாகவே வல்லொற்றாகாத மென்தொடர்க் குற்றியலுகர மரப்பெயர் அம் சாரியை பெறும்.

417. மெல் ஒற்று வலியா மரப்பெயரும் உளவே.

எ.டு. : குருந்து + கோடு = குருந்தங்கோடு (குருந்து, குருத்து என மாறாது)
புன்கு + கோடு = புன்கங்கோடு

நெடில் தொடர், வன்தொடர்க் குற்றியலுகரங்கள் உரிய இடங்களில் அம்சாரியை பெறும்.

418. ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்
அம்மிடை வரற்கும் உரியவை உளவே
அம்மரபு ஒழுகும் மொழிவயி னான.

எ.டு. : ஏறு + கோள் = ஏறம்கோள்
வட்டு + போர் = வட்டம்போர்

ஈண்டு உள எனக் கூறியதால் தெங்கங்காய், பயிற்றங்காய் என மென் தொடரும் உயிர்த் தொடரும் அம்சாரியை பெறும் என்கிறார் உரையாசிரியர்.

அம் சாரியை போல பறம்பிற் பாரி என இன் சாரியையும் இருட்டத்துக் கொண்டான் என அத்துச் சாரியையும், கொள்ளும் என்றும் உரைகாரர் கூறுகிறார்.

மென் தொடர் அக்குச் சாரியை பெறும்.

419. ஒற்றுநிலை திரியாது அக்கொடு வரூஉம்
அக்கிளை மொழியும் உளஎன மொழிப.

இது மென் தொடரைக் குறிக்கும். ஏனெனில் ஒற்றுத் திரிதல் என்பது மென்தொடர்தான் அதனால் இது திரியாத மென் தொடரைக் குறித்தது.

எ.டு. : குன்று + கூகை = குன்றக்கூகை
மன்று + பெண்ணை = மன்றப்பெண்ணை

(குன்று + அக்கு+ கூகை, மன்று + அக்கு + பெண்ணை – அக்குச் சாரியையில் அ தவிர ஏனைய அழிந்தன)

குற்றியலுகர எண்ணுப் பெயர்கள் அன் சாரியை பெறும்.

420. எண்ணுப் பெயர்க் கிளவி உருபியல் நிலையும்

எ.டு. : ஒன்று + காயம் = ஒன்றன் காயம்

உருபியலில் வேற்றுமை உருபு சேரும் போது அன் சாரியை பெறும் (ஒன்று + அன் + ஐ = ஒன்றனை) என 199-ஆம் நூற்பா கூறுவதன்படி ஈண்டு உணர்தல் வேண்டும்.

சில மென் தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் இன்சாரியை பெறும்.

421. வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்

வண்டு + கால் = வண்டின்கால்: பெண்டு + கால் - பெண்டின்கால்

422. பெண்டென் கிளவிக்கு அன்னும் வரையார்.

பெண்டு என்னும் சொல்லுக்கு இன் சாரியையோடு அன் சாரியையும் உண்டு. அங்ஙனம் வருவதை யாரும் நீக்கார்.

பெண்டு + கை = பெண்டன்கை

யாது என்ற வினாப் பெயரும் சுட்டெழுத்தை முதலாக உடைய ஆய்தத்துடன் கூடிய பெயரும் அன்சாரியை பெறும். ஆய்தம் கெடும்.

423. யாதுஎன் உறுதியும் சுட்டுமுதலாகிய
ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்

உருபியலில் (201) கூறியபடி ஆய்தம் கெட்டது.

எ.டு. : யாது + கோடு = யாதன் கோடு
அஃது + கோடு = அதன் கோடு

இந்தச் சுட்டு முதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகரத்தின் முன் உயிர்மொழி முதல் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் ஆய்தம் கெடாது. அன் சாரியையும் வராது

424. முன் உயிர் வருமிடத்து ஆய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழியான.

எ.டு. : அஃது + அடை = அஃதடை, இஃது + அடை = இஃதடை

இவை முன் உயிரின்றிப் பிற வலி, மெலி, இடையினங்கள் வந்தால் ஆய்தம் கெடும்.'

425. ஏனைமுன் வரினே தான்நிலை யின்றே.

எ.டு : அஃது + கடிது = அதுகடிது
அஃது + ஞான்றது = அதுஞான்றது
அஃது + வலிது = அதுவலிது.

குற்றுகரங்கள் அல்வழியில் மிகாமல் இயல்பாக வருதலும் உண்டு. வல்லினம் தவிர.

426. அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும்.

எ.டு. நாகுகடிது, வரகுகடிது, தெள்குகடிது, எஃகுகடிது, குரங்குகடிது.

427. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகும்.

மேற்கூறிய 5 குற்றியலுகரம் இயல்பாக வந்தது போலன்றி வன் தொடர்க் குற்றியலுகரம் வலிமிகும்.

எ.டு. : கொக்கு + கடிது = கொக்குக்கடிது

சுட்டு நீண்ட மென் தொடர்க் குற்றியலுகரம், யா என்ற வினாக் கொண்ட மென் தொடர்க் குற்றியலுகரம் வல்லெழுத்து மிகும்.

428. சுட்டுச் சினை நீடிய மென்தொடர் மொழியும்
யாவினா முதலிய மென்தொடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத்தியற்கை.

எ.டு. : ஆங்கு + கொண்டான் = ஆங்குக் கொண்டான் யாங்குக் கொண்டான்.

யா - இயல்பாக வலிமிகாமல் வருதலும் உண்டு

429. யாவினா மொழியே இயல்பும் ஆகும்

எ.டு. யாங்கு + கொண்டான் = யாங்குகொண்டான்.

மேற்கூறிய சுட்டும் வினாவும் ஆகிய மென்தொடர் வன் தொடராக மாறாது.

430. அந்நான் மொழியும் தந்நிலை திரியா

அதாவது சில வன் தொடர் 415ஆம் நூற்பாவின்படி (குரங்கு – குரக்கு) வலியாக மாறும். ஆனால் இவை இங்ஙனம் மாறும் வாய்ப்பே இல்லை என்பது பொருள்.

அங்கு, இங்கு, உங்கு, எங்கு (அங்குக் கொண்டான்)

431. உண்டுஎன் கிளவி உண்மை செப்பின்
முந்தை இறுதி மெய்யொடும் கெடுதலும்
மேனிலை ஒற்றே ளகாரம் ஆதலும்
ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே
வல்எழுத்து வரூஉம் காலை யான.

உண்டு என்னும் சொல் வலியோடு சேரும்போது டு கெட உண் என்பதன் ணகரம் ளகரமாகத் திரியும் (உள்) இத்திரிபுகள் இல்லாமலும் இயல்பாகவும் வரும்.

எ.டு. : உண்டு + பொருள் = உள்பொருள், உண்டுபொருள்



குறிப்பு

குற்றியலுகர ஈறுகளை உடைய திசைப்பெயர். அவை தம்முன் தாமும் தம்முன் பிறவும் புணரும் இயல்பை ஆசிரியர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

432. இருதிசை புணரின் ஏயிடை வருமே.

எ.டு. வடக்கு + தெற்கு = வடக்கேதெற்கு
கிழக்கு + மேற்கு = கிழக்கேமேற்கு

ஈண்டு ஏ சாரியை எண்ணும்மைப் பொருளில் வந்தது.

வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்கும் என்பது பொருள்

இத்திசைச் சொற்கள் தம்முன் மாறுபட்ட திசையுடன் புணரும் போது நிலைமொழியின் குற்றியலுகரம் கெடும். தெற்கு என்பதன், றகரம் ன கரமாகும்.

433. திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணரும் காலை யான.

எ.டு. : வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

ஈண்டு நூற்பாவின் படி குற்றுகரம் கெட்டாலும் நூற்பாவில் 'திரிந்து' எனக் கூறியதால் வடக்கு என்பதன் இடையில் உள்ள க் கெடும் என இளம்பூரணர் கூறுகிறார்.

நூற்பாவில் வேறு எனக் கூறியதால் திசைப் பெயரோடு வேறு பெயர்கள் சேர்ந்தாலும் இதே விதி பெறும்.

வடக்கு + கடல் = வடகடல், வடவரை
தெற்கு + கடல் = தென்கடல், தென்கரை

மேலும் நூற்பாவில் மெய் எனக் கூறியதால் சில திரிதல் பெறும்.

கிழக்கு + கூரை = கீழ்கூரை (விதிப்படி குற்றியலுகரமும் ககர ஒற்றும் நீங்க நின்ற முதல் கீழ் என ஆனது)

மேற்கு+ கூரை = மேல்கூரை (கு நீங்க றகரம் லகரமாகத் திரிந்தது)

இந்த இயலில் குற்றியலுகர எண்ணுப் பெயர் புணர்ச்சியே மிகுதியும் கூறப்பட்டுள்ளது.



குறிப்பு

434. ஒன்று முதலாக எட்டன் இறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே
முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே

பத்து என்னும் எண்ணோடு ஒன்ற முதல் எட்டு எண்கள் வந்தால் பத்தில் உள்ள து கெடும். இரண்டு என்ற எண் தவிர ஏனைய எண்களுடன் இன் சாரியை வரும்.

எ.டு. பத்து + ஒன்று = பதினொன்று, பதின் மூன்று ……

பத்தொடு இரண்டு சேரின் து கெடும். தகர ஒற்று னகரமாக இரட்டிக்கும்.

435. பத்தன் ஒற்றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்தது என்ப இரண்டுவரு காலை

எ.டு. பத்து + இரண்டு = பன்னிரண்டு

பத்தொடு ஆயிரம் வந்தால் து கெட இன் வரும்

436. ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது

எ.டு. பத்து + ஆயிரம் = பதினாயிரம்

பத்தின் முன் நிறைப் பெயர் அளவுப் பெயர்கள் வந்தால் இன் சாரியை வரும்.

437. நிறையும் அளவும் வரூஉம் காலையும்
குறையா தாகும் இன்னென் சாரியை

எ.டு. பத்து + கழஞ்சு = பதின்கழஞ்சு (நிறைப் பெயர்)
பத்து + கலம் = பதின்கலம் (அளவு)

இனி ஒன்று முதலான எண்ணுப் பெயர் முன் பத்து வருமொழியாக வந்தால் உள்ள விதிமுறைகள் பற்றிக் கூறப்படுகின்றன. இந்த எண்ணுப் பெயர்ப் புணர்ச்சியில் நிலை மொழியிலும் மாற்றம் ஏற்படும், வரு மொழியிலும் மாற்றம் ஏற்படும் என்பது இக்குற்றியலுகரப் புணரியலின் சிறப்புச் செய்தியாகும்.

438. ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத்து என்ப
கூறிய இயற்கைக் குற்றியலுகரம்
ஆறன் இறுதி அல்வழி யான.

வருமொழியான பத்தின் ஒற்று (த்) கெடும். ஆய்தம் வரும். நிலை மொழியில் ஆறு என்ற எண் தவிர்த்த ஏனைய எண்களின் இறுதி குற்றியலுகரம் கெடும்.

ஒன்று + பத்து = ஒருப.்.து வந்து இடைநிலையும் என்றதால் ஆய்தம் வராமல் இருத்தலும் உண்டு ஒருபது.

439. முதல் ஈரெண்ணின் ஒற்று ரகரம் ஆகும்
உகரம் வருதல் ஆவயினான.

440. இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கும்
நடைமருங் கின்றே பொருள் வயினான.

ஒன்று இரண்டு முன் பத்து வரின் நிலைமொழி ஈறுகள் (று, டு) கெடும். ஒன்றில் உள்ள னகரம் ரகரமாகத் திரியும். உகரம் வரும். இரண்டில் உள்ள னகரம் ரகரமாகும், உகரமும் வரும். இடையில் உள்ள ரகரம் கெடும்.

எ.டு. ஒன்று + பத்து (ஒன் - ஒர் + உ = ஒரு) ஒருபது
இரண்டு + பத்து (இரண் + இண் + இர் + உ = இரு) இருபது

441. மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்
மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும்

மூன்று, ஆறு முன் பத்து வரின் மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகும். மூன்றில் உள்ள னகரம் பகரமாகும்.

எ.டு. மூன்று + பத்து = முப்ப.்.து, முப்பது
(மூன்று + மூன் - முன் - முப்)
ஆறு + பத்து = அறுப.்.து, அறுபது (ஆறு – அறு)

442. நான்கண் ஒற்றே றகாரம் ஆகும்

நான்கின் னகரம் றகரமாகத் திரியும்.



எ.டு. நான்கு + பத்து = நாற்பது, நாற்ப.்.து

443. ஐந்தன் ஒற்று மகார மாகும்

444. எட்டன் ஒற்று ணகார மாகும்

ஐந்தில் நகரம் மகரமாகவும் எட்டில் டகரம் ணகரமாகவும் திரியும்

எ.டு. ஐம்பது, எண்பது

ஏழ் என்ற எண் புள்ளியிறுதி என்பதால் ஈண்டு விதி கூறப்படவில்லை.

இனி ஒன்பது என்ற எண் முன் பத்து வரின் ஏற்படும் திரிபுகள் பற்றிக் காண்போம். பொது விதியாக ஒன்பதின் இறுதி து கெடும். நிலைமொழி ஒன்பதின் முன் தகர மெய் சேரும். னகரம் ணகரமாக இரட்டிக்கும், உ வந்து சேரும், பகரம் கெடும். வருமொழி பத்தில் பவும் ஆய்தமும் நீங்க து மட்டும் நிற்கும். அதுவும் றகரமாக மாறும் இவ்வாறு ஒன்பது + பத்து, தொண்ணூறு ஆகும்.

445. ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டும் உகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்.

எ.டு. ஒன்பது பத்து தொண்ணூறு

இதுவரை ஒன்று முதல் ஒன்பது வரையான நிலைமொழிகள் முன் பத்து என்ற எண் வருவது பற்றிக் கூறப்பட்டது. இனி அந்நிலைமொழி முன் அளவு. நிறைப் பெயர்கள் வருதல் பற்றிக் காண்போம். (நிலைமொழியின்து – பொது விதிப்படி கெடும்)

446. அளந்தறி கிளவியும் நிறைஎன் கிளவியும்
கிளந்த இயல தோன்றும் காலை.

எ.டு. ஒன்று + கலம் ஒருகலம் ஒருகழஞ்சு இருகலம் 439ஆம் நூற்பாவின் படி னகரம் ரகரமாகும். து பொது விதிப்படி கெடும் (434)

447. மூன்றன் ஒற்றே வந்தது ஒக்கும்.

எ.டு. மூன்று + கலம் = முக்கலம்: முக்கழஞ்சு

448. ஐந்தன் ஒற்றே மெல் எழுத்தாகும்

எ.டு. ஐந்து + கலம் = ஐங்கலம்: ஐங்கழஞ்சு
(து கெட ந் - ங் ஆனது)

மேற்கூறிய மூன்று, ஐந்தின் முன் க ச த ப பெரும்பாலும் வரும் என்கிறார்.

449. கசதப முதன் மொழி வரூஉங் காலை
எட்டின் முன் ந ம வ எழுத்தொடு அகரம் வரின் இயல்பாய் நிற்கும்.

450. நமவ என்னும் மூன்றொடு சிவணி
அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே

எ.டு. எட்டு + கலம் = எண்கலம்

வல்லினம் வருதல் பொதுவானது, எண்நாழி, எண்மண்டை, எண்வட்டி, எண்ணகல் (எட்டு அகல்) எண்ணுழக்கு,ஈண்டு உயிர் வர ஒற்று இரட்டிக்கும்.

மூன்று, ஐந்தன் முன் ந ம வரின் வந்த எழுத்தாக ஏற்று மாறும்.'

451. ஐந்தும் மூன்றும் ந ம வருங் காலை
வந்தது ஒக்கும் ஒற்றியல் நிலையே.

எ.டு. : ஐந்து + நாழி = ஐந்நாழி, ஐம்மண்டை
மூன்று + நாழி = முந்நாழி, மும்மண்டை

மூன்று, நான்கு ஐந்து முன் வகரம் வர வந்த வகரமாய் மாறும்.

452. மூன்றன் ஒற்றே வகாரம் வரும்வழித்
தோன்றிய வக ரத்து உருவா கும்மே!

453. நான்கன் ஒற்றே லகார மாகும்

454. ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே.

எ.டு. மூன்று + வட்டி = மூவட்டி
நான்கு + வட்டி = நால்வட்டி

ஐந்து + வட்டி = ஐவட்டி (ஐந்தின் ஒற்று கெடும்)



455. முதல்ஈரெண்ணின் முன் உயிர் வருகாலைத்

தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயினான.

ஒன்று இரண்டு எண் முன் உயிர் வரின் முதல் நீண்டு வரும்.

ஒன்று +அகல் - ஓரகல்: ஈரகல் (ஒன்று, இரண்டு என்பன ஒரு இரு என உகரம் பெறாமல் ஓர், இர் என நிற்க முதல் எழுத்து நீள ஓர்,ஈர் என ஆகும்)

மூன்று, நான்கு, ஐந்தன் முன் உயிர் வந்தால் மூன்றன் கண் வகரமும் நான்கன் கண் லகரமும் ஐந்தன் கண் ஒற்று கெட்டும் வரும்.

456. மூன்றும் நான்கும் ஐந்துஎன் கிளவியும்
தோன்றிய வகரத்து இயற்கை யாகும்.

எ.டு. மூன்று + அகல் = முவ்வகல்: முவ்வுழக்கு
நான்கு + அகல் = நாலகல்: நாலுழக்கு
ஐந்து + அகல் = ஐயகல்: ஐயுழக்கு

மூன்று என்பது நெடுமுதல் குறுகாமலும் வரும்.

457. மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே
உழக்கென் கிளவி வழக்கத்தானே

எ.டு. : மூன்று உழக்கு மூவுழக்கு: வழக்கத்தான என்பதால் மூவகல் எனவும் கொள்க
என உரையாசிரியர் கூறுகிறார்.

458. ஆறென் கிளவி முதல் நீடும்மே

ஆறு என்பது வல்லினம் வர நெடுமுதல் குறுகும் என 441ஆம் நூற்பா கூறுகிறது. ஆதனால் ஈண்டு உயிர் வருமொழி ஆதலின் அக்குறுக்கம் இல்லாமல் இயல்பாக நீண்டே இருக்கும் எனப்பட்டது.

எ.டு. : ஆறு + அகல் = ஆறகல்: ஆறுழக்கு

459. ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே

ஒன்பதின் முன் அளவுப் பெயர் நிறைப் பெயர் வந்தால் இன்சாரியை பெறும்.

எ.டு. : ஒன்பது + கலம் = ஒன்பதின்கலம்: ஒன்பதின் கழஞ்சு

இனி ஒன்று முதல் ஒன்பது எண்கள் நிலைமொழியாய நிற்க வருமொழி நூறு என ஆகும் போது உள்ள புணரியலைக் கூறும் போது கீழ்க்கண்டவாறு அமையும்.

460. நூறு முன் வரினும் கூறிய இயல்பே.

(இந்நூற்பாவில் ஒன்று என நிலைமொழி கூறப்படுவதை 438ஆம் நூற்பாவின்படி வரவழைத்துக் கொள்ள வேண்டும்)

எ.டு. : ஒன்று + நூறு =ஒருநூறு

(மூன்று, நான்கு, ஐந்து, ஒன்பதுக்கு விதிபின் கூறப்படுவதால் மாட்டேறு வகையில் இருநூறு, அறுநூறு, எண்ணூறு கொள்ள வேண்டும்)

461. மூன்றன் ஒற்றே நகாரம் ஆகும்

எ.டு. : மூன்று + நூறு = முந்நூறு

462. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா.

எ.டு. நானூறு, ஐந்நூறு (நான்கு + நூறு: ஐந்து + நூறு)

இந்நூற்பாவில் மெய் எனக் கூறப்பட்டுள்ளதால் வருமொழியில் உள்ள நூறு என்றதன் முதல் எழுத்தாகிய ந் கெடும்

நான்கு + நூறு: நான் + நூறு: நான் + ந் + ஊறு=நானூறு என ஆனது. ஐந்நூறு என்பதில் ந ஒற்று நீங்க ஐநூறு என்றும் வரலாம்.

463. ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊ ஆ வாகும், இயற்கைத் தென்ப
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்.

ஒன்பதன் முன் நூறு வரும்போது, முன்பு 445ஆம் நூற்பாவில் கூறியவாறு ஒன்பதன் முன் த், சேரும் னகரம் ளகரமாக இரட்டிக்கும். பது கெடும். வருமொழியில் நூறின் ந கெடும். ஊறு என்று நிற்க ஊ ஆ ஆகும். இடையே இ, ர சேர ஈறாகிய று கெட்டு அது மகரமாக மாறும்.

ஒன்பது அல்லது ஒன்ப∴து என்பது நிலைமொழி; வருமொழி நூறு. தொள்ளாயிரம் ஆகும்.

ஒன்பது + (நூறு); ஒன்; த் சேர-தொன் ன் - ள்ள் ஆக தொள்ள் ஆகும். இதுநிலைமொழியின் நிலை.

நூறு : ந் + ஊறு. ஊ ஆறு; இந்த ஆறு என்பதன் இடையே (ஆ) இர சேரும் (று) இறுதி று கெட ம் சேரும். ஆயிரம்.

தொள்ள் + ஆயிரம் =தொள்ளாயிரம்

நிலைமொழியான ஒன்பது என்பதில் உள்ள ஈறு து பொது விதிப்படி கெடும். இந்நூற்பாவில் (463) மெய் என்றதனால் பகரம் கெடும் என உரையாசிரியர் குறிக்கிறார்.

இனி ஒன்று முதலான எண் முன் ஆயிரம் வருமொழியாக வருதல் பற்றிக் கூறப்படுகிறது

464. ஆயிரக் கிளவி வரூஉங் காலை
முதலீர் எண்ணின் உகரம் கெடுமே.

எ.டு. : ஒன்று + ஆயிரம் =ஓராயிரம், இராயிரம்

பொது விதிப்படி (434) ஒன்றுக்கும் இரண்டுக்கும் று, டு கெட, ஒன், இரண் என்பதன் ஒற்று ரு ஆகும் என்றபடி (439) ஒரு, இரு என ஆகும். இரண் என்பதன் ரகம் 440 நூற்பாவின்படி கெட்டு இரு என ஆனது. இந்நிலையில் ஒரு, இரு என்று ஆகாமல் ஒர், இர் என்றே இந்நூற்பாவின் படி நிலைமொழியாக நின்று ஆயிரத்தோடு சேரும் போது ஒர் + ஆயிரம் =ஓராயிரம்: இர் + ஆயிரம் =இராயிரம் ஆயின என்க.

465. முன்னிலை நீடினும் மானம் இல்லை.

ஒன்று, இரண்டு என்பதன் முதல் எழுத்து ஓ,ஈ என நீண்டாலும் குற்றம் இல்லை.

எ.டு : ஓராயிரம்,ஈராயிரம்

466. மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும்

எ.டு. : முவ்வாயிரம்: 465 நூற்பாவின்படி நெடிலாக மூவாயிரம் என்றே இருக்கலாம்.

467. நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்.

எ.டு. : நான்கு + ஆயிரம் =நாலாயிரம்

468. ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும்

எ.டு. : ஐயாயிரம்

469. ஆறன் மருங்கில் குற்றிய லுகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்.

குறிப்பு

எ.டு. : ஆறு + ஆயிரம் =ஆறாயிரம். (நெடுமுதல் குறுகும் என்பதன்படி (441) வந்தது)

நெடுமுதல் ஒழியக் கெடுதல் வேண்டும்.

470. ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மரபே.

ஒன்பது என்ற நிலைமொழி ஆயிரத்தின் முன் திரியாது நின்று இன்சாரியை மட்டும் பெறும்.

ஒன்பது + ஆயிரம் =ஒன்பதனாயிரம் (ஒன்பது இன்)

இந்நூற்பாவில் உருபு என்றும், நிலை என்றும், சாரியை என்றும் கூறிய மிகுதியால் ஆயிரம் அல்லாத பிற எண், பொருட் பெயர் சேரும் போது, இன்னும் உகரமும் வல்லெழுத்தும் பெறும்.

ஒன்பது + கோடி =ஒன்பதிற்றுக் கோடி

ஒன்பது +இன்; ஒன்பதின் +உ =ன் ற் ஆகி இரட்டிக்க ஒன்பதிற்று + கோடி வலிமிகுந்து ஒன்பதிற்றுக் கோடி ஆனது.

இனி ஒன்று முதலான எண்கள் முன்நூறாயிரம்சேரல்.

471. நூறா யிரமுன் வரூஉங் காலை
நூறென் இயற்கை முதனிலைக் கிளவி

எண்ணுப் பெயர் முன் ஆயிரம் வரும்போது முதல் நிலைக்கிளவியாகிய ஒன்று என்பது நூறு என்ற வருமொழியோடு வந்தபோது ஒரு என ஆகி நின்றது போல (460) வரும். பிற எண்கள் விகாரப்பட்டும் இயல்பாயும் முடியும் என்பது கருத்து.

ஒன்று + நூறாயிரம் =ஒருநூறாயிரம்; இருநூறாயிரம்; இரண்டாயிரம், ஒன்பது நூறாயிரம். இதில் இன் சாரியையுடன் ஒன்பதினூறாயிரம் என வரலாம் என உரையாசிரியர் இந்நூற்பாவில் 'முன்' என்க கூறியதால் கொள்ளலாம் என்றார். மேலும் நிலை என்று

நூற்பாவில் கூறியதால் நான்கு என்பதில் கு நீங்க வருமொழி நூறாயிரம் என்பதில் உள்ள ந் நீங்க (நான் + நூறாயிரம்)= நானூறாயிரம் என வந்தது.

இனி நூறு நிலைமொழியாக ஒன்று முதல் ஒன்பது சேரல்.

472. நூறென் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு
ஈறு சினை ஒழிய இன ஒற்று மிகுமே.

நூறு என்பதன் ற கரம் இரட்டிக்கும் என்பதால் நூற்கு என்பதாகவும் நிற்கும். நூற்ற் என்பதாகவும் நிலைமொழி நிற்க வரும் எண்ணுப் பெயர்களுக்கு ஏற்பப் புணரும் ஈறு சினை ஒழிய என்பது உகரம் தவிர ற் என்பது பொருள். உகரம் நீங்க என்பதும் பொருள்.

எ.டு. : நூறு + ஒன்று =நூற்றொன்று (நூற்உ: நூற்ற்)
நூறு + இரண்டு =நூற்றிரண்டு (நூற்உ: நூற்ற்)
நூறு + மூன்று =நூற்றுமூன்று (உ கெடாமல் றகரம் இரட்டித்தது)

473. அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும்.

நூறு முன் பத்து சேரும் போது முன்னர் கூறியவாறு ஒற்றிரட்டிக்கும்.

நூறு + ஒருபத்து =நூற்றொருபத்து:
நூறு + பத்து =நூற்றுப்பத்து என்பது இயல்பு

ஆனால் இந்நூற்பாவில் ஆகும் என்ற மிகையால் நிலை மொழி ஒருநூறு, இருநூறு என அடையடுத்து நிற்பதும் உண்டு என்பது பெறப்பட்டது.

ஒருநூறு + ஒருபத்து =ஒருநூற்றொருபத்து

(ஈண்டு வருமொழியில் ஒரு என அடையும் சேர்ந்தது ஏனெனில் நூற்பாவில் அவையூர் பத்து என்றதால். அதாவது ஒன்று முதல் ஒன்பது வரையான எண்களுடன் சேரப்பட்ட பத்து என்பது ஒருப∴து, இருப∴து என்பதைக் குறிப்பதாகும். அதைத்தான் அவையூர் எனப் பன்மையால் உணர்த்தப்பட்டது. 472ஆம் நூற்பாவில் நூறு நிலை மொழி என்பதால் இந்நூற்பா அந்நூறின்முன் ஒன்று முதல் ஒன்பது வரை சேர்ந்த பத்தாகிய எண்கள் என்பது கருத்து).

474. அளவும் நிறையும் ஆயியல் திரியா
குற்றிய லுகரமும் வல்எழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.



குறிப்பு

நூறு முன் அளவு, நிறைப்பெயர் சேரின் நிலைமொழியின் றகர ஒற்று இரட்டிக்கும்.

எ.டு. : நூறு + கலம் =நூற்றுக்கலம்: நூற்றுக் கழஞ்சி

இனி ஒருபது, இருபது முதலான எண்களின் முன் ஒன்று முதல் ஒன்பது வரையான எண்ணும் ஆயிரம் என்ற பெயரும் அளவு நிறைப் பெயர்களும் வந்தால் ஏற்படும் இலக்கண விதிகள் வருமாறு:

475. ஒன்றுமுதலாகிய பத்தூர் கிளவி
ஒன்று முதல் ஒன்பான் ஒற்றிடை மிகுமே
நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்.

ஒன்று முதல் எட்டு ஈறாகப் பத்து என்னும் எண் ஊரப்பட்ட சொற்கள் வருமொழியாக ஒன்று முதல் ஒன்பான் வரையிலான சொற்கள் வந்து புணருமிடத்து இடை நின்ற ஆய்தம் கெட்டு முடிதல் வேண்டும். அவ்விடத்தே இன ஒற்றாக ஒரு தகரவொற்று மிக்கு முடியும்.

எ.டு. : ஒருபத்து + ஒன்று = ஒருபத்தொன்று: இருபத்தொன்று.,
ஒருபத்திரண்டு; இருபத்திரண்டு …….

476. ஆயிரம் வரினே இன்னாம் சாரியை
ஆவயின் ஒற்றிடை மிகுதல் இல்லை.

ஒருப.ஃ.து முன் ஆயிரம் வரின் ப.ஃ.தின் ஆயுதம் கெடும் ஒற்றிடை வராது, இன்சாரியை பெறும்.

ஒருப.ஃ.து + ஆயிரம் =ஒருபதினாயிரம்
(ப.ஃ.து; பது + இன் =பதின்)

477. அளவும் நிறையும் ஆயியல் திரியா.

எ.டு. ஒருப.ஃ.து + கலம் = ஒருபதின்கலம்

(476ஆம் நூற்பாவில் கூறப்பட்டது போல ஆயுதம் கெட்டு, ஒற்று இடைவராமல், இன்சாரியை பெறும்).

இந்நூற்பாவில் திரியா எனக் கூறப்பட்டதால் இன் சாரியையின் னகரம் ற் ஆக இரட்டிக்கும் உகரம் வரும்

ஒருப.ஃ.து + கலம் = ஒருபதிற்றுக்கலம்

(ப∴.து – பது + இன் =பதின் பதிற்ற + உ =பதிற்று)

மேலும் வருமொழி ந வந்தால் ஒருபதின் என்ற நிலைமொழி னகரம் கெட்டு வருமொழி நகரம் னகரமாகத் திரிந்து ஒருபதினாழி எனப் புணரும்.

(ஒருபதின் + நாழி = ஒருபதி + னாழி)

478. முதனிலை எண்ணின்முன் வல்எழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவ வந்து இயையினும்
முதனிலை யியற்கை என்மனார் புலவர்.

முதனிலை எனப்படும் ஒன்று என்ற எண் முன் வல்லின முதல் எழுத்துக்களாகிய கசதப வரினும் ஞநம மெல்லினம் வரினும் பவ என்னும் இடையினம் வரினும் ஒன்று என்பது ஒரு என்பதாகவே வரும்.

ஒரு + கல் =ஒருகல், ஒருசாடி, ஒருதடி, ஒருபறை
ஒருஞாண், ஒருநூல், ஒருமணி
ஒருயாழ், ஒருவட்டு.

479. அதனிலை உயிர்க்கும் யாவரு காலையும்
முதனிலை ஞகரம் ஓவா கும்மே
ரகரத்து உகரம் துவரக் கெடுமே.

மேற்குறித்த ஒரு என்ற நிலைமொழி முன் உயிரும், யா என்னும் முதலெழுத்துச் சொல்லும் வரின் ஒரு என்றதில் ஒகரம் நெடிலாகும் ரு என்பதில் உ கெட நிற்கும்.

எ.டு. ஒரு + அடை = ஓரடை (ஒரு – ஓரு - ஓர் + அடை)
ஒரு + யாழ் = ஓர்யாழ் (ஒரு – ஓரு – ஓர் + யாழ்)

மேலே ஒன்று பற்றிக் கூறிய தொல்காப்பியர், இனி இரண்டு முதல் ஒன்பது எண்களின் முன் மா என்னும் அளவுப் பெயர் வரின் இயல்பாகவும் வேறுபடவும் சேரும் என்கிறார்.

480. இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர்
வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்
மகரஅளபொடு நிகரலும் உரித்தே.

எ.டு. இரண்டு + மா = இரண்டுமா; இருமா,

இந்நூற்பா இரண்டு முதலாகக் கூறப்பட்டாலும் ஒன்று என்ற எண் முன் மா வரும்போது ஒருமா என வருமேயன்றி ஒன்றுமா என வாராது என உரையாசிரியர் கூறியுள்ளார்.

பொதுவாக எண்ணுப் புணர்ச்சி வகையில் மிக்க எண்ணுடன் குறைந்த எண் வந்தால் உம்மைத் தொகையாகவும் குறைந்த எண்ணுடன் மிக்க எண் வந்தால் பண்புத் தொகையாகவும் கொள்ளவேண்டும். (எ.டு. இருபத்தொன்று என்பது இருபதும் ஒன்றும். இருபது என்றால் இரண்டாகிய பத்து) என்பது உரையாசிரியர் கருத்து.

இனி எழுத்ததிகாரத்தில் கூறப்பெற்ற புள்ளியீற்றில் விடுபட்ட சில மெய்யீறுகளின் செய்யுள் முடிவுகள் பெறுவதைப் புறநடையால் கீழ்கண்டவாறு கூறப்படுகின்றன.

481. லன என வரூஉம் புள்ளி யிறுதிமுன்
உம்மும் கெழுவும்உ ளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான.

ல், ன் என்ற ஈறுகளின் முன் உம், கெழு சாரியை வரும். பிற சாரியையும் வரும். இங்ஙனம் வருதல் வேற்றுமை குறித்த பொருட் புணர்ச்சியாக செய்யுளில் வரும் என்க.

1. “வானவரி வில்லும் திங்களும் போலும்”. ஈண்டு வில்லும் திங்களும் என்று எண்ணப்படாமல் வில்லினைத் திங்கள் போல என வேற்றுமைப் பொருள் கொள்ள வேண்டும்.

2. “கல்கெழு கானவர் நல்குறு மகளே”ஈண்டு கெழு என்பது கல்லை என வேற்றுமை பொருள் தந்து நிற்கிறது. கல்லைபொருந்திய கானம் என விரிக்க வேண்டும்.

3.”மாநிதிக் கிழவனும் போன்ம்”ஈண்டு கிழவனும் என்பதில் உள்ள உம் கிழவனை என்ற வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது.

4. “கான்கெழு நாடன்”ஈண்டு கானைப் பொருந்திய என வேற்றுமையில் கெழு வந்துள்ளது.

இந்நூற்பாவில் அன்ன மரபில் என கூறப்பட்டதால் சாரியை காரணமாக வழி மிகுதலும் நிலை மொழியீறு திரிதலும் சாரியையின் உகரம் கெட்டு நிற்றலும். எகர நீட்சியும் ‘கெழு’ என்பதற்கு உண்டு என இளம்பூரணர் கூறுகிறார்.

குறிப்பு

எ.டு. பூக்கேழூரன் இச்சொல் பூ + ஊரன், என்பதாகும். கெழுசாரியை, வழி மிக பூக்கெழு + ஊரன் ஆகும். கெழு என்பதில் உகரம் கெட கெழ் ஆகும். ஏகர நீழ்ச்சி என்பதால் கேழ் ஆகும். பூ + க் + கேழ் + ஊரன் =பூக்கேழூரன் ஆயிற்று. இவ்வாறு வளங்கேழ் திருநகர் என்பதில் வழி மிகாமல் இனமெல்லெழுத்து வந்தது.

இதுவரை அதிகாரக் கருத்துக்கள் கூறப்பட்டன. இனி எழுத்ததிகாரம் என்ற இந்நூலுக்குரிய புற நடையாகக் கீழ்கண்ட கருத்துக்கள் உணர்ததப்படுகின்றன.

483. உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் கிளவியும்
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிறு மருங்கின்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்
செய்யும் செய்த என்னும் கிளவியும்
மெய்ஒருங் கியலும் தொழில்தொகு மொழியும்
தம்மியல் கிளப்பின் தம்முள் தாம்வரூஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்
அன்னவை எல்லாம் மருவின் பாத்திய
புதையல் நிலையிடை உணரத் தோன்றா

1. உயிர் எழுத்தோ, மெய் எழுத்தோ இறுதியாக நின்று குறிப்பு, பண்பு, இசை (ஒலிப்பு) அடிப்படையில் வரும் குறைச்சொற்களாகிய உரிச் சொற்கள் நிலைமொழி, வருமொழி எனப் பிரித்தால் பொருள் தராத வகையில் இருக்கும். இவைகளை ஒரே சொற்களாக கொள்ளவேண்டும். அங்ஙனம் சொல்லுங்கால் இடைச் சொல்லோடு கூடிநின்று பொருள் உணர்த்தும். இப்பொருள் உணர்த்தலும் வெளிப்படையாக இல்லாமல் அனுமானமாகவே ஆகும் என்க.

எ.டு விண் என இசைத்தது: காரெனக் கறுத்தது, ஒல்லென ஒலித்தது, இவைகளை நிலைமொழி வருமொழி என பிரித்தால் பொருள் தாரா, இப்படிப்பட்ட சொற்களை வாழ்வியல் நோக்கி உரிச் சொல், இடைச்சொல் சேர்க்கையால் எழுத்ததிகாரம் கூறும் தொடர் மொழியாக ஏற்கலாம் என்பது புறனடைக் கருத்தாகும்.

2. பண்புத் தொகை சொற்களையும் ஒரு சொல்லாகவே கருத வேண்டும். செந்தாமரை.

3. காலங்களில் உள்ளடக்கிய வினைத் தொகைகளையும் ஒரு சொல்லாகவே கருதவேண்டும்
கொல்யானை.

குறிப்பு

4. தம் முன் தாம் வரும் எண்ணுப் பெயர்களையும் ஒரு சொல்லாகக் கருத வேண்டும். ஒரொன்று

ஒன்று என்பதையே குறிப்பதால் இது ஒரு சொல் ஆகும். நிலைமொழி வருமொழி எனப்

பிரித்தால் பொருள் வெளிப்படாது.

483. கிளந்த அல்ல செய்யுளில் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்.

இதுவரை கூறப்பட்ட சொற்களே யல்லாமல் பிற சொற்கள் செய்யுளிலும் வழக்கத்திலும் கூறப்பட்ட எழுத்திலக்கண விதிக்கு மாறாக வருமானால் அவைகளை ஏற்புழி நல்லறிவின் ஆய்வால் ஏற்றுக் கொள்க. இதுவே நற்புலவோர் துணிபு. இந்நூற்பாவின் கருத்தோடு எழுத்ததிகாரம் நிறைவு பெறுகிறது.

1. நறவங்கண்ணி, சுள்ளியங்காடு, புன்னையங்கானல் அம்சாரியை பெற என்பவை அம் சாரியை பெற்றது புறனடை.

நறா என்பது நற என 235ஆம் நூற்பாவின்படி நின்று வுகரம் பெற்றது. இது அம் சாரியை பெறும் என முன்பு கூறப்படவில்லை. அதுபோல இகர ஈறும் ஐகார ஈறும் வேற்றுமைக்கண் அம்சாரியை பெறா என்பது முந்தைய விதி. ஆனால் இப்புறனடையால் ஏற்கப்பட்டது

2. வேர் பிணி வெதிரத்து எனச் செய்யுளில் வெதிர் என்ற ரகர ஈறு வேற்றுமைக் கண் அத்துச் சாரியை இப்புறனடையால் பெற்றது.

3. முளவு மா, பிணவு நாய் என்பன முளா, பிணா என்பனவாய் இருந்து இறுதி ஆகாரம் கெட முள, பிண என ஆகி, வுகரம் அல்வழியில் பெற்றன. (ஆனால் நறா நறவு ஆகி அம்சாரியை பெற்று நறவங்கண்ணி என ஆனது போல முளா – முள – முளவு அம்சாரியை பெறாததாயிற்று.

4. அஞ்செவி நிறைய எனச் செய்யுளில் அகஞ்செவி என்ற சொல் ககரம் கெட்டு வந்தது. புறனடையால் ஆகும். அதாவது அகம் + கை =அங்கை என வரும் என்று 316ஆம் நூற்பா கூறுகிறது. அகம் முன்கை என்ற வருமொழி பற்றிக் கூறியது போல அகம் செவி வந்தால் எனக் கூறாததால் இப்புறனடை மூலம் ஏற்கப்பட்டது.

5. ஆயிடை எனச் செய்யுளில் வரும் சொல் அ + இரு = ஆயிரு என வரும் என்ற 209ஆம் நூற்பாவில் கூறியபடி பொருட் புணர்ச்சிக்குக் கூறிய இலக்கணக் கருத்து ஈண்டு இடை, என்ற ஏழாம் வேற்றமைக்குப் பொருந்த அ + இடை = ஆயிடை ஆனது புறனடையால் ஏற்கப்பட்டது.

6. தடவுத்திரை, தடவுத் தோள் இவற்றில் தட என்ற உரிச்சொல் அகர ஈறு, உரிச்சொல் அகர ஈறுக்கு விதி கூறவில்லை. ஆயினும் உயரீற்றுப் புணரியலின் முதல் நூற்பாவில் ஒத்த என்ற இலேசால் தட + கை = தடக்கை என வரலாம் எனப்பட்டது. ஆனால் இப்புறனடையால் தான் வுகரம் பெற்று வலி மிகுந்தது கூறப்பட்டது.

7. அருமருந்தன் னான் என்பது அருமந்தான் எனவும் சோழனாடு அன்கெட்டு சோனாடு எனவும் மலையமானாடு என்பது பல எழுத்துக்கள் ஒழிந்து மலாடு எனவும் மருவாய் வருவனயாவும் இப்புறனடையால் ஆகும்.

8. பொதுவில் என்பது பொதியில் என உகரம் இகரமாய்த் திரிந்து யகர உடம்படு மெய் பெற்றது இப்புறனடையால் ஆகும்.

இப்புறனடையால் கூறப்பட்டன முன்பு கூறப்படாததால் எற்புழி கோடலால் ஏற்கப்பட்டன எனலாம்.

## 13.3 தொகுத்துக் காண்போம்

- குற்றியலுகரம் ஆறு வகைப்படும் என அறிந்து கொண்டீர்கள்.
- வன்தொடர்க் குற்றியலுகரம் அல்வழி வேற்றுமை ஆகிய இரண்டில் வலிமிகும்
  என்பது பற்றி அறிந்து கொண்டீர்கள்.
- குற்றியலுகர திசைப் பெயர், எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 13.4 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. குற்றியலுகரஎண்ணுப் புணர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
2. திசைப் பெயர் புணர்ச்சிகளை விவரி.
3. புணர்ச்சி விதி தருக.
   (அ) கொக்குக் கடிது
   (ஆ) நாகியாது
   (இ) ஆட்டுக்கால்
   (ஈ) பன்னிரண்டு
4. ஒன்பது என்ற எண்ணின் புணர்ச்சியை விவரி.

5. புணரியல் நிலையிடை உணரத் தோன்றா எனக் கூறப்பட்ட செய்திகள் யாவை?

### 13.5 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974

2. நச்சினினார்க்கினியர்(உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்புரையுடன், 1967

## கூறு - 14

## இளம்பூரணரின் உரைத்திறன்

### 14.1 முன்னுரை

ஒரு நூலை முழுமையாக அறிந்துகொள்ள அதனை முழுமையாகக் கற்றால் மட்டும் போதாது. அது தொடர்பான கருத்து விளக்கங்களை அறியும் போது தான் இன்னும் விளக்கமாக அறிந்து கொள்ள முடியும். இதன் அடிப்படையில் மூல நூலைப் புரிந்துகொள்ள அவற்றிற்கான உரைகள் பலரால் வழி வழியாகத் தோன்றின. தொல்காப்பியத்திற்கு உரை எழுதியோர் பலர். அவர்களுள் தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலில் உரைகண்டவர் இளம்பூரணர். இளம்பூரணரின் தொல்காப்பிய உரைத்திறன் பற்றி இக்கூறு விளக்குகிறது.

### 14.2 குறிக்கோள்கள்

- இளம்பூரணர் உரை செல்நெறி குறித்து அறிந்து கொள்வீர்கள்.
- இளம்பூரணரின் பல்துறை அறிவு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

- மூலநூலாசிரியனின் உள்ளக்கருத்தை தெள்ளிதில் புலப்படுத்தும் உரையாசிரியராக இளம்பூரணர் விளங்கியமை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 14.3. உரை முதல்வர்

தமிழின் முதல் நூல் என்ற பெருமைக்குரிய தொல்காப்பியத்திற்கு முதன் முதலாக உரை எழுதிய பெருமைக்குரியவர் இளம்பூரணர். கி.பி. நான்காம் நூற்றாண்டுக்குப் பின் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் தொல்காப்பியமானது பயில்வாரின்றிக் கிடந்தது. இவ் அவல நிலை கி.பி. பதினோராம் நூற்றாண்டு வரை நீடித்தது. இத்தகைய சூழ்நிலையில் தோன்றிய இளம்பூரணர் தொல்காப்பியத்தைத் தாமாக ஆய்ந்து கற்றார்.'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் உயர்ந்த நெறியைப் பின்பற்றித் தொல்காப்பியம் முழுமைக்கும் எளிமையாகவும் தெளிவாகவும் உரை எழுதினார். தொல்காப்பியக் கல்வி பரவுவதற்கும், தொல்காப்பிய இயக்கம் தோன்றுவதற்கும் உறுதுணையாக இருந்தார். இங்ஙனம் உரை எழுதியதன் வழி முதல் உரைகாரர் என்று போற்றப் பெற்றதோடு தமிழுழகில் உரையாசிரியர்கள் என்ற பெரும் பரம்பரையையும் உருவாக்கிய பெருமையுடையவர்.

## 14.4 பெயர்க் காரணம்

இவர் பெயர் பூரணர் இளமையில் துறவு பூண்டு மெய்ந்நெறியை நாடி நின்றமையால் இளம்பூரண அடிகள் எனப்பட்டார் என்று கருதலாம். தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் பூரணமான உரை எழுதி அவ்வுரை இன்று வரை நிலவுமாறு வைத்த பெருமை இவருக்கு உரியது இவர் பெயர் பூரணர் என்று இருந்ததனாலே இந்தப் பூரணமும் தொல்காப்பிய உரையாசிரியர் மரபில் இவர் ஒருவருக்கே வாய்த்தது.

## 14.5 நாடு

இளம்பூரணர் சோழ நாட்டைச் சார்ந்தவர். ஆவர் சொல்லதிகார உரையுள் தரும் எடுத்துக்காட்டுக்கள் பலவும் பெரும்பாலும் சோழ நாட்டைச் சார்ந்தனவாகவே உள்ளன.

'சாத்தா, உறையூர்க்குச் செல்லாயோ?
(சொல்.15)

'சோழநாடு என்பதனைச் சோணாடு என்பது மரூஉ வழக்கு'
(சொல். 17)

'சோழன் நலங்கிள்ளி'
(சொல்.41)

‘வடுகரசர்க்குச் சிறந்தார் சோழிய வரசர்’

(சொல்.74)



சோழ நாட்டைச் சார்ந்தவராக இருப்பினும் சேர நாடு என்றும் சோழநாடு, பாண்டியநாடு என்றும் வேற்றுமை பாராட்டாமல, ஒருமைப்பாட்டு உணர்வுடன் மூன்று நாடுகளையும் இணைத்துத் ‘தமிழ்நாடு’ எனப் பார்க்கும் பரந்த உள்ளமும் இளம்பூரணரிடம் இருந்தது “நும் நாடு யாது” என்றால், தமிழ்நாடு என்றல்’ (சொல்.13) “தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்” (சொல். 33) எனச் சொல்லதிகார உரையுள் அவர் காட்டும் சான்றுகள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

## 14.6 மரபு

இளம்பூரணர் வேளாள மரபினைச் சார்ந்தவர் என்பது, அவர் மிகுதியும் உணவு பற்றியும் உழவுத் தொழில் பற்றியும் எடுத்துக்காட்டுக்கள் தருவதால் அறியக் கிடக்கின்றது அத்தகைய எடுத்துக்காட்டுகளுள் சில வருமாறு :

‘எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமையாற்
பைங்கூழ் நல்ல’
(சொல்.22)

‘நம்பி வந்தான், அவற்குச் சோறிடுக’: எருது வந்தது, அதற்குப்
புல்லுக் கொடுக்க’
(சொல்.38)

## 14.7 சமயம்

இளம்பூரணர் சமண சமயத்தைச் சார்ந்த ஒரு துறவி என்பதை உறுதி செய்வதற்கு சான்றுகள் பல கிடைக்கின்றன.

‘பலவகை உயிர்கட்கும் வரும் இன்பம் இருவகைப்படும். அவையாவன, போகம் நுகர்தலும் வீடு பெறுதலும் என. அவற்றுள்வீடுபேறு துறவறத்தில் நின்றார்க்கல்லது எய்தல் அரிதாயிற்று போக நுகர்தல் மனையறத்தார்க் கெய்துவது’ என இளம்பூரணர் களவியலின் முதற்சூத்திர விளக்கத்தில் (பொருள்.89) எழுதுகின்றார். இங்கே அவர் துறவறத்தில் இருப்போரே முதலில் வீடுபேறு அடைவர் என்னும் சமண சமயக் கோட்பாட்டினை எடுத்துக்காட்டியுள்ளனார்.

**‘எழுத்தெனப் படுப**
**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்ப.்.து என்ப”**

என்பது எழுத்ததிகாரத்தின் தலைச்சூத்திரம் (எழுத்து.1) இச்சூத்திர விளக்கத்தில் இளம்பூரணா். "அகரம் தானும் இயங்கித் தனி மெய்களை இயக்குதற் சிறப்பான். முன் வைக்கப்பட்டது. னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணா்த்துதற் சிறப்பான் பின் வைக்கப்பட்டது எனக் குறிப்பிடுகின்றாா். திகரம்பரச் சமண சமயக் கோட்பாட்டின்படி, பெண்களுக்கு வீடுபேறு இல்லை பெண்கள் வீடுபேறு அடைய விரும்பினால், முதலில் அவா்கள் ஆணாகப் பிறக்க வேண்டும். ஆணாகப் பிறந்தாலும் துறவு பூண்டு கடுமையாக தோன்யிருக்க வேண்டும்: அப்பொழுதுதான் அவாகள் வீடுபேறு அடைய முடியும். இவ்வாறு, ஆண் பாலாக்கன்றிப் பெண்பாலாா்க்கு வீடுபேறு கிடையாது. 'ஆண் பாலாா்க்கன்றிப் பெண்பாலாா்க்கு வீடுபேறு கிடையாது என்னும் தமது சமயக் கொள்கையை இலக்கண நூலிலும் வற்புறுத்துகிறாா். இளம்பூரணஅடிகள்'.

## 14.8 இளம்பூரணா் உரை செல்நெறி:

'இளம்பூரணா் உரை ஆற்றொழுக்கானது. அளவானது ஒருவா் தாமே படித்துக் கொள்ளத்தரும் விளக்கமுடையது. பிறா் கருத்துக்களைப் பரவலாகச் சுட்டிச் செல்வதன்றி மறுத்துரைக்கும் எதிா்நோக்கில்லாதது.

"எளிமையாகவும் தெளிவாகவும் ஆசிரியருடைய கருத்தை மட்டும் விளக்கிக் கொண்டு செல்வது இளம்பூரணா் உரையின் இயல்பு. தம்முடைய கல்விப் பெருக்கைக் காட்ட இவா் எண்ணவில்லை விரிவாகவோ கேட்போா் வியக்கும்படியாகவோ சொல்லும் நோக்கத்தை இவா் கொள்ளவில்லை. பிறரை மதித்து எழுதுவதும் கருத்து வேறுபாடு வந்தபோது மறுப்புத் தெரிவிக்காமல் சொல்லிக் கொண்டு போவதும் இவருக்கு அமைந்த தன்மைகள் இவா் உரை சுருக்கமான உரை" என்று அறிஞா் மு.அருணாசலம் பாராட்டுவா்.

பேராசிரியா் மு.வை.அரவிந்தன், இளம்பூரணா் உரை ஆழமான தெளிந்த நீரோடை போன்றது: பற்றற்ற துறவி தூய்மையமான வாழ்வு நடத்தி மூத்து முதிா்ந்து காவி உடையுடன் அருண் பழுத்த நெஞ்சத்துடன் முகம் மலா்ந்து தம்மிடம் இன்சொல் பேசுவது போன்ற இன்ப உணா்வை இவா் உரை உண்டாக்குகிறது. ஆரவாரமும் பகட்டும் இவா் உரையில் எங்கும் காண்பது அரிது. பிறா் கருத்தை மதித்தலும், புலமை முதிா்ச்சியும் நடுநிலைமையும் உரை முழுதும் வெளிப்படுகின்றன' என்று புகழ்ந்துரைப்பா்.

'உள்ளத் தெளிவு அடக்கம் கட்டுரை வன்மை, சுருங்கச் சொல்லி விளங்க வைக்குத் திறன் என்னும் சிறந்த குணங்களை உடையவா் இளம்பூரண அடிகள் என்பதை அவா் உரை தெளிவாகக் காட்டி நிற்கின்றது. தாம் அறியாததொன்றை அறிந்தது போலக் காட்டும் போலிப்

பண்பு அவருரையிற் காண்டல் முடியாது. விரிக்க வேண்டும் இடத்திலே மிகைப்படக் கூறாது வேண்டுமளவு விரித்தலும், சுருங்க வேண்டிய இடத்திலே மிகச் சுருக்காது கருத்து விளக்கம் பெறச் சுருக்குதலும் அவருக்குரிய இயல்பாகும்" என்பது பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் ஆய்வுரை.

## 14.9 உரையாசிரியர்கள்

பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் எனப் பலரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுத முற்பட்டனர். காலப்போக்கில் இத்துணை உரைகளும் உரையாசிரியர்களும் தோன்றுவதற்கு அடிப்படையான காரணராய் அமைந்தவர் இளம்பூரணர் ஆவார்.

மூல நூலாசிரியரிடத்துப் பெருமதிப்பு வைத்து எழுதுதல், பிற மொழிப் பயிற்சியோடு உரை எழுதுதல், வினாவிடைப் பாங்கு, சொற்பொருள் தருதல், பலதுறையறிவோடு உரை வரைதல், பல்வேறு நூல்களிலிருந்து மேற்கொள் காட்டுதல், தம் காலத்து வாழ்வியல் புலப்படும் வகையில் எழுதுதல், பாட வேறுபாடுகளைத் தருதல் முதலான உரை மரபுகள் பலவற்றைக் கையாண்டு உரை எழுதியுள்ளார் இளம்பூரணர்.

## 14.10 தமிழ் மரபிற்கு முதன்மை நல்கல்

தமிழ் இலக்கணத்தைத் தமிழ் இயல்பைக் கொண்டு மட்டுமே விளக்க வேண்டும் என்பது இளம்பூரணரின் அழுத்தம் திருத்தமான கொள்கை. இதனை, மிகைப்படக் கூறலாவது அதிகாரப் பொருளன்றிப் பிற பொருளுங் கூறுதல் அஃதாவது தமிழிலக்கணஞ் சொல்லுவானெடுத்துக் கொண்டான் வடமொழியிலக்கணமும் கூறல் (பொருள்-654) என மரபியல் நூற்பா ஒன்றின் உரை விளக்கத்தில் அவர் எழுதுவதால் உணரலாம்.

## 14.11 உவமைகூறி விளக்குதல்

உவமைவாயிலாக ஒன்றை விளக்குவதில் இளம்பூரணர் வல்லவர். ஒருமாத்திரை அளவினதாகிய இகர, உரக உயிரெழுத்துக்கள் அரை மாத்திரையாக ஒலிப்பதும் உண்டு. அவற்றிற்குக் குற்றியலிகரம், குற்றியலுகரம் என்ற பெயர். இக்குற்றியலிகர உகரங்கள் மெய் எழுத்தைப் போலப் புள்ளி பெற்று வரும். வரிவடிவில் மெய்போல் இருப்பினும் இவை உயிரெழுத்துக்களே என்பதை விளக்க வேண்டி "சந்தனக் கோல் குறுகினவிடத்துப பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிரே" என்றார்.

சந்தனக் கட்டையைக் கல்லில் தேய்த்துக் குறைந்த போதும் சந்தனக் கட்டை சந்தனக் கட்டையே ஆகும். தேய்ந்து சிறுத்துவிட்டதால் பிரப்பங்கம்பாக அதாவது வேறொன்றாகக் கருதுவது இல்லை. அதுபோல ஒலிகுறைந்த உயிரை உயிராகக் கருதவேண்டுமேயன்றிப் புள்ளிபெறும் வரிவடிவால் மெய்யாகக் கருதக் கூடாது என்பதாம்.

உயிர்மெய் வரிவடிவம் பற்றிக் கூறும்போது அதைப் பிரிக்கும் போதும். கூட்டுப்போதும் மெய் முன்னாக உயிர் பின்னாக ஆகும் என்பதற்கு உதாரணம் கூறும்போது "இக்கூட்டம் பாலும் நீரும்போல உடன்கலந்ததன்றி விரல் நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறுநின்று கலந்தன அல்ல" என்கிறார் இளம்பூரணர். இது "மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலை" (18) என்ற நூற்பாவில் எழுதப்பட்ட விசேட உரையாகும்.

பாலும் நீரும் சேருங்கால் பாலாகும், பால், நீர், எனத் தனித்தனியாகத் தெரியாது. அதுபோல உயிர்மெய் எழுத்தில் மெய் முன்னாக உயிர் பின்னாக நின்றாலும் ஒன்றித் தோன்றுமேயன்றி விட்டிசைக்காது என்பதாம்.

இரண்டு விரல்கள் ஒன்று சேர்ந்து நின்றாலும் அவை சேர்ந்திருப்பது போல் தோன்றினும் பாலும் நீரும்போல ஒன்றில் ஒன்றாய்க் கரைந்து ஒன்றாதல் போல் அமையாது. தனித்தனியே நிற்கும் இயல்புடையன. இதுபோல் உயிர்மெய் தனித்தனியாக நிற்காது என்பது கருத்து.

## 14.12 வினா – விடை நெறி

தொல்காப்பியர் ஓதற் பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, காவற்பிரிவு, தேவர் காரணமாகப் பிரியும் பிரிவு என்னும் அறுவகையான பிரிவுகளைப் பற்றிய கருத்துக்களை அகத்திணை இயலில் (பொருள்.27-37) கூறியுள்ளார். அவர் பரத்தையிற் பிரிவு பற்றி அகத்திணை இயலில் யாதும் கூறவில்லை. "இத்துணையும் பிரிவு அறுவகைப்படும் என்றவாறாயிற்று. அஃதேல் பரத்தையிற் பிரிவு என்பதோ எனின், அது நிலம் பெயர்ந்து உறையாமையானும், இவை போல் சிறக்காமையானும், அறமுறைமை செய்யப் பிரிதலும் பொருள் காரணமாகப் பிரிதலுமின்றிப் பிரிதலினானும், கற்பியலுள் கூறப்படும் என்க" (பொருள்-30) எனத் தொல்காப்பியர் அகத்திணை இயலில் பரத்தையர் பிரிவு பற்றிக் கூறாமைக்கான காரணங்களை வினா – விடை நெறி நின்று விளக்குகின்றார் இளம்பூரணர். இங்ஙனம் **'எனின்'** என்ற சொல்லால் தொடுக்கப்பட்டு **'என்க'** என்ற சொல்லால் முடிக்கப்படும் வினா – விடைப் பாங்கினை இளம்பூரணர் நடையில் காணலாம்.

## 14.13 சொற்பொருள் தருதல்

இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது.
(எழுத்து:129)

**குறிப்பு**

இந்நூற்பாவில் இளம்பூரணர் 'முற்ற' என்னும் சொல்லுக்கு வருமொழி வன்கணமேயன்றி பிற கணங்கட்கும் இவ்வாறு அக்குச் சாரியையின் 'க்கு' கெடும் என்று உரைத்து. இதற்குத் தமிழ்நூல், தமிழயாப்பு, தமிழவரையர் என உதாரணம் தருவார்.

"**அடக்கம்** என்பது மனமொழி மெய்யினடங்குதல் அது பணிந்த மொழியும் தானை

மடக்கலும் வாய் புதைத்தலும் போல்வன"
(பொருள்.256)

"வியப்பென்பது தம்மைப் பெரியராக நினைத்தல்"
(பொருள்.270)

"ஆராய்ச்சி என்பது ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தென வாராய்தல். ஆராய்தல் எனினுந் தெரிதல் எனினுந் தேர்தலெனினும் நாடலெனினும் ஒக்கும்".
(பொருள்.256)

"**நடுநிலைமை**யாவது ஒரு மருங்கு ஓடாது நிகழும் மன நிகழ்ச்சி."
(பொருள்.256)

"**அம்பல்** என்பது முகிழ்த்தல். அ∴து ஒருவரொருவர் முகக் குறிப்பினாற்தோற்றுவித்தல். அவராவது சொல்லுதல்".
(பொருள்.137

"**புலவி** அண்மைக் காலத்தது: ஊடல் அதனின் மிக்கது"
(பொருள்.154)

"**மடம்** என்பதற்கும் **பேதைமை** என்பதற்கும் வேறுபாடு என்னையெனின், மடம் என்பது பொருண்மை யறியாது திரியக் கோடல்: பேதைமை யென்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல்".
(பொருள்.248)

"**கையாறு** என்பது காதலர் பிரிந்தால் வருந்துன்பமும் அந்நிகரனவும் வருவது. இடுக்கன் என்பது துன்பமுறுதல் மேலதனோடு இதனிடை வேறுபாடு என்னையெனின், கையாறு என்பது இன்பம்

பெறாமையான் வருந்துன்பம்: இடுக்கணாவது துன்பமாயின வந்துறுதல்" (பொருள்.256)



## 14.14 சிறந்த சான்று கூறி விளக்குதல்

ஓலிவேற்றுமையால் சொற்புணர்ச்சியில் பொருள் வேறுபாடும் தோன்றும் என்பதை விளக்க, நூற்பா:(142) செம்பொன்பதின்தொடி என்று குறிப்பிட்டு இதைச் செம்பு ஒன்பதின் தொடி என்றும் பிரிக்கலாம் என்பர். செம்பொன் பதின்தொடி என்றால் பொன்னானது. பத்து தொடி எடையுள்ளதாக இருக்கிறது என்றும் செம்பு ஒன்பதின் தொடி என்றால் செம்பு என்ற உலோகம் ஒன்பது தொடி எடை உள்ளதாக இருக்கிறது என்றும் பொருள்படும். எனவே கூறுவோனுக்கும் கேட்போனுக்கும் உள்ள சூழலில் பொருள் உணரப்படும் என்று சிறந்த சான்றின் வழி விளக்குவர்.

## 14.15 பலதுறையறிவு

"ஒரு நூல் இலக்கிய அறிவை மாத்திரம் தருவதில்லை. மக்கள் வாழ்வின் பல்வேறு கூறுகளும் அமையப் படைப்பதுதான் இலக்கியம் அத்தகைய இலக்கியக் கலைக்குப் பொருள் காண வேண்டும் எனின். பொருள் காண்பார்க்குப் பலதுறையறிவு வேண்டும் என்பது தானே விளங்கும்" என்பர் அறிஞர். இளம்பூரணரின் தொல்காப்பிய உரையினைப் பயில்வார்க்கு அவரது பலதுறையறிவு நன்கு விளங்கும்.

**"பூப்பின் புறப்பாடு ஈரறு நாளும்**
**நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்**
**பரத்தையிற் பிரிந்த காலை யான"**

என்பது கற்பியலில் தலைவனுக்கு உரியதோர் மரபினை உணர்த்தும் நூற்பா (பொருள்.185) தலைவன் பரத்தையிற் பிரிந்திருந்த காலத்துத் தலைவிக்குப் பூப்பு நேரலாம்: இச்செய்தியைக் கேள்விப்பட்ட தலைவன் உடனே தன் வீட்டிற்கு வந்துவிட வேண்டும்: தலைவியை விட்டுப் பிரியாமல் பன்னிரண்டு நாளும் அவளுடன் உறைதல் வேண்டும். 'இதனால் என்ன பயன்?" என்ற வினாவுக்கு இளம்பூரணரின் உரை விளக்கம் தக்க விடையினைத் தருகின்றது. அவ் விளக்கம் இதோ : "பரத்தையர் சோரியானாயினும் பூத்தோன்றி மூன்று நான் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றவாறு இதனாற் பயன் என்னையெனின் அது கருத் தோன்றுங் காலம் என்க". இளம்பூரணருக்கு இருந்த பாலியல் அறிவை இப்பகுதியால் உணர முடிகின்றது.

அகத்திணை இயலில் பிரிவின்கண் தலைமகனுக்குக் கூற்று நிகழும் இடங்களைத் தொகுத்துக் கூறும் நூற்பாவில் (பொருள்.44) 'வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு' என வரும் தொடருக்கு உரை

எழுதும்போது, "வாயான் வகுத்த பக்கமாவது ஓதுதல். கையான் வகுத்த பக்கமாவது படைக்கலம் பயிற்றலும் சிற்பங் கற்றலும்" எனக் குறிப்பிடுகின்றார் இளம்பூரணர். இப்பகுதி அவரது கலையுணர்வைத் தெள்ளிதின் காட்ட வல்லதாகும்.

## 14.16 நாகரிகமும் பண்பாடும்

"ஆக்கந்தானே காரண முதற்றே' என்னும் கிளவியாக்க நூற்பாவின் உரை விளக்கத்தில் (சொல்.21) 'கடுவும் கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின' என்னும் எடுத்துக்காட்டினைத் தருகின்றார் இளம்பூரணர். அக்காலத்து மகளிர் தம் கூந்தலைப் போற்றி வளர்ந்த பாங்கினை இதனால் அறிகிறோம்.

"எறும்பு முட்டை கொண்டு தெற்றி (மேட்டு நிலம்) யேறின் மழை பெய்யும்' (சொல்.240) என்னும் எடுத்துக்காட்டால் அக்காலத்து வழங்கிய நம்பிக்கை ஒன்றினை உணர்த்துகின்றார்.

## 14.17 மேற்கொள் காட்டுதல்

எட்டுத் தொகை நூல்கள் எல்லாவற்றிலிருந்தும் இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். அவரது உரையினால் (பொருள்.428) 'ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை' எனத் தொடங்கும் பரிபாடலின் கடவுள் வாழ்த்துப் பாடல் நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ளது.

பத்துப்பாட்டுள் சிறுபாணாற்றுப் படை நீங்கலாகப் பிற பாட்டுக்கள் ஒன்பதையும் இளம்பூரணர் எடுத்துக் காட்டியுள்ளார். திருமுருகாற்றுப் படையை அவர் ' புலவராற்றுப் படை' எனக் குறிப்பிடுகிறார்.

மறைந்து போல தமிழ் நூல்களான அகத்தியம், செயிற்றியம், காக்கைபாடினியம், பரிமாணச் சூத்திரம், பன்னிருபடலம் ஆகியவற்றையும இளம்பூரணர் தம் உரையுள் எடுத்தாண்டுள்ளார்.

## 14.18 பாடவேறுபாடுகள்

இளம்பூரணர் தொல்காப்பியத்தின் **முதல் உரையாசிரியர்**: ஆதலின், அவர் கொண்ட சில பாடங்கள் மிகப் பழமையானவை என்று கருத இடமுள்ளது. பின்வந்த உரையாசிரியர்கள் கூறும் பாடங்களை விட, இளம்பூரணர் கொண்டுள்ள பாடங்களே பெரும்பாலும் சிறப்பாகவும் பொருத்தமாகவும் உள்ள பாங்கினைக் காண முடிகின்றது.

'அலரில் தோன்றுங் காமத்திற் சிறப்பே' என்னும் நச்சினார்க்கினியரின் பாடத்திலும், அலரில் தோன்றுங் காமத்து. மிகுதி (பொருள்.161) என்னும் இளம்பூரணரின் பாடமே சிறப்பாக உள்ளது.

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென, உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்' (பொருள்.51) என்பது இளம்பூரணா் கொண்ட பாடம். உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென, உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் இரண்டனுள், இளம்பூரணரின் பாடமே இயல்பாக உள்ளது.

கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்' (பொருள்.68) என்பது புறத்திணை இயலில் உழிஞைத் திணை குறித்து வரும் நூற்பாவின் தொடக்க வரி. 'பகைவரது தேயத்தைக் கொள்ளக் குறித்த கொற்றமும்' என்பது இவ் வரியின் பொருள். 'கொள்ளார்' எனபதற்குப் 'பகைவர்' என்பது சொற்பொருள்: ஆயின் இளம்பூரணரோ கொள்ளார் - தன்னை இறையெனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும்' என நயமாகப் பொருள்விளக்கம் தருகின்றார்.

## 14.19 பொருள் நயங்கள்

நூற்பாவிற்கு உரை எழுதும்போது, அரிமா நோக்கோடு முன்னும் பின்னும் பார்த்து உரை எழுதுவது இளம்பூரணரின் இயல்பாகும். எளிய நூற்பா ஆயின், "சூத்திரத்தாற் பொருள் விளங்கும்' என எழுதிச் செல்வதும் அவரது இயல்பாகும். தொல்காப்பிய நூற்பாக்கள் இரண்டனுக்குப் பொருள் எழுதும்போது இளம்பூரணர் காட்டியுள்ள நயங்களை ஈண்டுக் காண்போம்.

'தோழி தானே செவிலி மகளே' (பொருள்.123) 'சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே' (பொருள்.124) என்பன களவியலில் அடுத்தடுத்து வரும் இரு நூற்பாக்கள் முன்னைய நூற்பா தோழிக்கு உரியதொரு சிறப்பினை உணர்ததுவது: பின்னைய நூற்பா தோழிக்கு உரியதோர் இயல்பினை உணர்த்துவது. "களவுக் காலத்தும் இன்றியமையாளாகத் தலைவியால் வேண்டப் பட்டாள் செவிலி மகள் என்றவாறு எனவே, பயின்றாரெல்லாருத் தோழியராகார். அருமறை கிளக்கப்படுதலான் உடன் முலையுண்டு வளர்ந்த செவிலி மகளே தோழி எனப்படுவாள் என்றவாறு. அருமறை கிளத்தல் என்பதனை யீண்டு வருவிக்க" என்பது இளம்பூரணர் முன்னைய நூற்பாவுக்கு தரும் விளக்கம். இந்நூற்பாவின் விளக்கத்தில் இதற்கு முந்திய 'ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின், தாயெனப் படுவாள் செவிலியாகும் (பொருள்.122) என்னும் நூற்பாவையும் இணைத்துப் பொருள் உரைக்கின்றார் இளம்பூரணர். "மேற்சொல்லப்பட்ட தோழிதான் சூழ்தற்கும் தலைவி சூழச்சிக்கு உசாத்துணையாகியும் வரும் நிலைமையாற் பொலிவு பெறும் என்றவாறு. எனவே, செவிலி மகள் என்னுந் துணையாற் பொலிவு பெறாள்: என்றும் தோழியாவாள் செவிலி மகளாதலேயன்றிச் சூழவும் உசாத்துணையாகவும் வல்லள் ஆதல் வேண்டும் என்றவாறு" என்பது அடுத்த நூற்பாவுக்கு இளம்பூரணர் எழுதும் விளக்கம். இவ்விரு

விளக்கங்கள் அகத்திணை இலக்கியத்தில் இடம்பெறும் தோழியின் பங்கினையும் பண்பினையும் தெள்ளிதின் உணர்த்தவல்லனவாகும்.

## 14.20 எடுத்துக்காட்டு நயங்கள்

எவ்வகைப் படைப்பும் பலருக்கு எளிதாக விளங்க வேண்டுமெனின், எடுத்துக்காட்டுக்கள் பலர் அறிந்த வழக்கினவாக இருத்தல் வேண்டும். மக்களின் நடைமுறைப் பேச்சுக்களினின்றும் வழக்க ஒழுக்க்ளினின்றும் இந்த எடுத்துக்காட்டுக்கள் அமையவேண்டும. **'விளங்கு உதாரணத்தது ஆகுதல்'** என்பது நூலுக்குச் சொல்லப்படும்ம பத்து அழகுகளுள் ஒன்றாகும் (நன்னூல், நூ.13) இளம்பூரணர் இவ்வகையில் எளிமையானவர்: படிப்பவர்க்கு எளிதில் புரியும் பொருட்டு நயமான எடுத்துக்காட்டுக்களை ஆங்காங்கே கையாள்பவர்.

பாயிரத்தின் சிறப்பையும் பயனையும் குறித்து எழுதும்போது இளம்பூரணர், 'கற்றுவல்ல கணவற்குக் கற்புடையான் போல', 'திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைத்த வாயின் மாடம் போல', 'குறிச்சி புக்க மான் போல', அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற் சிறந்த ஆடை போல' என்னும் அழகிய உவமைகளைக் கையாளுகின்றார்.

'சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல, இகர உகரங்கள் குறுகினவிடத்தும், அவை உயிர் ஆகற்பாலன' என்பது இளம்பூரணர் எழுத்ததிகாரத்தில் (எழுத்து.2) கூறியுள்ள ஒரு நயமான உவமை ஆகும்.

'விருந்தே தானும். புதுவது புனைந்த யாப்பின் மேற்றே' (பொருள்.540) என்னும் செய்யுளியல் நூற்பாவில் வரும் 'புதுவது புனைதல்' என்ற தொடருக்கு இளம்பூரணர் எழுதியுள்ள கருத்து விளக்கம் சிந்தளைக்கு உரியதாகும். 'புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல் வழியின்றித் தானே தோற்றுவித்தல் என்பது அவரது உரைக்குறிப்பு. இன்றைய அறிவுலகம் '**தற்படைப்பாற்றல்**' (Originality) என்று போற்றுவதனை இளம்பூரணர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே 'ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல்' என்னும் விளக்கத்தின் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார்.

## 14.21 அரிய நயங்கள்

பிறர் காண்டற்கூரிய இலக்கிய நயங்களை இளம்பூரணத் தொல்காப்பியத்தில் கண்டுள்ளார்.

**"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான"**

என்பது பொருளியலில் வரும் ஒரு நூற்பா (பொருள்.206) பெண்டிரது சிறப்பியல்புகளை உணர்த்தும் இந்நூற்பாவுக்கு 'செறிவு என்பது அடக்கம் நிறைவு என்பது அமைதி செம்மை என்பது மனங்கோடாமை செப்பு என்பது சொல்லுதல் அறிவு என்பது நன்மை பயப்பனவுந் தீமை பயப்பனவும் அறிதல். அருமை என்பது உள்ளக் கருத்தறிதலருமை. இவை எல்லாம் பெண்பக்கத்தன" என உரை விளக்கம் எழுதுகின்றார் இளம்பூரணர். இத்துடன் நில்லாது, இன்னும் ஒருபடி மேலே சென்று சிந்திக்கின்றார் அவர். தொல்காப்பியர் இந் நூற்பாவுக்கு முன்னே அறத்தொடு நிற்றல் பற்றிய மூன்று நூற்பாக்களை (பொருள்.203-205) அமைக்கின்றார். இந்நூற்பாவுக்குப் பின்னே வரைவு கடாவல் பற்றிய நூற்பாவினை (பொருள்.207) வைக்கின்றார். அறத்தொடு நிற்றல், வரைவு கடாவல் இரண்டும் அகத்திணை ஒழுக்கத்தில் இன்றியமையாத இடத்தினைப் பெறும் நுண்துறைகள்: தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய பெண்கள் சிறப்பிடம் பெறும் அரிய துறைகள்: வளவளவென்று பேசிக்கொண்டு இராமல் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பது போல் நயத்தக்க நாகரித்தோடு குறிப்பாகச் சில சொல்ல வேண்டிய துறைகள் : கேட்போராகிய தலைவன், தந்தை, தமையன்மார் முதலான ஆண்மக்கள் மனங்கொள்ளும் வகையில் பேச வேண்டிய துறைகள் இவ்வளவு உண்மைகளையும் எண்ணிப் பார்த்த இளம்பூரணர். மேற்சொல்லிய அறத்தொடு நிலைவகையும் இனிக் கூறுகின்ற வரைவு கடாதற்குப் பகுதியும் உண்மை வகையானும் புனைந்துரை வகையானும் கூறுங்கால் இவை பேதையராகிய பெண்டிர்க்கு இயையுமோ என ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது" என நூற்பா விளக்கத்தின் முடிவில முத்தாய்ப்பு வைத்தாற்போல் எழுதி இருப்பது கற்றறிந்தார் நெஞ்சைம அள்ளுவதாகும். 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச், சான்றோன் எனக் கேட்ட தாய்' என்ற குறளின் (69) உரையில் பெண்ணியல்பான் தானாக அறியாமையின் கேட்ட தாய் எனக் கூறினார்" எனப் பரிமேலழகர் எழுதி இருக்கும் விளக்கத்தினையும், 'செறிவும் நிறைவும்' எனத் தொடங்கும் பொருளியல் நூற்பாவுக்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரை விளக்கத்திணையும் ஒப்புநோக்கிப் பயில்வோர்க்கு, **இளம்பூரணர் பெண்மைக்குத் தந்துள்ள சிறப்பிடம்** இனிதே விளங்கும்.

## 14.22 தொகுத்துக் காண்போம்

- இளம்பூரணர் உரை கூறும் முறை குறித்து அறிந்து கொண்டீர்கள்.
- இளம்பூரணரின் பல்துறை அறிவு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- மூலநூலாசிரியனின் உள்ளக்கருத்தை தெள்ளிதில் புலப்படுத்தும் உரையாசிரியராக இளம்பூரணர் விளங்கியமை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

குறிப்பு

## 14.23 முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. எழுத்து என்பது வரிவடிவை மட்டுமன்றி ஒலிவடிவையும் குறிப்பது என்பதை
   இளம்பூரணர் எந்நூற்பாவின் வழி விளக்குகிறார்?
2. இலக்கணத்தை உவமைவாயிலாக விளக்குவதில் இளம்பூரணர் வல்லவர் என்பதைச்
   சான்றுடன் விளக்குக.

## 14.24 மேலும் அறிந்துகொள்ள

1. இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம்
   சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
   சென்னை, 1974

2. மு.வை.அரவிந்தன் - உரையாசிரியர்கள்
   மணிவாசகர் நூலகம்
   சிதம்பரம் - 608001.
   1968

3. பேரா.இரா.மோகன் - உரை மரபுகள்
   ந.சொக்கலிங்கம்
   மெய்யப்பன் பதிப்பகம்
   53, புதுத்தெரு சிதம்பரம் - 608001.
   2011

குறிப்பு

## மாதிரி வினாத்தாள்

## தொலைத்தூரக் கல்வி இயக்ககம்

### 10752 - இலக்கணம் - தொல்காப்பியம் : எழுத்ததிகாரம் - இளம்பூரணம்

**காலம்: 3 மணி** **மதிப்பெண்: 75**

### பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க (10x2=20)**

1. மாத்திரை என்பது யாது?
2. உட்பெறு புள்ளி உருவாகும்மே - விளக்குக.
3. மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல் - என்பதை விளக்குக.
4. உருவு திரிந்து உயிர்ததலாவது யாது? உதாரணத்துடன் விளக்குக.
5. குற்றெழுத்தைந்தும் மொழிநிறை பிளவே - இக்கருத்தினை விளக்குக.
6. தொல்காப்பியர் கூறும் எழுத்துப் போலிகள் யாவை?
7. உச்சகாரம், உப்பகாரம் - என்றால் என்ன?
8. இலம்பாடு என்னும் சொல் பற்றி விளக்குக.
9. திசைப்பெயர் புணர்ச்சியைச் சுட்டுக.
10. இளம்பூரணர் உரைநெறிமுறைகள் இரண்டினைச் சுட்டுக.

### பகுதி - ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக (5x5=25)**

11.(அ) எழுத்தின் வரிவடிவம் பற்றி நூன்மரபு கூறுவன யாவை?

அல்லது

(ஆ) மெய்யின் இயக்கம் அகரமொடு சிவனும் - விளக்குக.

12.(அ) மொழி முதல் எழுத்துக்களாகத் தொல்காப்பியம் கூறுவன யாவை?

அல்லது

(ஆ) எழுத்துச் சாரியைகள் குறித்து விளக்குக.

13.(அ) புணரியலில் மொழிமரபின் ஒழிபாகக் கூறப்பட்டவை யாவை?

அல்லது

(ஆ) ஐகார ஈற்றுப் புணர்ச்சி விதிகளைத் தொகுத்துரைக்க.

14.(அ) இகர ஈற்றுப் புணர்ச்சி விதிகளை எடுத்துரைக்க.

அல்லது

(ஆ) தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் சொற்களின் தோற்றத்தை ஆராய்க.

15.(அ) அளவுப்பெயர், நிறைவுப்பெயர் பற்றித் தொல்காப்பியம் கூறும் இலக்கணங்களை தொகுத்துரைக்க.

அல்லது

(ஆ) இளம்பூரணர் உவமைகளின் வழி இலக்கணத்தை விளக்கும் முறையைச் சுட்டுக.

## பகுதி - இ

**எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க (3x10=30)**

16. மெய்மயக்கம் பற்றித் தொல்காப்பியர் கூறியவற்றைத் தொகுத்து வரைக.

17. உயிரெழுத்துக்களின் பிறப்பு முறையை விளக்குக.

18. இரண்டாம் வேற்றுமைத் திரிபுகள் யாவை?

19. ஆகர இறுதிப் புணர்ச்சிகளைத் தொகுத்தெழுதுக.

20. இளம்பூரணரின் உரைத்திறன் குறித்துக் கட்டுரைக்க.